
# காணாமல் போன ரகசியம்



பத்மா மாத்ரே

# காணாமல் போன ரகசியம்

## பத்மா மாத்ரே

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

# நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : காணாமல் போன ரகசியம் |
| ஆசிரியர் | : பத்மா மாத்ரே |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : செப்டம்பர் 2016 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 252 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.120.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : எஸ்.எஸ்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |

# முன்னுரை

பொதுவாக மனிதன் தனக்கு நடப்பவைகளுக்கு மற்றவர்களை காரணம் காட்டுகிறான்; சந்தர்ப்ப சூழ்நிலைகளை குற்றப் படுத்துகிறான். அதனால்தான், என்ன செய்து தன்னுடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளலாம் என சிந்தித்துச் செயலாற்றுவதில் பின் தங்கி விடுகின்றான். நமக்கு நடப்பவைகளுக்கு நாம்தான் காரணம், நம்முடைய வாழ்க்கையை நாம்தான் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்து நடப்பவர்கள் சொற்ப பேரே.

நாம் வாழ்வில் பெறும் ஒவ்வொரு அனுபவங்களும் ஒரு கல்விதான். அவைகளிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்கின்றோம் என்பதில்தான் நம்முடைய புத்திசாலித்தனம் இருக்கின்றது.

இதுபோன்ற வாழ்க்கைக்கு தேவையான பல விஷயங்களை இக்கதையின் பாத்திரங்களான அனிதாவும், ராகுலும், பிரகாஷும்

சொல்கிறார்கள். அவர்களை சுவையான சந்தர்ப்பங்களில் நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள். அவர்கள் சொல்வதைப் பற்றி சிந்திக்கப் போகிறீர்கள்.

ஆம் வாசகர்களே, வெறும் பொழுதுபோக்கு கதையென இதைப் படித்தவுடன் மறந்து விடாமல் இந்த நாவலின் கதாபாத்திரங்கள் சொல்வதைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதே என அவா.

செய்வீர்களா?

**- பத்மா மாத்ரே**

# காணாமல் போன ரகசியம்

## 1



ஒரு மாதத்திற்குள் திரும்பி வந்துவிடுவதாகச் சொல்லிச் சென்ற ராகுல் மாதங்கள் இரண்டாகியும் இன்னும் திரும்பி வராதது அனிதாவுக்கு சங்கடத்தைக் கொடுத்தது. பதினைந்து நாட்களுக்கு முன்னால் கடைசியாக அவளுக்குப் போன் செய்திருந்தான் அவன். அதன் பிறகு அவனிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. அவனைத் தொடர்பு கொள்ள அவள் எடுத்துக் கொண்ட எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை. மொபைல் போனில் தொடர்பு கொள்ள அவள் முயன்ற ஒவ்வொரு தடவையும்

தொடர்பு கொள்ள முடியாத தொலைவில் இருப்ப தாகத் தெரிவிக்கப்பட்டாள்.

கல்லூரி விடுதியில் தங்கிப் படித்துக் கொண் டிருந்த அவளுக்கு தினமும் போன் செய்து நலன் விசாரிக்கும் தமையனால் எப்படி இவ்வளவு நாட்கள் மௌனமாக இருக்க முடிகிறது என்று திகைத்தாள் அனிதா.

பதினைந்து நாட்களுக்கு முன்னால் கடைசியாக அவன் போன் செய்தபொழுது, ''அனி, நான் எதிர் பார்த்ததைவிட அதிகமாகவே மூலிகை செடிகள் இங்கே இருக்கு. ஒரு முனிவரை தேடிட்டு இருக் கேன். அவர்கிட்டே நிறைய மருத்துவ அறிவு இருக் காம். அவர்கிட்டேயிருந்து நிறைய படிச்சுக்கப் போறேன். அதனாலே நான் வர கொஞ்சம் நாளாக லாம்'' என்றான்.

''நாளாகலாம் என்றால் எத்தனை நாள்?'' என்று கேட்டாள் அனிதா.

''சொல்ல முடியாது'' என்றான் ராகுல்.

''நீ அங்கே யாரோடு தங்கியிருக்கேண்ணா? விலாசமும், போன் நம்பரும் தா.''

அனிதா சொன்னதைக் கேட்டு உரக்கச் சிரித்தான் ராகுல். ''விலாசமாவது, போனாவது! இங்கே ஒரு போஸ்ட் ஆபீஸ்கூட இல்லை. நான் பக்கத்து கிராமத் திலிருந்து போன் செய்றேன். இவ்வளவு தூரம் வந்து தினமும் உனக்கு போன் செய்ய சாத்தியப்படாது. எல்லாம் வந்து விவரமா சொல்றேன்'' என்றான் அவன்.

ஆனால், அவன் திரும்பி வரவேயில்லை. அவனைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை.

* * *

இந்த உலகத்தில் உறவு என்று சொல்லிக்கொள்ள ராகுல் மட்டும்தான் அவளுக்கு இருக்கிறான். சிறு வயதிலேயே விபத்து ஒன்றில் பெற்றோர்களை இழந்து விட்டிருந்தனர். அப்பொழுது ராகுலுக்கு வயது எட்டு. அனிதாவின் வயதோ இரண்டு.

உறவினர் ஒருவர் அவர்களை வளர்த்தார். வேண்டாத விருந்தாளியாகத்தான் இருவரும் நடத்தப்பட்டனர். அவருக்கு அவர்கள் எத்தனை பாரமாக இருக்கிறார்கள் என்று சமயம் கிடைத்த பொழுதெல்லாம் உணர்த்தப்பட்டார்கள். கடைசியில் ராகுல் பத்தாம் வகுப்பு தேர்ச்சியடைந்ததும் அந்த உறவினர் அவர்கள் இருவரையும் அழைத்து, ''இதோ பாருப்பா, இதுவரை உங்களை வளர்த்துட்டேன். இனி என்னால் முடியாது. எனக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள்பால் கடமைகள் இருக்கு. நான் தனியொருவனால் எல்லாத்தையும் செய்ய முடியாது. நீ எங்காவது வேலை செய்து பிழைச்சுக்கோ. உன் தங்கச்சியைக் காப்பாத்துவதும் இனிமே உன் பொறுப்பு'' என்று சொல்லி விலகிக் கொண்டார்.

ராகுலின் பெற்றோர்கள் சேர்த்து வைத்திருந்த பணம் என்று சொற்ப தொகையை அவனிடம் கொடுத்தார். ''மீதி பணத்தை உங்களை வளர்ப்பதற்கு, படிக்க வைப்பதுக்குன்னு செலவழிச்

சேன்'' என்றார். ''இனி உங்க பாடு. என்கிட்டே இனிமே வராதீங்க'' என்று உறவை வெட்டிவிட்டார். அவர்களுடைய திருமண செலவும் அவர் மேல் விழுந்து விடுமோ என்று அவர் பயப்படுவது தெரிந்தது.

பெற்றவர்களின் சேமிப்பு எவ்வளவு இருந்தது, அது அவரிடம் எப்படி வந்தது, எவ்வளவு செலவா கியது என்றெல்லாம் ராகுல் கணக்கு கேட்கவில்லை. பின்னால் அவர் அவர்களுடைய பெற்றோரின் வீட்டையும், சொத்தையும் வஞ்சகமாக அபகரித்துக் கொண்டது தெரிய வந்தபொழுது அவன் கலங்கி னான். வருந்தி மௌனமாகக் கண்ணீர் வடித்தான். மனதில் மூண்ட கோபத்தை, ஜீரணித்துக் கொண்டு சிந்தித்தான். நடந்தவைகளின் இன்னொரு பக்கத் தையும் பார்த்தான். 'இவ்வளவாவது செய்தாரே. சோறு போட்டு வளர்த்தாரே. இவ்வளவாவது படிக்க வைத்தாரே. அவர் முன் வரவில்லையெனில் அண்ணன் தங்கை இருவரும் அனாதையாக தெருவில் அலைந்திருப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கையின் திசையே மாறியிருக்கும்' என்று நினைத்து நன்றி யுணர்வு கொண்டான்.

அவர்கள் தம் பெற்றோர்களை இழந்த பொழுது அறியா பருவத்திலிருந்த ராகுலுக்கும், அனிதா வுக்கும் பண விவகாரங்கள் தெரிந்திருக்க நியாயம் இல்லை. இந்நிலையில் மனித ஆதரவு இன்றி தவித் திருப்பார்கள். இதை எண்ணி மனதைத் தேற்றிக்

கொண்டான். அச்சமயம் ஆதரவளித்து தம்மைக் காப்பாற்றிய நன்றி கடனாகப் பெற்றவர்களின் சொத்தை கொடுத்திருப்பதாக நினைத்துக் கொண் டான் அவன்.

என்றாலும் வாழ்க்கையில் தனியாக விடப்பட்ட பொழுது அண்ணன், தங்கை இருவரும் தவித்துத் தான் போனார்கள். என்ன செய்வது என்று புரியாமல் திகைத்துத்தான் போனார்கள். அதிகம் பயந்து போனவள் அனிதாதான். ''இனி என்ன செய்யப் போறோம் அண்ணா?'' ஏன்று கலங்கியவளை அணைத்து ஆறுதலளித்தான் ராகுல்.

''நான் இருக்கேன் அனி. நீ கவலைப்படாதே. உனக்கு ஒரு குறையும் வராம நான் பார்த்துக்கு வேன்'' என்று தங்கைக்கு தைரியமளித்தான். சொன் னது போல் செய்யவும் செய்தான். 'முடியும் என்று தன் மேல் நம்பிக்கை வைத்தால் ஒருவனால் செய்ய முடியாதது ஒன்றுமேயில்லை' என்ற கூற்றுக்கு ஒரு உதாரணமாக இருந்தான் ராகுல். ஆம்; அவன் உழைத் தான். உழைத்துக் கொண்டே மேலே படித்தான். தன் தங்கையையும் படிக்க வைத்தான்.

* * *

அண்ணன் தங்கை இருவரும் ஒருவர்மேல் ஒருவர் உயிரையே வைத்திருந்தது ஆச்சரியமல்ல. தங்கைக்கு ஒன்று என்றால் அவன் துடித்துப் போவான். அண்ணனின் போன் ஒரு நாள் வரத் தவறினாலும் அவள் கலங்கி போவாள்.

அந்த அண்ணன்தான் கடந்த பதினைந்து நாட்களாக எவ்விதத் தொடர்பும் கொள்ளாமல் இருக்கின்றான்.

ராகுல் ஆயுர்வேத மருத்துவம் கற்று மருத்துவ மனை ஒன்றில் வேலை செய்து வந்தான். ஆயுர்வேத மருத்துவத்தில் இருந்த ஆர்வத்தின் காரணமாக மருத்துவ மூலிகைகளை ஆராய்ச்சி செய்து தன் அறிவை பெருக்கிக் கொள்ள விரும்பினான். எளியவர், செல்வந்தர் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் சமமாகப் பயனளிக்கும் வகையில் ஆயுர்வேத மருத்துவமனை ஒன்றை தானே தொடங்கி நடத்துவது அவனுடைய குறிக்கோளாக இருந்தது.

அதற்காகத்தான் அவன் தமிழ்நாட்டின் ஒரு மூலையில் இருக்கும் மல்லி மலை என்ற கிராமத்துக்கு சென்றிருந்தான். ''உன் பரீட்சைகள் முடிவதற்குள் நான் திரும்பி வந்துடுவேன் அனி. ஒரு மாத காலம் போதும் எனக்கு. நான் போகிற இடம் எப்படியோ, எனக்குத் தெரியாது. அதனாலே, உனக்கு தினமும் போன் செய்ய முடியாமப் போகலாம். நீ படிப்பிலே கவனம் செலுத்தி பரீட்சை எழுது'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

இப்பொழுது கடந்த பதினைந்து நாட்களாக போன் இல்லை. அவள் அவனுடைய மொபைல் போனில் போன் செய்த பொழுதும் தொடர்புகொள்ள முடியாத தொலைவில் இருப்பதாக செய்தி கிடைத்தது.

பரீட்சைகள் முடியும் வரை காத்திருந்த அனிதா பரீட்சைகள் முடிந்ததும் அண்ணனைத் தேடி மல்லி மலைக்குப் புறப்பட்டாள்.

* * *

மல்லி மலை ரயில்வே ஸ்டேஷனில் இறங்கிய அனிதா அந்த ஸ்டேஷன் ஆள் அரவமின்றி வெறிச் சோடி இருப்பதை கவனித்தாள். அவளோடு மூன்று சிறுவர்கள் மட்டுமே வண்டியிலிருந்து இறங்கி னார்கள். அவர்களிடமிருந்த புத்தக பையைப் பார்த்து அவர்கள் பள்ளிக்கூட மாணவர்கள் என்பதை ஊகித்துக் கொண்டாள்.

கார்ட் பச்சை கொடி காட்ட ரயில் புறப்பட்டுச் சென்று விட்டது. ரயில்வே ஊழியர்கள் யாராவது தென்படுகிறார்களா என்று சுற்றிலும் பார்த்தவள் திடுக்கிட்டாள். ஸ்டேஷனில் ஆள் நடமாட்டம் இல்லாதது மட்டுமல்லாமல் அவளோடு ரயிலி லிருந்து இறங்கிய அந்த மூன்று மாணவர்கள்கூட காணாமல் போயிருந்தனர். பேய் கதைகளில் வரும் காட்சி போல் வெறிச்சோடி கிடந்த ரயில்வே ஸ்டேஷன் அமானுஷ்ய உணர்வைக் கொடுத்தது.

'ஸ்டேஷன் மாஸ்டர்' என்ற பெயர் பலகை தொங்கப்பட்டிருந்த அறைக்கு சென்றாள் அவள். சற்று முன்னால் ரயிலுக்குப் பச்சை கொடி காட்டிய மனிதன் அந்த அறையிலிருந்து புறப்படத் தயா ராகிக் கொண்டிருந்தார்.

''இங்கே ஸ்டேஷன் மாஸ்டர்...'' என்று சந்தேகத் துடன் இழுத்தாள் அனிதா.

''நான்தான். என்ன வேண்டும்?'' என்றார் அந்த ஆள்.

''ஒ....'' என்றபடி அவரைப் பார்த்த அவள் இங்கே எல்லா வேலைகளுக்கும் ஒரே ஆள்தான் என்பதை புரிந்து கொண்டாள். ''மல்லி மலைக்குப் போகணும். பஸ் எங்கே கிடைக்கும்?''

அந்த ஆள் அவளை ஏற இறங்கப் பார்த்தார். ''இங்கே பஸ் எல்லாம் கிடையாது. நடை வண்டி தான்'' என்றவர் அறையின் ஜன்னல் வழியாக வெளியே சுட்டிக் காட்டினார். ''இந்த வழியில் போனா ஆறு கிலோ மீட்டர் தூரம்தான். வெளியே வர்றீங்களா, கதவை பூட்டணும்.''

''நீங்க...?''

''வீட்டுக்குப் போறேன். என் டூட்டி முடிஞ்சாச்சு. இனி சாயங்காலம் ஒரு வண்டி வரும். அதன் பிறகு நாளைக்குத்தான்'' என்று சொல்லிவிட்டு அவள் அறையை விட்டு வெளியேற காத்திருந்தார். பின்னர் அறையின் கதவைப் பூட்டிவிட்டுச் சென்று விட்டார்.

இப்பொழுது அந்த ஸ்டேஷனில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லை. மரக் கிளை ஒன்றில் அமர்ந் திருந்த காகம் ஒன்று தலையை அப்படியும், இப்படி யும் திருப்பி அவளைப் பார்த்துவிட்டு குரல் கொடுக்க அஞ்சி பறந்து சென்றுவிட்டது. இந்த மத்தியான வேளையில், ஆள் அரவமற்ற நிலையில் இங்கே ஒரு கொலை நடந்தால்கூட யாருக்கும் தெரியாது என்று நினைத்தாள் அவள்.

ஒரு நிமிடம் திகைத்து நின்றிருந்தவள் அந்த ஸ்டேஷன் மாஸ்டரை பிடித்துவிடும் நோக்கத்துடன் வேகமாக நடந்து ஸ்டேஷனுக்கு வெளியே வந்தாள். அந்த மனிதரோ அதற்குள் வெகு தொலைவு சென்று விட்டிருந்தார். 'அட, இந்த மனிதனுக்கு இருப்பவை கால்களா, இறக்கைகளா!' என்று அவளால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

அதே சமயம் தூரத்தே, மாட்டு வண்டி ஒன்று செல்லும் சத்தம் கேட்டு மறைந்தது. 'ஸ்டேஷனில் பராக்கு பார்த்துக் கொண்டு நிற்காமல் இருந்திருந்தால், இந்த வண்டிக்காரனின் துணையாவது கிடைத்திருக்கும்' என்று நினைத்தாள் அவள்.

எல்லாமே விசித்திரமாக தோன்றின அவளுக்கு. ஆளரவமற்ற ரயில்வே நிலையம், வெறிச்சோடி கிடக்கும் இடம், வேகமாக நடந்து மறைந்து போகும் மனிதர்கள், பஸ், ரிக்ஷா எதுவும் இல்லாத நடை பயணம்...

நடந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்துகொண்ட அனிதா ஸ்டேஷன் மாஸ்டர் காட்டிய பாதையில் நடக்கத் தொடங்கினாள். அப்பொழுது தூரத்தில் வாகனம் ஒன்று வரும் சத்தம் கேட்டது. ஜீப் ஒன்று வந்து கொண்டிருந்தது. அவளருகே வந்ததும் நின்றது. அதிலிருந்து இளைஞனான போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவன் இறங்கினான்.

"யார் நீங்க? இங்கே என்ன பண்றீங்க?" என்று கேட்டான் அவன்.

''எனக்கு மல்லி மலைக்குப் போகணும். பஸ், ரிக்ஷா எதுவும் இங்கே இல்லைன்னு தெரியுது. அதான் எப்படிப் போவதுன்னு முழிச்சிட்டிருக்கேன்'' என்றாள் அனிதா. அந்த இன்ஸ்பெக்டர் 'நான் உங் களைக் கொண்டு போய் விடுகிறேன்' என சொல்ல மாட்டானா என்ற நப்பாசையில்.

''மல்லி மலைக்கா? ஏன்? யாரைப் பார்க்கணும் அங்கே?'' என்று சற்று வியப்புடன் அடுக்கடுக்காய் பல கேள்விகளைக் கேட்டான் அவன்.

அந்த கேள்விகள் அவளுக்கு எரிச்சலைத் தந்தன. ''என்னடா இது!'' என்று சலித்துக் கொண்டாள். ''நான் யார், எங்கே போறேன், எதுக்குப் போறேன்னு எல்லாம் போலீஸுக்கு ரிப்போர்ட் கொடுத்தாகணுமா என்ன?'' என்றாள் தன் குரலில் எரிச்சலை மறைக் காமல்.

அதைக் கேட்டு அந்த இன்ஸ்பெக்டர், 'பக்' என சிரித்தான். ''அப்படி ஏதும் கட்டாயமில்லை'' என் றான் அவன் சிரிப்பு மாறாமலே. ''என் பெயர் பிரகாஷ். இந்த சுற்று வட்டாரத்திலுள்ள ஒரேயொரு போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டரா இருக்கேன்'' என்று தன்னை அறிமுகம் செய்தவன் தொடர்ந்து, ''உங்களைப் பற்றி இத்தனை விசாரிக்கக் காரணம் நீங்க மல்லி மலைக்குப் போவதாகச் சொன்னதுதான்'' என்று விளக்கினான்.

''ஏன், அங்கே என்ன விசேஷம்?''

''சமீபத்திலே அங்கே ஒரு கொலை நடந் திருக்கு...''

துணுக்குற்றாள் அனிதா. அவளுடைய அண்ண னுக்கு ஏதாவது... என்று மனம் பதறியது. பதட்டத்துடனே அவள் அவனைக் கேட்டாள், "கொலையா? யார் கொலை செய்யப்பட்டார்?" என்று.

"கோயில் நகைகளைத் திருடிட்டு இருந்த கள்ளன் அங்கே எதிர்பாராமல் வந்துவிட்ட பூசாரியை கொன்றுவிட்டு ஓடிவிட்டான்" என்று இன்ஸ்பெக்டர் சொல்லவும் 'அப்பாடா' என்று நிம்மதியடைந்தாள் அனிதா. தன் தமையன் நலமுடன் இருக்கின்றான் என்ற உணர்வு அவளுடைய இதயத் துடிப்பின் வேகத்தைக் கட்டுப்படுத்தியது.

"சரி, அதனாலே அங்கே நான் போகக் கூடாதா?"

"நீங்க போக விரும்பினா போகலாம்தான். சட் டப்படி அதை யாரும் தடுக்க முடியாது. ஆனா, கிராமத்து மக்கள் ரொம்ப கோபத்தில் இருக்காங்க. வெளியாட்களை கண்டாலே வெறுப்பு காட்றாங்க."

"ஆனா நான் கண்டிப்பா போய்த்தானாகணும்."

"அப்படி உங்களுக்கு என்ன வேலை அங்கே? சொன்னா நான் உதவ முடியுமான்னு பார்க்கிறேன்."

அனிதா அவனைக் கூர்ந்து பார்த்தாள். 'இவனால் ராகுலை தேடி கண்டுபிடிக்க உதவ முடியும். இவன் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். "என் அண்ணனை தேடி வந்திருக்கேன். ரெண்டு மாசத்துக்கு முன்னாலே மூலிகை ஆராய்ச்சின்னு வந்தவனை..."

அவள் முடிக்கும் முன்னால் குறுக்கிட்டான் பிரகாஷ். ''மூலிகை ஆராய்ச்சியா! உங்க அண்ணனா! என்ன பெயர் சொன்னீங்க...?'' என்று பரபரப்புடன் கேட்டான்.

''ராகுல்...''

இன்ஸ்பெக்டர் பிரகாஷின் முக பாவம் உடனே மாறியது. அவன் பதில் சொல்லாமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு தணிந்த குரலில், ''ரா...குல்னா சொன்னீங்க?'' என்று கேட்டான்.

''ஆமா. ஏன், உங்களுக்கு அவனைத் தெரியுமா?''

''நல்லாவே தெரியும்...''

''அ... நல்லதா போச்சு. என் வேலை இத்தனை சுலபமா முடியும்னு எதிர்பார்க்கலை. இப்ப அவன் எங்கே இருக்கான்? அவன்கிட்டே என்னை கூட்டிட்டுப் போக முடியுமா?'' என்று ஆவலுடன் கேட்டாள் அனிதா.

''முடியாது'' என்றான் பிரகாஷ் ''ஏன்னா, அவனைத் தான் நானும் தேடிட்டு இருக்கேன்.''

''என்னாச்சு அவனுக்கு? மல்லி மலையில் அவன் இல்லையா?''

பிரகாஷ் அவளை பரிதாபத்துடன் பார்த்தான்.

''ஏன் அப்படிப் பார்க்கிறீங்க?'' என்ற அனிதாவின் மூச்சு பிரகாஷ் சொன்ன பதிலைக் கேட்டு ஒரு நிமிடம் நின்றது.

''கோயில் நகைகளை கொள்ளையடிச்சுட்டு, கோயில் பூசாரியை கொன்னுட்டு ஓடிப் போனவன் இந்த ராகுல்தான்...''

அதைக் கேட்ட அனிதாவின் செவிகள் புலனற்றுப் போயின. மூளை மரத்துப் போயிற்று. அவள் ஒன்றும் புரியாதவள் போல் விழித்தாள். பிறகு, திடீரென செவிகளும், மூளையும் இயங்கத் தொடங்கின. ''ஓ நோ... இது பொய்'' என்று அலறினாள் அவள்.

* * *

நடப்பவைகளை நம்ப முடியாமல் திகைத்தாள் அனிதா. 'இது சாத்தியமில்லை. அவளுடைய அண்ணன் யாருக்கும் தீங்கு நினைக்கக் கூடியவனல்ல. பணத்தாசை அவனுக்கு அறவே இருந்ததில்லை' என்று நினைத்தவளுக்கு ராகுல் ஒரு தடவை அவளிடம் சொன்னவைகள் நினைவுக்கு வந்தன.

'அனி, வாழ்க்கையில் நாம் நிறைய அனுபவித்து விட்டோம். அன்புடன் அணைத்து, போக பெற்றோர்கள் இல்லாத ஏக்கம், 'அனாதைகள்' என்று எப்பொழுதும் குத்திக் காட்டப்பட்ட காயங்கள், அடுத்த நேரம் வாழ்க்கையில் என்ன நடக்குமோ என்ற நிச்சயமற்ற நிலை தந்த தவிப்பு எல்லாம் தந்த வலிகளை சுமந்து வாழ்ந்திருக்கின்றோம். இனி அவைகளை மறந்துவிட்டு மேலே நடப்போம். வலிகளையும், அவைகளை தந்த சம்பவங்களையும் மறந்து விடுவோம். ஆனால், அவைகள் கற்றுத் தந்த

பாடங்களை ஒரு போதும் மறக்கக் கூடாது. நாம் பெற்ற வலிகளை நம்மால் இன்னொருவர் பெறக் கூடாது என்பதில் கவனமாக இருப்போம். எக் காரணம் கொண்டும் யாரையும் வருத்தக் கூடாது.

பணம் வாழ்க்கைக்கு தேவைதான். அதைச் சம்பாதிப்போம். ஆனால், நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் அவசரத்தில் பிறருடைய உரிமைகள் பாதிக்கப்படாமல் கவனமாக இருப்பது அவசியம்...'

'இப்படிப்பட்ட எண்ணங்களுடைய ஒருவனால் நிச்சயம் கொள்ளையோ, கொலையோ செய்ய முடியாது. அண்ணனைப் பற்றி நான் தெரிந்து வைத்திருக்கும் அளவு தெரிந்திராத உலகம் அவன் மேல் சந்தேகப்பட்டு அவனை தேடிக் கொண்டிருக் கிறது. இவர்களுடைய சந்தேகத்தைத் தீர்த்து வைத்து ராகுல் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க வேண்டியது முக்கியம். அண்ணனைத் தேடிக் கண்டு பிடிக்க அவள் மல்லி மலைக்குப் போய்த்தானாக வேண்டும்.'

''எனக்கு மல்லி மலைக்குப் போகணும்'' என்றாள் அனிதா.

''அங்கே போய் என்ன செய்யப் போறீங்க?'' என்று கேட்டான் பிரகாஷ்.

''என் அண்ணனைத் தேடிக் கண்டுபிடிக்கப் போறேன். அவன் குற்றவாளியில்லேன்னு நிரூ பிக்கப் போறேன்.''

''அவரைத் தேடிக் கண்டு பிடிப்பது எங்கள் பொறுப்பு.''

''ஆமா, அதுக்குப் பிறகு அவன் செய்யாத குற்றத் துக்காகத் தூக்கிலே போடுவீங்க...'' என்றாள் அவள் கோபத்துடன்.

''நீங்க நினைப்பது போல் அவர் குற்றவாளி யில்லேன்னா ஏன் ஓடி ஒளியணும்?''

''உண்மையான குற்றவாளி அவனை மறைச்சு வைச்சிருக்கலாமில்லையா பழியை அவன் மேல் போட!''

இன்ஸ்பெக்டர் பிரகாஷ் சிந்தித்தான். 'இதுவும் சாத்தியமே!'

''மல்லி மலைக்கு நீங்க யார்னு சொல்லிட்டுப் போவீங்க? அங்கேயுள்ள மக்கள் கொதிச்சுப் போயி ருக்காங்க. நீங்க யார்னு தெரிஞ்சா உங்களுக்கு என்ன வாகும்னு உத்திரவாதம் தர முடியாது.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது'' என்றாள் அனிதா பிடிவாதத்துடன். ''நீங்க நெனச்சா உத வலாம். போலீஸ் ஆள்னு சொல்லி நுழைஞ்சிடலாமே!''

''மண்ணாங்கட்டி'' என்றான் பிரகாஷ். ''போலீஸ் ஆள்னு சொன்னீங்கன்னா இன்னும் சிரமம். போலீஸ்னு மட்டுமில்லே, அரசாங்க ஆள் யாருக்குமே அவங்க ஒத்துழைப்பு தர்றதில்லை.''

''உங்களால உதவ முடியாதுன்னா பரவாயில்லை. நானே வழி தேடிப் போய்க்குவேன்'' என்று மேலே நடக்க முயற்சி செய்தாள் அனிதா.

''ஓகே... ஓகே...'' என்றான் பிரகாஷ். ''உங்க முடிவு அதுதான்னா நான் உங்களை தடுக்க முடியாது. ஒரு காரியம் செய்யுங்க, இப்ப போக வேண்டாம். காலை யிலே சின்னதம்பியின் வண்டி வரும். அப்பதான் ரயில்லேர்ந்து இறங்கி வர்ற மாதிரி அவனோட வண்டியிலே போய்க்கலாம்.''

''யார் சின்னதம்பி?''

''சொல்றேன் எல்லாத்தையும் விவரமா, இப்ப என்கூட எங்க வீட்டுக்கு வாங்க. அம்மா இருக்காங்க வீட்டிலே. காலையிலே ஸ்டேஷனில் கொண்டு வந்து விடறேன்'' என்றான் பிரகாஷ்.

ஜீப்பில் அவள் ஏறிக் கொண்டாள். அதற்கு மேலும் அவள் எதுவும் பேசவில்லை. பேசுகிற மனநிலையில் அவள் இல்லை. மனதிற்குள் ஆயிரம் கேள்விகள் எழுந்து அவளைக் குடைந்தன. அந்தக் கேள்வி களுக்கு ராகுலால்தான் பதில் சொல்ல முடியும். அவனால்தான் கோயில் கொள்ளை, கொலை இவை களின் ரகசியத்தைச் சொல்ல முடியும். தற்சமயம் அந்த ரகசியம் ராகுலோடு சேர்ந்து காணாமல் போயி ருக்கின்றது.

## 2



''சின்னதம்பி யாருன்னு கேட்டீங்களே, சொல் றேன். மல்லிமலை கிராமத்தைச் சேர்ந்தவன்தான்.

இவன்கிட்டே ஒரு மாட்டு வண்டி இருக்கு. மாட்டு தீவனம் போன்ற கால்நடைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி சப்ளை செய்பவன் இவன் தான். ஊரிலுள்ளவங்களுக்கு தேவையான மற்ற சாமான்களையும் வாங்கிப் போவதுண்டு. அதற்காக அடிக்கடி பக்கத்து கிராமங்களுக்கு, பட்டணங் களுக்குப் போவான்'' என்று சொல்லிக் கொண்டிருந் தான் பிரகாஷ். ஜீப் பிரகாஷின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

''ம்....'' என்று சுவாரசியமின்றி கேட்டுக் கொண் டிருந்தாள் அனிதா. அவளுடைய எண்ணமெல்லாம் ராகுலையே சுற்றி வந்து கொண்டிருந்தது. அவனை எப்படி கண்டுபிடிப்பது என்பதிலேயே கவனமாக இருந்தது. புது இடம், பழக்கம் இல்லாத மனிதர்கள் இவர்களின் மத்தியில் அண்ணனைத் தேடிக் கண்டு பிடித்து மர்ம முடிச்சை எப்படி அவிழ்க்கப் போகி றோம் என்று திகைப்பாக இருந்தது.

அவளுடைய எண்ண ஓட்டத்தை அறிந்து கொண் டவன் போல், ''நீங்க அங்கே போய் எங்கே தங்கப் போறீங்க மிஸ். அ... உங்க பெயரைச் சொல்லலை இன்னும்...'' என்றான் பிரகாஷ்.

''அனிதா'' என்றவள், ''என்ன சொல்லிட்டிருந் தீங்க?'' என்று கேட்டாள். 'கண்ணையும், கருத் தையும் திறந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் செய்ய நினைத்திருக்கும் காரி யத்தைச் செய்ய முடியும்' என்ற உணர்வு தோன்ற,

அவள் தன் சிந்தனையைக் கலைத்துவிட்டு, ''திரும்பச் சொல்லுங்க, ப்ளீஸ்...'' என்றாள்.

''மல்லி மலைக்கு போய் யார்கிட்டே தங்கப் போறீங்கன்னு கேட்டேன்.''

''ஏன், அங்கே ஓட்டல் எதுவும் இல்லையா?''

''மேடம், இது ஒரு குக்கிராமம். அந்த மாதிரி எந்த வசதிகளும் இல்லாத இடம். சத்திரம், சாவடிகூட அங்கே கிடையாது. ம்... ஒன்று செய்யலாம்'' என்றவன் தொடர்ந்து சொன்னான். ''மல்லி மலை யிலே எனக்கு வேண்டியவர் ஒருவர் இருக்கார். ஆறுமுகம்னு பெயர். அவர் வீட்டிலே நீங்க தங்கலாம். கடிதம் ஒண்ணு தர்றேன். நீங்க யார், எதுக்கு எங்கே போறீங்கங்கற விவரமெல்லாம் இதிலே எழுதலை. கிராம வாழ்க்கையை அறிஞ்சுக்க வந்திருக்கிற என் னோட விருந்தாளியா அங்கே தங்கப் போறீங்க'' என்று.

இவன் இவ்வளவு உதவி செய்கிறானே, நான் இதுவரை இவனுக்கு நன்றிகூடச் சொல்லவில் லையே என்பது அப்பொழுது அவளுக்கு உறைத்தது. ''சாரி மிஸ்டர் பிரகாஷ். என் மனநிலை சரியில் லாததாலே சற்று கடுமையாக நடந்துக்கிட்டேன். நீங்க செய்ற எல்லா உதவிகளுக்கும் நன்றி'' என்றாள். அதைச் சொல்லும் பொழுதுகூட அவளுடைய முகம் கலக்கத்தைத் தவிர வேறு எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை.

''பரவாயில்லை'' என்றான் பிரகாஷ் உண்மையாக. அவளுடைய மனநிலையை அவன் உணர்ந்தே

யிருந்தான். ''போலீஸ்காரன்னு மதிப்பைவிட அவங்க மேலே பயம்தான் எல்லோர் மனதிலும் அநேகமா இருக்கு. ஒரு சில போலீஸ்காரர்கள் தவறா நடந்துக்கிறாங்க என்பதாலே மொத்த போலீஸ் டிபார்ட்மென்ட்டுக்கும் கெட்ட பெயர். அதுக்காக பொதுமக்களை ஒரேயடியா குற்றம் செய்ய முடியாது. அவங்க பெற்ற அனுபவத்தை வைச்சு 'ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம்'னு தவறா எடை போடுறாங்க.''

அவன் சொன்னதை அவள் எத்தனை ஏற்றுக் கொண்டாள் என்பது அவளுடைய பேச்சிலிருந்து புரிந்தது.

''ராகுலை கண்டுபிடிக்க இதுவரை உங்க டிபார்ட்மென்ட் என்ன செய்திருக்கு மிஸ்டர் இன்ஸ்பெக்டர்?'' என்று உஷ்ணமாகக் கேட்டாள் அனிதா. ''அவன் காணாம போய் பதினைஞ்சு நாளாயிருக்கு, எங்கெங்கே தேடினீங்க?''

அனிதா நன்றி சொன்னதில் குளிர்ந்து போயிருந்த பிரகாஷ் இந்த கேள்வியை, அதுவும் இத்தனை ஆக்ரோஷத்துடன் எதிர்பார்க்கவில்லை. ஒரு நிமிடம் தடுமாறியவன் தன்னை சமாளித்துக் கொண்டு, ''நீங்க கேள்வி கேக்கறீங்களா, குற்றப்படுத்துறீங்களா?'' என்று கேட்டான். அவனுக்கு எரிச்சலாக இருந்தது. சற்று கோபமும் உண்டாயிற்று. 'இந்த பெண் சரியான மனநிலையில் இல்லை, இவள் மேல்

கோபப்படுவதில் அர்த்தமில்லை' என்று தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான்.

''சுற்று வட்டாரத்திலுள்ள எல்லா கிராமங்களிலும் தேடினோம். இன்னும் தேடிக் கொண்டிருக்கின்றோம். எல்லா போலீஸ் ஸ்டேஷனுக்கும் ராகுலோட ஸ்கெட்சை அனுப்பி வைச்சிருக்கோம். உங்ககிட்டே அவரோட போட்டோ இருக்கா?''

''ம்... என் மொபைலில் இருக்கு. தர்றேன். ஆனா, குற்றவாளின்னு தேடாம 'காணாமல் போனவன்'னு தேடுங்க. நான் கம்ப்ளையண்ட் எழுதி தர்றேன்'' என்றவள் தான் உணர்ச்சி வசப்பட்டு அவனிடம் கடுமையாகப் பேசி விட்டதை உணர்ந்து, ''சாரி'' என்றாள் மீண்டும்.

* * *

இரவில் பிரகாஷின் வீட்டில் தங்கியவள், காலை பொழுதையும் அங்கேயே கழித்தாள். பிற்பகலில் பிரகாஷ் அவளை தன் ஜீப்பில் ஏற்றி ரயில்வே ஸ்டேஷனில் கொண்டு போய் விட்டான். அன்று தான் ரயிலிலிருந்து இறங்குபவள் போல் அனிதா ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தாள். அதற்குள் பள்ளிக்கூட மாணவர்களுடன் மாட்டு வண்டி கிளம்பி விட்டிருந்தது.

'கடவுளே, இந்த வண்டி போய் விட்டால் அவளால் மல்லிமலைக்குப் போக முடியாது. அனிதா வண்டியின் பின்னால் ஓடினாள். ''சின்னதம்பி... சின்னதம்பி...'' என்று உரக்க அழைத்தபடி.

வண்டி நின்றது. மூச்சிரைக்க ஓடி வந்த அனிதா, ''வண்டி மல்லிமலைக்குத்தானே போவுது, என்னை அங்கே கூட்டீட்டு போவீங்களா?'' என்று கேட்டாள்.

சின்னதம்பி என்றழைக்கப்படும் வாலிபன், ''என் பெயர் எப்படி உங்களுக்குத் தெரியும்? யார் நீங்க?'' என்று கேட்டான்.

''ஓ... அதுவா... ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னார்'' என்று சொல்லி சமாளித்தாள் அவள்.

''அங்கே யார்கிட்டே போறீங்க? என்ன வேலையா போறீங்க?'' என்று கேட்டான் சின்னதம்பி.

''சொல்றேன்'' என்றாள் அனிதா. ''என் பெயர் அனிதா. கிராமத்தைப் பற்றியும், கிராம மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றியும் அறிந்து கொள்ள வந்திருக்கேன்.''

''அறிந்து என்ன செய்யப் போறீங்க?'' என்று அவன் கேட்டான்.

'அட, இவன் புத்திசாலியாக இருப்பான் போலிருக்கே' என்று நினைத்த அனிதா, ''நான் கல்லூரி மாணவி. இது எங்க பாடத்தின் ஒரு பகுதி'' என்றாள்.

கல்லூரியைப் பற்றியும், கல்வியைப் பற்றியும் அவன் அதிகம் அறிந்து வைத்திராததால் அதற்கு மேலும் கேள்விகள் கேட்கவில்லை. வண்டியில் அவளை ஏற்றிக் கொண்டான். என்றாலும், வழி நெடுக சந்தேகத்துடன் அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

வண்டியில் புண்ணாக்கு மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எஞ்சி நந்த இடத்தில் பள்ளிக்கூடத்து மூன்று பையன்களும், அனிதாவும் அமர்ந்திருந்தனர். 'கடக்... மடக்...' என ஓசை யெழுப்பிக் கொண்டும், குடிகாரனைப் போய் அப்படியும், இப்படியும் அசைந்து ஆடிக் கொண்டும், கரடு முரடான சாலையில் வண்டி செல்கையில் அதில் பயணித்தவர்களும் ஆடினர். சரியாக இருக்க இடம் போதாமையாலும், அப்படி அசௌகரியமாக இருந்து பழக்கப்படாததாலும் அனிதா ஓரிரு சந் தர்ப்பங்களில் நிலை தடுமாறினாள். மாணவர்களில் ஒருவன், "அக்கா, வண்டியை பிடிச்சுக்குங்க, விழுந் துடுவீங்க" என்றான்.

அவள், "நன்றி" என்றாள்.

இப்படி அற்ப விஷயங்களுக்காகவும் நன்றி சொல் லும் பழக்கம் பட்டணத்துப் படித்தவர்களுக்கே உரியது. அந்தப் பழக்கத்துக்கு அதிக அறிமுகமில் லாத சிறுவர்கள் 'களுக்' என சிரித்தனர்.

"ஏம்பா சிரிக்கிறீங்க?" என்று சினேக பாவத்துடன் கேட்டாள் அனிதா.

"ஒண்ணுமில்லேக்கா" என்று ஒருசேர குரலெழுப் பினர். அந்த சிறுவர்கள், பிறகு ஒருவன், "அக்கா நீங்க பட்டணத்திலிருந்தா வர்றீங்க?" என்று கேட் டான்.

"டேய், வாய மூடிட்டு சும்மா இருங்கல. இல் லேன்னா இங்கேயே இறக்கி விட்டுடுவேன்" என்று

அவர்களை அதட்டினான் சின்னதம்பி. அந்த சிறு வர்கள் அனிதாவுடன் சினேகமாய் பழகுவதை அவன் விரும்பவில்லை என்று தெரிந்தது. அவனுடைய முகத்திலும், குரலிலும்தான் அவளுக்காக சினேக பாவம் இல்லையே!

அதன் பிறகு அந்த சிறுவர்கள் எதுவும் பேச வில்லை. அனிதாவும் பாதையின் இரு மருங் கிலும் தெரிந்த காட்சியைப் பார்த்தபடி பயணித் தாள்.

வழியெங்கும் பச்சை பசேல் என்று மலைகளும், மலர்ந்து மணம் வீசும் பூச்செடிகளும், அடர்ந்து உயர்ந்த மரங்களும், சின்னச் சின்ன நீர்வீழ்ச்சிகளும், சிறு குன்றுகளுமாக மிக ரம்மியமான காட்சியாக இருந்தது. ஆனால், இந்த அழகை ரசிக்கும் மன நிலையில் அனிதா இல்லை.

* * *

**ஊ**ருக்குள்ளே வண்டி நுழைந்தது. தலையிலும், இடுப்பிலும் மண் குடத்தில் நீர் சுமந்து வரும் பெண்கள், மாடுகளை ஓட்டிச் செல்லும் விவசாயிகள், விறகு சுமந்து செல்லும் மக்கள், கோவணத்துடன் வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் என்று எல்லோரும் அவளைப் புதுமையாகப் பார்த் தனர்.

மூன்று சிறுவர்களும் குதித்துக் கீழே இறங்கி னார்கள். ''ம்... இறங்குங்க. ஊர் வந்தாச்சு'' என்றான் சின்னதம்பி அனிதாவைப் பார்த்து.

அவள் வண்டியிலிருந்தபடியே சுற்றிலும் பார்த்தாள். ஓலைக் குடிசைகள் ஒழுங்கற்று நிறைந்திருந்தன. எல்லாம் மண் குடிசைகள். ''இங்கே ஆறுமுகத்தின் வீடு எங்கே இருக்கு?'' என்று கேட்டாள்.

''ஏன்?''

''அவர்கிட்டேதான் போகணும்.''

''ஏன்?''

''அவர் வீட்டிலேதான் தங்கப் போறேன்.''

''ஏன்?''

அவள் அவனை எரிச்சலுடன் பார்த்தாள். ''உன் வண்டியிலே என்னை ஏத்திட்டு வந்ததுக்கு நன்றி. ஆனா, அதுக்காக எல்லாத்தையும் உங்கிட்டே சொல்ல வேண்டிய அவசியம் இல்லே.''

''இருக்கு...''

இப்பொழுது அவள் அவனைக் கேட்டாள், ''ஏன்?'' என்று.

''ஏன்னா, நான் ஆறுமுகத்தோட மகன். எங்க வீட்டிலே ஏன் தங்கப் போறீங்கன்னு தெரிஞ்சுக்க எனக்கு எல்லா உரிமையும் இருக்கு'' என்றான் சின்ன தம்பி அவளை முறைத்தபடி. அவள் அவனுடைய வீட்டில் தங்கப் போவதை விரும்பவில்லை என்பது அவனுடைய குரலிலும், முறைத்த பார்வையிலும் தெளிவாகத் தெரிந்தது.

''ஐ ஆம் சாரி'' என்றவள் உடனே 'இவர்களுக்கு ஆங்கிலம், தெரியாது. இவர்களிடம் தூய தமிழில்

பேசுவதுதான் சரியானது என்பதை உணர்ந்து, ''மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

''இன்ஸ்பெக்டர் பிரகாஷ் கடிதம் ஒன்று தந்தார் ஆறுமுகத்திடம் கொடுக்கச் சொல்லி'' என்றாள் தொடர்ந்து.

அவன் ஒன்றும் பேசவில்லை. மேலும் கொஞ்ச தூரம் வண்டியை ஓட்டிச் சென்றவன் ஒரு குடிசை யின் முன்னால் நிறுத்தினான். ''வீடு வந்தாச்சு. இறங்குங்க'' என்றான்.

அந்த சிறுவர்களைப் போல் குதித்து இறங்க அவளால் முடியவில்லை. திருதிருவென விழித்துக் கொண்டு இருந்தவள் அவள் கீழே இறங்க சின்ன தம்பி உதவுவான் என எதிர்பார்த்து ஏமாந்தாள். அவனோ முகத்தில் கடுகடுப்புடன் அவள் இறங்குவ தற்காக காத்திருந்தான். இவன் உதவமாட்டான் என்பது தெரிந்ததும் அவள் எப்படியோ சமாளித்து கீழே இறங்கினாள். அப்பொழுது அவள் அணிந் திருந்த சல்வார் கமிஸின் துப்பட்டா வண்டியில் சிக்கிக் கொண்டது. அதை எடுத்து விடக்கூட சின்ன தம்பி உதவவில்லை.

சினேகமற்ற அவனுடைய பாவனையாலும், செய்கைகளாலும் அவனுக்கு அவளைப் பிடிக்க வில்லை என்பதை உணர்ந்து கொண்டாள் அனிதா. இப்படியே எல்லோரும் இருந்தால் அவளால் அண் ணனை எப்படித் தேடிக் கண்டுபிடிக்க முடியும்' என்று நினைக்கையில் மனம் சுணங்கிற்று.

‘‘யாருப்பா அது உன்கூட?’’ என்று கேட்டபடி குடிசையினுள்ளிருந்து நடுத்தர வயதுள்ள மனிதன் ஒருவர் வெளியே வந்தார். அவர் ஆறுமுகமாக இருக்கலாம் என்று ஊகித்த அனிதா, ‘‘இன்ஸ்பெக்டர் பிரகாஷ் உங்களுக்காக இந்தக் கடிதத்தைத் தந்தார்’’ என்றபடி கடிதத்தை அவரிடம் கொடுத்தாள்.

கடிதத்தை வாங்கி வாசித்த ஆறுமுகம் அவளைக் கூர்ந்து பார்த்தார். ‘‘பட்டணத்துக்காரி. நல்லா வசதியா வாழ்ந்திருப்பே. இங்கே, இந்த குடிசையில் உன்னால் இருக்க முடியுமா?’’ என்று அவளை கேட்டார்.

‘‘அது ஒரு பிரச்சனையில்லை. உங்களுக்கு எந்த வகையிலும் தொந்தரவா இருக்க மாட்டேன் ஐயா.’’

‘‘எங்களைப் பற்றி சொல்லலைம்மா. உன் வசதியைப் பற்றி சொல்றேன். ஒரேயொரு அறை யுள்ள குடிசை. எப்படி நீ...’’

‘‘கவலைப்படாதீங்க ஐயா. நான் சமாளித்துக் கொள்வேன்’’ என்ற அனிதா நினைத்துக் கொண் டாள், ‘அண்ணா, உனக்காக எந்த அசௌகரியத் தையும் சகித்துக் கொள்வேன்’ என்று.

* * *

முதலில் அந்த கிராமத்தைப் பற்றியும், அங் குள்ள மக்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண் டும். அதன் பிறகு ராகுலைப் பற்றி விசாரிக்கலாம் என்று நினைத்த அனிதா, ‘‘ஐயா, நான் கொஞ்சம் இப்படியே காலாற நடந்துட்டு வர்றேன்’’ என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

மல்லி மலை குக்கிராமத்திலும் குக்கிராமமாக இருந்தது. அங்குள்ளவர்கள் அணிந்திருந்த மிக எளிய உடைகள், வசதியற்ற வீடுகள், வறுமையை போர்த்திக் கொண்டிருக்கும் வாழ்க்கை என்று அந்த கிராமம் இக்கால நாகரீக உலகத்தைவிட்டு வெகு தூரம் விலகியிருந்தது.

இரண்டு வயது வரை குழந்தைகள் அம்மணமாக திரிந்தார்கள். அதற்கு மேல் ஏழெட்டு வயது வரை எல்லா குழந்தைகளும் இடுப்புக்குக் கீழே மட்டும் மறைத்திருந்தார்கள். கொஞ்சம் வளர்ந்த பெண் குழந்தைகளின் இடுப்புக்கு மேல் ரவிக்கையும், ஆண் பிள்ளைகளின் தலையில் முண்டாசும் இருந்தன. சரியான போஷாக்கு இல்லாமல் எல்லோருமே காய்ந்து போயிருந்தனர். இத்தனை பசுமை யான இடத்தில் இந்த வறுமை ஏன் என்று சிந்தித் தாள்.

ஊருக்குள் ஒரு சின்ன கடையை தவிர பள்ளிக் கூடம், ஆஸ்பத்திரி என்று வேறு எந்த வசதிகளும் இல்லாதது அவளுக்கு திகைப்பைக் கொடுத்தது. ‘இந்த கிராமத்து பஞ்சாயத்து தலைவர் என்ன செய்கிறார்? நமக்கு தேவையானவைகளை ஏன் இங்குள்ள மக்கள் பெற்றுக் கொள்ளவில்லை?’ என்பன போன்ற கேள்விகள் அவளுக்குள் எழாமல் இல்லை.

வழியில் இயற்கை அழகை பார்த்துக்கொண்டே நடந்தாள் அனிதா. வயல்களிலும், காடுகளிலும்

ஆண்கள், பெண்கள் சிறுவர், சிறுமியர் எல்லோருமே வேலை செய்து கொண்டிருந்தனர். 'குடும்பத்தி லுள்ள எல்லோருமே உழைத்தும் ஏன் இந்த பற்றா குறை' என்று வியந்தாள்.

இதைப்பற்றி பிறகு யோசிக்கலாம். முதலில் வந்த வேலையை கவனிப்போம். அண்ணனைத் தேடி கண்டுபிடித்து அவன் குற்றவாளி இல்லை, என்று நினைத்தாள் அவள். ஆனால், அவனை எங்கே போய் தேடுவது என்பதுதான் அவளுக்குப் புரியவில்லை. ராகுல் எங்கே தங்கியிருந்தான் என்பதுகூட அவ ளுக்குத் தெரியவில்லை. ஆறுமுகத்துக்கு தெரிந் திருக்கக்கூடும். அவரிடம் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருந்தன.

அவள் சிந்தித்தபடியே நடந்தாள். எதிர்ப்படு வோரைப் பார்த்து சிநேகமாகச் சிரித்தாள். ஆனால் அவளுடைய சிரிப்பை யாரும் அவளுக்குத் திருப்பி கொடுக்கவில்லை. ஒரு சிலரிடம் பேச்சு கொடுத்தும் பார்த்தாள். அவளுடைய பேச்சை யாரும் விரும்ப வில்லை என்பது அவர்கள் அளித்த ஒற்றை வார்த்தை பதில் தெளிவுபடுத்தியது. பேசக்கூடத் தயங்கும் இவர்களிடம் ராகுலைப் பற்றி எப்படி விசாரிப்பது என்று திகைத்தாள் அவள்.

ஊரின் மையத்தில் குடிசைகள் நெருக்கமாக அமைந்திருந்தன. ஊரின் எல்லையிலோ அங்கொன் றும் இங்கொன்றுமாக ஒன்றுக்கொன்று ஏராள மான இடைவெளிவிட்டு குடிசைகள் சில பரவ

லாக இருந்தன. அப்படி தனித்து நின்றிருந்த குடிசை ஒன்றின் பின்னால் அவள் நடந்து கொண் டிருந்த பொழுது ஒரு பெண்ணின் அழுகுரலும், தொடர்ந்து அவளை அதட்டும் ஒரு ஆண் குரலும் கேட்டன.

"வாய மூடிட்டு இருடி. செய்ற காரியத்தைச் செய்துட்டு முதலை கண்ணீர் விடறயா? சத்தம் போட்டே கழுத்தை நெரிச்சிக் கொன்னு போட்டுடு வேன்..."

அனிதா அந்த குடிசையை நோக்கி நடந்தாள். குடிசையின் பின்புறம் இருந்த ஜன்னல் வழியாக குடிசையின் உட்புறம் பார்வையைச் செலுத்தினாள்.

பழைய கயிற்றுக் கட்டில் ஒன்றில் ஒரு சின்ன பெண் அழுதபடி அமர்ந்திருக்க, அவளருகே அவளை அதட்டியபடி ஒரு வாலிபன் நின்றிருந்தான். அவன் அனிதாவை நிமிர்ந்து பார்த்தான். கோபத்தால் சிவந் திருந்த அவனுடைய கண்கள் பார்க்க பயமாக இருந்தன.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "என்ன விஷயம்?" என்று கேட்டாள் அனிதா.

"இது உனக்கு சம்பந்தம் இல்லாத விஷயம். நீ உன் ஜோலியை பார்த்துட்டுப் போம்மா" என்றான் அவன் அதட்டலாக.

"இல்லே... ஏதாவது... நான் உதவ முடியுமான்னு..." என்று குளறினாள் அனிதா.

''ஏம்மா, மத்தவங்க விஷயத்திலே தலையிடக் கூடாதுன்னு உங்க பட்டண படிப்பு சொல்லித் தர லையா?'' என்று கேட்டபடி ஜன்னலை நோக்கி அவன் வர அவள் திரும்பி நடந்தாள். 'அவன் சொல்வது உண்மைதான். வீட்டுக்கு வீடு ஆயிரம் பிரச்சனைகள் இருக்கும். அதைக் கேட்க அவள் யார்!'

* * *

அவள் ஆறுமுகத்தின் வீட்டையடைந்த பொழுது அவர் அவளுக்காக குடிசை வாசலில் நின்றிருந்தார். ''என்ன புள்ளே இவ்வளவு நேரம்? வீடு தெரியாம சுத்திட்டு இருக்கியோன்னு நெனச்சேன். வா, சாப்பிட்டுடலாம்'' என்றார் அவர்.

அனிதா கைகடிகாரத்தைப் பார்த்தாள். மாலை மணி ஆறரையாகியிருந்தது. ''இவ்வளவு சீக்கிரமா?''

''இங்கெல்லாம் சீக்கிரம் சாப்பிட்டுட்டு சீக்கிரம் உறங்கிடுவோம். எட்டு எட்டரைக்கெல்லாம் ஊரே அடங்கிடும். அது மாதிரி காலை மூன்றரை நாலுக் கெல்லாம் எல்லோரும் முழிச்சுடுவாங்க'' என்றார் ஆறுமுகம்.

கிராமத்து மக்களின் உடல் ஆரோக்கியத்தின் ரகசியமே இயற்கையை அவர்கள் பின்பற்றுவதில் தான் அடங்கியிருக்கிறது. சீக்கிரம் உறங்குதல், சீக்கிரம் விழித்தல், உழைப்பு, சுத்தமான காற்று, உடனுக்குடன் செடிகளிலிருந்து பறித்துச் சமைக்

கப்படும் காய்கறிகள் எல்லாமே அவர்களுடைய உடலைப் பேணுகின்றன.

* * *

முருங்கை காயுடன் கத்திரிக்காயை சேர்த்துக் குழம்பு வைத்திருந்தாள் ஆறுமுகத்தின் மனைவி. சுவையாக இருந்தது. சாப்பிட்டு முடிந்த பின்னர் அனிதா ஆறுமுகத்தின் கைகளில் வலுக்கட்டாயமாக கொஞ்சம் பணத்தைத் திணித்தாள். ''நான் எத்தனை நாள் இங்கே தங்கியிருப்பேன்னு எனக்கேத் தெரியாது. செலவுக்கு உதவியா இருக்கும்'' என்றாள்.

பிறகு அவரிடம், ''இங்கே ராகுல்னு ஒரு டாக்டர்...'' என்று அவள் கேட்டு முடிக்கும் முன் அவர் சீறினார். ''அந்த பயலின் பெயரை எடுக்காதே. கொலைகாரப் பய... கேடு கெட்ட பய...''

அவருடைய ஆக்ரோஷம் அவளைத் தடுமாற வைத்தது. 'இவருக்கு ஏன் இத்தனை கோபம் வருகிறது' என்று நினைத்தாள்.

ஆறுமுகம் தொடர்ந்து, ''இங்கே பாரும்மா, இது தான் முதலும் கடைசியும். அந்த நாசமா போறவனின் பெயரை இனிமே எடுக்காதே...'' என்றார்.

'ராகுல் கொலையாளி என்று நம்பினாலும் அதற்காக இவர் ஏன் இத்தனை கோபம் கொள்ள வேண்டும்! இவருக்கு ராகுல் மேல் தனிப்பட்ட முறையில் ஏதாவது பகைமை இருக்கலாமோ!'

# 3



மல்லி மலை கிராமத்தினுள் இன்னும் மின்சாரம் வந்திருக்கவில்லை. நல்லவேளை, மலை பிரதேசம் என்பதால் அதிக சூடு இல்லை. மேலும், இரவில் வீட்டு ஜன்னல்களையும், கதவையும் திறந்து வைத்துக் கொண்டு படுத்ததால் புழுக்கம் இல்லை.

பெண்கள் வீட்டினுள்ளும், ஆண்கள் முற்றத்திலும் படுத்துக் கொண்டார்கள். அனிதாவும் வீட்டினுள் பாயை விரித்துப் படுத்துக் கொண்டாள். புது இடம் என்பதாலும், பல விஷயங்கள் மனதைக் குடைந்து கொண்டிருந்ததாலும் அவளுக்கு உறக்கம் வரவில்லை.

இந்த கிராமத்து மக்கள் ஏன் அவளிடம் சினேகமாக இல்லை! அவளைப் பார்த்து சிரிக்கவே தயங்கும் மக்களிடம் அவளால் எப்படி துப்பு துலக்க முடியும்?

ராகுலைப் பற்றி கேட்ட பொழுது ஆறுமுகத்துக்கு ஏன் இத்தனை கோபம் வந்தது? அவனிடம் தனிப்பட்ட முறையில் அவருக்கு என்ன பகைமை?

தூக்கம் வராமல் கோரை பாயில் புரண்ட அனிதா கடைசியில் எழுந்து முற்றத்துக்கு வந்தாள். அரை யிருட்டில் உறங்கிக் கொண்டிருந்த அந்த கிராமத்தை

அவளுடைய கண்கள் அளவெடுப்பது போல் நோக்கின.

'இங்கே எங்கேயோ என் அண்ணனை மறைத்து வைத்திருக்கின்றார்கள். யார் மறைந்து வைத்திருக்கக் கூடும்? அவன் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்கும் ஆதாரமும் இங்கே எங்கோதான் ஒளிந்திருக்கின்றது. யாரோ தான் செய்த குற்றத்தை அவன் மேல் சுமத்தி அவனை மாட்டிவிடப் பார்க்கிறார்கள். காணாமல் போயிருக்கும் இந்த ரகசியத்தை எப்படி பிடிக்கப் போகிறேன்!'

நினைக்க நினைக்க திகைப்புதான் உண்டாயிற்று. 'அண்ணா, நீ எங்கே இருக்கிறாய்? எந்நிலையில் இருக்கிறாய்?' என்று மனம் அலறிற்று. 'அனி, அனி' என்று பாசத்தை கொட்டும் தன் அண்ணன் ஏதாவது ஆபத்தில் இருக்கக்கூடும் என நினைக்கையில் அவளுடைய கண்கள் நிறைந்து கண்ணீர் வடிந்தது.

''ஏம்மா இங்கே நின்னுட்டிருக்கே? தூக்கம் வரலையா?'' என்று பின்னாலிருந்து திடீரென குரல் எழும்பவே திடுக்கிட்டு போன அனிதா சரேலென திரும்பிப் பார்த்தாள். பின்னால் ஆறுமுகம் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் அவசர அவசரமாகத் தன் கண்ணீரைத் துடைத்தாள். ஆனால், அதற்குள் தெரு விளக்கின் வெளிச்சத்தில் அவளுடைய கண்ணீரைப் பார்த்து விட்டார் அவர்.

''ஏம்மா அழறே?'' என்று பதட்டத்துடன் கேட்டார்.

''ஒண்ணுமில்லே ஐயா.''

''இத்தனை கடுமையா உங்கிட்டே பேசியிருக்கக் கூடாதுதான். இப்ப கொஞ்ச காலமா இங்கே என்ன வெல்லாமோ நடந்திட்டிருக்கு. மனம் புண்ணாயிட்டுது புள்ளே. தெரிஞ்சோ, தெரியாமலோ யாராவது அதத் தொட்டுட்டா...''

''புரியுது ஐயோ. ஒவ்வொருவனுடைய வாழ்க்கையிலும் அவர்களுக்கு மட்டுமே சொந்தமான வேதனைகள், வலிகள் இருக்கவே செய்கின்றன. அதை எல்லோருக்கும் தொறந்து காட்டணும்னு கட்டாயம் இல்லை...''

''இவ்வளவு புரிஞ்சு வைச்சிருக்கியேம்மா, பொறவு ஏன் அழறே?''

''அதுக்கு நீங்க காரணம் இல்லே ஐயா. என் மனசும் காயப்பட்டிருக்கு. வேகமா வீசுற காற்று பட்டாக்கூட வலிக்குது'' என்றாள் அனிதா.

''நான் ஏதாவது உதவி செய்ய முடியுமாம்மா?'' என்று ஆறுமுகம் கேட்டார்.

'உங்களால் எனக்கு உதவலாம், உதவ முடியாமலும் போகலாம். ஆனா, எதை எப்படி கேட்டு உதவி பெறுவது என்பதுதான் புரியாத குழப்பமாக இருக்கிறது. நான் எதையாவது கேட்க போய் மீண்டும், உங்களுடைய மன புண்ணை அது கிளறி விட்டால்...'

''ஏற்கனவே உதவி செய்துட்டுதான் இருக்கீங்க. முன்பின் தெரியாத எனக்கு உங்க வீட்டிலே அடைக்கலம் கொடுத்து.''

''இந்த ராகுல் பய செய்திருக்கிற காரியத்தைக் கண்ட பொறவு பட்டணத்து மனுஷங்க மேலே நம்பிக்கைவிட்டுப் போயிட்டுதும்மா. வேறே யாராவ தாயிருந்தா உதவியிருக்க மாட்டேன். இன்ஸ்பெக்டர் பிரகாஷுக்கு தெரிஞ்சவங்கங்கறதாலேதான்... அதிருக்கட்டும்மா, நீ இந்த ஊர்லே என்ன பார்த்து என்ன எழுதப் போறே?''

''மொத்தமா கிராமத்து மனிதர்களைப் பற்றியும், அவங்களோட வாழ்க்கை முறையைப் பற்றியும் எழுதப்போறேன். ஆனா, இந்த கிராமத்து மக்கள் என்னோடு பேசவே விரும்பலை. அவங்ககிட்டே யிருந்து என்னத்தைத் தெரிஞ்சுக்க முடியும்.''

''ஊர் மக்கள் ரொம்ப நல்லவங்க. அப்பாவிங்க. இவங்களோடு நல்லவனா நடிச்சு ஏமாத்திட்டான் பாரு அந்த பட்டணத்து டாக்டர், அதனாலேதான்... சரி, விட்டுத்தள்ளு. அவனோட நினைவு வந்தாலே மனம் கொதிச்சுப் போயிடுது. பாவிப்பய, கொலை, கொள்ளை செய்ததோடு என் மவனோட வாழ்க்கையையும் நரகமாக்கிட்டான். சின்னதம்பி நடை பிணமா நடமாடிட்டிருக்கான்...'' என்று சொல்லி பெருமூச்சு விட்டார் ஆறுமுகம்.

திடுக்கிட்டாள் அனிதா. 'இது என்ன புதியதாக! சின்னதம்பியை என்ன செய்தான் ராகுல்! பிரகாஷ் ஒன்றும் சொல்லவில்லையே!'

* * *

படுக்கையில் போய் படுத்துக் கொண்டாலும் அனிதாவுக்கு உறக்கம் வரவேயில்லை. இரவு முழுவதும் சின்னதம்பிக்கும், ராகுலுக்கும் இடையே என்ன நடந்தது?' என்ற கேள்வி விடை தெரியாமல் தவித்தது. மறுநாள் பொழுது விடிந்ததும் கிராமத் தினுள் நுழைந்து மக்களிடம் பல வகைகளில் பேச்சு கொடுத்தாள்.

''இந்த கிராமத்துக்கு பல வெளியூர்காரங்க வரு வாங்களா?''

''ஏன் கேக்கறே?''

''அழகான கிராமமாச்சே, அதான் கேக்கறேன். இப்ப சமீபத்திலே யார் வந்தா இங்கே?''

''உனக்கு அது பற்றி என்ன?''

''கிராமத்தைப் பற்றி எழுதணும்னா எல்லாம் தெரிஞ்சுக்க வேண்டியது அவசியமில்லையா?''

''எங்க கிராமத்தைப் பற்றி நீ ஒண்ணும் எழுத வேண்டாம். போம்மா.''

''அ.... அதெப்படி! கிராமத்தின் அழகைப் பற்றி நிறைய பேர் தெரிஞ்சுக்கிட்டால்தானே பார்க்க வருவாங்க.''

''ஒருத்தரும் வரவேணாம். வந்து எங்க கிராமத்து அமைதியை கெடுக்க வேணாம்.''

''உங்க கோபம் எனக்குப் புரியுது. சமீபத்திலே இங்கே நடந்த துர்சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். ஒரு பட்டணத்தான் தப்பா நடந்துட்டான்னா எல் லாரும் தப்புன்னு அர்த்தமா!''

ஒரே விதமாக பதில் தந்த, கிராமத்து மக்கள் அவளை விசித்திரமாகப் பார்த்தனர். 'இவளுக் கென்ன, பட்டணத்துக்காரர்களுக்கு வக்காலத்து வாங்குகிறாள்!' என்று பார்வையால் சொன்னார்கள்.

அனிதா தயக்கத்துடன் ராகுலைப் பற்றி விசாரித் தாள். "நீங்க சொல்ற பட்டணத்து டாக்டர் எப்படிப் பட்டவர்?"

"ஏம்மா எங்க வாய கிளறுறே? நீ போலீஸ் ஆளா? போலீஸ்காரின்னா முதல்ல அவனைப் பிடிச்சுத் தூக்கிலே போடு."

எல்லோரும் ஒரே முகமக ராகுல்தான் குற்றவாளி என்று குற்றப்படுத்தினார்கள். அவனைப் பற்றி அதிகம் பேச யாரும் தயாராக இல்லை.

'இன்ஸ்பெக்டர் பிரகாஷை கேட்க வேண்டும்.' இதுவரை கேட்கப்படாத, கேட்டும் விடை கிடைக் காத நிறைய கேள்விகள் அவளிடம் இருந்தன. மொபைல் போனில் அவனை தொடர்பு கொண்டாள். "உங்களைப் பார்க்கணும். எங்கே எப்படி சந்திக் கலாம்?"

"ஏன் என்ன விஷயம்?"

"கொஞ்சம் பேசணும்."

"நான் மல்லி மலைக்கு வருவேன். அப்போ..." என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே அவனுடைய குரல் தேய்ந்து ஒலித்து, பின்னர் நின்று போய்விட்டது. மல்லி மலைக்கு அவன் எப்பொழுது

வருவான் என்று கேட்டுத் தெரிந்துகொள்ள முடிய வில்லை.

* * *

மாலை நேரத்தில் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிய மாணவர்களை தன்னுடைய மாட்டு வண்டியிலிருந்து இறக்கிவிட்டு விட்டு சின்னதம்பி அகன்றதும், அதுவரை மறைந்திருந்த அனிதா அந்த பள்ளி சிறுவர்களிடம் வந்தாள். கிராமத்து ஒரே கடையிலிருந்து வாங்கி வந்திருந்த மிட்டாய்களை கொடுத்து அவர்களோடு சினேகிதம் செய்துகொள்ள முயன்றாள்.

''இவ்வளவு தூரம் வண்டியிலே பள்ளிக்கூடம் போக வேண்டியிருக்கே, நம்ம ஊருக்குள்ள ஒரு பள்ளிக்கூடம் இருந்தா எவ்வளவு நல்லதா இருக்கும்!'' என்று அவர்களிடம் பேச்சுக் கொடுத் தாள்.

''நடந்து போனா பக்கம்தானக்கா'' என்றாள் ஒரு சிறுவன். ''முன்பெல்லாம் நாங்க நடந்துதான் போவோம். இப்ப அந்த வழிய அடைச்சுட்டாங்க.''

''அட, ஏம்பா?''

''கோயிலுக்குப் பின்னாடி ஒரு பாதை இருக்கு. கோயிலுக்கு இடது பக்கம் பள்ளத்தாக்கு. வலது பக்கம் பள்ளத்தாக்கு. ரெண்டு பள்ளத்தாக்குகளுக்கும் இடையே மலை பாதை போகுது. கோயில்லே கொலை விழுந்துடுச்சில்லே, அதான்... அந்த பக்கமா போக பயமாயிருக்கு...''

''கொலையா?'' என்று ஒன்றும் தெரியாதவள் போல் கேட்டாள் அனிதா. ''யாரை கொலை செய்தாங்க? யார் கொலை செய்தது?''

''பட்டணத்து டாக்டர்தான்...'' என்று ஒருவன் சொல்லத் தொடங்க மற்ற சிறுவன் அவனைத் தடுத்தான். ''சொல்லாதேல...''

''சொன்னா ஒண்ணுமில்லேல்ல. அக்கா நம்ம அண்ணன் வூட்டு விருந்தாளிதான்.''

''உங்கப்பாரு தோலை உரிச்சு மிளகாய் தடவிரு வார்ல...''

''அவருக்கு எப்படித் தெரியப் போவுது! சும்மா இருல... பயந்த பீச்சாளி...'' என்றான் முதலாவது பேசிய சிறுவன் தான் தைரியசாலி என்று விளம்பரப் படுத்தும் தோரணையில்.

அனிதாவுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. கோயில் கொலை பற்றிப் பேச ஏன் தடை சட்டம் என்று வியந் தவள், ''கோயில் எந்தப் பக்கம் இருக்கு?'' என்று அந்தச் சிறுவர்களை கேட்டாள்.

''அந்த பக்கமா போகணும்'' என்று சுட்டிக் காட்டி னான் வாண்டுகளில் ஒருவன். ''ஆனா, நீங்க அங்கே போவாதீங்கக்கா. பூசாரி பிசாசா திரியறாரு. புடிச் சுக்குவாறு...''

''பிசாசா! யார் சொன்னது?''

அந்த சிறுவர்கள் ஒருவரையொருவர் பார்த்து திருதிருவென விழித்தனர். ''எல்லோரும் சொல் றாங்க.''

'இப்படியொரு வதந்தியைக் கிளப்பிவிட்டு மக்களின் மனதில் ஏன் பீதியை உண்டாக்குகிறார் கள்!' என்று எண்ணியபடி சிறுவன் சுட்டிக் காட்டிய திசையை நோக்கி நடந்தாள். முண்டாசு கட்டிய இரு கிராமத்தார் அவளை பின் தொடர்வதை அவள் கவனிக்கவில்லை.

* * *

அந்த ஊர் அம்மன் கோயிலும் குடிசைதான். மண் குடிசை. ஓலை கூரைதான் வேயப்பட்டிருந்தது. உறுதியற்ற சாதாரண மரக் கதவு அதை மூடி யிருந்தது. அதன் பூட்டின் மேல் அரசு சீல் வைக்கப்பட் டிருந்தது. ஓங்கி உதைத்தால் பிய்ந்து விடும் கதவு அது.

'உண்பதற்கும், உடுப்பதற்குமே போதுமான வருமானம் இல்லாத கிராமத்து மக்கள் அம்மனுக்கு எப்படி நகை செய்து போட்டார்கள்! காதிலேயும், கழுத்திலேயும் வெறும் பாசி மாலைகளையும், பித்தளை நகைகளையும் அணிந்திருக்கும் பெண்கள் வசிக்கும் கிராமத்தில் அம்மன் நகை அலங்காரங் களோடு இருந்தாளா! நம்ப முடியாமல் இருக்கிறதே!' என்று சிந்தித்தபடி கோயிலை வெளியிலிருந்த படியே பார்வையிட்டபடி சுற்றிச் சுற்றி வந்தவள் யாரோ நடந்து வரும் காலடி ஓசை கேட்டதும் நின்று கவனித்தாள். யாரோ இரு கிராமத்தார் தலையில் முண்டாசுடன் வருவதைக் கண்டதும் சட்டென

பக்கத்தில் இருந்த குத்து செடிகளுக்கு பின்னால் மறைந்து கொண்டாள்.

''என்னல, இங்கேதானே வந்தா! எப்படி மாயமா மறைஞ்சு போனா!''

''எங்கோ போய் தொலையட்டும். அவ எங்கே போனான்னு பார்த்து என்ன செஞ்சுடப் போறோம்! போவட்டும் அப்பாரு. நாம திரும்பிப் போவோம்.''

''இந்தப் பக்கம் பிசாசு நடமாடுதுன்னு தெரிஞ்சும் வந்திருக்கான்னா அவ யாரு. எதுக்கு வந்திருக்கான்னு தெரிஞ்சுக்க வேண்டாம்?''

''தெரிஞ்சு என்ன செய்யப் போறோம் அப்பாரு?''

''போடா மடப்பயலே. கவனமா இருக்கணும். நடக்கிற ஒவ்வொரு விஷயத்தையும் நல்லா கவனிக்கணும். ஒருவேளை இந்த பாதை வழியா அடுத்த ஊருக்குப் போயிருப்பா. அங்கேயும் போய் பார்த்துடுவோம்.''

அவர்கள் இருவரையும் சரியாகப் பார்ப்பதற்காக குத்து செடிகளின் மறைவினின்று தலையை நீட்டினாள் அனிதா. ஒருவர் சற்று வயதானவராக, முடி நரைத்தவராக இருந்தார். மற்றவன் இளம் வயதினன். உதட்டுக்கு மேல் கருகருவென மீசை காட்டு செடிகள் போல் புசுபுசுவென வளர்ந்து உதடுகளை மறைத்திருந்தது.

அவர்கள் அவளுக்கு முதுகை காட்டியபடி மேலே நடக்கவும் அனிதா மறைவிடத்தைவிட்டு வெளியே வர முயன்றாள். அப்பொழுது தனக்குப் பின்னால்

யாரோ நிற்பது போன்ற உணர்வு தோன்ற, ''யாரது?'' என்று கேட்டாள்.

பின்னாலிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. ஒரு கை மட்டும் வந்து அவளுடைய வாயை மூடியது. அவளுடைய புறங்கழுத்தில் மூச்சு வேக வேகமாக வந்து மோதியது. அவள் திமிறிக் கொண்டு வாயை மூடிய கையினின்று தன்னை விடுவிக்க முயலு கையில் அவளுக்குப் பின்னால் நின்றிருந்தவன் தன்னுடைய மறு கையால் அவளுடைய தோளைப் பற்றி அழுத்தி கீழே உட்கார வைத்தான். நிலை தடுமாறி அவள் அவன் மேல் விழ இருவரும் கீழே பாதாளத்தை நோக்கி உருண்டனர்.

அனிதா அச்சத்துடன் கண்களை இறுக்கமாக, மூடிக்கொண்டாள். 'செத்தேன்... கடவுளே காப் பாற்றும்...'

* * *

**சி**ன்னதம்பி அதிர்ச்சியினின்று இன்னும் மீண் டிருக்கவில்லை என்பது அவனுடைய நடவடிக்கை களிலிருந்து தெளிவாகப் புரிந்தது. அவன் ஏதோ உண்டான், உடுத்தினான், வழக்கம் போல் பட்டணத் துக்கு போய் கிராமத்து மக்களுக்குத் தேவையான சாமான்களை வாங்கி வந்தான். யாரும் அவனிடம் பேச்சு கொடுத்தால் உணர்ச்சியற்ற குரலில் பதிலளித் தான். மற்றபடி அவனுடைய உணர்ச்சிகள் பாறை யாக இறுகிப் போயிருந்தன. தனக்கும், தன்னைச் சுற்றி நடப்பவைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாதவன் போல் நடந்து கொண்டான்.

அவனைப் பார்த்து எல்லோருமே பரிதாபப்பட் டனர். அந்த பார்வையை அவன் விரும்பவில்லை. என்றாலும், மௌனம் காத்தான்! அவன் எரிச்சலடை யட்டும், கோபமடையட்டும், கத்தி சண்டையிடட் டும். எப்படியாயினும் அவனுடைய ஏமாற்றமும், வலியும் வடிந்துபோய் அவன் சகஜ நிலைக்கு திரும்பினால் போதும்' என்று கடவுளை வேண்டிக் கொண்டார் ஆறுமுகம்.

சின்னதம்பி காளை மாடுகளை வண்டியினின்று அவிழ்த்து விடுவித்துவிட்டு அவைகளுக்கு வைக் கோல் போட்டுக் கொண்டிருந்தான். குடிசை வாசலில் நின்று அவனையே கவனித்துக் கொண்டிருந்தார் ஆறுமுகம்.

முன்பெல்லாம் சின்னதம்பியிடம் இந்த அமை தியைக் காண முடியாது. எப்பொழுதும் உற்சாகத்தின் உருவாக இருப்பான். ஏதாவது ஒரு பாட்டை வாய் முணுமுணுத்துக் கொண்டே இருக்கும். யாரைக் கண்டாலும், 'என்ன சௌக்கியமா?' என்று உற்சாகத் துடன் விசாரிப்பான். எப்பொழுதும் சிரிப்பு, கேலி பேச்சு என்று அவன் இருக்கும் இடத்தில் சந்தோஷம் பொங்கி வழியும். அவன் வீட்டில் இருக்கும் நேரமே குறைவு. தன்னுடைய தினசரி வேலைகளை முடித்து விட்டு கிளம்பி வெளியே சென்றால் இரவில் உண்ணவும், உறங்கவும் மட்டுமே வீட்டுக்கு வரு வான்.

இப்பொழுது அவனுடைய வாழ்க்கையே மாறிப் போயிருந்தது. அவன் பழையபடி மாற வேண்டும்

என் ஆறுமுகம் விரும்பினாலும் என்ன செய்து அல்லது சொல்லி அவனை சமாதானப்படுத்துவது என்பது புரியாமல் திகைத்துப் போயிருந்தார். ஆறுத லளிக்கிறேன் பேர்வழி என்று தான் எதையாவது சொல்லப் போய் அது அவனுடைய மன புண்ணை குத்தி கிளறுவதாக அமைந்துவிடக் கூடாதேயென அஞ்சினார்.

வைக்கோல் தின்று கொண்டிருந்த மாடுகளை தட்டிக் கொடுத்துவிட்டு திரும்பிய சின்னதம்பி தன் தந்தை தன்னைப் பார்த்தபடி நிற்பதை கவனித்து 'என்ன?' என்பது போல் அவரைப் பார்த்தான்.

''சும்மாதான் பார்த்துட்டு நிக்கறேன். நீ களைச்சுப் போயிருப்பே. இங்கே வந்து உட்காரு'' என்றவர் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டார். பக்கத்தில் வந்து உட்கார்ந்த மகனை வாஞ்சையுடன் பார்த்தார். ஏதாவது பேச வேண்டும் என்பதற்காக, ''இந்த பள்ளிக்கூட பிள்ளைகளுக்கு எப்பப்பா லீவு?'' என்று கேட்டார்.

''என்ன அப்பாரு, லீவு முடிஞ்சு இப்பதானே பள்ளிக்கூடம் தொடங்கியிருக்கு'' என்றான் சின்ன தம்பி.

''ஓ... ஆமா... ஆமா... ஆனா, காலேஜ் புள்ளைங் களுக்கு மட்டும் இப்ப ஏன் லீவு?''

''அவங்களோட பரீட்சை மெள்ளதான் இருக்கு. மெள்ள பரீட்சை முடிஞ்சு, மெள்ளதான் லீவு. ஆமா, ஏன் கேக்கறீர்?''

''அட, சும்மாதாம்பா. இந்த அனிதா புள்ளே லீவுன்னு சொல்லிச்சு பாரு, அதான்...''

சின்னதம்பி தகப்பனைப் பார்த்துக் கேட்டான். ''ஒரு அனுபவம் போதாதா அப்பாரு, இந்த பொம் பளையை நம்ம வூட்லே தங்கியிருக்க ஏன் சம்மதிச் சீங்க?''

''இன்ஸ்பெக்டர் பிரகாஷ் அனுப்பினாரேன்னு தான். அவர் நமக்கு வேண்டியவராச்சே, மறுக்க முடி யுமா!''

''ம்...'' என்று சின்னதம்பி அவரை ஆமோதித் தான்.

தொடர்ந்து, ''இவளால் யாருக்கும் எந்த ஆபத்தும் இல்லே. நல்ல புள்ளையா தெரியுது...'' என்று அவர் சொல்லவும் சின்னதம்பி சீறினான். ''ஆமா, முகத் திலே எழுதி ஒட்டியிருக்கு பாரும். அந்த பட்டணத்து டாக்டரைப் பத்தியும் அப்படித்தான் நெனச்சோம், என்னாச்சு? என்னைக் கொல்லாம கொன்னுட்டுப் போயிட்டான்.''

அவன் சீறட்டும், கத்தட்டும், அவனுடைய கோபம், ஆத்திரம் எல்லாம் வெளியேறட்டும் என்று காத்திருந்த ஆறுமுகம் ஏமாற்றமடைந்தார். சின்ன தம்பி இப்படி ஏதும் செய்யாமல் மௌனமாகிப் போனான். தன்னுள் முடங்கி முடங்கிப் போனான். அவனுடைய மனப் புண்ணை எப்படி ஆற்றுவது என்பது தெரியாமல் கலக்கத்துடன் அமர்ந்திருந்தார் ஆறுமுகம்.

# 4



சரியான சாலைகள் இல்லாமல் குண்டும், குழியும் நிறைந்த பாதைகளைக் கொண்டது மல்லி மலை கிராமம். ஓரிரு மாட்டு வண்டிகளைத் தவிர வேறு வாகனங்கள் அங்கே இல்லை என்பதால் முறையான சாலைகள் இல்லாதது குறித்து யாரும் கவலைப் படவில்லை.

மேடுகளும், மலைகளும், பள்ளத்தாக்குகளும் நிறைந்த அந்த கிராம பூகோளத்தைச் சரியாக தெரிந்து வைத்திராததால் கோவிலுக்குப் பின்னால் சரிவு இருப்பதை அனிதா அறிந்து வைத்திருக்க வில்லை. அந்நிலையில் திடீரென எதிர்பாராத வித மாக யாரோ ஒருவன் அவளைப் பிடித்து அமுத்த இரு வரும் சேர்ந்து கீழே உருண்டதும் 'ஐயோ செத்தேன்' என்று அவளுடைய மனம் அலறிற்று.

ஆனால், அதிர்ஷ்டவசமாக இருவரும் கீழே பாதாளத்தில் விழாமல் இடையே இருந்த சமதளத்தில் விழுந்தனர். அதிலும் ஏராளமான புதர்களும், புற்களும் வளர்ந்திருந்ததால் அடிபடாமல் தப்பினர். ஓரிரு கணங்கள் அப்படியே கிடந்தவள் எழுந்து நின்று தன்னை இழுத்தவன் யாரென அறிந்து கொள்ளும் ஆவலில் கீழே விழுந்து கிடந்தவனை பார்த்தவள்

வியந்தாள். ''நீங்களா!'' என்று குரலில் வியப்பு காட்டியவள், ''பயந்தே போயிட்டேன். உங்களால் இன்று செத்துப்போக இருந்தேன்'' என்றாள் கோபத் துடன்.

''நல்லா இருக்கு... உங்களுக்கு நான் உதவி செய்திருக்கேன். உங்க வாய் மூடி, தோளை அழுத்தி கீழே உட்கார வைக்கலேன்னா உங்களைத் தேடி முன்னால் போன ரெண்டு பேரும் திரும்பி வந்து.. அப்புறம் அவ்வளவுதான்... நீங்க செய்ய நினைத் திருக்கும் காரியத்தை செய்து முடிக்காமலே பட் டணம் திரும்ப வேண்டி வந்திருக்கும்'' என்றான் இன்ஸ்பெக்டர் பிரகாஷ்.

''ஐ ஆம் ஸாரி...'' என்றாள் அனிதா.

''பரவாயில்லை. முதல்லே குற்றம் சாட்டுவதும், பிறகு ஸாரி சொல்வதும் உங்க டிரேட் மார்க் ஆச்சே'' என்று சொல்லி லேசாகச் சிரித்தான் பிரகாஷ் ''மேலே ஏறி போவோமா?''

அவர்கள் மேலே ஏறி வந்ததும் அவளுடைய சுமிசின் கை கிழிந்து இருப்பதையும், புஜத்திலிருந்து இரத்தம் கசிவதையும் கவனித்தான். ''அடடா, காயம்பட்டிருக்கே'' என்றவன் தன் கைகுட்டையால் அவளுடைய காயத்தை கட்டினான். ''வைத்தியர் கிட்டே காட்டித்தான் ஆகணும். காயம் பெரிசா இருக்கும் போலிருக்கு'' என்றவன் கேட்டான்,

ஆமா, இங்கே என்ன செய்திட்டிருந்தீங்க?'' என்று.

''துப்பு துலக்கும் முன்னால் குற்றம் நடந்த இடத்தைப் பார்க்க வேண்டாமா! அம்மனுக்கு எவ்வளவு நகை போட்டிருந்தாங்க?''

''காதில் தோடுகள், கழுத்தில் ஒரு மாலை. இவ்வளவு தான்.''

''ப்பூ... இந்த சொற்ப நகைகளுக்காக என் அண்ணன் கொள்ளையடிச்சுட்டு கொலையும் செய்திருப்பான்னு நம்புறீங்களா? எங்கண்ணன் எனக்காக ஐம்பது பவுன் நகைகள் செய்து வைச்சிருக்கான். சொந்தகாரங்க எங்களுக்கு சேர வேண்டிய நகைகளை அபகரிச்சப்போ சண்டை போட்டுத் திரும்பப் பெற நினைக்காமப் போனா போகட்டும்னு விட்டுப் பிடிச்சோம்.''

''உங்கண்ணா தப்பு செய்யலைன்னா ஏன் ஓடி ஒளியணும்?''

''அண்ணன் ஒளிஞ்சிருக்கானா அல்லது ஒளிச்சு வைச்சிருக்காங்களான்னு எப்படித் தெரியும்?''

வைத்தியர் வீட்டை நோக்கி நடந்தபடி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''இங்கே அண்ணன் யார்கூட இருந்தான்?'' என்று கேட்டாள் அனிதா.

''அவர் தனியா மலை மேலே ஒரு குடிசை போட்டுட்டு இருந்தார். சாப்பிட மட்டும் தங்கசாமியிடம் வருவார்.''

''யார் இந்த தங்கசாமி? அவனைப் பார்க்கணும். அப்புறம், அண்ணன் இருந்த குடிசையையும் பார்க்கணும்.''

''பார்க்கலாம். நீங்க தனியா போய் பார்த்தா நல்லது. நானும் கூட வந்தா உங்களையும் போலீஸ் ஆளா நெனச்சுக்கப் போறாங்க. அப்புறம் உங்களுக்கு ஒத்துழைப்பு கிடைப்பது கஷ்டம்.''

''ந.....''

''அதனால்தான் சின்னதம்பியோடு ஊருக்கு வரச்சொன்னதே. என்கூட வந்திருந்தா...''

''புரியுது. இப்பவும் நாம சேர்ந்து நடப்பது சரியில்லேதானே.''

''ஆம. கூடிய மட்டும் தனித்தனியா பிரிஞ்சு நம்ம வேலையைச் செய்வோம்'' என்ற பிரகாஷ் தான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது என நினைத் தான். அவளோடு நடப்பது, பேசுவது எல்லாமே அவனுக்கு சந்தோஷம் தருவதாக இருந்தது.

''அண்ணன் ஒரு முனிவரை தேடிட்டிருந்தா சொன்னான். அவரையும் பார்க்கணும். ஒருவேளை அவன் அவரை தேடிப் போயிருக்கலாமில்லையா!'' என்று சந்தேகம் எழுப்பினாள் அனிதா.

''எனக்குத் தெரிந்த அளவுக்கு இங்கே முனிவர் யாரும் இல்லை. மூலிகை வைத்தியத்திலே இறந் தவர் வைத்தியர் ஒருவர்தான்.''

''ஒருவேளை அவருக்கு தெரிஞ்சிருக்கலாம்'' என்றாள் அனிதா நம்பிக்கையுடன்.

''இப்ப நாம அவர்கிட்டேதான் போறோம். முனி வரைப் பற்றி கேட்டுப் பாருங்க. நேரடியா எதுவும்

கேட்டுடாதீங்க. உங்கண்ணாவுக்கும், வைத்தியருக்கும் இடையே எலியும், பூனைக்கும் உள்ள உறவு தான்'' என்றான் பிரகாஷ்.

அதன் பின்னர் அவர்கள் எதுவும் பேசிக்கொள்ள வில்லை. மௌனமாக நடந்தார்கள். பிரகாஷின் மனதில் மட்டும் அனிதாவைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளும் ஆவல் முளைத்திருந்தது. 'இந்த பெண்ணிடம் அழகோடு புத்திசாலித்தனமும் இருக்கின்றது. அடேயப்பா! என்ன ஒரு தைரியம்! என்ன ஒரு பர்ஸனாலிட்டி!' என்று வியக்காமல் இருக்க முடியவில்லை அவனால்.

* * *

பிரகாஷையும், அனிதாவையும் கண்டதும் வைத்தியரின் முகபாவம் மாறியது. ''திரும்பவும் வந்திட்டீரா! என்னய்யா ஒரே தொல்லையா போச்சு! உங்களுக்கெல்லாம் வேறே வேலையே இல்லையா?'' என்று சிடுசிடுத்தார்.

''கவலைப்படாதேயும் வைத்தியரே, இந்த தடவை விசாரணைக்கு வரலை. இந்தம்மாவுக்கு கையிலே காயம். மருந்து வைச்சு கட்டுப்போட கூட்டி வந்திருக்கேன். ஊருக்குப் புதுசா என்ன வழி, தெரியாம திணறிட்டு இருந்தாங்க. கூட்டிட்டு வந்தேன்'' என்றான் பிரகாஷ்.

''ஏம்மா, நீ ஆறுமுகம் வீட்டு விருந்தாளியில்லே?'' என்று விசாரித்த வைத்தியர் காயத்துக்கு

மருந்து வைத்து கட்டினார். ''கவலைப்படாதேம்மா, காத்தால பாரு, காயம் ஆறியிருக்கும்'' என்றார்.

''என்ன வைத்தியரே, நன்னாரி சர்பத் கிடை யாதா?'' என்று கேட்டான் பிரகாஷ். பிறகு அவன் அனிதா பக்கம் திரும்பி, ''வைத்தியர் வீட்டு நன்னாரி சர்பத் ஊர் பிரசித்தம். ஆஹா! என்ன ஒரு சுவைங் றீங்க! குடித்தவுடனே மனமும், உடலும் புத்துணர்ச்சி பெற்றுவிடும்'' என்று சொல்லி வைத்தியருக்கு ஐஸ் வைத்தான்.

''ஆமா வைத்தியரே, உங்க கை மருந்துகூட இந்த சுற்று வட்டார கிராமங்களிலெல்லாம் பிரசித்தம்னு இன்ஸ்பெக்டர் சொன்னார். இப்ப நீங்க எனக்கு மருந்து வைச்சு கட்டினவுடனே வலி மறைஞ்சட்டு துன்னா பாருங்களேன்'' என்றாள் அனிதாவும் அவரை சந்தோஷப்படுத்தும் நோக்கத்துடன். ராகுல் குறிப்பிட்ட முனிவரைப் பற்றி இவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் இவளுடைய சினேகிதத்தைப் பெற வேண்டியது அவசியம் என்பதால் அவள் அப்படிப் பேசினாள். 'அண்ணன் சொன்ன முனிவரை சந்திப்பது அவசியம். அவருக்கு ராகுலைப் பற்றி தெரிந்திருக்கலாம்' என்று நினைத் தாள் அவள்.

''இந்தாம்மா, என்ன யோசனையில் போயிட்டே? சர்பத் குடி'' என்ற வைத்தியர் சர்பத் கொண்டு வந்த சின்னப் பெண்ணை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். ''இவ என் மகள் செல்வி.''

மிரட்சியுடன் நின்றிருந்த செல்வியைப் பார்த்து புன்னகைத்தாள் அனிதா! அவளுடைய புன்னகையை செல்வி உடனே பிரதிபலிக்கவில்லை. சற்று நேரத்துக்கு பின்னரே லேசாக இதழ் விரித்து பதிலுக்கு புன்னகைத்தாள். ஆனால், அந்த புன்னகை வறட்சியையும், மிரட்சியையும் மட்டுமே காட்டின. 'இந்த கிராமத்து மக்கள் எல்லோரும் அதிர்ந்து அல்லது குழம்பிப் போயிருக்கிறார்கள்' என்று நினைத்துக் கொண்டாள் அனிதா. அவள் மிருதுவாக செல்வியின் கையைப் பற்றி தன்னருகே அமர்த்திக் கொண்டாள்.

''..... இந்த போலீஸ்காரன் பொல்லாதவன். இவனாவது என்னைப்பற்றி நல்லா பேசுவதாவது!'' என்று வைத்தியர் சொன்னாலும் அவருடைய குரலில் கர்வமும், மகிழ்ச்சியும் இல்லாமல் இல்லை.

''இவர் மட்டுமில்லே வைத்தியரே, ஊர் ஜனங்க மொத்தமும் உம்மைப் புகழ்ந்து பேசறாங்க...'' என்றாள் அனிதா. இப்படியெல்லாம் பொய் சொல்வது அவளுடைய வழக்கம் இல்லையென்றாலும் காரியம் நடக்க வேண்டும் என்பதற்காக அப்படிச் சொன்னாள்.

ஊர் மக்களின் பெயரை எடுத்ததும் வைத்தியரின் முகம் இறுகியது. ''மண்ணாங்கட்டி...'' என்று உறுமினார் அவர். ''அந்த பட்டணத்துக்காரன் வந்தப்ப எல்லோரும் வசியப்பட்டது போல அவன் பின்னாலே ஓடினாங்க. அவன் இவங்க மூஞ்சியிலே கரியைப் பூசிட்டு ஓடிட்டான். எதுக்கெடுத்தாலும் அவன்

பாட்டுதான்... அவன் மருந்து தந்தான் மூட்டு வலி சரியா போச்சு... அவன் மருந்து ஊத்தினான் காது கேட்க ஆரம்பிக்கட்டுதுன்னு... இப்பதான் என் அருமை தெரியுதாக்கும்!''

ராகுல் கிராமத்து மக்களிடமிருந்து பணம் பெற்றுக் கொள்ளாமல் இலவசமாக மருத்துவம் பார்த்ததால் வைத்தியரின் வருமானம் குறைந்து போனதும் அவருடைய கோபத்துக்கான இன்னொரு காரணம் என்பதை அவர் சொல்லவில்லை. ஆனால், அனிதா புரிந்து கொண்டாள்.

''பட்டணத்துக்காரனா! யார் அது?'' என்று ஒன்றும் தெரியாதவள் போல் கேட்டாள் அவள்.

''ஏம்புள்ளே, உனக்குத் தெரியாதாக்கும்? ஆத்தா நகையை திருடிட்டு, பூசாரியை கொன்னுட்டு ஓடிப் போனானே ராகுலோ கோகுலோ எதுவோ ஒண்ணு... அவனைத்தான் சொல்றேன். எப்படியும் தொலைஞ்சு போனானேன்னு எனக்கு சந்தோஷம்தான். என் றாலும்... யோவ் இன்ஸ்பெக்டர், அவனை கண்டு பிடிச்சு தூக்கிலே போடும். அப்பதான் என் மனசு ஆறும்...'' என்று சொல்லிவிட்டு கோபத்துடன் உறுமி னார் வைத்தியர்.

வைத்தியரின் பேச்சைக் கேட்ட அனிதாவுக்கு கோபம் வரவே செய்தது. அது வெளியே தெரிந்து விடாதபடி மிக சாமர்த்தியமாக தன்னை அடக்கிக் கொண்டாள். 'இந்த ஆளுக்கு என் அண்ணன் மேல் ஏகப்பட்ட கோபம் இருக்கிறது. அவனை தன்

பாதையினின்று அகற்றும் நோக்கத்துடன் இவரே எல்லாவற்றையும் செய்துவிட்டு ராகுல் மேல் பழியைப் போட்டிருக்கலாமல்லவா! இவரிடமிருந்து நிறைய விஷயங்களைக் கறக்கலாம். அதற்காக பொறுமையும், போலியாகவாவது சினேகமும் காட்டியே ஆகவேண்டும்.'

இந்த எண்ணம் வந்ததும் அவள் தன் கோபத்தை மறைத்துக் கொண்டு போலியாக புன்னகைத்தாள். ''உண்மையை எப்படி மறைக்க முடியாதோ அப்ப டியே திறமையையும் மறைக்க முடியாது. இரண்டுமே கடைசியில் உலகத்தின் முன்னால் வந்தே தீரும்'' என்றவள் வைத்தியரின் முகத்தை கவனித்தாள். அது மகிழ்ச்சியை மட்டுமே காட்ட எதையும் ஊகிக்க முடியாமல் குழம்பினாள்.

பின்னர், அனிதா வைத்தியரிடம், ''இங்கே ஒரு முனிவர் இருப்பதாக கேள்விப்பட்டேன். மூலிகை ஞானம் நிறைய அவரிடம் இருப்பதாக சொல்லிக் கொள்ளுங்க. அவர் எங்கே இருக்கார் தெரியுமா?'' என்று கேட்டாள்.

இதைக் கேட்ட வைத்தியரின் முகபாவம் மாறியது. ''எதுக்கு? யார் சொன்னா? அப்படி யாரையும் எனக்குத் தெரியாது'' என்று படபடவெனப் பேசிய வரின் குரலில் சந்தோஷமின்மை தெரிந்தது.

பின்னர் அவரே மீண்டும் அவளைக் கேட்டார். ''உனக்கு இதெல்லாம் ஏன் அனாவசிய விசா

ரணை? அவரைப் பற்றி ஏன் உனக்குத் தெரிஞ்சுக் கணும்?'' என்று.

''சும்மாதான்'' என்றாள் அனிதா. ''இந்த கிரா மத்தைப் பற்றி முழுமையா அறிஞ்சு எழுத வந்திருக் கேன். அப்ப எல்லா நல்லது கெட்டதையும் தெரிஞ் சுக்கணும் இல்லீயா'' என்றாள்.

''அவர் எங்கே இருக்கார்?''

''அப்படியொண்ணும் விசேஷ குணம் அவர் கிட்டே இல்லை. அ... எனக்கு அப்படி யாரையும் தெரியாது. அப்படி எந்த முனிவரும் இங்கே இல்லை'' என்றார் வைத்தியர் அவசர அவசரமாக.

அவர் முன்பின் முரண்பாடுடன் பேசியதை கவனித்தாள் அனிதா. 'முனிவரைப் பற்றி ஏதும் தெரியாது. அப்படி ஒருவர் இல்லையென்றால் அவரைப் பற்றி எப்படிச் சொல்ல முடிகிறது இவ ரால்!' என்று திகைப்பு உண்டாயிற்று அவளுக்கு.

''நீ பணம் தந்துட்டுப் போம்மா. எனக்கு வேலை இருக்கு'' என்று அவளை அனுப்பி வைக்க முயன்றார் வைத்தியர்.

வைத்தியருக்கு பணம் கொடுக்க அவள் தன் கைப்பையை தேடிய பொழுதுதான் கைப்பை தன்னிடம் இல்லாததை கவனித்தாள். ''கீழே எங்காவது விழுந் திருக்கும். நீங்க இங்கேயே இருங்க. நான் போய் எடுத்து வருகிறேன்'' என்று கிளம்பிச் சென்றான் பிரகாஷ்.

அனிதா அங்கே இருப்பதில் அசௌகரியத்தை உணர்ந்தார் வைத்தியர். அவருக்கு உதவி செய்யும் வகையில் கிராமத்தான் ஒருவன் வந்தான். "எங்க ஐயாவுக்கு காய்ச்சலில் கண் திறக்க முடியலை. ஏதேதோ புலம்பிட்டு உணர்வு இல்லாதவர் போல விழுந்து கிடக்கார். சீக்கிரம் வாரும் வைத்தியரே."

அந்த இடத்தைவிட்டு இப்போதைக்கு போனால் போதும் என்பது போல் வைத்தியர் அவனுடன் சென்றார். போகும் பொழுது, "என் மககிட்டே பணத்தைக் கொடுத்துட்டுப் போம்மா. நான் வரும் வரை காத்திருக்க வேண்டியதில்லை" என்றார்.

"சரி. உங்க பெயரை நான் தெரிஞ்சுக்கலாமா?"

"அய்யாசாமி."

* * *

அய்யாசாமி வந்திருந்த கிராமத்தானோடு சென்று விட்டார். இப்பொழுது அனிதாவும், செல்வியும் மட்டுமே அங்கே இருந்தனர். அனிதா செல்வியிடம் பேச்சு கொடுத்தாள்.

"நீ படிச்சிருக்கியா செல்வி?"

"இல்லேக்கா, எங்க ஊர்லே பள்ளிக்கூடம் இல்லே. சில பசங்க பக்கத்து கிராமத்திலே போய் படிச்சுட்டு வருவாங்க."

"ம்.... அதான் ஆச்சரியமா இருக்கு. ஏன் ஊருக்குள்ளே பள்ளிக்கூடம் கொண்டு வர யாரும் முயற்சிக்கலை!" என்றவள் தொடர்ந்து, "வாம்மா, உனக்கு படிக்கணும்னு ஆசை இல்லை?" என்று கேட்டாள்.

'இல்லை' என்பதாக தலையசைத்தாள் அவள். "படிச்சு என்ன செய்யப் போறேன்" என்றாள் செல்வி அசுவாரசியத்துடன்.

கல்வியின் அருமை இவர்களுக்குத் தெரிந்திருக்க வில்லை என்று நினைத்தாள் அனிதா. "படிப்பு இருந்தா வாழ்க்கையை இன்னும் நல்ல முறையில் நடத்தத் தெரிஞ்சிருக்கும். வாழ்க்கைப் பிரச்சனை களைத் தைரியமாக சந்தித்து நியாயமன வழியில் தீர்த்து வைக்கும் புத்திசாலித்தனத்தைக் கல்வி கொடுக்கிறது. நம்முடைய தேவைகள் என்ன, உரி மைகள் என்ன என்பதை..." என்று சொல்லிக் கொண்டு வந்த அனிதா நிறுத்தினாள். ஒன்றும் புரியாமல் விழித்த செல்வியின் பார்வை அவளைக் கேட்டது, 'என்னக்கா சொல்லிக் கொண்டிருக்கின் றீர்கள்?' என்று.

"அ.... இது பற்றி பின்னாலே உனக்குச் சொல் கிறேன். ஆமா, உங்கப்பா ஏதோ பட்டணத்து டாக்டரைப் பற்றி சொன்னாரே, உனக்குத் தெரி யுமா?"

செல்வியின் முகபாவம் உடனே மாறியது. அவள் அனிதாவின் பார்வையைத் தவிர்த்து தூரமாய் பார்த் தாள். அவளுடைய முகத்தில் வேதனை தெரிந்தது.

"செல்வி" என்றழைத்தபடி அவளுடைய கையைப் பற்றினாள் அனிதா. "அவரைப் பற்றி உனக்குத் தெரிஞ்சதையெல்லாம் சொல்லும்மா" என்றாள் கனிவுடன்.

செல்வி தலைகுனிந்தாள். ''என்னத்தைச் சொல்ற துக்கா. நானும், துளசியும் அவர் மேல் எத்தனை நம்பிக்கை வைச்சிருந்தோம். எங்களுக்குத்தான் எல்லோரையும் விட ரொம்ப அதிர்ச்சியக்கா.''

''துளசியா! யாரது?''

''என் சேக்காளி (சினேகிதி) பூசாரியோட மகள். நாங்க ரெண்டு பேரும்தான் பட்டணத்து டாக்டர்கூட மூலிகை பறிக்கப் போவோம். மலையேறிப் பழக்கம் டாக்டருக்கு இல்லாததாலே வழிகாட்டப் போவோம். ஒரு அண்ணன் மாதிரி அன்பா பழகிட்டு... கடைசி யிலே இப்படி செய்துட்டார். மேலே எதுவும் கேக்கா தீங்க அக்கா. அதபத்தி, பேசக்கூடாதுன்னு ஊர் காரங்க எல்லோரும் தீர்மானிச்சிருக்கோம்.''

''எது பற்றி? கொலை, கொள்ளை பற்றியா?''

''அதுக்கும் மேலா அசிங்கமான ஒரு காரியத்தை அவர் செய்துட்டார்'' என்று சொன்ன பொழுது செல்வியின் முகம் கோபத்தால் கறுத்தது. ''கொலை செய்தது, களவாடியது மட்டுமில்லாது துளசியை... துளசியை...''

''துளசிக்கு என்ன? சொல்லு செல்வி.''

''துளசியை கர்ப்பமாக்கிட்டார்...''

''என்னது!'' என்று அதிர்ந்தாள் அனிதா. அவ ளுடைய தலை இடதும், வலமுமாகச் சுற்றியது. ''இது... இது சுத்த பொய். எங்கண்ணனுக்கு மூலிகை கள் மேல்தான் ஆசை, ஆர்வம் எல்லாமே. பெண்கள்

மேல் அவனுக்கு என்றுமே மோகம் இருந்த தில்லை...'' என்றாள்.

அவளையறியாமலே அவளுடைய வாயினின்று 'எங்கண்ணன்' என்ற வார்த்தை விழச் செல்வி அதிர்ந்து போனவளாய், ''என்னது! உங்க அண்ணனா!'' என்றாள்.

# 5



செல்வி வாய் பிளந்தபடி அனிதாவைப் பார்த்துக் கொண்டிருந்தள். ''அக்கா... நீங்க... பட்டணத்து டாக்டர் உங்க அண்ணனா?'' என்று வியப்பு மேலிடக் கூவினாள் அவள்.

தன்னையறியாமலே தான் யார் என்பதை வெளிப் படுத்திவிட்ட தவறு அனிதாவை சற்று நிலை தடு மாற வைத்தது. ஆனால், உடனே தன்னை சமா ளித்துக் கொண்டாள். ''ஆமா, செல்வி பட்டணத்து டாக்டர் ராகுல் என் அண்ணன்தான். ஆனா, தயவு செய்து யார்கிட்டேயும் சொல்லிடாதே. இங்கே பாரும்மா, கோயில் நகைகளை கொள்ளையடிச்சுட்டு, பூசாரியை கொன்னது நிச்சயமா என் அண்ணன் இல்லை. அதையெல்லாம் யார் செய்ததுன்னு கண்டு பிடிக்கணும். அதுவரைக்கும், நான் யார்னு யாருக்கும் தெரியக்கூடாது, என்ன...'' என்றாள்.

இன்னும் அதிர்ச்சியினின்று விடுபடாமல் கண்கள் விரிய பார்த்துக் கொண்டிருந்த செல்வி தலையசைத் தாள்.

தொடர்ந்து பேசினாள் அனிதா. ''உன் சினேகிதி அதான் உன் சேக்காளி துளசியை கர்ப்பமாக்கின வனும் நிச்சயமா என் அண்ணன் இல்லே. துளசி சொன்னாளா ஏதாவது?''

''அவதான் எந்தத் தப்பும் செய்யலைங்றா.''

''அது உண்மையாகவும் இருக்கலாமில்லையா! அவள் கர்ப்பமா இருப்பதா யார் சொன்னது?''

''எங்க ஐயாதான் பரிசோதிச்சு சொன்னார்.'' அந்த கிராமத்தில் தகப்பனை அப்பாரு என்றோ, ஐயா என்றோ அழைத்தனர். அது போல் பெற்றவளை ஆத்தா என்றழைத்தனர்.

''ம்... உங்கப்பா சொன்னது போல் அவள் கர்ப் பம்ங்கறது உண்மையானாலும் அதற்கு ராகுல்தான் காரணம்னு எப்படிச் சொல்ல முடியும்?''

''அ....''

''இது எல்லாத்துக்கும் பின்னாலே ஏதோ மர்மம் இருக்கு. அதை கண்டுபிடிச்சாகணும். உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்கணும். எனக்கு உன் உதவி தேவை. என்னைத் துளசிகிட்டே கூட்டிட்டுப் போவீயா?''

''அவளை யாரும் பார்க்க முடியாதுக்கா'' என் றாள் செல்வி. ''யாருக்கும் தெரியக்கூடாதுன்னு அவளை வூட்டுக்குள்ளே அடச்சி வைச்சிருக்

காங்க. பாவம், அவ எந்நேரமும் அழுதுட்டே இருக்கா.''

''அடைச்சு வைச்சிருக்காங்களா! ஊருக்கு தெற்கு பக்கம் பெரிய மாமரமெல்லாம் நிக்குதே, அதுக்கு பக்கத்திலே ஒத்தையா இருக்கே ஒரு வீடு, அதானே துளசியின் வீடு?''

''ஆமா... ஆனா, அது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

இப்பொழுது அனிதாவுக்குப் புரிந்தது, தான் பார்த்தது துளசியைத்தான் என்பது.

* * *

இன்ஸ்பெக்டர் பிரகாஷ் அனிதாவின் கைப்பையை கொண்டு வந்ததும் வைத்தியத்துக்கான பணத்தை செல்வியிடம் கொடுத்துவிட்டு இருவரும் குடிசையைவிட்டு வெளியே வந்தனர். அவர்கள் வீட்டு வாசலை அடைந்ததும் பின்னாலிருந்து செல்வி, ''அக்கா'' என்று குரல் கொடுத்தாள்.

அனிதா திரும்பி பார்த்தாள். ''என்னம்மா?'' என்று கேட்டாள். ''ஏதாவது சொல்லணுமா?''

செல்வி ஏதோ சொல்ல விரும்புவது போல் தெரிந்தது. ''அக்கா...'' என்று ஏதோ சொல்லத் தொடங்கியவள் பிரகாஷை ஒரு தடவை பார்த்து விட்டு நிறுத்தினாள்.

அவள் பிரகாஷின் முன்னிலையில் சொல்ல விரும்பவில்லை என்பதை ஊகித்துக் கொண்ட அனிதா, ''ஒரு நிமிஷம், இதோ வந்திட்றேன்'' என்று

அவனிடம் சொல்லிவிட்டு வீட்டினுள் நுழைந்தாள். செல்வியை நெருங்கியதும், ''இப்ப சொல்லு'' என்றாள்.

செல்வி வாசல் பக்கம் பார்த்தாள். அங்கே பிரகாஷைக் காணவில்லை. என்றாலும், ஜாக்ரதை உணர்வுடன் தாழ்ந்த குரலில், ''அக்கா...'' என்று அவள் மீண்டும் சொல்லத் தொடங்கவும் வைத்தியர் அய்யாசாமியின் குரல் கேட்டது. ''என்ன புள்ளே, இன்னும் நீ போகலையா?'' என்று கேட்டபடி உள்ளே நுழைந்தார் அவர்.

''இதோ போய்க்கிட்டே இருக்கேன்...'' என்று அனிதா சொல்லிக் கொண்டிருக்கையில் செல்வி ஒன்றும் பேசாமல் வீட்டின் உள்ளறைக்குச் சென்றாள்.

செல்வி சொல்ல வந்ததை அறிந்து கொள்ள முடியாத ஏமாற்றத்துடன் வீட்டுக்கு வெளியே வந்தாள் அனிதா.

* * *

வீட்டுக்கு வெளியே வந்த அனிதா அங்கே அவளுக்காக காத்திருந்த பிரகாஷோடு சேர்ந்து கொண்டாள். ''உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் பற்றி பேசணும்'' என்றாள் அவனிடம்.

''சொல்லுங்க'' என்ற பிரகாஷின் மனம் எழுந்து கற்பனையில் பறக்கத் தொடங்கியது. 'இவள் என்ன சொல்லப் போகிறாள்! உன்னை எனக்குப் பிடித்திருக்...'

''வைத்தியர் மகள் மூலம் நிறைய அதிர்ச்சி தரும் விஷயங்களை தெரிஞ்சுக்கிட்டேன்'' என்று அனிதா சொல்லவும் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த பிரகாஷ் சிறகொடிந்த பறவையாக சட்டென பூமியில் விழுந்தான்.

''.... நீங்க ஒரு விஷயத்தை என்கிட்டேர்ந்து மறைச்சிருக்கீங்க. துளசி கர்ப்பமான விஷயத்தை என்கிட்டே சொல்லவேயில்லையே...'' என்றாள் அனிதா அவனை குற்றப்படுத்துவது போல்.

'அட, உனக்கு தெரிந்துவிட்டதா!' என்பதுபோல் அவளைப் பார்த்தான் பிரகாஷ். பிறகு, சற்று தயக்கத்துடன், ''நடந்த சம்பவங்கள் ஏற்கனவே உங்களை வருத்தியிருக்கு. இந்த சமயத்தில் இன்னும் பேசி உங்க மனசில் வலியை உண்டாக்க விரும்பலை. அதான்... பொதுவா விசாரணைன்னு வரும்போது இப்படியெல்லாம் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பதில்லை போலீஸ்காரங்க. டூட்டி மட்டும்தான் எங்க கண் முன்னாலே நிக்கும். ஆனா, நான் உங்ககிட்டே விசாரணை நடத்தலையே, அதான்...''

அவன் சொன்னதை அவள் புரிந்து கொண்டாள். ''நன்றி'' என்றாள்.

பின்னர் சொன்னாள், ''வைத்தியர் ராகுல் மேல் கொண்டிருக்கும் காழ்ப்புணர்ச்சியை அறிந்ததும் அவர் மேலும் எனக்கு சந்தேகம் வருது'' என்று.

''என்ன சந்தேகம்?''

''ஆமா... எஸ்... இந்த வைத்தியர் சந்தேகத்துக் குரியவர். ராகுல் பூசாரியை கொன்றதை யாரும் பார்க்கலை. அப்படியிருக்க அவன்தான் கொன்றதாக எப்படி இவர் திடமா சொல்கிறார்! போலீஸுக்கு ஒத்துழைப்பு தர மறுக்கிறாங்க. குற்றவாளி, அது யாராயிருந்தாலும் சரி, பிடிபடுவதை இவர்கள் ஏன் விரும்பலை! பூசாரி பிசாசாக கோயிலைச் சுற்றி அலைவதாக வதந்தி வேறு பரப்பியிருக்காங்க. கோயில் பக்கம் யாரும் போகக்கூடாது என்பதற்காகத் தானே! இதையெல்லாம் செய்கிறவர் யாராயிருந் தாலும் அவர் குற்றவளி பிடிபடுவதை விரும்ப லைன்னு தெரியுது'' என்ற அனிதா சிந்தனையுடன் பிரகாஷைப் பார்த்தாள். ''சாணாமல் போயிருக்கும், அதாவது குற்றவாளின்னு நீங்க நம்பும், ராகுல் இந்த ஒத்துழையாமைக்கும், வதந்திக்கும் காரணமாயிருக்க முடியாது. இது ஏன் வைத்தியரின் வேலையாக இருக்கக் கூடாது. அவருக்கு அண்ணன் மேல் ஏகப்பட்ட கோபம் இருக்கு.''

''ஓ யெஸ்... நீங்க சொல்றதிலே பாயிண்ட் இருக்கு. நல்லா துப்பறியிறீங்க'' என்றான் பிரகாஷ் அவளைப் பாராட்டும் தொனியில். ''நீங்க ஏன் போலீஸில் சேரக்கூடாது?''

''ப்ளீஸ்... ஜோக்கெல்லாம் ரசிக்கும் மனநிலையில் நான் இல்லே'' என்றாள் அனிதா எரிச்சலுடன். ''பூசாரி மகள் ராகுல் மூலம் கர்ப்பமாயிருப்பதாக வதந்தியை பரப்பியிருப்பவர் இந்த வைத்தியர் தான்.''

''அது வெறும் வதந்தியாக இல்லாமல் உண்மை யாகவும் இருக்கலாமல்லவா!'' என்று சந்தேகம் எழுப்பினான் பிரகாஷ்.

''இருக்க முடியாது'' என்றாள் அனிதா திட்டமாக. ''என் அண்ணனை நான் நன்றாக அறிவேன். அவனுக்கு பச்சிலைகள் மீது மட்டும்தான் காதல். எனக்கு அடுத்தபடியாக அவன் நேசிப்பதெல்லாம் ஆயுர்வேத மருத்துவம் ஒன்றுதான்.''

''என்றாலும் அவர் ஒரு ஆண் மகன்...''

''ஒரு பெண்ணை ஒழுக்கத்துக்கு மாறாக அணுக ஆண்மை மட்டும் போதுமானதல்ல; கீழ்த்தரமான எண்ணமும் தேவை. அது என் அண்ணனிடம் இல்லை.''

''குற்றவாளியின் உறவினர்கள் அவர் குற்றவாளி யில்லைன்னு நம்புவது இயற்கை.''

''நீங்களும் வெறுமனே வதந்தியை நம்புறீங்க. அவன் தான் குற்றவாளின்னு நிரூபணமாகவில்லை. அதனாலே, தயவு செய்து 'குற்றவாளின்னு' என் அண்ணனைக் குறிப்பிட வேண்டாம்'' என்றாள் அனிதா சற்று கோபத்துடன். ''என்ன செய்ய வேண் டுமோ அதை செய்யாமல் விட்டுட்டு அநாவசிய சர்ச்சையில் இறங்குறீங்க. சந்தேகத்தின் பேரில் இந்த வைத்தியரைப் பிடிச்சு விசாரியுங்க.''

''எந்த ஆதாரத்தில் அவர் மேல் சந்தேகப்படுவது! ராகுலுக்கும், அவருக்கும் ஒத்து வரலைங்கறது சந் தேகத்துக்குரிய காரணமாகாது.''

''உண்மை அது இல்லை. கிராமத்து மக்களிடையே இவர் பிரபலமானவர்ங்கறதாலே பயப்படுறீங்க, இல்லையா மிஸ்டர் பிரகாஷ்?'' சற்று உஷ்ணமாகக் கேட்டாள் அனிதா.

பிரகாஷ் தடுமாறினான். 'எத்தனை வெளிப்படையாக ஒரு உண்மையைச் சொல்லிவிட்டாள் இந்த பெண். அடேயப்பா! மிகவும் தைரியசாலிதான் இவள். இவளிடம் கவனமாக இருக்க வேண்டும். இவனுடைய இயலாமையை, தயக்கத்தை வெளிப்படுத்தி, இவனுடைய பலவீனத்தை உலகறியச் செய்துவிடுவாள்!' என்று அவனுடைய உள்ளுணர்வு சொல்லிற்று. என்றாலும், அவனுக்கு அவள் மேல் கோபம் உண்டாகவில்லை. மாறாக, மதிப்பும், மரியாதையும் உண்டாயிற்று. அதிகாரத்துக்கும், ஆணவத்துக்கும் பயப்படாமல் தம் கருத்தை வெளிப்படையாக சொல்லும் தைரியம் எல்லோரிடமும் இருப்பதில்லை.

''இந்த வைத்தியர் மேல் உங்களுக்கு ஏன் இத்தனை சந்தேகம்?'' என்று கேட்டான் பிரகாஷ்.

''அஹ்..... இவ்வளவு நேரம் ராமாயணம் கேட்டும் சீதையின் கணவன் யார்னு கேட்கிறீர்கள்! நல்ல ஜோக். சரி, திரும்பவும் சொல்றேன். ராகுலைப் பற்றி பேசிய பொழுது அவருடைய குரலிலும், முகபாவத்திலும் இருந்த கோபத்தையும், துவேஷத்தையும் கவனிக்கலையா? அதோடு தோன்றிய 'அப்பாடா, இவன் ஒழிந்தான்!'ங்கற நிம்மதியை கவனிக்கலையா?

விசாரணை நடத்தறதுக்கு ஏன் இந்த தயக்கம்? நீர் ஒரு போலீஸ்காரன். கடமையைச் செய்ய பயப்படுற. உங்க மேலேயும் சந்தேகம் வருது.''

'குபுக்' என சிரித்தான் பிரகாஷ். 'போலீஸ்கார னிடம் இப்படி யாரும் இதுவரை பேசியிருக்க மாட்டார்கள். இவள்தான் முதல் ஆளாக இருக்கும்' என்று நினைக்கையில் அவனுக்கு இன்னும் சிரிப்பு வந்தது. அனிதாவின் முகத்தில் தெரிந்த எரிச்சலைக் கண்டு தன் சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

அவன் அவளுக்கு பதிலளிக்கும் வகையில், ''இந்த ஊர் மக்களுக்கு போலீஸ்காரன் என்றாலே கோபம். ஒரு சில போலீஸ்காரர்கள் தவறாக நடந்த தாலே எல்லா போலீஸ்காரனும் தவறானவன்னு தப்பா எடை போட்டு வைச்சிருக்காங்க. அதனாலே தான் இந்த ஒத்துழையாமை'' என்றவன் தொடர்ந்து, ''வைத்தியரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைச் சுட்டுப் போய் விசாரணை நடத்தினா ஊர் மக்கள் திரண்டு வந்து போலீஸ் ஸ்டேஷனையே உடைச்சு போட்டுடுவாங்க'' என்றான்.

''இவங்களை தப்பா புரிஞ்சிருக்கீங்க'' என்றாள் அனிதா. ''இவங்க பயந்து போயிருக்காங்க. யாரு டைய அதிகாரத்துக்கோ பயந்திருக்காங்க. நீங்க உங்க அதிகாரத்தைக் காட்டினா பயந்து உண்மையைக் கக்கிடுவாங்க. ஆனா, நீங்களோ அவங்களுக்கு மேலே பயந்திருக்கீங்க. நீர் உண்மையிலே போலீஸ் காரன்தானான்னு சந்தேகமா இருக்கு.''

அனிதா சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளும் பிரகாஷை அவமானத்தால் நெளிய வைத்தன. வார்த்தைக்கு வார்த்தை 'நீ ஒரு கோழை' என்று சொல்லாமல் சொல்லி விட்டாள். 'என்ன தைரியம் இவளுக்கு!' என்று கோபம் வந்த மறுகணமே 'இவள் சொல்வது உண்மைதானோ என்ற சந்தேகமும் வந்தது.

'ஆம்; அவனுடைய விசாரணையில் தீவிரம் இருக்கவில்லை. முதலில் ராகுலை எப்படியும் கண்டு பிடித்தே ஆகவேண்டும். தான் ஒரு உண்மையான போலீஸ்காரன் என்பதை அவன் நிரூபித்தே ஆக வேண்டும்.

பிரகாஷ் லேசாகப் பெருமூச்சு விட்டான். அவ னுக்கு கொஞ்சம் விசித்திரமாகவும் இருந்தது. அனிதா அவனைப் பாராட்டும் வகையில் அவ்வப் போது நன்றியும் சொல்கிறாள், வார்த்தைகளால் அடிக்கவும் செய்கிறாள். அவள் மேல் அவனுக்கு கோபம் வரத்தான் செய்தது. ஆனால், அவளுடைய மனநிலையைப் புரிந்து கொண்டு வாளாயிருந்தான்.

அல்லது அவனுடைய மௌனத்துக்குக் காரணம் அவளை அவனுக்கு மிகவும் பிடித்துப் போயிருப் பதுதானோ!

✱ ✱ ✱

அனிதா ஆறுமுகத்தின் குடிசைக்கு சென்ற பொழுது மாலை மணி ஐந்தாகியிருந்தது. ஆறு முகத்தின் வீட்டார் காட்டிலிருந்து இன்னும் திரும்பி

யிருக்கவில்லை. அந்த கிராமத்து மக்கள் 'காடு' என்று குறிப்பிடுவது சோளக்காடு, வயல்காடு என்ற விளைச்சல் நிலங்களைத்தான்.

சிலரிடம் சின்ன நிலத்துண்டு இருந்தது. அது போதாமையால் பெரும்பான்மையான மக்கள் பெரும் பான்மையான நேரத்தில் அந்த ஊர் பஞ்சாயத்து தலைவர் பஞ்சாமியின் நிலத்தில் சொற்ப வரு மானத்தைப் பெற்றுக் கொண்டு மாடாய் உழைத் தனர். அரசுக்கு சொந்தமான காடுகளில் போய் கள்ளத் தனமாக மரங்களை வெட்டி காய வைத்து விறகாக்கி பக்கத்து பட்டணங்களுக்கு கொண்டு போய் விற் பவர்களும் உண்டு. இப்பொழுதெல்லாம் பட்டணங் களில் அநேகமாக காஸ் அடுப்பு எல்லா வீடுகளிலும் வந்துவிட்டதால் இவர்களுடைய விறகு வியாபாரம் குறைந்து போய்விட வீட்டுக்குத் தேவையான மரச்சாமான்கள் செய்வோரிடம் மரங்களை விற்க லாயினர். அவ்வூர் மக்களின் விளைச்சல்களையும், வெட்டி வரும் மரங்களையும் வெளியூர்களுக்கு கொண்டு போய் விற்று பஞ்சாமி பணம் சம்பாதித்து வந்தார். கிராமத்து விவசாயிகளுக்குக் கிடைப்பது சொற்ப ஆதாயமே. இது தெரியாமல் ஏதோ தலைவர் (பஞ்சாமியை அவர்கள் தலைவர் என்றே அழைத் தனர்) தங்களுக்கு பெரும் உபகாரம் செய்வதாக நினைத்து அவரைப் போற்றினர்.

குடிசை வாசலின் வெளிப்புற முற்றத்தில் செருப்பைக் கழற்றி போட்டுவிட்டு உள்ளே நுழைந்த

அனிதா திடுக்கிட்டாள். சின்னதம்பி அவளுடைய பையை குடைந்துக் கொண்டிருந்தான். அனிதாவைக் க்ண்டதும் பதட்டத்துடன் எழுந்து நின்றான். அவனுடைய கையிலிருந்து பை நழுவி கீழே விழுந்தது.

திடுக்கிட்டுப் போனவன் அவன் மட்டுமல்ல, அவளும்தான். 'இவன் என் பையினுள் எதை தேடு கிறான்!' என்று அவளும் திகைத்தாள். ''என்ன தேடுறே சின்னதம்பி?'' என்று கடுமையான குரலில் கேட்டாள் அனிதா. ''அடுத்தவங்களோட உடமையை அவங்களைக் கேட்காம தொடக்கூடாதுன்னு உனக்குத் தெரியாதா?''

''நான்.... நான்...'' என்று முதலில் தடுமாறின சின்னதம்பி விரைவில் தன்னை சமாளித்துக் கொண் டான். ''யார் நீங்க?'' என்ன வேணும் உங்களுக்கு? இங்கே எதுக்கு வந்திருக்கீங்க?'' என்று சரமாரியாக கேள்விகளை வீசினான்.

அவனுடைய சந்தேகக் கேள்விகள் அனிதாவை தடுமாற வைத்தன. ''ந... அதான் என் பையைக் குடைஞ்சிட்டு இருந்தீயா? என்ன கிடைச்சுது? உள்ளே என்னோட ஐ கார்ட் இருக்கும் எடுத்துப் பாரு. நான் கல்லூரி மாணவிங்கறது தெரியும்'' என்றாள் அவள்.

அவன் அவளை சில கணங்கள் கூர்ந்து பார்த்தான். பின்னர் மீண்டும் தன் கேள்விகளைத் தொடர்ந்தான். ''இங்கே எதுக்கு வந்திருக்கீங்க?''

''கிராமத்து மக்களின்...'' என்று அனிதா தொடங்க சின்னதம்பி குறுக்கிட்டான். ''கிராமத்தைப் பற்றி எழுத வந்திருந்தா கிராமத்தைப் பார்த்துட்டுப் போக வேண்டியதுதானே! எதுக்கு பட்டணத்து டாக்டரைப் பத்தி ஊரெல்லாம் விசாரிச்சுட்டு அலையறீங்க?'' என்று உஷ்ணமாகக் கேட்டான். அவனுடைய குரலிலும், பார்வையிலும் ஏகப்பட்ட சந்தேகம் இருந்தது.

''விசாரிப்பதில் என்ன தப்பு?''

''நீங்க போலீஸ் ஆளா? வேவு பார்க்க வந்திருக் கீங்களா?''

''இல்லே. ஆனா போலீஸ் ஆளா இருந்தாலும் அதிலே என்ன தப்பு? எதுக்கு போலீஸோடு ஒத் துழைக்க மறுக்கிறீங்க? உண்மையான குற்றவாளி யார்னு கண்டுபிடிப்பதில் உங்களுக்கெல்லாம் ஏன் அக்கறை இல்லை?''

''யார் சொன்னது அப்படி?'' என்ற சின்னதம்பி சற்றே குரலைத் தாழ்த்தி முணுமுணுத்தான். ''யாருக்கு அக்கறை இருக்கோ இல்லையோ, எனக்கு இருக்கு. அவனைத் தேடி கண்டுபிடிச்சு... குரல் வளையைப் பிடிச்சு நெரிச்சு...'' என்று சொன்னதைத் தெளிவாகக் கேட்டாள் அனிதா.

ஓரிரு கணங்கள் அவனையே பார்த்தபடி நின்றிருந் தவள் கேட்டாள். ''உனக்கு பட்டணத்து டாக்டர் மேல் ஏன் இத்தனை ஆத்திரம்?'' என்று.

''உங்களுக்கு அதெல்லாம் தெரிய வேண்டிய அவசியம் இல்லே'' என்றான் அவன் எரிச்சலுடன்.

அனிதா லேசாகச் சிரித்தாள். ''இதையே நானும் சொல்லலாமில்லையா? நான் யார், எதற்காக இந்த கிராமத்துக்கு வந்திருக்கேன்ங்கறதையெல்லாம் நீ தெரிஞ்சுக்க வேண்டிய அவசியம் இல்லே.''

''அப்படிச் சொல்ல முடியாது நீங்க. ஏன்னா, நீங்க எங்க கிராமத்துக்கு வந்திருக்கீங்க. எங்க வீட்டிலே தங்கியிருக்கீங்க. அதனால, உண்மையிலே நீங்க யாருன்னு தெரிஞ்சுக்க எனக்கு உரிமை இருக்கு. இப்ப சொல்லுங்க, நீங்க யாரு?''

இனியும் உண்மையை மறைத்து தப்பிக்க முடியாது என்பதை உணர்ந்தாள் அனிதா. ''உண்மையைச் சொல்றேன். ஆனா, நான் சொல்லி முடிக்கும் வரை இடையிலே எதுவும் பேசக்கூடாது'' என்ற நிபந்தனையுடன் தான் யார் என்பதை வெளிப்படுத்தினாள். தமையனைத் தேடி வந்த இடத்தில் அவன் மேல் விழுந்திருக்கும் அபாண்ட பழியைப் போக்கும் எண்ணத்தில் தன்னை இன்னாரென்று இதுவரை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை என்பதைச் சுருக்கமாகச் சொன்னாள்.

''நீங்கள்லாம் நினைச்சுட்டிருக்கிற மாதிரி ராகுல் குற்றவாளியில்லை. அவனைக் குற்றவாளின்னு காட்டுவதில் தீவிரமா முனைஞ்சிருக்கும் வேறே யாரோதான் உண்மையான குற்றவாளி'' என்றாள் கடைசியில்.

''வேறு யாரா! யார் அவர்?''

''அதைத்தான் நான் கண்டுபிடிக்கப் போறேன். அதுக்கு உன் உதவி தேவை சின்னதம்பி.''

''நான் ஏன் உதவி செய்யணும்?''

''உங்க கிராமத்து அமைதியை குலைச்ச குற்றவாளி யார்னு கண்டு பிடிச்சு அவனுக்கு தண்டனை கொடுக்கணும்னு உனக்குத் தோணலையா? அப்பாவி துளசியை ஏமாத்தினவன் யார்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?''

''இதிலே புதுசா என்ன தெரிஞ்சுக்க இருக்கு. எல்லாம் அந்த பட்டணத்து டாக்டரோட வேலை தான்'' என்றான் சின்னதம்பி.

''நான் இத்தனை சொல்லியும் உனக்கு நம்பிக்கை வரலையா?'' என்று தளர்ந்த குரலில் கேட்டாள் அனிதா.

'இல்லை' என்பதாக தலையை பக்கவாட்டில் அசைத்தான் அவன். ''வேறு யாரும் இந்த வேலையைச் செய்ய மாட்டாங்க. அவன்தான். அவன் கூடத் தான் மலைப் பாதையில் வழிகாட்ட அவள் சுத்தினாள். கடைசியில் அவன்...'' என்று பற்களைக் கடித்தான்.

''தனியாகச் சுற்றலை. செல்வியும் கூட இருந்தாள்'' என்று நினைவு படுத்தினாள் அனிதா.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''செல்வியைப் பார்த்துப் பேசினேன்.''

''எப்பொழுதும் செல்வி கூடவே இருந்தாள்னு என்ன நிச்சயம்? சில சமயங்களில் இவள் தனியாக வும்... நல்லவனாக நடிச்சு அவன்தான் இவளை... கள்ள பய...''

அனிதாவுக்கு வருத்தமாக இருந்தது. தமையனை அவள் அப்படி திட்டியதைக் கேட்டு கோபமும் வந்தது. 'கோபப்பட்டு காரியத்தை கெடுத்து விடக் கூடாது. முதலில் அண்ணனை கண்டுபிடித்து அவன் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க வேண் டும்! இந்த கிராமம் மொத்தமும் ராகுல்தான் குற்ற வாளி என நம்புகிறது. ஆதாரம் இல்லாமல் அவன் நிரபராதி என்பதை நம்பப் போவதில்லை.'

''...... அவன் கிடைக்கட்டும். எல்லோருக்கும் முன்னதாக நான் போய் அவனை வெட்டிக் கண்ட துண்டமாக்கிப் போடுவேன்...'' என்று சபதம் எடுத்துக் கொள்வது போல் சொன்னான் சின்னதம்பி. அவன் சொன்னதைக் கேட்டு திடுக்கிட்டாள் அனிதா. இவனுக்கு ஏன் இத்தனை ஆத்திரம் என்று நினைத் தாள் அவள்.

அவளுடைய மனதில் எழுந்த கேள்விக்கு பதில் சொல்வது போல் அவன் சொன்னான், ''என் துள சியை... என் துளசியை... என்கிட்டேர்ந்து பிரிச்சியா... உன்னை சும்மா விடமாட்டேன்...'' என்று. அவ னுடைய பார்வை எதிர் சுவரில் நிலைத்திருந்தது. அப் பொழுது அவனுடைய முகத்தைப் பார்க்க பயங்கர மாக இருந்தது.

“என் துளசி. அப்படியென்றால்...”

“துளசிக்கும் உனக்கும் என்ன உறவு? அவள் உனக்கு யார்?”

அவன் மெல்ல தன் பார்வையைத் திருப்பினான். அனிதாவின் மேல் பதித்தான். “அவள் எனக்கு எல்லாமாக இருந்தாள். அவள்தான் என் மூச்சாக, வாழ்க்கையாக இருந்தாள். அவள்தான் என் உலகமாக இருந்தாள்” என்றான். இதைச் சொன்ன பொழுது அவனுடைய முகத்தில் வேதனை கோடு ஓடியது.

# 6



சின்னதம்பியின் ஆத்திரமும், கோபமும் அனிதாவுக்கு இப்பொழுது புரிந்தது. அவன் துளசியை மிக தீவிரமாக நேசித்தான் என்பதை அறிந்துகொள்ள அதிக நேரம் ஆகவில்லை. தான் நேசித்த ஒருத்திக்கு ஏற்பட்ட அசம்பாவிதம் அவனை மிகவும் பாதித்திருப்பதில் ஆச்சரியமில்லை. அவனுடைய மனக்கசப்பு நியாயமானதே என்று நினைத்தாள் அவள்.

“நீ துளசியை விரும்புறியா சின்னதம்பி?” என்று கேட்டாள்.

“ம்.... மிகவும் நேசித்தேன்” என்றான் சின்னதம்பி. அவன் வேண்டுமென்றே அதைக் கடந்த காலத்தில்

சொன்னதாக நினைத்தாள் அவள். அப்படியாயின் இப்பொழுது அவளை அவன் நேசிக்கவில்லையா!

''அது அவளோட வீட்டாருக்குத் தெரியுமா?''

''இப்ப அதெல்லாம் எதுக்கு!'' என்றாள் அவன் சலிப்புடன். என்றாலும் சொன்னான், ''ரெண்டு வீட்டுக்காரங்களும் எங்களுக்கு கண்ணாலம் செய்து வைக்க தீர்மானிச்சிருந்தாங்க'' என்று.

''அவளோடு பேசிப் பார்த்தீயா, அதாவது அந்த சம்பவத்துக்குப் பிறகு?''

''ஏன் பேசணும்! அவளோடு என்னோட தொடர்பு அறுந்தாச்சு. இனி அவளைப் பத்தி எனக்கு அக்கறை யில்லே. நம்பிக்கை துரோகி... ஏமாத்துக்காரி...'' என்றான் அவன் வெறுப்புடன்.

அனிதா அவனை பரிதாபத்துடன் பார்த்தாள். 'இவள் மனம் நொந்து போயிருக்கிறான். இவனிடம் இதமாகப் பேச வேண்டும். எல்லா இடங்களிலும் மௌனம் சரியல்ல. பேச வேண்டிய இடங்களில் பேசித் தான் பிரச்சனையை தீர்க்க முடியும்' என்று நினைத்த அனிதா அவளிடம்,

''அப்படி நீ நினைக்கலாம். ஊர் நினைக்கலாம். ஆனா, உண்மை வேறு விதமா இருக்கலாமில்லையா! அவகிட்டே பேசிப் பார்த்தா உண்மை தெரியும்'' என்றாள்.

''என்ன உண்மை? இன்னும் தெரிஞ்சுக்க என்ன இருக்கு?''

''அவளை யாராவது பலாத்காரம் செய்திருக்கலா மில்லையா! அதை அவகிட்டே பேசினாத்தானே தெரிஞ்சுக்க முடியும்.''

''பலா...த்காரம்...?''

''இது சாத்தியமே. அவ விரும்பாமலே அவளை பலவந்தப் படுத்தியிருந்தா...? அவ மனம் நொந்து போயிருப்பா. இந்த சமயத்தில் அவளுக்கு ஆதரவா இருப்பதை விட்டுட்டு இப்படி ஒதுங்கிப் போனா என்ன அர்த்தம்?'' என்று சொல்லிவிட்டு சின்ன தம்பியிடம் ஏதாவது மாற்றம் தெரிகிறதா என்று அவனை கூர்ந்து கவனித்தாள்.

அவனுடைய முகபாவம் மாறியிருந்தது. குழம்பி யிருந்தான் அவன். ''பலாத்காரம்...?'' என்று திரும் பவும் கேட்டான். அப்படி அவன் கேட்ட பொழுது அவன் ஏதோ புரிந்துகொள்ள முயல்வது போல் தோன்றினான். திறந்த அவனுடைய வாய் மூட மறுத்தது.

''ஆமா, பலாத்காரம்னுதான் சொன்னேன். பலாத் காரம் நடந்திருந்தா அது அவளோட தப்பு இல்லை. அவளுடைய உள்ளம் மாசுபட்டிருக்க முடியாது. நீ நேசித்தது அவளுடைய உடலையா அல்லது அவ ளையா சின்னதம்பி?''

அவன் பதில் சொல்லத் தெரியாமல் இப்பொழுதும் திருதிருவென விழித்துக் கொண்டு நின்றிருந்தான். அனிதா தொடர்ந்து பேசினாள். ''நம்ம வீட்டை யாராவது கொள்ளையடிச்சா கொள்ளை போயிட்டு

துன்னு வீட்டை விட்டே போயிடறோமா? வீட்டை இடிச்சுப் போட்டா கூட திரும்பக் கட்டிக்கிறோம். துளசியோ ஒரு உயிருள்ள பெண். நீ நேசித்த பெண். அவளுக்கு துர்சம்பவம் நடந்ததுன்னா என்ன ஏதுன்னு விசாரிச்சு ஆதரவா இருக்காம நீ இப்படி ஒதுங்கிட்டது சரியில்லை'' என்று சொன்னவள் சின்னதம்பி கீழே சிதறிப் போட்டிருந்த சாமான்களை எடுத்து தன் பையினுள் திணித்தாள். பையை எடுத்துக் கொண்டு அதை அதனிடத்தில் வைக்கத் திரும்பியவளைப் பின்னாலிருந்து எழுந்த சின்னதம்பியின் குரல் நிறுத்தியது.

''நான் என்ன... செய்யணும்?'' என்று தடுமாறிய படி எழுந்த அவனுடைய கேள்வி அவள் சொன் னதைப் பற்றி அவன் சிந்திக்கிறான் என்பதை உணர்த்திற்று.

அனிதா நின்று திரும்பிப் பார்த்தாள். ''அவளைப் போய் பார்த்துப் பேசு. அவள் பக்கத்துக் கதையைச் சொல்ல அவளுக்கு ஒரு வாய்ப்பு கொடு. ஊரார் சொல்வதை நம்புற நீ உனக்கு நம்பிக்கையானவள் என்ன சொல்கிறாள் என்பதில் அக்கறை காட்டாதது விசித்திரமானதே!''

* * *

மறுநாள் காலையில் அனிதா கண் விழித்த பொழுது பட்சிகள் *'கீச் கீச்'* என உற்சாகக் குரல் எழுப்பி அந்த புது நாளை வரவேற்றுக் கொண்டிருந்தன. வீட்டு முற்றத்தில் வந்து நின்ற அவளை லேசான

குளிர் காற்று இதமாகத் தொட்டு குசலம் விசாரித்தது. கிழக்கே மலையின் வயிற்றுக்குள்ளிருந்து பிறப்பது போல் சூரியன் வெளியே வந்து கொண்டிருந்தான். 'இரவு முழுவதும் எங்கே போயிருந்தாய்? உன்னைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்தேன்' என்று கதிரவனைக் கேட்டன தாமரை மலர்கள்.

மெல்ல மேலெழும்பிக் கொண்டிருந்த சூரியனைப் பார்த்தபடி நின்றிருந்த அனிதா நினைத்தாள். 'இந்த மலைகளுக்கிடையே எங்கோ என் அண்ணன் இருக்கக்கூடும். அங்கே போய் அவனைத் தேடாமல் இங்கே என்ன செய்து கொண்டிருக்கின்றேன் நான்!' என்று.

''வாம்மா, உன் காபி தயாரா இருக்கு'' என்று குரல் கொடுத்தாள் சின்னதம்பியின் தாய் செவந்தி.

ஆட்டு பால் கலந்த காபியும், தினமும் சின்னதம்பி வாங்கி வரும் பன்னும்தான் அவளுடைய காலை யாகாரம். இதுவரை பாலைக் கண்டிராத அந்த வீட்டில் இப்பொழுது பால் வந்து கொண்டிருந்தது. சாதமும், காய்கறியின் குழம்பும் மட்டுமே சமைத்துக் கொண் டிருந்தவர்கள் அவளுக்காக பருப்பும் வைக்கத் தொடங்கியிருந்தார்கள்.

விறகு அடுப்பில், மட்பாண்டத்தில் சமைக்கப் படும் உணவு அலாதி சுவையுடன் இருந்தது. உட னுக்குடன் செடிகளிலிருந்து பறித்துச் சமைக் கப்படும் காய்கறிகள் சுவைக்கு சுவை சேர்த்தன.

''எனக்காக எதுக்கு வீண் சிரமம்! நானும் உங் களைப் போல காலையில் பழங்கஞ்சி குடிக்கிறேனே'' என்று அவள் சொன்னதை அவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை.

''உன்னாலே முடியாதும்மா. எங்க விஷயம் வேறே, எங்களுக்குப் பழக்கமாகிப் போச்சு'' என்று மறுத்து விட்டார்கள்.

இன்று பிடிவாதமாக கஞ்சி குடிக்க அமர்ந்தாள். இந்த பழங்கஞ்சியின் ருசியைத்தான் பார்ப்போமே என்று. பட்டணத்தில் காய்ச்சல் என்று படுத்து விட்டால் கஞ்சி காய்ச்சி சுடச்சுடக் குடிக்கக் கொடுப் பார்கள். இம்மாதிரி பழங்கஞ்சி அவள் குடித்ததே யில்லை. ''மறுக்காதீங்க மாமி. எனக்கு குடிக்க ஆசையா இருக்கு'' என்று மற்றவர்களைப் போல் பச்சை வெங்காயமும், பழங்கஞ்சியும் குடித்தாள். சுவையாக இருந்தது.

''எனக்குப் பிடிச்சிருக்கு மாமி. இனிமே தினமும் கஞ்சிதான் குடிக்கப் போறேன். காலையிலே காபி தாங்க. ஆனா, பன் வேண்டாம்'' என்றாள் அனிதா.

'யம்மாடி! என்ன பெண் இவள்! பட்டணத்தில் வசதியா வாழ்ந்து பழக்கப்பட்டவளுக்கு பழங்கஞ்சி எப்படி பிடித்து விட்டது!' என்று எல்லோருமே வியந்தனர்.

* * *

சின்னதம்பியை பார்க்க முடியவில்லை. அவன் வீட்டில் இல்லை. ''இந்த பய காலங்காத்தாலே எங்கே

போய் தொலைஞ்சான்!'' என்று அலுத்துக் கொண்டாள் செவந்தி. ''இவன் எப்ப வந்து கஞ்சி குடிச்சுட்டு எப்ப ஆட்டு தீவனம் வாங்க போவான்!'' என்று உரக்க முணுமுணுத்தாள்.

சின்னதம்பி துளசியின் வீட்டுக்குப் போயிருந்தான். திண்ணையில் உட்கார்ந்திருந்த துளசியின் தமையன் மணிண்ணன் இவனைக் கண்டதும் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடிக்க, ''என்ன?'' என்று அதட்டலாகக் கேட்டான். அவனிடம் சினேக பாவம் இல்லை. மாறாக ஆத்திரமும், எரிச்சலும்தன் இருந்தன.

''பார்த்துப் பேசிப் போக வந்தேன்'' என்றான் சின்னதம்பி சற்று தயக்கத்துடன்.

''என்ன பேசணும்?'' என்று கேட்ட மணிவண்ணனின் குரல் காட்டமாக இருந்தது. வந்தவனை 'வா' என்று சொல்லாமல், உட்காரச் சொல்லாமல் மணிவண்ணனின் நடந்துக்கொண்ட விதம் அவன் சின்னதம்பியின் வரவை விரும்பவில்லை என்பதை தெளிவாக உணர்த்தியது. அவனுடைய அதட்டலைக் கேட்ட சின்னதம்பி வந்த வழியே திரும்பிப் போய் விடலாமா என்று ஒரு கணம் யோசித்தாள். அவன் தன்னை சுதாரித்துக் கொள்வதற்குள் மணிவண்ணன் மீண்டும் உறுமினான். ''சொல்லு.''

''துளசியைப் பார்த்துப் பேசணும்'' என்றான் சின்னதம்பி தயக்கம் மாறாமல்.

உடனே பதில் சொல்லி விடவில்லை மணிவண்ணன்.

சின்னதம்பியைப் பார்த்த இந்நேரம் உட்கார்ந் திருந்தான். வீட்டு முற்றத்தில் கட்டப்பட்டிருந்த ஆடு 'ம்மே...' என்றது. மரக்கிளை ஒன்றில் அமர்ந்திருந்த காகம் கரைந்தது. எங்கோ தூரத்தில் மரம் ஒன்றில் அமர்ந்து 'ட்ரூ... ட்ரூ...' என்றது ஏதோ ஒரு பறவை.

"அவகிட்டே என்ன பேசப் போறே?" என்றான் மணிவண்ணன் கடைசியில். "பேசி என்ன செய்யப் போறே? அதான் சம்பந்தத்தை முறிச்சுட்டியே" என்றான் கோபத்துடன்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்பது புரியாமல் சின்னதம்பி விழிக்கவே செய்தான். பிறகு, தைரி யத்தை வரவழைத்துக் கொண்டு, "பேசணும். சித்த நேரம்தான்..." என்றான்.

சின்னதம்பியை உற்றுப் பார்த்தபடி அமர்ந்திருந்த மணிவண்ணன், "வா" என்று ஒற்றைச் சொல்லால் சம்மதம் தெரிவித்துவிட்டு வீட்டினுள் நுழைய சின்னதம்பி அவனை பின் தொடர்ந்தான்.

முன்னறையின் ஒரு மூலையில் மணிவண்ண னின் தாய் குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தாள். கணவனை இழந்த சோகம் இன்னும் முகத்தில் படர்ந்திருந்தது. அந்த அறையின் இன்னொரு பக்கம். பனை ஓலையாலும், மூங்கிலாலும் பின்னப்பட்ட கூடைகள், பெட்டிகள் பல கிடந்தன. அவைகளைத் தாண்டி உள்ளறைக்குச் சென்ற மணிவண்ணனை சின்னதம்பி பின் தொடர்ந்தான்.

உள்ளே, சுவரோரமாக இருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டு இருந்தாள் துளசி. இவர்கள் உள்ளே நுழைந் ததும் அரவம் கேட்டு தலையை திருப்பினாள். சின்ன தம்பியைக் கண்டதும் அவளுடைய முகம் மலர்ந்தது. ஒரு கணம் தன் கண்களை நம்ப முடியாமல் தடு மாறியவள் அழத் தொடங்கினாள். ''யாரும் என்னை நம்ப மாட்டேங்கறாங்க. நீயாவது நம்பு சின்னதம்பி. நான் எந்தத் தப்பும் செய்யலை...'' என்றாள் அழு துக்கொண்டே.

''என்ன நடந்தது துளசி?'' என்று கேட்டான் சின்ன தம்பி.

''அப்பா போன ரெண்டாம் நாள் நான் மயக்கமா விழுந்துட்டேன். வைத்தியர் வந்து பார்த்துட்டு... இது எப்படியாச்சுன்னு தெரியலை. உன்னாணை எந்த ஆம்புள்ளையும் என்னைத் தொட்டதில்லை. எப்படி இப்படியாகும்...!''

''அதான் கேக்கறேன், எவனும் உன்னைத் தொடாம எப்படி வயித்திலே உண்டானே?''

''உன்னாணை, என் அப்பனாணை...'' என்று மீண்டும் தொடங்கிய துளசியை மேலே பேசவிடாமல் தடுத்தான் மணிவண்ணன். ''போதும்... அழுகையை நிறுத்து...''

''உன்னை யாராவது பலாத்காரம் செய்தாங்களா?'' சின்னதம்பி கேட்டான். ''அந்த பய ராகுல்...?''

''இல்லே. அப்படி ஏதும் நடக்கலே...'' என்றாள் துளசி தலையை பக்கவாட்டில் அப்படியும் இப்படியும் அசைத்து.

''இவ சொல்ல மாட்டா. அவனைப் பிடிச்சு குடுக்க மாட்டா. ஏன்டி, எங்க மூஞ்சியிலே கரிப் பூசிட்டப்புறமும் அவன்தான் உனக்கு ஒசத்தியா போயிட்டானா?'' என்று கையை ஓங்கியபடி அவளை அடிக்க வந்தான் மணிவண்ணன்.

''கடந்த ஒண்ணரை மாசமா அடிச்சுட்டேயிருக்கேண்ணா. ஒரேடியா அடிச்சுக் கொன்னுடு. இல்லாட்டியும் உங்களுக்கெல்லாம் நான் ஒரு அவமானச் சின்னமாத்தானே இருக்கேன்'' என்று கேவினாள் துளசி.

''வாய் மட்டும் என்னமா நீளுது...'' என்ற மணிவண்ணன் சின்னதம்பி பக்கம் திரும்பினான். ''கேட்டுட்டே இல்லே, இனி போகவேண்டியதுதானே!'' என்றான்.

ஒரு காலத்தில் தான் உயிருக்குயிராய் நேசித்த துளசியை பார்த்தான் சின்னதம்பி. கொழுகொழு கன்னங்களுடன் உற்சாகமாகச் சிரிக்கும் அவனுடைய துளசியை அவனால் காண முடியவில்லை. கன்னங்கள் ஒட்டி, கண்கள் உள்வாங்கியிருந்த சோகை பூத்து துளசியைத்தான் இப்பொழுது காண முடிந்தது. கண்கள் தளர்ந்து சோர்ந்திருந்தாலும் அவைகளில் சத்தியத்தின் ஒளியைக் காண முடிந்தது. நான் உண்மையைப் பேசுகிறேன் என்று அந்தக் கண்கள்

அடித்துச் சொன்னது. ஒரு கணம் அந்த சத்தியத்தின் ஒளியில் தடுமாறிய சின்னதம்பியின் பார்வை துளசியின் உப்பி ஊதியிருந்த வயிற்றில் பதிந்தன. உடனே அவனுடைய முகமும், மனமும் சுருங்கின. 'இதில் எது உண்மை?' என்று மனம் தடுமாறியது.

அவன் மௌனமாகத் திரும்பி நடந்தான். அந்த அறையை விட்டு, வீட்டைவிட்டு வெளியே வந் தான். வளாகத்தின் தட்டி கதவைத் திறந்து கொண்டு தெருவில் காலடி எடுத்து வைக்கையில் வீட்டினுள் ளிருந்து மணிவண்ணன் கத்தும் சத்தமும், கூடவே துளசி விசும்புவதும் கேட்டன.

* * *

காலையில் சின்னதம்பி அவசரத்தில் இருந்த தால் அனிதா அவனிடம் எதுவும் கேட்கவில்லை. இரவு உணவுக்குப் பிறகு முற்றத்துக்கு வந்த சின்ன தம்பியிடம் அனிதா பேச்சு கொடுத்தாள். ''காலை யிலே துளசிகிட்டேதானே போயிருந்தே?''

''ம்...''

''துளசி என்ன சொல்கிறாள்?''

''தான் எந்த பாவமும் அறியாதவள்ங்கிறாள். எவ னும் பலாத்காரம் செய்யலையாம். பின்னே வயித் திலே பிள்ளை எப்படி! அவனுக்கும், அவளுக்கும் கள்ளத் தொடர்பு இருந்திருக்கும். அதான் விட்டுக் கொடுக்காம பேசறா.''

''அவ சொல்றதை நீ ஏன் நம்பலை?''

''நம்பும்படியாகவா இருக்கு! அவள் பொய் செல்றா.''

''அவள் சொல்வது உண்மையாகவும் இருக்கலாமில்லையா! யாராவது அவளுக்கு மயக்க மருந்து கொடுத்து அவ மயக்கத்தில் இருக்கும்போது கெடுத்திருக்கலாமில்லையா?''

''அப்படியே இருந்தாலும் மயக்கம் தெளிஞ்சப்புறம் தெரியாமலா போயிருக்கும் அவளுக்கு? ம்... எப்படி நடந்திருந்தாலும் என்ன பிரயோசனம் இப்ப. பாலு திரிஞ்சு போச்சு. கொட்டிட வேண்டியது தான்.''

''திரிஞ்ச பாலைக் கொட்டிட வேண்டிய அவசியம் இல்லை'' என்றாள் அனிதா. ''திரிஞ்ச பாலிலேகூட எத்தனையோ சுவையான பலகாரங்கள் செய்யலாம்'' இதை சொல்லிவிட்டு சின்னதம்பியைப் பார்த்தாள். ''இப்ப நான் கேட்பதுக்கு சரியா யோசிச்சு பதில் சொல்லு.''

''என்ன?''

''துளசி மேலே தப்பு இல்லைன்னு தெரிஞ்சா அவளை ஏத்துக்குவியா சின்னதம்பி?''

அவன் திடுக்கிட்டவனாக அனிதாவைப் பார்த்தான். ''என்ன... சொல்... நீங்க அனி...''

''சும்மா பெயர் சொல்லி கூப்பிடு. ஒருமையில் அழைச்சா போதும். உன்னைவிட நான் வயசில் சிறியவள்தான்.''

சின்னதம்பி கண்களை மூடி மனக்கண் முன்னால் துளசியை கொண்டு வந்தான். அவளுடைய முகம் தெரிவதற்கு முன்னால் அவளுடைய பெருத்த வயிறுதான் தெரிந்தது. ‘எவனாலோ கர்ப்பமானவளை அவன் கல்யாணம் செய்துக் கொண்டால் ஊருக்கு முன்னால் தலை நிமிர்ந்து நடக்க முடியுமா என்னால்’ என்று நினைத்தான்.

‘‘சொல்லு சின்னதம்பி, அவ மேலே தப்பு இல்லைன்னா அவளை ஏத்துக்குவியா?’’

‘‘அத்தனை பெரிய மனசு எனக்கு இல்லை அனிதா’’ என்றான் அவன் கடைசியில்.

* * *

அத்தனை தெளிவாக அவன் தன் மனநிலையை வெளிப்படுத்திய பின் அவளால் எதுவும் பேச முடிய வில்லை. ஒவ்வொருவரும் தன் மனம் சொல்வதைத் தான் கேட்கின்றார்கள். அது சரியா, தவறா என்பது அவர்களுடைய மனதில் ஓடும் எண்ணங்கள் சரியா, தவறா என்பதைப் பொறுத்திருக்கிறது. தன் எண் ணங்கள் தவறு என்பதை உணர்ந்து ஒருவன் திருந் தினாலொழிய தன் மனம் சொல்வது தவறு என்பதை அவன் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

அனிதா அந்த முற்றத்தில் குறுநடை போட்டாள். ‘தான் வந்த காரியம், என்ன தான் இங்கே செய்துக் கொண்டிருப்பது என்ன!’ என்ற எண்ணம் எழுந்தது.

அவள் அந்த கிராமத்துக்கு வந்து மூன்று நாட் களாகி விட்டன. ராகுல் காணாமல் போய் ஒன்றரை

மாதங்களுக்கு மேலாகி விட்டது. தன் அண்ணனைத் தேட ஆக்கப்பூர்வமாக அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. அவனைப் பற்றி விசாரித்து அறியலாம் என்றாலோ அதுவும் முடியவில்லை. அவனுடைய பெயரை எடுத்தாலே எல்லோரும் சீறி விழுகிறார்கள். சந்தேகத்துடன் அவளைப் பார்க்கிறார்கள். அவள் தான் இன்னாரென வெளிப்படுத்திக் கொள்ளாமல்தான் காரியம் சாதிக்க முடியும்.

சின்னதம்பி முற்றத்தில் கோரைப் பாயை விரித்து படுத்துக் கொண்டிருந்தான். அனிதா அவனருகே வந்து தரையில் அமர்ந்தாள். ''தூங்கிட்டியா சின்ன தம்பி?'' என்று கேட்டாள்.

''இப்ப என்ன?'' என்றான் அவன் எரிச்சலுடன்.

''உன்கூட கொஞ்சம் பேசணும். ராகுலைப் பற்றி... அவனைப் பற்றி உனக்கு தெரிஞ்சதையெல்லாம் சொல்லேன்.''

''நான் ஏற்கனவே சொல்லிட்டேன். இனியும் பேச ஒண்ணுமில்லே.''

''பூசாரி கொலை, கோயில் கொள்ளை இவைகளை ஒரு சில நிமிடங்கள் மறந்துட்டு, ராகுலைப் பற்றி உனக்குத் தெரிஞ்சதையெல்லாம் சொல்லு.''

''அவனைப் பத்திப் பேசக்கூடாதுன்னு நாங்க எல்லோரும் தீர்மானிச்சிருக்கோம்.''

''ஏன்?''

''தலைவரோட கட்டளை.''

''தலைவர்னா... ஆங்... உங்க பஞ்சாயத்து தலைவர் பஞ்சாமி. அது சரி, ஏன் பேசக்கூடாதாம்?''

சின்னதம்பி எழுந்து உட்கார்ந்தான். ''உனக்கு எல்லாம் தெரியும் அனிதா. அம்மன் நகைகளை திருடிட்டு, பூசாரியை கொன்னுட்டு ஓடிப் போன ஒருத்தனைப் பத்தி பேசி ஏன் கிராமத்து சூழ்நிலையைக் கெடுக்கணும்! பூசாரி மகளை வேறே மூணு மாச கர்ப்பவதியாக்கிட்டு...''

''நில்லு..'' என்று இடைமறித்தாள் அனிதா. ''என்ன சொன்னே, மூணு மாசம்னா? அப்ப ராகுல் இங்கே வந்து எத்தனை மாசமயிருந்தது?''

''ஒரு ஒண்ணரை மாசம்...'' என்று சொல்லத் தொடங்கிய சின்னதம்பி வாக்கியத்தை முடிக்காமல் இடையே நிறுத்தினான். அவளை பார்த்தான். ''நீ என்ன சொல்ல வர்றேன்னு புரியுது'' என்றான்.

'அப்பாடா! துளசியின் இந்நிலைக்கு ராகுல் காரணம் இல்லை என்பதை நிரூபித்து விடலாம்' ''துளசியை யாராவது கெடுத்து இந்நிலைக்குத் தள்ளியிருந்தாலும்கூட அது ராகுல் இல்லை, சரி தானே?'' என்று திடமான குரலில் சொன்னாள் அனிதா. அவளுடைய மனதில் நிம்மதி பரவியது.

சின்னதம்பி எதுவும் பேசவில்லை.

''அவன், அதாவது என் அண்ணன் ராகுல் எப்படி துளசியின் கர்ப்பத்துக்கு காரணம் இல்லையோ அதுபோல் கோயில் கொள்ளையிலும், பூசாரியின் கொலையிலும் கூட அவனுக்கு சம்பந்தம் இல்லை.''

இப்பொழுதும் சின்னதம்பி எதுவும் பேசவில்லை.

அனிதா அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டாள். ''எனக்கு உன் உதவி வேணும் சின்ன தம்பி. என் அண்ணனைக் கண்டு பிடிச்சா நிறைய உண்மைகள் வெளிப்படும். அவன் குற்றமற்றவன்னு நிரூபிக்க முடியும்.''

சின்னதம்பி தன் மௌனத்தை உடைக்காமல் அவளை பார்த்தான். 'குற்றவாளி யாராயிருந்தால் எனக்கென்ன' என்பதுபோல் இருந்தது அவனுடைய பார்வை.

அனிதாதான் தொடர்ந்து பேசிக்கொண்டே போனாள். ''அவனுக்கு நிறைய விஷயங்கள் தெரிஞ் சிருக்கு. அதான் அவனை மறைச்சு வைச்சுட்டு எல்லா குற்றங்களையும் அவன் மேல் சுமத்தி யிருக்காங்க'' என்ற அனிதாவின் மனதில் இன் னொரு எண்ணமும் ஓடியது. 'அவனைக் கொன்றிருப் பார்களோ!' இந்த எண்ணம் வந்ததும் அவளுடைய மனம் நடுங்கியது. பயங்கரமான வலி அவளுடைய இதயத்தை ஊடுருவியது. அவள் தன் இரு கைகளிலும் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அவள் படும் அவஸ்தையைக் கண்ட சின்னதம்பி மனம் இளகினான். ''உனக்கு என்ன உதவி வேணுமோ அதைச் செய்யத் தயாரா இருக்கேன்'' என்றான்.

முகத்தை உயர்த்தி அவனை நன்றியுடன் பார்த் தாள் அனிதா. ''நன்றி'' என்று வெளிப்படையாகச் சொல்லவும் செய்தாள். ''சொல்லு சின்னதம்பி,

ராகுலைப் பற்றி உனக்குத் தெரிஞ்சதையெல்லாம் சொல்லு.''

சின்னதம்பி பேசத் தொடங்கினான்.

''எங்க கிராமத்து மக்கள் அப்பாவிகள். ஏழைகள் ஊரைச் சுற்றி பார்க்க வரும் பட்டணத்து மக்களை ஒவ்வொரு தடவையும் ஏதோ அதிசயத்தைப் பார்ப்பது போல் பார்ப்பார்கள்.

பட்டணத்து டாக்டர் அதான் நீ சொல்ற ராகுலை யும் அப்படித்தான் பார்த்தாங்க. இவர் மத்தவங் களைப் போல் வந்தோமா, பார்த்துட்டு போனோமா என்றில்லாமல் வித்தியாசமா இருந்தார். எல்லார்கிட் டேயும் ரொம்ப சினேகமாக பழகினார். ஏதோ பச்சிலைகளப் பத்தி ஆராய்ச்சி செய்ய வந்திருப்பதாக சொன்னார். துளசியும், வைத்தியர் மகள் செல்வியும் தான் அவருக்கு வழிகாட்டி உதவினாங்க. மலைப் பாதையில் புது மனுஷங்க தனியா போன வழி தெரியாம திண்டாடிப் போவாங்க.

அவர் பச்சிலைகளை தேடுவதோடு நின்று விடுவதில்லை. கிராமத்து மக்களின் ஏழ்மை நிலை பத்திப் பேசினார். நாங்க எங்க வயல்லே விளை யறதையெல்லாம் தலைவர்கிட்டே வித்துடுவோம். அதாவது கொஞ்சம் எங்களுக்காக வைச்சுட்டு. கிடைக் கிற சொற்ப காசை அடுத்த விளைச்சல் வரைக்கும் வைச்சு சமாளிப்பது கஷ்டம்தான். எங்களுக்குத் தேவையான துணியைப் பட்டணத்துக்கு போய்

வாங்கி வரணும். காசு பத்தாது. அதான் கந்தலை உடுத்திட்டு இருக்கோம்.

'பட்டணத்திலே சந்தை கூடுது. உங்க வயல்லே விளையும் தானியங்களை அங்கே கொண்டு போய் வித்தா அதிகமா காசு கிடைக்கும். அப்புறம் மழைக் காலத்திலே வருஷத்துக்கு ஒரு தடவை மட்டும் நெல் விளைவிக்கிறீங்க. மழை நீரை சேமித்து வைச்சா வருஷம் முழுவதும் விளைச்சலுக்கு தேவையான நீர் கிடைக்கும். வருஷம் மூணு தடவை நெல் விளை விக்கலாம்' என்று மழை நீரை எப்படி சேமித்து வைப் பதுன்னு விளக்கினார். அரசு உங்களுக்காக பல திட்டங்கள் வைச்சிருக்கு. அத ஏன் உபயோகிக்கலை நீங்க? உங்க தேவைகளை அதிகாரிகளிடம் சொன்னா தானே அவங்க உதவுவாங்க. இதையெல்லாம் செய் யாம ஏன் பின் தங்கியிருக்கீங்க?'' என்று சொன் னார்.

இது பத்தி கிராமத்து ஜனங்க எல்லார்கிட்டேயும் பேசினார். அவர் சொன்னது கேட்க நல்லாத்தான் இருந்திச்சு. ஆனா, இதுவரை எல்லா விளைச்சல்களை யும் தலைவர்கிட்டே கொடுத்து வந்தோம். அதை எப்படி நிறுத்துறதுன்னு தெரியலை. தலைவர்கிட்டே எல்லோருக்கும் பயம்தான். அவர் எங்களுக்கு கடவுள் மாதிரி. அவர் பேச்சுக்கு எதிர்பேச்சு இருப்பதில்லை. அவரை யாரும் கேள்வி கேட்பதில்லை. அவராலே தான் எங்க வயிறே ரொம்புது.''

பேசிக்கொண்டு வந்த சின்னதம்பி நிறுத்தினான்.

அனிதா சொன்னாள், "அதெப்படி? உங்க வயல்லே விளையறதை எடுத்துட்டுத்தானே பணம் தர்றார் உங்க தலைவர்!"

"அப்படித்தான் பட்டணத்து டாக்டரும் சொன்னார். நீங்க நேரடியா சந்தையிலே கொண்டு போய் வித்தா அதிக பணம் கிடைக்கும்னார். மொதல்லே நானே கூட்டிட்டுப் போய் எல்லாத்தையும் ஒழுங்கு செய்து தர்றேன்னார். அதுக்கு நாங்க சம்மதிச்சோம். அதனாலே தலைவர்கூட மோதல். தலைவருக்கு எங்க எல்லார் மேலேயும் கோபம்தான்."

"அப்புறம் என்னாச்சு? சந்தையிலே போய் தானியங்களை, உங்க விளைச்சல்களை வித்தீங்களா?"

"ஒண்ணும் செய்யலை. அதுக்குள்ளேதான் இப்படியெல்லாம் நடந்து போச்சே!"

"ம்..." என்ற அனிதா யோசித்தாள். 'பஞ்சாமியின் வருமானம் குறைந்துவிடும் என்று அவருக்கு அச்சம் உண்டாயிருக்கலாம். ராகுல் மேல் ஏகப்பட்ட கோபம் வந்திருக்கும்.'

"பஞ்சாமியோட, அதாவது உங்க தலைவரோட வீடு பெரிசா, மண் வீடா இருக்குமே!"

"ஆமா. அவருக்கு பணத்துக்கு என்ன குறை. இன்னும் சிலரோட வீடும் பெரிசா, மண்ணாலே கட்டியதுதான். வைத்தியர் வீடும் மண் வீடுதான்" என்றான் சின்ன தம்பி.

"அவருக்கும் நல்ல வருமானம் உண்டா?" என்று கேட்டாள் அனிதா.

''யாருக்கு, வைத்தியருக்கா?''

''ஆமா.''

''பட்டணத்து டாக்டர் வர்ற வரைக்கும் நல்ல வருமானம், செல்வாக்கு எல்லாம் இருந்தது. பொதுவா சட்டுன்னு யாரும் வைத்தியர்கிட்டே போறதில்லை. காய்ச்சல், தலைவலிக்கெல்லாம் நமக்குத் தெரிஞ்ச மருந்துதான் சாப்பிடுவாங்க. ஆனா, அப்புறம் வைத்தியர் மந்திரம் ஓதி மருந்து கொடுக்கத் தொடங்கினர். தாயத்தும் மந்திரிச்சுக் கட்டுவார். சுற்றுப் புறத்து எல்லாக் கிராமங்களிலிருந்தும் ஜனங்க வரத் தொடங்கினாங்க. பட்டணத்து டாக்டர் வந்து எல்லாருக்கும் இலவசமா மருந்து கொடுக்கத் தொடங்கியதும் வைத்தியரோட வருமானம் குறைஞ்சு போச்சு. வைத்தியருக்கும், ராகுலுக்கும் இடையே வாக்குவாதமெல்லாம் நடந்துச்சு.''

''ஓ... அப்படியா சேதி'' என்றாள் அனிதா. 'ராகுல் பஞ்சாமி, வைத்தியர் இரண்டு பேருடனும் மோதியிருக்கிறான். இவர்களில் யாராவது ஒருத்தர் ராகுலை பலி ஆடாக ஆக்கியிருக்கலாமில்லையா!'

சின்னதம்பி பழஞ்சேலையால் தலை முதல் கால் வரை போர்த்திக் கொண்டு படுத்து விட்டான்.

கிராம வழக்கப்படி மக்கள் இரவு உணவு உண்டு விட்டு உறங்கப் போய் விட்டனர். தன்னுள் பல ரகசியங்களை அடக்கிக் கொண்டு இருளில் மூழ்கியிருந்தது மல்லி மலை.

# 7



இன்ஸ்பெக்டர் பிரகாஷின் மனம் சங்கடப் பட்டது. 'இந்த பெண் அனிதாவின் மனதில் இடம் பிடிக்க முயற்சி செய்கிறேன்; இவளோ என்னை ஒரு பயந்தாங்கொள்ளி, ஒன்றுக்கும் உதவாதவன் என்கிற மாதிரி பார்க்கிறாள்' என எண்ணி வருத்தப் பட்டது.

அனிதாவைக் கண்டது முதல் அவள் மேல் காதல் கொண்டுவிட்டான் பிரகாஷ். இது அவனுடைய முதல் காதல் அல்ல; பத்தாவதோ, பதினொன்றாவதோ காதல். அழகான வாலிப பெண்களைக் கண்டதும் அவர்களைக் காதலித்து விடும் இயல்பு அவனிடம் இருந்தது. இதை வயசு கோளாறு எனலாம். ஆனால், எந்தக் காதலாயினும் அது வெற்றி பெற்றுக் கல் யாணத்தில் முடிய வேண்டுமல்லவா!

அவனுக்கு வேலை கிடைத்தவுடனே அவ னுடைய தாய் ஞானம் அவனுக்காக பெண் பார்க்கத் தொடங்கி விட்டாள். அழகுக்கு தன் மகன் அடிமை என்பதை அவள் அறிந்திருந்ததால் அவனுக்காக அழகான பெண்களாகத்தான் பார்த்தாள். பிரகாஷும் தோற்றத்தில் அழகானவன்தான். என்றாலும், ஏனோ ஞானம் பார்த்த பெண்களில் யாருக்கும் அவனைப்

பிடிக்கவில்லை. அவன் ஒரு காட்டுப் பகுதியில் வேலை பார்ப்பது ஒரு காரணமாக இருக்கலாம்.

பிரகாஷ் புதிதாக வேலைக்குச் சேர்ந்தவன் என்பதால் இன்ன இடத்தில் வேலை வேண்டும் என கேட்டு வாங்கும் வாய்ப்பு இல்லை. கொடுக்கப்பட்ட இடத்தில் வேலை செய்வதைத் தவிர வேறு வழி யில்லை. இரண்டு வருடங்கள் இங்கே வேலை செய்த பின்னர் மாற்றல் கிடைக்கும். அதுவரை அவன் பிரம்மச்சாரியாகத்தான் இருக்க வேண்டும் என்பது அவனுடைய தலையெழுத்து போலும்.

அனிதாவைக் கண்டதும் அதுவரை அடங்கிப் போயிருந்த காதல் உணர்வு மீண்டும் தலைதூக் கியது. அனிதா வெறும் அழகான பெண் மட்டுமல்ல; புத்திசாலியும் கூட. எதையும் வெளிப்படையாகப் பேசிவிடும் குணமும் அவளிடம் இருந்தது. இவை யாவும் அவனை ஈர்த்து இதுவரை அவனிடம் ஏற்பட்டிராத 'உண்மை காதலை' தோற்றுவிதிருப்ப தாக அவன் நம்பினான்.

இந்த அழகான இளம் பெண் அவனை மட்டம் தட்டி பேசியது சங்கடத்தை கொடுத்த அதே சமயம் அவனை சிந்திக்கவும் தூண்டியது. இந்த காட்டுப் பகுதியில் எப்படியாவது இரண்டு வருடங்களைக் கழித்துவிட வேண்டும் என அவன் எண்ணிக் கொண் டிருந்தானேயொழிய செய்கிற வேலையைச் செவ் வனே செய்வது தன் கடமை என்றும், அந்தக் கட மையைச் சரியாக செய்து வாங்கும் சம்பளத்துக்கு

வஞ்சகம் செய்யாமல் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவன் நினைத்ததில்லை. தன் திறமையை காட்டி உழைத்தால் எதிர்காலத்தில் பதவி உயர்வு கிடைக்க உதவியாக இருக்கும் என்பதிலெல்லாம் அவன் கவனம் செலுத்தவில்லை.

இப்பொழுது அனிதா சுட்டிக் காட்டிய பொழுது அவனுடைய மனம் விழித்துக் கொண்டது. அவன் மல்லி மலை கொலை வழக்கை தீர்த்து வைத்தால் வேலை செய்யும் இடத்தில் நல்ல பெயர் கிடைக்கும். ராகுலை கண்டுபிடித்து, அனிதா நம்புவது போல் அவன் குற்றவாளி இல்லையென்றால் அதை நிரூபிப்பதால் அவளுடைய மனதில் இடம் பிடிக்கும் வாய்ப்பு உண்டு என நினைத்தான்.

மனம் சிலிர்த்துக் கொண்டு எழுந்தது. அவன் உடனே தன்னுடைய எண்ணத்தைச் செயல்படுத்த வேண்டும் என நினைத்தான். சீருடையை அணிந்துக்கொண்டு, ''அம்மா, நான் போய் வர்றேன்'' என்றான்.

அவனுடைய தாய் ஞானம், ''ஏன்டா, ஒண்ணும் சாப்பிடாம எங்கே கிளம்பிட்டே? அதுவும் இத்தனை காலங்காத்தாலே?'' என்று கேட்டாள்.

அப்பொழுதுதான் அது அதிகாலை ஆறு மணி என்பதும், தான் ஒன்றும் உண்ணவில்லை என்பதோடு இன்னும் குளிக்கக்கூட இல்லை என்பதும் அவனுடைய உணர்வுக்கு வந்தன.

* * *

காலையாகாரம் முடிந்ததும் அனிதா புறப்படத் தயாரானாள். ''எங்கே போறே?'' என்று சின்னதம்பி கேட்டபொழுது, ''என் அண்ணனை தேடித்தான். அதற்காகத்தானே இங்கே வந்திருக்கேன்'' என்றாள் அவள்.

''எங்கே போய் தேடப் பேறே?''

''ஊருக்குள் தேடியாச்சே. இனி மலை மேல் ஏறி காட்டுக்குள் போய் தேடப் போறேன். இங்கே மட்டுமல்ல, சுற்றிலுமுள்ள எல்லா கிராமங்களிலும் போய் தேடுவேன்.''

''பாதை தெரியாம ஒரே இடத்திலேயே சுத்தி சுத்தி வந்திட்டு இருக்கப் போறே. நானும் உன்கூட வர்றேன்'' என்ற சின்னதம்பியை அவள் வியப்புடன் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறே, உனக்கு உதவி செய்வதாக வாக்களித்திருக்கேன் இல்லீயா, மேலும், உங்கண்ணனை கண்டுப்பிடிச்சுட்டா என்னோட சில கேள்விகளுக்கும் விடை கிடைச்சுடும்'' என்றான் அவன்.

''துளசியோட நிலைக்கு ராகுல் காரணம் இல்லைங் கறதுதான் தெளிவாச்சே. இன்னும் சந்தேகமா?''

''யார் செய்த வேலை இதுன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா!''

ஏதோ சொல்ல வாய் திறந்த அனிதா ஒரு கண சிந்தனைக்குப் பின் ஒன்றும் பேசாமல் வாயை மூடிக் கொண்டாள்.

அனிதாவும், சின்னதம்பியும் சிறிது தூரம் நடந்ததும் அவர்கள் எதிரே பிரகாஷ் வந்தான். ''ரெண்டு பேரும் எங்கே கிளம்பிட்டீங்க?'' என்று கேட்டான்.

''போலீஸ் செய்ய தவறிய காரியத்தைச் செய்ய கிளம்பிட்டிருக்கேன்'' என்றாள் அனிதா குதர்க்கமாக.

'இந்த பெண்ணின் இயல்பே இப்படி குத்தி பேசுவதுதானோ அல்லது தன் பிரச்சனையை தீர்க்க முடியாத சங்கடத்தில் உழன்று கொண்டிருப்பதால் இப்படி பேசுகிறாளோ!' என்று சந்தேகத்துடன் அவளைப் பார்த்தான் பிரகாஷ். பின்னர் அவளை எச்சரிப்பது போல் பார்வையால் சின்னதம்பியை சுட்டிக் காட்டினான்.

''அவங்கிட்டே நான் யார்னு சொல்லிட்டேன். அதிருக்கட்டும், ராகுல் காணாம போய் ஏறக்குறைய ஒண்ணரை மாசமாச்சு. அவனைக் கண்டுப்பிடிக்காம இன்னும் என்ன செய்திட்டிருக்கீங்க?'' என்று உஷ்ணமாகக் கேட்டாள்.

''எல்லா வழிகளிலும் முயற்சி செய்துட்டுதான் இருக்கேன் மேடம். ஒரேடியா போலீஸ் டிபார்ட்மென்ட்டை குற்றம் சொல்லாதீங்க. எங்களுக்கும் கேஸை எப்படா தீர்த்து வைக்கலாம்னுதான் இருக்கும். இந்த கேஸிலும் குற்றவாளியை அதாவது ராகுலை தேடிட்டுதான் இருக்கோம்'' என்றான் பிரகாஷ். அவள் அப்படி இடக்கு பேசியதை அவன்

விரும்பவில்லையென்றாலும் அவளை கோபித்துக் கொள்ள அவனால் முடியவில்லை.

''ஸ்டாப் இட்'' என்று ஏறக்குறைய கத்தினாள் அனிதா. ''என் அண்ணன் குற்றவாளி இல்லை. அவன் செய்தது என நீங்க நினைக்கும் குற்றம் நிரூபிக்கப்படும் வரையில் அவனை ராகுல்னே குறிப்பிடுங்க.''

'அட சட்' என மௌனமாக தன்னை கடிந்து கொண்டான் பிரகாஷ். 'அனிதாவை கவர முயற்சிக்கையில் இப்படி தவறான வார்த்தை பிரயோகம் செய்து எல்லாவற்றையும் கெடுத்துக் கொள்கிறேன்.'

''சாரி. ராகுலை எப்படியும் கண்டுபிடிச்சே தீருவதுன்னு கங்கணம் கட்டியிருக்கேன்.''

''நல்லது'' என்று ஒற்றை சொல்லை உணர்ச்சியற்று உச்சரித்தாள் அனிதா. 'அது உன் கடமை. அதிலே பெருமைப்படும்படியாக என்ன இருக்கிறது' என்று சொல்லிற்று அந்த ஒற்றைச் சொல்.

''பஞ்சாமியையும், வைத்தியரையும் மீண்டும் விசாரிக்கப் போறேன்.''

தான் சொன்னது அனிதாவை சந்தோஷப்படுத்தும் என நினைத்த பிரகாஷ் அவளுடைய ''ம்...'' என்ற வெறும் முனகலால் ஏமாற்றமடைந்தான்.

''நீங்களும் என்னோடு வர்றீங்களா? உங்களுக்கு அசாத்திய புத்திக் கூர்மை இருக்கு. நான் கவனிக்க தவறும் சின்னச் சின்ன, ஆனால், முக்கியமான விஷயங்களைக் கூட கவனிச்சுடறீங்க.''

தன்னுடைய இயலாமையை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் பிரகாஷை வியப்புடன் பார்த்தாள் அனிதா. 'இந்த ஆள் வெகுளிதான்; அப்பாவிதான்' என்று அவள் நினைக்கையின் அவன் மீதிருந்த கோபமும், எரிச்சலும் மறைந்து போயின. அவளுடைய முகத்தில் புன்னகை கீற்று தோன்றியது. ''உங்களோடு வர தயார். ஆனால், அதற்கு முன்னால் இந்த மலை காடுகளில் அண்ணனைத் தேடப் போகிறேன். இங்கே ஏதாவது குகைகளில் அவனை அடைத்து வைச்சிருக்கலாமில்லையா?''

''அங்கெல்லாம் தேடியாச்சு மேடம்'' என்றான் பிரசாத். ''இண்டு இடுக்குகளிலெல்லாம் தேடிப் பார்த்துட்டோம்.''

''அதான் நீங்களே சொல்லிட்டீங்களே, உங்க கண்ணுக்கு தப்பிய விஷயங்கள் என் கண்ணுக்குத் தெரியுதான்னு பார்க்கத்தான்'' என்று சொல்லியபடி அனிதா நடக்க சின்னதம்பியும், பிரகாஷும் அவளுடன் நடந்தனர்.

* * *

மலை காடுகளில் பாறை கற்களும், முட்களும் நிரம்பியதாக இருந்தது. திசை அறிய சிரமமாக இருந்தது. தனியாக வந்தால் திசை தப்பிப் போகும் வாய்ப்பு இருக்கிறது என்பதை அனிதா உணர்ந்தாள்.

உயர்ந்த மரங்களும், பச்சை பசேல் என அடர்ந்த குத்துச் செடிகளும் தரையெங்கும் படர்ந்திருந்த புற்களும் அதன் செழிப்பை பிரகடனப்படுத்தின.

மலையடிவாரத்தில் இருந்தது போல் மலை மேலும் சமதளமான இடங்களில் பயிர்கள் விளைந்து கொண்டிருந்தன. மரசீனி கிழங்குகளையும் பயிரிட்டிருந்தனர்.

இத்தனை செழிப்பான இடத்தில் மக்கள் ஏன் வறுமையில் வாடுகிறார்கள் என்று நினைத்தாள் அனிதா. அவள் அதை வாய்விட்டுச் சொன்ன பொழுது, ''இந்த கிழங்குகளுக்கு சந்தையில் நல்ல கிராக்கி. என்றாலும் தலைவர் கொஞ்சம்தான் பணம் தருவார்'' என்றான் சின்னதம்பி.

''இது தெரிஞ்சும் யாரும் நடவடிக்கை எடுக்காதது ஆச்சரியமே.''

''எல்லா விளைச்சல்களுக்கும் சந்தையில்...'' என்று தொடங்கிய சின்னதம்பியை இடைமறித்தாள் அனிதா.

''நேத்தே நீ சொன்னே, ராகுல் அவைகளை நேரடியா சந்தையில் போய் விற்க வழி காட்டியதாக, அவன் சொல்லிட்டு காணாமப் போயிட்டான். நீங்களோ செயலற்று ஸ்தம்பித்துப் போயிட்டீங்க. எல்லாத்தையும் இன்னொருத்தர் உங்களுக்காக செய்து தரணும்னு ஏன் எதிர்பார்க்கிறீங்க? நீங்களே உங்க தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதா?'' என்று எரிச்சலுடன் கேட்டாள்.

சின்னதம்பி தலையை சொறிந்து கொண்டான். ''எங்களுக்கு என்னத்தை தெரியும்!'' என்றான் அவன்.

''தெரிஞ்சுக்க முயற்சி செய்றீங்களா? உங்க முன்னாலே தட்டிலே சோறு வைச்சப்புறமும் இன்னொருத்தர் அதை சுவைத்து தந்தாதான் விழுங்குவீங்களா?'' என்றாள் அவள் குரலில் எரிச்சலைக் கூட்டி.

சின்னதம்பியால் எந்த பதிலையும், சொல்ல முடியவில்லை. அவன் மௌனமாக அவர்களோடு நடந்தான்.

அனிதா தொடர்ந்து பேசினாள். ''உங்களுக்கு தன்னம்பிக்கை இல்லை. நீங்க நினைப்பதை செய்து முடிக்கும் சக்தி உங்ககிட்டே இருப்பதை நீங்க புரிஞ்சுக்கலை. அதனால்தான் கல்வி கற்க வேண்டும் என்பது. கல்வி அறிவை வளர்க்குது. அறிவு சிந்தனையைத் தூண்டுது. சிந்தனை ஞானம் பெற வழி கோலுகின்றது. உங்க ஊரிலே ஒரு பள்ளிக்கூடம் கூட இல்லை...''

''ராகுலும் இப்படித்தான் பேசுவார். 'அதிகாரத்துக்கும் ஆணவத்துக்கும் பயந்து உங்க உரிமைகளை விட்டுக் கொடுத்துட்டு இருக்கீங்க. கோழைகளா குழைஞ்சு போகாம உங்க உரிமைகளை நிலைநாட்டுங்க. மொதல்லே ஊருக்குள்ளே ஒரு பள்ளிக்கூடம் கொண்டு வாருங்க'ன்னார்.''

''அப்புறம்?'' என்ற அனிதாவின் கேள்வியை புரிந்து கொண்டு சின்னதம்பி மௌனம் காத்தான். அதற்காக ஊர் மக்கள் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதைத்தான் அவள் குத்திக்

காட்டுகிறாள் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

'இவள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. நமக்கு வேண்டியவைகளைப் பெற நாம்தான் உழைக்க வேண்டும். இன்னொருவர் செய்ய வேண்டுமென எதிர்பார்த்து நம்முடைய பொறுப்புகளை அந்த இன்னொருவர் மேல் சுமத்துவது எந்த வகையில் நியாயமாகும்!' என்று நினைத்தான் அவன்.

இவர்களுடைய உரையாடல்களை கேட்டுக் கொண்டு அதே சமயம் அதில் கலந்து கொள்ளாமல் மௌனமாக நடந்து கொண்டிருந்த பிரகாஷ், தன் எண்ணங்களை தைரியமக சொல்கிறாள் இந்த பெண். 'எனக்கென்ன!' என்று ஒதுங்கிப் போகாமல் உதவி செய்யும் இதே குணம்தான் ராகுலிடமும் இருந்தது' என்று நினைத்தான்.

ஓரிரு முறை அவன் ராகுலைச் சந்தித்திருக்கின்றான். அண்ணன் தங்கை இருவரிடமும் இருக்கும் இந்த உயர்ந்த குணத்துக்கு முன்னால் தான் எம்மாத்திரம் என்று நினைத்த பிரகாஷ் தான் சிறுத்துப் போனதாக உணர்ந்தான். அதே சமயம் அனிதாவின் மேலிருந்த மதிப்பு கூடியது.

''ஊரிலே பள்ளிக்கூடம் கொண்டு வாருங்கன்னு அவன் சொன்னதை யாராவது எதிர்த்தாங்களா?'' என்று திடீரென கேட்டாள் அனிதா. அந்த கிராமத்து மக்களுடன் ராகுலின் உறவு எப்படியிருந்தது என்று

கணிப்பது தன்னுடைய தேடலுக்கு உதவியாக இருக்கும் என்பதே அவளுடைய எண்ணம்.

''ஊர் மொத்தமும் மொதல்ல அவனை எதிர்க் கத்தான் செய்தது. பிள்ளைகள் எல்லோரும் பள்ளிக் கூடம் போயிட்டா காட்டிலே போய் யார் வேலை செய்வாங்கன்னு ஒருசேர குரலெழுப்பினாங்க. டாக்டர் அவர்களுக்கு விளக்கினார். நீங்க மொதல்லே வயலை உழுது பண்படுத்துறீங்க. அப்புறம் விதை விதைக்கிறீங்க. நீர் பாய்ச்சி, களையெடுத்து பயிரை வளர்க்கிறீங்க. இப்படி உங்க உழைப்பையும், பணத் தையும் செலவழிப்பதாலேதானே நெல் விளைஞ்சு உங்க வயித்தை நிரப்புது. அது மாதிரி இப்ப உங்க பிள்ளைகள் படிச்சா நாளைக்கு உங்களைப் போல் மாடு மாதிரி உழைச்சும் வறுமையில் வாடாம புத்தி சாலித்தனமா என்ன செய்து விவசாயத்தை பெருக் கலாம், வருமானம் பெருக என்ன வழி செய்யலாம்னு சிந்தித்து நடப்பாங்க. நல்ல வீடும், உடையும் கிடைக்க வழி செய்வாங்க. கிராமம் முன்னேற என் னென்ன வழிகள் இருக்குன்னு சிந்தித்து தைரியமா செயலாற்றுவாங்க. இந்த கல்வி உங்க முதலீடு. இந்த முதலீடு பன்மடங்கா பயன்தரும்னார்'' என்றான் சின்ன தம்பி. இதை சொன்னவனின் மனதில், யாருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாத ஒரு மனிதன் இத் தனை அக்கறை காட்டும்பொழுது நாங்கள் எங்கள் மேல் அக்கறை, எடுத்துக் கொள்ளாதது அப்பாவித் தனம் இல்லை; அறிவீனம்தான்' என்ற எண்ணம் ஓடியது.

''மக்கள் அவன் சொன்னதை ஏத்துக்கிட்டாங் களா?'' அனிதா கேட்டாள்.

''மெல்ல மெல்ல அவங்களுக்கு புரிஞ்சுது. அவர் சொல்றது சரிதான்னு ஒத்துக்கிட்டாங்க. ஆனா தலைவர் தான் கடுமையா எதிர்த்தார். எவனோ வந்து என்னவெல்லாமோ உளர்றான், அதுக்கு நீங்க எருமை மாடு மாதிரி தலையசைக்கிறீங்களேன்னு வசவு பாடினார்.''

''ம்.... அவரோட நிலத்திலே உழைக்க கைகள் குறைஞ்சு போயிடும்னு பயந்திருப்பார். கல்வியை பத்தி ரொம்ப தவறான கருத்து நிலவுது. படிச்சவனும் வயலில் வேலை செய்யலாம். நேர்மையான எந்த வேலையும் உயர்ந்த வேலைதான். உடல் உழைப் போடு புத்திசாலித்தனமும் சேர்ந்துட்டா அது எத் தனை பயனுள்ளதா இருக்கும்!

நாட்டின் மூச்சே விவசாயம்தான். பெரிய பெரிய இயந்திரங்களும், கம்ப்யூட்டர்களும் இன்றைய வாழ்க்கை முறைக்கு அத்தியாவசியமானவன்னாலும் அவை சோறு போடாது. வயிறு நிரம்பணும்னா விவ சாயம் வளரணும். உயிரைக் காப்பாத்தும் மருத்துவத் தொழில் போல் உணவளிக்கும் விவசாயமும் ஒரு புனிதமான தொழில்; உயர்ந்த தொழில், ''சொல்லிக் கொண்டே சென்ற அனிதா கேட்டாள்,

''ராகுல் மக்கள் மனதில் விதைத்த இந்த எண் ணங்களுக்காக உங்க தலைவர் அவனோட மோதி னாரா?'' என்று.

''இவன் எப்பப் போய் தொலைவான்! ஊரை கெடுக்கிறான்னார். அப்புறம் வாத்தியார் கண்ணுச் சாமிக்கும் டாக்டர் மேல் கோபம்தான்'' என்றான் சின்னதம்பி.

''அட, இந்த ஊருக்குள்ளே வாத்தியார் ஒருத்தர் இருக்காரா?'' என்று வியப்புடன் கேட்டாள் அனிதா. ''எந்த பள்ளிக்கூடத்திலே படிச்சு கொடுக்கிறார்? பட்டணத்திலேயா? வாத்தியாரா இருந்துட்டு கல்வியை ஏன் எதிர்க்கிறார்?''

சின்னதம்பி லேசாகச் சிரித்தான். ''எத்தனை கேள்விகள்!'' என்றவன், ''பள்ளிக்கூட வாத்தியார் இல்லை இந்த கண்ணுச்சாமி. ஏதோ ஒண்ணாம் கிளாஸோ, ரெண்டாம் கிளாஸோ படிச்சிருக்கலாம் என் அப்பாரைப் போல். அல்லது வெறும் கைநாட்டு தானோ என்னவே. எல்லாம் தெரிஞ்ச மாதிரி வாய் சவடாலா பேசுவார். அதனால் தான் அவரை வாத்தி யார்ம்பங்க. 'இந்த ஆள் (ராகுல்) ஊரைக் கெடுக்க வந்திருக்கான். புள்ளைங்க படிச்சா பட்டணத்துக் காரங்க போல கெட்டுப் போவாங்க. நம்ம ஊரும் கெட்டுப் போயிடும். இப்ப நல்லா ஒத்துமையா வாழறது இவனுக்குப் பிடிக்கலை. இவனுடைய பேச்சுக்கு பலியாயிடாதீங்கம்பார்'' என்றான்.

அனிதா திடுக்கிட்டாள். ''கல்வி எப்படி மனிதனை கெடுக்கும்' என்று நினைத்தாள். 'நல்லவர்கள், கெட்டவர்கள் எல்லோரும் பட்டணத்திலேயும் இருக் கிறார்கள், கிராமத்திலேயும் இருக்கிறார்கள். இந்த

வாத்தியாருக்கு ஒன்றும் தெரியவில்லை' என்ற நினைத்தவளின் மனதில் கூடவே, 'இவர்கள் இப்படி நினைக்கக் காரணம் இந்த கலியுலகம்தான். எதிலும் லஞ்சம், கலவரம் என்ற கலாச்சாரத்தைப் பின்பற்று கிறார்கள் இன்றைய மனிதர்கள். பட்டணத்தவர் களின் இந்த நடவடிக்கைகள் கிராமத்தாரை கல வரப்படுத்துவதில் வியப்பில்லை. ஆனால், அதற்கும், கல்விக்கும் சம்பந்தமில்லை என்பதை உணர்த்தி னால் இவர்கள் புரிந்து கொள்வார்களா! இல்லை... அப்படிச் சொல்வதும் ஒரு வகையில் தவறுதான். உண்மையாகக் கற்றவர்கள் இந்த துஷ்ட தனத்தை விட்டு விலகியே இருக்கிறார்கள்' என்ற எண்ணமும் ஓடியது.

திடீரென அவளுடைய சிந்தனை தடைப்பட்டது. 'நான் இங்கே வந்திருக்கும் நோக்கம் என்ன, நான் செய்து கொண்டிருப்பதென்ன! வீணான சிந்தனை களில் மனதை அலைக்கழித்துக் கொண்டிருக்கின் றேன். கிராமத்து மக்கள் அவர்களுடைய புத்தியால் பிழைத்துக் கொள்ளட்டும். முதலில் என் அண் ணனை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். மற்றதெல் லாம் பிறகு!

அவர்கள் பேசியபடி நடந்தாலும் பார்வை சுற்றுப் புறங்களில் கூர்மையாக பதிந்திருந்தது. அடர்ந்த மரங்களுக்கு பின்னால், குத்து செடிகளுக்கு மத்தி யில், பாறைகளின் மறைவிடங்களில் என்று எல்லா இடங்களிலும் ராகுலை தேடினார்கள். 'குகை' என்று

சொல்லும்படியாக பாறைகளில் குடைசல் எதுவும் இல்லை.

அப்பொழுது அவர்கள் ஒரு இடிந்த குடிசையை கண்டார்கள். அது இப்பொழுது இடிந்திருந்தாலும் நன்றாக இருந்த காலத்தில் செம்மையாக கட்டப் பட்டிருந்ததின் அடையாளம் தெரிந்தது. குடிசை யினுள் மேடை ஒன்றும், அடுப்பு ஒன்றும் சிதில மடைந்த நிலையில் தென்பட்டன. உடைந்த மட் பாண்டங்கள் சிலவற்றையும் அங்கே காண முடிந்தது. சப்பிய அலுமினிய குவளை ஒன்று கிடந்தது.

''இது யாருடைய குடிசை?'' என்று கேட்டாள் அனிதா.

அதுவரை மௌனமாக இருந்த பிரகாஷ், ''உங் கண்ணாதான் இதை உபயோகிச்சிட்டிருந்தார்'' என் றான்.

'அண்ணன் இங்கேயா இருந்தான்!' அவள் குனிந்து அந்த சப்பிய குவளையைக் கையில் எடுத்தாள். 'அண்ணா, எங்கே இருக்கிறாய் நீ?'

அவளுடைய கண்கள் நீரால் நிரம்பின. கன்னங் களில் வடிந்தன. தொண்டையிலிருந்து கேவல் ஒன்று வெடித்துக் கிளம்பியது. அவள் எதையும் அடக்க முயற்சிக்கவில்லை.

என்ன செய்வது என்று புரியாத நிலையில் சின்ன தம்பியும், பிரகாஷும் அவளைப் பார்த்தபடி நின் றிருந்தனர்.

கடைசியில் பிரகாஷ், ''மிஸ் அனிதா, கவலைப் படாதீங்க, எல்லாம் சரியாயிடும். உங்க அண்ணனை தேடிக் கண்டுபிடிக்கவே போறோம். அவர் குற்ற வாளியில்லேன்னு நிரூபிச்சிடலாம்'' என்றான்.

அனிதா கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''ஸாரி'' என்றாள். ''இங்கேயா என் அண்ணன் இருந் தான்! கிராமத்துக்கு வெளியே... மலைகாட்டில்...''

''பகல் நேரத்திலேதான் இங்கே இருப்பார். மூலிகைகளை காய்க்கிறது, காய வைச்சு பொடிக்கிற துன்னு எதையாவது செய்திட்டிருப்பார். மத்தபடி சாப்பிடறது, படுக்கிறது எல்லாம் தங்கப்பன் வீட் டிலேதான்,'' என்றான் பிரகாஷ்.

''தங்கப்பன் யார்? அவரை நான் பார்க்கணும்...''

''கட்டாயம்'' என்றான் பிரகாஷ். இப்பொழுது அனிதா சகஜ நிலைக்கு திரும்பியிருந்தது மனதிற்கு இதமாக இருந்தது.

''அண்ணனா இந்த குடிசையைக் கட்டினான். புதுசா கட்டின மாதிரி தெரியலையே!'' என்று தன் சந்தேகத்தைத் தெரிவித்தாள் அவள்.

''அவர் இதை கட்டலை. ஒரு சில வருஷங்களுக்கு முன்னாலே ஒரு முனிவர் இந்தக் குடிசையில் இருந்தார். அவர் கட்டியதுன்னு நினைக்கிறேன். அவரும் பச்சிலை, மருந்துன்னு கிராமத்து மக்களுக்கு நிறைய உதவி செய்தார்...'' என்று சொல்லிக் கொண்டிருந்த சின்னதம்பி வாக்கியத்தை முடிக்கும்

முன்னால் குறுக்கிட்டாள் அனிதா. ''முனிவரா? அவர் இப்ப எங்கே இருக்கார்?'' என்று பரபரப்புடன் கேட்டாள். ராகுல் தேடி வந்த முனிவர் இவராகத்தான் இருக்கக்கூடும். ஒருவேளை ராகுல் இவரிடம் இருக் கக்கூடும்.

''அவர் அப்பவே ஊரைவிட்டுப் போயிட்டார். திடீர்னு அவரும் மாயமா மறைஞ்சுட்டார். இப்ப எங்கே இருக்கார்னு யாருக்கும் தெரியாது'' என்றான் சின்னதம்பி.

'ஊருக்கு நல்லது நினைப்பவர்கள், செய்பவர்கள், எல்லோரும் இப்படி மறைந்து போய்விடுகிறார்கள்' என்று நினைத்த அனிதாவின் மனதில் ஏதோ பொறி தட்டியது. இவர்கள் இருவருடைய மறைவுக்கும், வைத்தியர் அய்யாசாமிக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கலாமில்லையா! முனிவரும் பச்சிலை வைத் தியத்தில் சிறந்தவர்; ராகுலும் மூலிகைகளைத் தேடி வந்திருந்தான்.

* * *

வெயில் ஏற ஏற அவர்கள் களைத்துப் போனார் கள். ''இனி தேடலை வெயில் தணிஞ்ச பிறகு வைச் சுக்கலாம்'' என்று சின்னசாமி சொன்னதை அனி தாவும், பிரகாஷும் ஆமோதித்தனர்.

''ஊருக்குள்ள வேலை இருக்கு. சிலரைப் போய் பார்க்கணும். நீங்களும் உடன் வர்றீங்க இல்லையா?'' என்று அனிதாவை கேட்டான் பிரகாஷ்.

''ம்....'' என்ற அனிதா பிரகாஷுடன் நடந்தாள். சின்னதம்பி விடைபெற்றுக் கொண்டு தன் வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

அனிதாவுடன் நடக்கவே சுகமாக இருந்தது பிரகாஷுக்கு. அவள் தன்னை பார்க்கமாட்டாளா, பேச மாட்டாளா என்று அவனுடைய மனம் ஏங்கிற்று. அவனுடைய எண்ணத்தை புரிந்து கொண்டாற் போல் அவள் அவனை திரும்பிப் பார்த்தாள். பேசவும் செய்தள்.

''என்ன ஆமை நடை போடறீங்க! இப்படி ஊர்ந்தா எப்ப நம்ம வேலை முடியப் போறது!'' என்றாள் அவள். ''பசி வேறே வயித்தைக் குடையுது.''

''ஐடியா'' என்றான் பிரகாஷ். ''தங்கப்பனை பார்க்கணும்னு சொன்னீங்க இல்லையா, அவன்கிட்டே போய் சாப்பிடுவோம். அருமையா சமைப்பான். மொதல்ல தங்கப்பன்கிட்டே போய் சமைக்கச் சொல்லிட்டு பஞ்சாமியையும், அய்யாசாமியையும் போய்ப் பார்த்துட்டு வந்திடலாம். அதற்குள் இவன் சமைச்சு வைச்சுடுவான்'' என்றான்.

* * *

அவர்கள் தங்கப்பனின் வீட்டுக்கு சென்ற பொழுது அவன் ஏற்கனவே சமையலில் ஈடுபட்டிருந்தான். இவர்களைக் கண்டதும், ''திரும்பவும் வந்திட்டீரா! அதான் எனக்கு தெரிஞ்சதையெல்லாம் அப்பவே சொல்லிட்டேனே'' என்றான்.

''இந்த அம்மாவுக்கு உன் கையாலே சமைச்ச சாப்பாடு வேணுமாம். அதான் கூட்டி வந்தேன். இப்ப

என்ன சமைச்சுட்டிருக்கே?'' என்று கேட்டான் பிரகாஷ்.

''ஒரு வடநாட்டுக்காரனும், அவனோடு ஒரு பொண்ணும் ஊர் சுத்திப் பார்க்க வந்திருக்காங்க. அவங்களுக்கு மீன் வேணும்னு என்னை சமைக்கச் சொன்னாங்க'' என்றான் தங்கப்பன் பெருமையுடன். எல்லோரும் அவனுடைய சமையலை விரும்பிச் சாப்பிடுவது அவனுக்கு சந்தோஷத்தைக் கொடுத்திருந்தது.

''உங்க தலைவர் வெளியூர்காரங்களை நுழைய விடமாட்டாரே, இவங்க எப்படி...''

''தலைவர்தான் அவங்களுக்காக மீன் கொழம்பு வைக்கச் சொன்னார்.''

''ஆச்சரியம்தான்.''

''அப்படித்தான் அவங்க சொன்னாங்க'' என்ற தங்கப்பன், ''சித்த இருமைய்யா, குழம்பைப் பார்த்துட்டு வர்றேன். உங்ககூட பேசிட்டிருந்தா என் வேலை கெட்டுடும். அவங்க திரும்பி வர்றதுக்குள்ளே சோறு ஆயிடணும்...'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றான். ஐந்து நிமிடத்தில் திரும்பினான். ''கொழம்பு கொதிச்சுட்டுது. மீனைப் பொரிக்கணும். அவ்வளவுதான். சமையல் ஆயிடும். நீங்க ரெண்டு பேரும் என்ன சாப்பிடுவீங்க?''

''நீங்க என்ன சமைச்சாலும் சரிதான். வீட்டிலே என்ன இருக்கோ அதைச் சமைச்சா போதும்'' என்ற

அனிதா, ‘‘மீன் குழம்பின் வாசனை தூக்குது. இந்த ஊருக்கு வர்றவங்க எல்லோரும் உங்ககிட்டேதான் சாப்பிடுவாங்களா?’’ என்று கேட்டாள்.

‘‘அதிகம் பேர் இங்கே வர்றதில்லை. அதுவும் அந்த ராகுல் பய செய்த காரியத்துக்கு பொறவு...’’ என்று தங்கப்பன் சொல்ல அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அனிதா கேட்டாள், ‘‘ராகுல் யாரு? அவரும் இங்கேதான் சாப்பிட்டாரா?’’ என்று.

‘‘ஆமா. இங்கேதான் சாப்பிட்டிருந்தான். களவாணி பய... கொலைகாரப் பய. கடைசியிலே ஏமாத்திட்டு ஓடிப் போயிட்டான் பாரு!’’

அவன் வாசித்த குற்றப் பத்திரிகையை அனிதா சகித்துக் கொண்டாள். முகத்தை எவ்வித சலனமுமின்றி வைத்துக் கொண்டு, குரலிலும் எதையும் வெளிப்படுத்தாமல், ‘‘ஏன், அந்த ஆள் சாப்பிட்டதுக்கு பணம் ஒண்ணும் தரலையா?’’ என்று அப்பாவி போல் கேட்டாள்.

‘‘ச்சே! அப்படி சொன்னா பாவம். நிறைய பணம் தந்தான். அதில்லை பாரும்மா...’’ என்று சொல்லத் தொடங்கியவன், ‘‘வேண்டாம், இப்ப எதுக்கு அதெல்லாம்! அவனைப் பத்தி, நடந்த சம்பவத்தைப் பத்தி பேசக்கூடாதுன்னு தீர்மானிச்சிருக்கோம்’’ என்றவன் பிரகாஷ் பக்கம் திரும்பி, ‘‘ஏன் இந்த போலீஸ்காரன் உன்கிட்டே சொல்லியிருப்பானே! இந்த ஆளைவிட்டு தூர விலகியிரும்மா. விசாரணைன்னு குடைஞ்சு எடுத்திடுவார்’’ என்றான்.

''தனிப்பட்ட முறையிலே அந்த ஆள் மேலே, அதாவது ராகுல் மேலே உங்களுக்குக் கோபம் உண்டா?'' என்று கேட்டாள் அனிதா.

''நிறைய உண்டு. நல்லா சிரிச்சுப் பேசி எல்லாரையும் மயக்கிட்டு கடைசியில் இப்படிச் செய்திட்டான் பாரு. கோவம் வராதா! எத்தனை நல்ல பிள்ளையா நடிச்சான். பச்சிலை பச்சிலைன்னு மலைக் காட்டை சுத்திட்டிருந்தவனின் கண் ஆத்தாவின் நகை மேலேதான் இருந்ததுன்னு தெரியாம போச்சு பாரு. அந்தி நேரத்திலே ஏதோ பச்சிலை செடியிலே பூ மலருமாம். 'கோயில் பக்கத்திலே அந்த பச்சிலை நிறைய இருக்கு. போய் பறிச்சுட்டு வர்றேன். சோறு பொங்கி வையின்னுட்டு போனான் பாரு. அப்பவும் அவன் மேலே எனக்கு சந்தேகம் வரலை பாரு.''

''என்னது! கோயில் பக்கம் போறதா உங்ககிட்டே சொல்லிட்டுப் போனாரு! கோயில் நகைகளை களவாடப் போறவன் சொல்லிட்டா போவான்! இதிலே ஏதோ மர்மம் இருக்குன்னு உங்க யாருக்கும் தோணலையா?''

தங்கப்பன் ஒன்றும் புரியாமல் விழித்தான். பிறகு, ''நான் இப்படியே பேசிட்டிருந்தா சோறு யாரு பொங்குவா! ஒரு மணி நேரத்திலே வாங்க. சாப்பாடு தயாரா இருக்கும்'' என்றபடி மீண்டும் உள்ளே சென்றான்.

* * *

''தங்கப்பன் சொன்னதைக் கேட்டீங்களா, அண்ணன் கோயிலுக்குப் போறதா சொல்லிட்டுப் போயிருக்கான். கோயில்ல கொள்ளையடிக்கப் போறவன் சொல்லிட்டா போவான்! இது உங்க கவ னத்தில் ஏன் வரலை?'' என்று அனிதா பிரகாஷைக் கேட்டாள்.

அனிதாவும், பிரகாஷும் பஞ்சாயத்து தலைவர் பஞ்சாமியின் வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தனர். அனிதா சொன்னதை மனதில் அசை போட்டான் பிரகாஷ்! 'ஆம், இந்த விஷயம் அவனுடைய கவனத்துக்கு ஏன் வரவில்லை!' என்று நினைத்தான்.

''எனக்கு ஏற்கனவே தெரியும் என் அண்ணன் குற்றவாளி இல்லேங்கறது. உங்களுக்கும், அதாவது சட்டத்துக்கும் புரிய வைக்கத்தான் இதை சுட்டிக் காட்டுறேன்.''

'புத்திசாலி பெண். சின்னச் சின்ன விஷயங் களுக்கும் இவளுடைய கவனத்திலிருந்து தப்புவ தில்லை' என்று பிரகாஷ் நினைத்தான்.

'இந்த தங்கப்பன் ஒரு முக்கிய சாட்சி' என்று அனிதா நினைத்தாள்.

''கேஸ் எப்ப கோர்ட்டுக்கு வரப் போகுது?'' என்று வழக்குகளைப் பற்றியும், சட்டங்களைப் பற்றியும் அதிகம் தெரிந்திராத அனிதா கேட்டாள்.

அவள் கேட்டதை பிரகாஷ் செவிமடுக்கவில்லை. அவனுடைய பார்வை வேறு எங்கோ நிலைத்

திருந்தது. அவனிடமிருந்து பதில் வராமல் போகவே அனிதா அவனுடைய பார்வை சென்ற திசையில் பார்த்தாள்.

அங்கே ஒரு வடநாட்டு மனிதனோடும், பெண்ணோடும் பஞ்சாமி பேசிக் கொண்டு நின்றிருந்தார். 'வெளியூர்காரர்களை ஊருக்குள் அனுமதிக்க மறுக்கும் பஞ்சாமி இவர்களுடன் இத்தனை நெருக்கமாக என்ன பேசிக் கொண்டிருக்கக்கூடும்! பஞ்சாமியின் உடல் பாவனை அவர்களை அவர் ஏற்கனவே நன்றாக அறிந்து வைத்திருப்பவர் போல் காட்டுகின்றதே!' என்று அனிதா, பிரகாஷ் இருவருமே நினைத்தனர்.

# 8



பஞ்சாமி அந்த வடநாட்டவனோடும், உடனிருந்த பெண்ணோடும் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார். அனிதாவையும், பிரகாஷையும் கண்டதும் அவருடைய குரல் உயர்ந்தது. ''இங்கெல்லாம் வெளியூர்காரங்க வரக்கூடாது. சொல்றேன்ல, போங்க இப்ப. இனிமே இங்கே வராதீங்க.''

'அதுவரை தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தவர் எங்களைக் கண்டதும் ஏன் கத்தி பேசுகிறார்' என்று சந்தேகத்துடன் அவரைப் பார்த்தாள் அனிதா.

பிரகாஷ் பஞ்சாமியிடம், ''சட்டப்படி அப்படி யாரையும் தடுக்க முடியாது. இந்தியா முழுவதும் எங்கே வேணும்னாலும் போகவும், தங்கவும், சொத்து வாங்கவும் சட்டப்படி உரிமை உண்டு'' என்றான் அவரை ஆட்சேபிக்கும் குரலில்.

அப்பொழுதுதான் அவர்களைப் பார்த்தது போல் பஞ்சாமி, ''வந்துட்டீரா சட்டம் பேச! இப்ப என்ன?'' என்றார்.

அவருடைய கேள்விக்கு பிரகாஷ் பதில் சொல்லும் முன் அனிதா, ''உங்களைப் பார்க்கணும்னு நான் விரும்பினேன். அதான் இவர் என்னைக் கூட்டி வந்திருக்கார்'' என்றாள்.

பஞ்சாமி இவள் யார் என்ன கேள்விக் குறியுடன் புருவங்களை உயர்த்தி அவளைப் பார்த்தார். அவருடைய புருவங்கள் தடித்திருந்தன. தலை மயிரும், மீசை தாடியும் அடர்ந்து வளர்ந்திருந்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாக நரை தெரிந்தது.

''என் பெயர் அனிதா. ஆறுமுகத்தோட வீட்டிலே தங்கியிருக்கேன். கிராமத்தைச் சுத்திப் பார்த்து இங்கேயுள்ள மக்களின் வாழ்க்கை முறையைப் பத்தி எழுத வந்திருக்கேன்'' என்று தன்னை அறிமுகம் செய்தாள் அவள்.

''என்னை எதுக்குப் பார்க்கணும்?''

''கிராமத்தைப் பத்தி எழுதணும்னா மொதல்ல அதன் தலைவரைப் பத்தித் தெரிஞ்சுக்க வேண்டாமா! மேலும், உங்களைப் பத்தி நிறைய

கேள்விப்பட்டேன். மக்களுக்கு உங்க வயல்லே வேலை போட்டுக் கொடுத்துக் காப்பாத்துறீங்க. கிராமம் இந்த நிலையில் இருப்பதுக்கு நீங்கதான் காரணம்னு எல்லோரும் புகழ்றாங்க'' என்று அவரைப் போலியாக புகழ்ந்தாள் அனிதா. இப்பொழுதெல்லாம் தன் இயல்புக்கு மாறாக பொய் பேச கற்றுக் கொண்டு விட்டாள். மனம் குறுகுறுக்கும் பொழுதெல்லாம் 'ஆபத்துக்குப் பாவமில்லை' என்று தன்னைச் சமாதானம் செய்து கொள்வாள்.

அவள் எதிர்பார்த்தது போல் பஞ்சாமி இளகித் தான் போனார். அடர்ந்து வளர்ந்திருந்த கறுப்பும், வெள்ளையுமான மீசைக்குக் கீழேயிருந்து காவி கறை படிந்த பற்கள் வெளியே எட்டிப் பார்த்தன. ''நீயாவது என்னைச் சரியா புரிஞ்சிக்கிட்டியே! வெளியே இருந்து வந்தவன் ஒருத்தன் இந்த கிராமத்து சமாதானத்தை குலைக்க முயற்சித்தான். சரி, அது போகட்டும் இப்ப என்னை எதுக்குப் பார்க்க வந்தே?''

''அதான் சொன்னேனே, உங்களைப் பத்தி இத்தனை புகழ்ந்து பேசறாங்களே, நாமும் போய் பார்க்கலாம்னுதான்... கிராம வாழ்க்கையை ஆராயும்போது இங்கே ஒரு அசம்பாவிதம் நடந்திருப்பது தெரிய வந்தது. இந்த இன்ஸ்பெக்டர் ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறார். நீங்க சொல்லுங்களேன்...''

''என்னத்தை சொல்றது. மூலிகை ஆராய்ச்சி செய்றேன்னு ஒருத்தன் வந்தான். கிராமத்து மக்கள் மனசிலே என்னைப் பத்தி இல்லாததையும், பொல்லாததையும் சொல்லி எனக்கெதிரா கிளப்பி விட்டான். எல்லோரும் அவனை தலைக்கு மேலே தூக்கி வைச்சு கூத்தாடினாங்க. கடைசியில் எல்லார் மூஞ்சிலேயும் கரியைப் பூசிட்டு... ம் நாசமா போறவன்...''

அனிதாவுக்கு கோபம் வந்தது. தலையை மறு பக்கம் திருப்பி சத்தமின்றி பற்களை கடித்துக் கொண் டாள். மறுகணமே சாதாரண குரலில், ''அவனைப் பிடிச்சு தண்டனை கொடுங்க'' என்றாள்.

''ஆமா... ஆமா...'' என்று தலையசைத்த பிரகாஷ், ''அதான் அவனை தேடிட்டிருக்கேன்'' என்றான்.

''குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்ற மாதிரி இந்த, ஊருக்குள்ளே சுத்திச் சுத்தி வந்தா எப்படி அவனை கண்டுபிடிக்க முடியும்! அவன் பட்டணத்துக்கு ஓடிப் போயிருப்பான். அங்கே போய் தேடும்'' என்றார் பஞ்சாமி.

ஒரு சில கணங்களின் மௌனத்துக்குப் பின் பஞ்சாமி எதிர்பாராத கேள்வியை வீசினாள் அனிதா.

''இப்ப உங்ககிட்டே பேசிட்டிருந்தவங்க யாரு?''

வந்திருந்த வடநாட்டவர் இருவரையும் எப் பொழுதோ அனுப்பி வைத்திருந்தார் அவர். இப் பொழுது அனிதா அவர்களைப் பற்றி கேட்டதும்

தடுமாறித்தான் போனார். ''அ... அ... அவங்க வந்து'' என்று பேச்சு வராமல் தயங்கியவர், ''எனக்கு எப்படித் தெரியும்! யாரோ ஊரைச் சுத்திப் பார்க்க வந்த வங்க...'' என்றார். பின்னர் சந்தேகத்துடன் அவளைப் பார்த்து, ''நீ ஏன் கேக்கறே?'' என்றார்.

''சும்மாதான். நீங்க அவங்ககிட்டே பேசிட்டிருந் ததைப் பார்த்தா பழக்கமானவங்க போல் தோணிச்சு. அதான் கேட்டேன். எங்க கிராமத்துக்கு வரக்கூடா துன்னு விரட்டுற நீங்களே எப்படி அவங்களைத் தங்கப்பன்கிட்டே போய் சாப்பிட அனுப்பி வைச் சீங்க?''

''ஏய், இது என்ன விசாரணை! நீ போலீஸ்காரியா?''

''ச்சே! போலீஸ்காரியா இருந்தா எப்பவோ குற்றவாளியைக் கண்டுபிடிச்சு கோயில் கொலை வழக்கை தீர்த்து வைச்சிருப்பேன்'' என்றாள் அனிதா.

அவளுடைய பேச்சை பஞ்சாமி விரும்பவில்லை என்பதை அவருடைய முகபாவம் உணர்த்திற்று.

''நான் போறேன். எனக்கு வேலை இருக்கு'' என்று முழுமுணுத்தபடி அவ்விடத்தைவிட்டு அகன்றார் பஞ்சாமி.

அவர் போவதையே பார்த்துக் கொண்டு நின் றிருந்த அனிதா அவர் பார்வையினின்று மறைந் ததும் பிரகாஷின் பக்கம் திரும்பினாள். ''இந்த ஆள் சரியில்லை. இவர் மேல் சந்தேகமா இருக்கு'' என்றாள்.

''நீங்க சந்திக்கிற எல்லோர் மேலும் சந்தேகப் படறீங்க. என்னையும்தான் விட்டு வைக்கலை'' என்றான் பிரகாஷ் கேலியாகச் சிரித்தபடி.

''இந்த ஆளுக்கும், அந்த வடநாட்டுக்காரங் களுக்கும் ஏதோ தொடர்பு இருக்கு. அதை மறைக்க பார்க்கிறார்'' என்ற அனிதா தொடர்ந்து, ''சுத்த வந்திருந்தவன் வடநாட்டுக்காரன்தான். ஆனா கூட வந்திருந்தவள் நம் தமிழச்சி, கவனிச்சீங்களா!''

''ம்... ஆமா...''

''அவள் வடநாட்டுக்காரன்கூட ஏன் வரணும்? பாஷை தெரியாத அவனுக்கு மொழி பெயர்ப்பாள னாக உதவவா!''

''ம்... இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். ஆனா, எதுன்னாலும் உண்மையிலேயே ஊரைச் சுத்திப் பார்க்க வந்தவங்களா அல்லது பஞ்சாமியை பார்த்து பேச வந்தவங்களான்னு கண்டுபிடிக்க வேண் டியது அவசியம். ம்.... சிந்திக்க வேண்டிய விஷயம் இது. பாருங்க, வேகமா போனா அவங்களைப் பிடிச் சுடலாம். தங்கப்பன்கிட்டே சாப்பிடப் போவாங்க இல்லே.''

* * *

அவர்கள் இருவரும் வேகமாக நடந்து தங்கப்பன் வீட்டை நோக்கி நடந்தார்கள். அந்த வடநாட்டவர்கள் அங்கே இல்லை. ''இப்பதான் போனாங்க'' என்றான் தங்கப்பன்.

''அட அதுக்குள்ளே சாப்பிட்டுட்டுக் கிளம்பிட் டாங்களா!'' என்று வியந்தான் பிரகாஷ்.

''எங்கே சாப்பிட்டாங்க'' என்றான் தங்கப்பன். ''அவங்க கார் கிளம்பற சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தா கார் கிளம்பிப் போயிட்டிருந்திச்சு.''

''அடடடா! உனக்கு நஷ்டம்தானே! இனி அவங் களுக்காக சமைச்ச சாப்பாட்டை என்ன செய்யப் போறே?'' என்றாள் அனிதா. அவர்கள் ஏன் அத்தனை அவசரமாகக் கிளம்பி சென்றார்கள் என்ற எண்ணம் மனதில் எழாமல் இல்லை.

''பண நஷ்டம் இல்லை. வெளியூர்காரங்ககிட்டே மொதல்லயே பணம் வாங்கிடுவேன். இன்ஸ்பெக்டர் தெரிஞ்சவர்ங்கறதாலே முன் பணம் கேட்கலை. உங்களுக்காக இப்பதான் சமைக்க தொடங்கியிருக் கேன். அந்த வடநாட்டுக்காரங்களுக்காக சமைச் சதை சாப்பிடுறீங்களா?'' என்று தங்கப்பன் கேட் டான்.

''என்ன சொல்கிறீர்கள்?' என்பது போல் பிரகாஷ் அனிதாவை பார்த்தான்.

''சாப்பிட்டுடுவோம். பசிக்குது. சாப்பிட்ட பிறகு வைத்தியர்கிட்டே போகலாமே!''

* * *

**வை**த்தியர் வீட்டில் இல்லை. அவருடைய மகள் செல்வியின் முகம் இவர்களைக் கண்டதும் மலர்ந்தது. ''உக்காருங்க'' என்று உபசரித்தவள் நன்னாரி சர்பத் கொண்டு வந்து இருவருக்கும் கொடுத்தாள்.

''எப்படிம்மா இருக்கே?'' என்று உண்மையான வாஞ்சையுடன் அவளை விசாரித்தாள் அனிதா. அவளுக்கு செல்வியைப் பிடித்திருந்தது.

அதன் பிறகு மல்லிமலை கிராமத்தைப் பற்றியும், அதனின்று வித்தியாசமாக இருக்கும் பட்டணத்து வாழ்க்கை பற்றியும் இருவரும் பேசிக் கொண் டிருந்தனர். பட்டணத்தைப் பற்றி அனிதா சொன் னவைகளையெல்லாம் செல்வி வாயைப் பிளந்தபடி வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார். ''ராகுல் உங் களோடு அதிக நேரம் இருந்தானே, அவன் பட்ட ணத்தைப் பற்றி உங்களுக்கு சொல்லலையா?'' என்று அனிதா கேட்டாள்.

''யாரு, பட்டணத்து டாக்டரா? அவர் எப்பவும் பச் சிலைகளைப் பத்திதான் பேசுவார். இந்த பச்சிலைகள் இந்தப் பக்கம் அதிகமா வளரும், இதிலே இன்னின்ன மாதிரி மருத்துவ குணம் உண்டு. இவைகளைப் பெருமளவு பயிர் செய்து வித்தாகூட நீங்க நல்லா பணம் சம்பாதிக்கலாம். பட்டணங்கள்லே இந்த பச்சிலைகளைக் காண்பது அரிது என்பார்'' என்றாள் செல்வி.

''அப்புறம்?''

அனிதா கேட்ட இந்த 'அப்புறம்?' என்ற கேள்வி செல்விக்குப் புரியவில்லை. அவர்கள் இருவரும் பேசுவதை சுவாரஸியமாக கவனித்துக் கொண்டிருந்த பிரகாஷ்கூட புரியாமல் அவளைப் பார்த்தான்.

''ராகுல் சொன்னபடி பச்சிலைச் செடிகள் வளர்க்க முயற்சி செய்றீங்களா?''

“இல்லேக்கா...”

“ஏன்?”

செல்வி பதில் சொல்லாமல் பிரகாஷை பார்த்தாள். பின்னர் பார்வை மீண்டும் அனிதாவின் பக்கம் திரும்பியது.

அனிதா தொடர்ந்தாள். “இங்கே நல்லா மழை பெய்யுது. செழிப்பான இடம். இருந்தாலும் நீங்க எல்லோரும் வறுமையில் வாடறீங்க. ஏன்னா, விவசாயத்தை ஒழுங்கா செய்யலை. விவசாயத்தோடு ஒழிஞ்ச வேளையில் என்னென்ன செய்து பணம் சம்பாதிக்கலாம்னு ராகுல் வழி சொல்லித் தந்தும் எதையும் செய்ய நீங்க தயாரா இல்லை...”

செல்வி இப்பொழுது பேசினாள். “கூடை, நாற்காலி, ஜாடிகளெல்லாம் பிரம்பாலே பின்னுவோம். அவைகளைகூட பெருமளவு செய்து பட்டணங்களிலே கொண்டு போய் விக்கலாம்னு டாக்டர் சொன்னாரு. எல்லாத்துக்கும் ஏற்பாடு செய்து தர்றேன்னார். அதுக்குள்ளே இப்படி நடந்து போச்சுக்கா. அவரோட திட்டம் நிறைவேறாம போச்சு.”

“நீங்க நிறைவேத்தி வைக்கலாமில்லே! இன்னொருத்தர் வழியைக் காட்டலாம், அந்த வழியிலே நடந்து போக வேண்டியது உங்க பொறுப்பு, இல்லையா! உங்க வாழ்க்கையை முன்னேற்ற நீங்கதானே பாதை அமைச்சுக்கணும்! முன்னேறணும்ங்கற துடிப்பு உங்களுக்கு வேணும்...”

''டாக்டரும் இப்படித்தான் சொல்வார். உங்களுக்கு கல்வியறிவு இல்லே. கல்வி கற்றிருந்தா வாழ்க்கையில் முன்னேறும் வழியை எளிதில் தெரிஞ்சுப்பீங்கம்பார். கிராமத்திலே மொதல்ல பள்ளிக்கூடம் கொண்டு வாருங்கன்னார்.''

''அதையும் அவனே செய்யட்டும்னு பார்த்திட்டு இருந்திருப்பீங்க. அப்புறம் அந்த வாத்தியார் பொன்னுசாமி...''

''பொன்னுசாமி இல்லேக்கா, கண்ணுசாமி'' என்று அவளை திருத்தினாள் செல்வி. ''எப்பவும் அதிகாரம் பேசி எல்லோரையும் உருட்டிட்டு இருப்பார். அவரோட வாய்க்கு ஊரெல்லாம் பயப்படும். ஆனா, அவர் யாருக்கும் பயப்பட மாட்டார். குண்டப்பனை தவிர'' என்றாள் அவள்.

''யார் இந்த குண்டப்பன்?'' என்று கேட்டாள் அனிதா.

''தடியன்... முரடன்... குண்டன்'' என்று முகம் சுழித்தபடி சொன்னாள் செல்வி. ''எல்லோரையும் அதட்டி, உருட்டி காட்டிலே விளையறதையெல்லாம் பிடுங்கிக்குவான். ஓசியிலே தின்னுட்டு ஊரைச் சுத்திட்டு இருக்கான்.''

''ஓ...'' என்ற அனிதா பிரகாஷைப் பார்த்தாள்.

''நீர் ஏன் ஒன்றும் சொல்லாமல் வேடிக்கை பார்த்துட்டிருக்கிறீர்!' என்று அந்த பார்வை சொல்வதாக எடுத்துக் கொண்ட அவன், ''நான் என்ன செய்ய

முடியும்! அவனைப் பற்றி யாராவது தகறாறு செய்தானே போலீஸ் நடவடிக்கை எடுக்க முடியும்! இந்த கிராமத்து ஜனங்க குண்டர்களுக்கு பணிஞ்சு போவாங்களேயொழிய போலீஸோடு ஒத்துழைக்க மாட்டாங்க'' என்றான் ஏதோ மேலதிகாரிகளிடம் விளக்கம் சொல்வதுபோல்.

''நான் அதைச் சொல்லவில்லை...'' என்று அனிதா தொடங்கியதும், ''அவனையும் விசாரிச்சுட்டேன். முதன் முதலா நான் விசாரிச்சது அவனைத் தான். 'குண்டப்பனின் அடாவடித்தனத்துக்கு அடி பணிஞ்சு போகாதீங்க, அவன் திடகாத்திரமா இருக்கான், உழைச்சு சாப்பிடட்டும்னு ராகுல் ஊர் ஜனங்க கிட்டே சொன்னது ராகுல் மேல் அவனுக்கு கோபத்தை உண்டாக்கியிருந்தது. ஒரு முறை ராகுலை அடிக்கக் கிளம்பினான். பஞ்சாயத்து தலைவர் பஞ்சாமிதான் தலையிட்டு தடுத்தார். 'டாக்டர் நம்ம ஊர் விருந்தாளி. அவரை அடிச்சா நம்ம ஊர் பெயர்தான் கெடும்'னார். ராகுலை ஊரைவிட்டுப் போகும்படி கேட்டுக் கொண்டார்.''

''ம்... அதை சாக்கா வைச்சு ராகுலை தன் பாதையை விட்டு அப்புறப்படுத்த முனைஞ்சார். ராகுல் கேட்கலை. அது வேறே தலைவருக்கு கோபம். இவங்களையெல்லாம் பிடிச்சுட்டுப் போய் ரெண்டு தட்டு தட்டினா உண்மையைக் கக்கிடுவாங்க'' என்றாள் அனிதா.

''அப்படியெல்லாம் செய்ய முடியாதே மிஸ். இவங்களுக்கு எதிரா எந்த சாட்சியும், சந்தேகமும் இல்லையே!''

''இவங்க எல்லோருக்கும் ராகுல் பொது பகைவன். அது போதாது?''

''விஷயம் புரியாம பேசறீங்க'' என்றான் பிரகாஷ். ''இங்கே கேஸ் கோயில் கொள்ளையையும், பூசாரி கொலையையும் பற்றியது; ராகுல் மேல் அவங்களுக் கிருந்த பகைமையைப் பற்றியதல்ல.''

''ராகுல் காணாமல் போயிருப்பது கேஸ் சம்பந் தப்பட்ட விஷயம் இல்லையா?'' என்ற அனிதா சிந்தித்தாள். பிரகாஷ் சொல்வதும் சரிதான். இவர் களுக்கு எதிராக ஏதாவது துப்பு கிடைத்தாக வேண் டும்.

''ராகுல் காணாமல் போனதாக புகார் செய்திருக் கேன் நான். அந்த வகையில் அவனை கண்டுபிடிப்ப தற்காக அவனுடைய விரோதிகளை விசாரிக்கலாமில் லையா?''

பிரகாஷ் அனிதாவை பார்த்தான். ''போலீஸ் டிபார்ட்மெண்ட் கைகட்டிட்டு உக்காந்திருப்பதாக நினைக்கிறீங்களா?'' நீங்க புகார் செய்வதுக்கு முன் னாலேயே இவங்களையெல்லாம் விசாரிச்சாச்சு'' என்றான்.

* * *

அனிதாவுக்கு திடீரென இரு தினங்களுக்கு முன் செல்வி அவளிடம் தனியாக ஏதோ சொல்ல விரும்பியது நினைவுக்கு வந்தது. அவள் செல்வியை வீட்டின் பின்கட்டுக்கு இட்டுச் சென்றாள். ''முந்தா

நான் ஏதோ சொல்ல வந்தீயே, என்னம்மா அது?'' என்று கேட்டாள்.

''அக்கா, சின்ன தம்பிகிட்டே நீங்க யார்னு சொல்லிடாதீங்க. அவன்...''

''ஓ, புரியுது. அவனுக்கு தெரிஞ்சு போச்சும்மா. நான் சொல்லிட்டேன். துளசியின் இந்நிலைக்கு ராகுல் காரணமில்லேங்கறதையும் விளக்கிச் சொல்லிட்டேன்'' என்ற அனிதா செல்வியிடமும் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னாள். ''ஏனோ உன் மேலே எனக்கு ரொம்ப நம்பிக்கை இருக்கும்மா. இந்த விஷயத்தை யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம். இப்ப உங்க ஐயாகிட்டேகூட வேண்டாம். உண்மையான குற்றவாளி எச்சரிக்கை அடைஞ்சுடுவான்'' என்றாள்.

செல்வி பளிச்சென புன்னகைத்து தலையசைத்தாள். ராகுல் துளசியை ஒன்றும் செய்யவில்லை என்ற செய்தி அவளுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது.

* * *

வைத்தியருக்காக வெகுநேரம் காத்திருந்ததும் அவர் வராமல் போகவே அனிதாவும், பிரகாஷும் அங்கிருந்து கிளம்பி தத்தம் இருப்பிடத்திற்குச் சென்றனர். ஆறுமுகத்தின் குடிசைக்குத் திரும்பிய அனிதா வீட்டினுள் நுழையாமல் முற்றத்திலே தங்கி விட்டாள்.

வண்டி மாடுகளுக்கு தீவனம் கொடுத்துக் கொண் டிருந்தான் சின்னதம்பி. அவனுடைய மனதில் துளசியைப் பற்றிய எண்ணங்கள் ஓடிக் கொண் டிருந்தன.

துளசி என்றதும் அவளுடைய கதுப்பு கன்னங் களும், துருதுரு விழிகளும்தான் அவனுடைய மனக்கண் முன்னால் வந்தன. இவனை காணும் பொழுதெல்லாம் நாணத்துடன் அவள் சிரிக்கும் பொழுது கண்கள் ஒளிரும். 'எத்தனை அழகு' என்று இப்பொழுதும் நினைத்தான் சின்னதம்பி.

இருவரும் சேர்ந்து எத்தனை கனவுகள் கண்டார் கள்! அவர்களுக்கென ஒரு சின்ன குடிசை... அதைச் சுற்றி ஓடி கும்மாளமிடும் அவர்களுடைய குழந் தைகள்... அவன் மாட்டுக்கு தீவனம் போட்டுக் கொண்டிருக்கையில் பின்னால் துளசி வந்து நின்று, 'பட்டணத்திலிருந்து வரும் பொழுது வளையல் வாங்கிட்டு வாய்யா...' என்று கொஞ்சலாகக் குழை வாள்.

''யாரு இவன்? ஏன் இப்படி தலைதெறிக்க ஓடி வருகிறான்!'' என்ற அனிதாவின் குரல் சின்ன தம்பியின் கனவைக் கலைத்தது. அவன் நிமிர்ந்து பார்க்கையில் ஒரு மனிதன் வேகமாக ஓடி வருவதைக் கண்டான். வந்தவன் நெருங்க நெருங்க அவன் துளசி யின் தமையன் மணிவண்ணன் என்பது தெரிந்தது.

சின்னதம்பியின் வீட்டை நெருங்கியதும் நின்றான் அவன். ''வண்டியை எடுப்பா. பக்கத்து கிராமத்

துக்குப் போய் வைத்தியரைக் கூட்டிட்டு வரணும்'' என்றான் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க. அவனுடைய உடலிலும், குரலிலும் பதட்டமும், அவசரமும் தெரிந்தன.

''ஏன்? என்னாச்சு? யாருக்கு உடம்பு சரியில்லை? வைத்தியர் எங்கே போனார்?'' என்று சின்னதம்பியும் அடுக்கடுக்காய் பதட்டத்துடன் கேட்டான்.

''வைத்தியர் ஊரில் இல்லை. பக்கத்து கிராமத் துக்குப் போய் அவரை கூட்டிட்டு வரணும். துளசி... துளசி மயக்கமாயிட்டா.''

அதைக் கேட்டு அதிர்ந்தான் சின்னதம்பி. ''என்னது.''

அனிதா இப்பொழுது குறுக்கிட்டாள். ''பக்கத்து கிராமத்துக்குப் போய் வைத்தியரை தேடிட்டு இருப் பதில் நேரத்தை வீணாக்காதீங்க. பேசாம பட்டணத்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வோம்'' என்றாள் அவள்.

அந்த பதட்டத்திலும் மணிவண்ணன் 'யார் இவள்?' என்பதுபோல் புருவங்களை உயர்த்தி, தலையை மேலாக வெட்டி சின்னதம்பியைப் பார்த் தான்.

''இவள் அனிதா. இவள் சொல்றது சரிதான். வைத் தியரை எங்கே போய் தேடி அலையறது. பேசாம துளசியை ஆஸ்பத்திரிக்கே கூட்டிட்டுப் போவோம்'' என்றான் சின்னதம்பி.

''அதையும் அப்புறம் பார்க்கலாம். மொதல்ல வண்டியைக் கட்டு.''

* * *

துளசியை பார்த்த சின்னதம்பி திடுக்கிட்டான். அவன் கடைசியாக அவளைப் பார்த்தபொழுது இருந்ததைவிட இன்னும் மெலிந்து எலும்பும் தோலுமாக மாறியிருந்தாள். வயிறு இன்னும் உப்பி பெருத்திருந்தது போல் இருந்தது.

அனிதாவும் அவர்களுடன் மாட்டு வண்டியில் ஏறிக் கொண்டாள். அவளை யாரும் கேள்வி கேட்கவுமில்லை. தடுக்கவுமில்லை. வண்டியில் அமர்ந்தவள் துளசியின் தலையை தன்னுடைய மடி மீது வைத்து அவளைப் படுக்க வைத்தாள்.

''இவளோட நிலை சரியா தோணலை. பேசாம வண்டியை பட்டணத்து ஆஸ்பத்திரிக்கே ஓட்டுப்பா'' என்றாள் அனிதா.

வண்டி பக்கத்து பட்டணத்து அரசாங்க ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றது.

* * *

அரசாங்க ஆஸ்பத்திரியின் மருத்துவர் சுறுசுறுப்பாகச் செயல்பட்டார். நேரம் கடத்தாமல் முதலில் துளசியைப் பரிசோதித்தார். ''இத்தனை நாள் என்ன செய்திட்டிருந்தீங்க? எவ்வளவு காலமா இந்த வலி இருக்கு?'' என்று கேட்டார்.

''ஆரம்ப நாள்லேர்ந்தே வலிக்குதுன்னு சொல்லிட்டிருந்தா. நாலு நாலரை மாசமா...''

''அட, கடைசி நேரம் வரை ஏன் சும்மா இருந்தீங்க?'' என்று அதட்டுவது போல் கேட்டார் டாக்டர்.

டாக்டர் கேட்டது யாருக்கும் புரியவில்லை. பொதுவாக கர்ப்பிணி பெண்களுக்கு கிராமத்தில் யாரும் மருத்துவம் பார்ப்பதில்லை. பிரசவ காலம் வரை அவர்கள் வேலை செய்து கொண்டிருப்பார்கள். அவர்களை டாக்டரிடம் அழைத்துச் செல்லும் வழக்க மெல்லாம் அங்கே கிடையாது. பிரசவம்கூட வீட்டிலே மருத்துவச்சி கையால்தான் நடக்கும். அதனால், டாக்டரின் கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் விழித்தனர்.

அனிதா டாக்டரைக் கேட்டாள், ''என்னாச்சு டாக்டர்? என்ன விஷயம்? ஏதாவது சீரியஸா?'' என்று.

''அப்படித்தான் நினைக்கிறேன். டெஸ்ட் செய்து பார்த்தாதான் என்ன நோய்னு தெரியும். காலத் தாமதம் செய்யாம...'' என்று டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கையில் இடைமறித்த அனிதா, ''நோய் ஒண்ணுமில்லே டாக்டர். நாலரை மாத கர்ப்பம்'' என்றாள்.

''யார் சொன்னது!'' என்றார் டாக்டர் வியப்புடன். ''இவள் கர்ப்பமா இல்லை. வயித்திலே கட்டி ஏதாவது இருக்கும்.''

அனிதா உட்பட மணிவண்ணனும், சின்னதம்பி யும் அதிர்ச்சியுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

# 9

டாக்டர் என்ன சொல்கிறார் என்பது புரியாமல் ஒரு வினாடி விழித்தனர் அவர்கள். காதில் விழுந்த வாக்கியம் முதலில் எந்தப் பொருளையும் தரவில்லை. ஆனால், அந்த வாக்கியம் மீண்டும் செவிகளில் ஒலிக்கவே அது சட்டென மூளையில் பதிந்தது. 'துளசி கர்ப்பவதி இல்லை.'

திறந்திருந்த அவர்களின் வாய்கள் மூடின. முகத்தில் சந்தோஷ அலைகள் பரவின. 'என் தங்கை பிள்ளைதாய்ச்சி இல்லை. கேட்டீர்களா, என் தங்கை கெட்டுப் போகவில்லை' என்று உரத்த குரலில் கத்தி தன் கிராமத்து மக்களுக்குத் தெரிவிக்க வேண்டு மென துடித்தான் மணிவண்ணன். உயிரை விட மானத்தைப் பெரிதென மதிக்கும் எளிய மக்கள் அவர்கள்.

சின்னதம்பியின் மனம் உற்சாகத்துடன் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. 'என் துளசி அப்படிப் பட்டவள் இல்லை' என்று மீண்டும் மீண்டும் மனதிற்குள் சொல்லிக் கொண்டான். 'இனி என் கனவுகளை நிறைவேற்றுவதை யாராலும் தடுக்க முடியாது. நானும், என் துளசியும் ஒரு சின்ன

குடிசையில்...' கனவு தொடராமல் இடையே நின்றது. 'கனவு காண உனக்கு என்ன அருகதை இருக்கிறது சின்னதம்பி. அவளைப் புரிந்துகொள்ளாத ஊர்காரர் கள் அவலமாகப் பேசியது இருக்கட்டும், நீ எப்படி அவளை நம்பாமல் போனாய்?' என்று கேட்டது. அவனை குத்திக் காட்டும் அவனுக்கே பதில் சொல்லத் தெரியாமல் தவித்தான் அவன்.

* * *

அனிதாவின் மனதிலோ வேறு விதமான எண் ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன. 'துளசி கர்ப்பமாக இருப்பதாக வைத்தியர் ஏன் பொய் சொன்னார்? ராகுல் மேல் பழி சுமத்த காரணம் என்ன? கிராமத்து மக்களின் மனதில் அவன் மேல் துவேஷத்தை உண் டாக்கி கோயில் கொள்ளையையும், கொலையையும் கூட அவன்தான் செய்தான் என நம்ப வைப்ப தற்காகவா? ஏன்?'

அவளுடைய மனதில் இம்மாதிரியும் எண்ணங்கள் ஓடின. 'கோயில் கொள்ளையையும், கொலையையும் இந்த வைத்தியர் அய்யாசாமியே செய்திருக்கலா மல்லவா! தன் மேல் சந்தேகம் உண்டாகாமலிருக்க மக்களின் சந்தேகத்தை ராகுல் மேல் திருப்பி விட் டிருக்கலாமல்லவா சட்டத்தின் கண்களையும் மறைக்க நன்றாகத்தான் பிரயத்தனம் எடுத்துக் கொண் டிருக்கின்றார்!'

இந்த எண்ணம் வலுப்பெற்றதும் அவள் பிரகாஷை சந்திக்க விரும்பினாள். துப்பு துலக்கிக் கொண்டிருப்

பவளுக்கு இதோ ஒரு துப்பு கிடைத்திருக்கின்றது. தொய்ந்து தொங்கிக் கொண்டிருக்கும் இந்த நூலைப் பிடித்து இழுத்தால் நூல்கண்டு என்ற மர்மமே அவிழ்ந்து விடும்.

* * *

துளசியைப் பரிசோதித்த மருத்துவர் வந்தார். ''வயிற்றில் கட்டி இருக்கு. ஆப்ரேஷன் செய்தாதான் நோயாளி பிழைப்பாள். அதுவும் நூறு சதவிகிதம் உத்திரவாதம் இல்லை. ஐம்பது சதவிகிதம் தான் சான்ஸ் இருக்கு'' என்றார் அவர்.

''ஐயோ, அத்தனை மோசமான நிலையில் இருக்காளா!'' என்று அலறினான் மணிவண்ணன்.

''கடைசி நிமிடத்தில் கொண்டு வந்தா டாக்டர் என்ன செய்ய முடியும்! பயோஸ்பியும் செய்து பார்க்க வேண்டியிருக்கும். அதை அப்புறம் பார்த்துக்கலாம். இந்த பாரத்திலே கையெழுத்துப் போடச் சொல்லுங்க. அதோடு ஐம்பது சதவிகிதம் தான் வாய்ப்பு இருக்குங்கறதையும் விளக்கிச் சொல்லிடுங்க. இல்லேன்னா ஏடாகூடமாக ஏதாவது ஆயிட்டா எங்களை நொறுக்கிப் போட்டுடுவாங்க'' என்றார் மருத்துவர் அனிதாவைப் பார்த்து,

மணிவண்ணனுக்கும், சின்னதம்பிக்கும் விளக்கிச் சொல்வது சிரமமான காரியமாக இருந்தது அவளுக்கு. ''ரொம்ப நாள் மருந்து பார்க்காம வைச்சுட்டிருந்ததாலே நோய் முத்திப் போயிருக்கு. ஆப்ரேஷன் செய்தாதான் பிழைப்பாள்...'' என்றாள்.

"ஆப்ரேஷனா! வேண்டாம்... வேண்டாம்... வைத்தியர்கிட்டே கூட்டிட்டுப் போவோம். அவர் மருந்து கொடுத்து குணமாக்கிடுவார்" என்றான் மணிவண்ணன்.

"மண்ணாங்கட்டி" என்றாள் அனிதா எரிச்சலுடன். "இவள் கர்ப்பம் இல்லைங்கறதே அவருக்கு தெரிஞ்சிருக்கலை. அவர் என்ன மருந்து கொடுத்து சரியாக்கப் போறார்!"

அனிதா சொன்னது புரிந்தாலும் 'அறுவை சிகிச்சை' என்ற வார்த்தையே பயம் தருவதாக இருந்தது மணிவண்ணனுக்கு.

அனிதா தொடர்ந்து அவனுக்கு விளக்கினாள். "அறுவை சிகிச்சை செய்தா, அதுவும் உடனே செய்தா அவள் பிழைக்க வாய்ப்பு இருக்கு. இல்லேன்னா... அதுவும் ஐம்பது சதவிகிதம் தான் வாய்ப்பு இருக்கு."

"அப்ப வேண்டவே வேண்டாம். இப்பவே அவளை ஊருக்கு கூட்டிட்டுப் போவோம்" என்ற மணிவண்ணனை தடுத்து ஆசுவாசப்படுத்தினாள் அனிதா.

"பதட்டப்படாதே. நான் சொல்றதை நிதானமா கேளு. ஆரம்பத்திலே இங்கே கூட்டிட்டு வந்து மருத்துவம் பார்த்திருந்தா ஒருவேளை மருந்து கொடுத்து கட்டியை கரைச்சிருக்கலாம. இப்ப நாள் கடந்து போச்சு. ஆப்ரேஷன் செய்றதுதான் ஒரே வழி. நான் சொல்றது புரியுதா மணிவண்ணா? ஆப்ரேஷன்

செய்தாதான் அவள் பிழைக்க வாய்ப்பு இருக்கு. ஏடாகூடமாக எதாவது நடந்துட்டாலும் 'நம்மால் முடிஞ்சதைச் செய்தோம். எல்லாம் கடவுள் சித்தம்' என்றாவது மனதைச் சமாதானப்படுத்திக்க முடியும். முயற்சியே செய்யாம இருந்து அவளை இழக்க நேரிட்டா, 'ஐயோ... ஆப்ரேஷன் செய்திருந்தா ஒரு வேளை பிழைச்சிருப்பாளோ! தப்பு செய்திட்டோமோ!' என்று வாழ்நாள் முழுவதும் குற்ற உணர் வால் தவிக்க வேண்டியிருக்கும்'' என்று அவனுக்குப் புரியும் விதத்தில் விளக்கினாள்.

கடைசியில் அவளுடைய விளக்கம் மணிவண்ண னுக்கு புரியவே அவன் அறுவை சிகிச்சைக்கு சம்மதம் தெரிவித்தான்.

''ரத்தம் தேவைப்படும். வாங்கிட்டு வாங்க'' என் றார் மருத்துவர். ஆஸ்பத்திரியிலிருந்து இரத்த சேமிப்பு நிலையங்களின் விலாசங்களை வாங்கிக் கொண் டாள் அனிதா.

இரத்த சேமிப்பு நிலையங்கள் பக்கத்து பெரிய பட்டணங்களில் இருந்தன. இந்த சமயத்தில் ரயில் வண்டியும் இல்லை. துளசிக்கு அறுவை சிகிச்சை உடனே செய்தேயாக வேண்டும். இன்றே, இப் பொழுதே இரத்தத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால், பட்டணத்துக்கு எப்படி போவது என்று எண்ணி திகைத்தாள் அவள்.

அப்பொழுது இன்ஸ்பெக்டர் பிரகாஷின் ஜீப் நினைவு வந்தது. 'அது அவனுடைய வேலை நேர

உபயோகத்துக்காக அரசு அளித்திருப்பது. மற்ற சமயங்களில் சொந்த உபயோகத்துக்காக உபயோகிப்பது சட்டப்படி குற்றம் என்பதை அனிதா உணர்ந்தே இருந்தாள். ஆனால், 'ஆபத்துக்குப் பாவம் இல்லை' என்று பிரகாஷின் உதவியை நாடுவதைத் தவிர வேறு வழி அவளுக்குத் தோன்றவில்லை.

மொபைல் போன் மூலம் நிலைமையை விளக்கி உதவி கோரியதும் பிரகாஷ் சற்றும் தயங்காமல் உடனே சம்மதித்தது ஆறுதலாக இருந்தது அவளுக்கு. 'தான் ஒரு காவல்துறை அதிகாரி என்ற எந்த கர்வமும் இல்லாமல் உதவி தேவைப்படுகிறவர்களுக்கு தயக்கமின்றி உதவ முன்வரும் அவனுடைய குணம் அனிதாவின் மனதை தொட்டது. சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம் அவனைக் குத்தி குற்றப்படுத்திப் பேசும் தன் மீதே கோபமும் வந்தது.

மற்றவர்களிடம் இருக்கும் நல்லதை அதாவது சிறப்புகளை பாராது குற்றம், குறைகளை மட்டுமே பார்ப்பது சாமான்ய மனிதர்களின் இயல்பு. நல்லதைக் கண்டு பாராட்டினால் அவன் இன்னும் நன்றாகச் செய்வான் என்பதை நாம் உணர தவறி விடுகின்றோம்.

* * *

பிரகாஷ் வந்ததும், ''ரொம்ப நன்றி. சொன்னவுடனே மறுக்காம வந்திட்டீங்களே'' என்றாள் அனிதா.

''நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும், என் உதவியைப் பெறும் எண்ணம் வந்ததற்கு''

என்றான் அவன் உண்மையான மகிழ்ச்சியுடன். பின்னர், ''துளசிக்கு என்ன பிரச்சனை? நீங்க போனில் பேசியவைகளை தெளிவாகப் புரிஞ்சுக்க முடியலை'' என்றான்.

அனிதா அவனுக்கு எல்லாவற்றையும் விவரமாக சொன்னாள். ''துளசி கர்ப்பமாயிருப்பதாக வைத்தியர் தவறுதலாக சொல்லியிருக்க முடியாது. திறமைசாலி அவர். இம்மாதிரியான தவறு அவரிடம் நேரே சாத் தியமே இல்லை. இது வேண்டுமென்றே அவர் சொன்ன பொய்... அதாவது ராகுல் மேல் பழியைப் போடுவதற்காக...'' என்றாள்.

தொடர்ந்து பிரகாஷ் மௌனமாக சிந்தித்தான். அவள் தொடர்ந்தாள். ''இதிலிருந்து ஒரு விஷயம் புலனாகிறது. ராகுலை தன் பாதையினின்று அப்புறப் படுத்துவது ஒரு காரணமாக இருக்கலாம். இன்னொரு காரணம் கோயில் கொள்ளை, கொலை இவைகளை அவன் மேல் போடுவது...''

''நீங்கள் சொல்வது சாத்தியமே. எல்லாத்தையும் வைத்தியரே செய்துட்டு ராகுல் மேல் பழியைப் போட் டிருக்கலாம்'' என்றான் பிரகாஷ். அவள் சொல்வதில் உண்மை இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்வது போல். மேலும் அவனே சொன்னான், ''ஆனா கொலை கொள்ளையெல்லாம் செய்யும் பேர்வழி யாகத் தோணலை அவர்'' என்று.

''ஏன், எல்லாம் மூஞ்சியிலே எழுதி வைச்சிருக்கா?'' என்று எரிச்சலுடன் சொன்னாள் அனிதா.

''ம்...'' என்றான் பிரகாஷ் ஏதோ சிந்தனையுடன்.

அனிதாவின் முகம் சட்டென பிரகாசமடைந்தது. ''உங்களுக்கும் அப்படி தோன்றத்தானே செய்யுது? இப்ப சந்தேகத்தின் பேரால் அவரை கைது செய்ய லாமல்லவா?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

எப்படியாவது தன் தமையன் குற்றவாளி இல்லை என்று நிரூபிக்க அவள் துடிப்பதை அவன் கண்டான். 'இவளுடைய நம்பிக்கையும், உழைப்பும் வீண் போகக் கூடாது' என்று மனமார கடவுளை வேண்டிக் கொண்டான். பிறகு, மிருதுவான குரலில் அவளிடம் பேசினான். ''இதோ பாருங்க அனிதா, உங்களுக்கும் எனக்கும் அப்படித் தோணுது. சட்டத்துக்கும் தோணனும் இல்லையா? துளசி கர்ப்பம்னு தவறா கணிச்சுட்டேன்னு சொல்லி வைத்தியர் தப்பிக்க வழி இருக்கு. நம்முடைய சந்தேகத்துக்கும் சரியான ஆதாரத்தை சட்டத்துக்குக் காட்டினாதான் அரெஸ்ட் வாரண்ட் கிடைக்கும்'' என்று அவன் சொல்ல அவள் முகம் வாடினாள்.

அதை கவனித்த பிரகாஷ் உடனே அவசர அவசரமாக, ''மனம் சோர்ந்து போயிடாதீங்க. நம்ம சந்தேகத்துக்குரியவர் லிஸ்ட்டில் முதலாவதாக இருப்பவர் இந்த வைத்தியர்தான். இவரை உடனே கைது செய்ய முடியாம போனாலும் போலீஸ் ஸ்டேஷனுக்கு கூட்டிட்டுப் போய் விசாரிக்கப் போகிறேன்'' என்றான் அவளுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில்.

அனிதாவின் மனதை வெற்றிகொள்ள வேண்டும் என்பதைவிட இந்த வழக்கை தீர்த்து வைக்க வேண்டும் என்கிற தீவிர எண்ணம்தான் இப்பொழுது அவனை ஆக்கிரமித்திருந்தது.

* * *

இரத்த குப்பிகளுடன் ஆஸ்பத்திரியை அனிதா அடைந்த பொழுது துளசியின் அறுவை சிகிச்சை நடந்து முடிந்திருந்தது. என்றாலும், இன்னும் நாற்பத்தெட்டு மணி நேரம் கழித்துதான் எதையும் சொல்ல முடியும் என்றார் மருத்துவர்.

''நன்றி டாக்டர்'' என்றாள் அனிதா.

''நன்றி சொல்லணும்னா டாக்டர் செல்வராஜுக்குத்தான் நீங்க சொல்லணும். பக்கத்து டவுனில் பெரிய டாக்டர். கூப்பிட்டவுடன் உதவிக்கு ஓடி வந்தார் என் டூட்டி டைம் முடிஞ்சாச்சுன்னு பிகு பண்ணிக்காம. இந்த சின்ன ஆஸ்பத்திரியில் ஆபரேஷன்லாம் அதிகமா செய்ய மாட்டோம். இப்படி அவசர கேஸ் தவிர...''

''ஒ...'' என்று வியந்தாள் அனிதா. ''மனுஷ தன்மையுள்ள நல்ல டாக்டர்னு சொல்லுங்க. நீங்களும்தான் அவசரத்துக்கு ஈடு கொடுத்து சுறுசுறுப்பா எல்லாத்தையும் செய்தீங்களே.''

''என் டூட்டி டைம் முடிஞ்சாச்சு. ரிலீவிங்க் டாக்டர் வந்ததும் போயிடுவேன். இந்த கிராமத்துப் பொண்ணுக்காக இத்தனை செய்றீங்களே, நீங்க சோஸியல் ஒர்க்கரா?''

அதற்கு அனிதா, ''இல்லை. கிராமத்தை சுற்றிப் பார்க்க வந்தவள் நான். அங்கே ஏற்பட்ட பழக்கம் தான்'' என்றாள்.

மாற்று மருத்துவர் வந்ததும் அனிதா தன்னை அவரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டாள். ''பதினேழாம் நம்பர் பெட் நோயாளியின் ஆள் நான். ஏதாவது தேவைப்பட்டால்... நான் இங்கேதான் இருக்கேன்.''

''நல்லது. ஆனா, நீங்க எல்லோரும் இருக்கணும்னு அவசியம் இல்லை. கூட்டம் போட வேண்டாமே! யாராவது ஒருத்தர் இருந்தா போதும்'' என்று சொன்னார் மருத்துவர்.

அனிதா மணிவண்ணன், சின்னதம்பி இருவரையும் நெருங்கினாள். ''நான் இங்கே இருக்கேன். நீங்க ரெண்டு பேரும் வீட்டுக்குப் போயிட்டு நாளைக்கு வாங்க'' என்றாள்.

''இல்லேம்மா. ஏற்கனவே எங்களுக்காக நிறைய செய்திருக்கீங்க. ராத்திரி முழுக்க முழிச்சிருக்க வேண்டாம். சின்னதம்பி அனிதா அம்மாவைக் கூட்டிட்டுப் போ. நான் இங்கே இருக்கேன்'' என்றான் மணிவண்ணன்.

''வேண்டாம்பா'' என்று மறுத்தாள் அனிதா. ''நான் சொல்றதை ரெண்டு பேரும் கேளுங்க. இன்னும் ரத்தம், மருந்துன்னு ஏதாவது தேவைப்பட்டா திரும்பவும் பட்டணத்துக்கு ஓட வேண்டியிருக்கும்.

எந்த ப்ளட் பாங்க்கில் போய் தேடுவதுன்னு புரியாம தவிக்கப் போறீங்க. நீங்க இப்ப வீட்டுக்குப் போய் உறங்கி ஓய்வெடுத்தா நாளைக்கு ஃப்ரெஷ்ஷா இருப்பீங்க. காலையிலே நீங்க வந்ததும் நான் வீட்டுக்குப் போய்க் கொள்றேன்.''

''ரொம்ப நன்றிங்க'' என்று கைகூப்பினான் மணிவண்ணன். ''முன்பின் தெரியாத எங்களுக்காக எத்தனை செய்றீங்க!'' என்றான் அவன் நன்றியுணர் வுடன்.

''அ... இது பெரிய விஷயமில்லே. சாதாரண மனுஷ தன்மைதான். இந்த உணர்வு எல்லார்கிட் டேயும் இருக்கத்தான் செய்யுது. ஆனா தூங்கிட் டிருக்கு. அத தட்டியெழுப்பணும்.''

''டாக்டர் என்ன சொன்னாரும்மா? துளசி பிழைச் சுக்குவா இல்லையா?'' என்று கேட்டான் மணி வண்ணன்.

இந்த கேள்விக்கு பதில் சொல்ல திணறினாள் அனிதா. 'ஆம்' என்று சொல்ல முடியவில்லை அவளால். இன்னும் நாற்பத்தெட்டு மணி நேரம் கழித்துதான் எதையும் சொல்ல முடியும். இந்த நாற்பத்தெட்டு மணி நேரத்தில் எதுவும் நடக்கலாம்' என்று எப்படிச் சொல்வாள்! ஏற்கனவே கலங்கிப் போயிருக்கும் அவர்களை இன்னும் கலவரப்படுத் துவது சரியல்ல என்று நினைத்தாள்.

''கடவுளை வேண்டிக்குங்க. கடைசியில் எல்லாமே அவன் கையில்தானே இருக்கு. மனிதனால் முயற்சி

செய்ய மட்டுமே முடியும். பலனை தருவது அவ னல்லவா!'' என்று பொதுவான பதிலைத் தந்தாள் அனிதா.

''என் தங்கச்சி நான் ஒரு பாவமும் அறியாதவள்னு எத்தனை சொன்னாள்! நான் பாவி. நம்பாமல் அவளை அடித்து, உதைத்துக் கொடுமைப்படுத்தினேன். நீங்க இல்லேன்னா திரும்பவும் வைத்தியர்கிட்டே கொண்டு போய்... அவள் இந்நேரம் செத்துப் போயி ருப்பா. ஆமா, எனக்கு ஒரு விஷயம் புரியலை, இவ உடல்நிலை என்னன்னு வைத்தியருக்கு எப்படித் தெரியாமப் போச்சு!''

'இது தெரியாமல் நடந்த விஷயமல்ல; வைத்தியர் வேண்டுமென்றே பொய் சொல்லியிருக்கின்றார். என் அண்ணனை குற்றவாளியாக காட்டி தான் தப்பிக்க முயன்றிருக்கின்றார். இந்த அபவாதத்தை என் அண்ணன் மேல் சுமத்தினது போல் கோயில் கொலையையும், கொள்ளையையும் அவன் செய்த தாக அவர்தான் அவனைக் குற்றப்படுத்தியிருக் கின்றார்' என்று சொல்ல விரும்பியும் அவள் சொல்ல வில்லை. இது அதற்கு ஏற்ற நேரம் இல்லை என்று உணர்ந்து மௌனமாக இருந்தாள்.

அதே சமயம் அங்கே வந்த மருத்துவர் மருந்து சீட்டு ஒன்றை அவளிடம் கொடுத்து மருந்து வாங்கி வரச் சொன்னார்.

''அட, திரும்பவும் பட்டணத்துக்கு போகணுமா! ரத்தம் வாங்கி வரும்போதே சொல்லியிருக்கலாமே''

என்று சலிப்புக் காட்டிய அனிதாவுக்கு பதிலாக மருத்துவர், ''இல்லேம்மா, இந்த ஊரிலே, இதோ பக்கத்திலேதான் மருந்து கடை இருக்கு. கடையை மூடின பிறகுகூட மருந்து கிடைக்கும். கடைக்குப் பின்னாலேதான் கடைக்காரனின் வீடு இருக்கு. நடு சாமத்திலே போய் கதவைத் தட்டினாலும் மருந்து கிடைக்கும்'' என்றார்.

அனிதாவிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு மருந்து வாங்கி வரச் சென்றான் சின்னதம்பி. அவ னுக்குப் பின்னால் அவளும் வெளியே வந்து ஆஸ் பத்திரி வராண்டாவில் நின்றாள்.

அது ஒரு சின்ன பட்டணம். அகன்ற வீதிகளும், செங்கல்லால் எழுப்பப்பட்ட உறுதியான வீடுகளும் இருந்தன. வீதியை மஞ்சள் விளக்குகள் அலங் கரித்துக் கொண்டிருந்தன. ஒரு சில வாகனங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

பெரிய பட்டணங்களில் இருப்பது போல் அடுக்கு மாடி கட்டடங்கள் அங்கே இல்லை. வாகனங்களின் இரைச்சலும், அவை வெளியிடும் புகையும் இல்லை. பொதுவாக மல்லிமலை கிராமத்தில் இருப்பது போல் சுத்தமான காற்று அங்கே இருந்தது.

இவைகள் எதிலும் அனிதாவின் கவனம் செல்ல வில்லை. அவளுடைய எண்ணமெல்லாம் வைத்தியர் அய்யாசாமியைப் பற்றியே சுற்றி வந்தது. 'நிச்சயமாக இந்த வைத்தியர் தான் குற்றவாளி' என்று நினைத் தாள். 'பிரகாஷ் அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு

அழைத்துச் சென்று விசாரித்திருப்பானா! அவர் இந்நேரம் உண்மையை ஒத்துக் கொண்டிருப்பாரா!'

இந்நேரம் சிந்தனையுடன் வீதியை பார்த்துக் கொண்டு நின்றிருந்த அனிதா ஆஸ்பத்திரியினுள் நுழைந்தாள். அதே சமயம் துளசி அனுமதிக்கப் பட்டிருந்த அறையிலிருந்து மருத்துவர் அவசர அவசரமாக வெளியே வந்தார். அவருடைய நடையின் வேகத்தைப் பார்த்த அனிதா, ''என்ன டாக்டர்? துளசி எப்படி இருக்கா?'' என்று கவலையுடன் கேட்டாள்.

* * *

அனிதாவை ஆஸ்பத்ரியில் விட்டுட்டு நேரே மல்லிமலை கிராமத்துக்குத்தான் சென்றான் பிரகாஷ். 'நாளை பார்த்துக் கொள்ளலாம்' என்று சோம்பலுடன் முணுமுணுத்த மனதை, 'அடேய், ஏற்கனவே கேஸ் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது. இனியும் தாமதப்படுத்தாமல் காரியத்தில் இறங்கு' என்று அதட்டி அடக்கினான்.

வைத்தியர் அய்யாசாமி பிரகாஷோடு காவல் நிலையத்துக்கு வரத் தயாராக இல்லை. முரண்டு பிடிக்கவே செய்தார். ''அதான் எனக்கு தெரிஞ்சதையெல்லாம் நான் சொல்லிட்டேனே, பின்னே திரும்பவும் என்ன கேட்கப் போறே!'' என்று மறுப்பு தெரிவித்தார்.

''தலைவர்கிட்டே சொன்னியா? அவரோட சம்மதம் இல்லாம என்னை போலீஸ் ஸ்டேஷனுக்கு கூட்டிட்டுப் போக முடியாது'' என்று சொல்லிப் பார்த்தார்.

"சட்டம் யாருடைய அனுமதியையும் கேட்டுட்டு தன் வேலையைச் செய்வதில்லை வைத்தியரே. பேசாம என்கூட வர்றீரா அல்லது விலங்கு மாட்டி கூட்டிட்டுப் போகவா?" என்று பிரகாஷ் பயமுறுத்த கடைசியில் ஜீப்பில் ஏறிக் கொண்டார் வைத்தியர்.

அந்த சமயம் ஊர் உறங்க தன்னை தயாா்ப் படுத்திக் கொண்டிருந்தது. போலீஸ் ஜீப்பில் வைத்தியர் பயணிப்பதை பலர் கண்டனர். குசுகுசுவென தமக்குள் பேசிக் கொண்டனர்.

"பார்த்தாயா, எல்லோரும் என்னை ஒரு மாதிரியா பார்க்கிறாங்க" என்றார் வைத்தியர்.

பிரகாஷ் அதற்கு பதிலேதும் தரவில்லை.

"என்னை எதுக்குக் கூட்டிட்டுப் போறே?" என்று வைத்தியர் கேட்ட கேள்விக்கும் அவன் பதில் சொல்லவில்லை. காவல் நிலையத்தை அடையும் வரை அவர் கேட்ட எந்தக் கேள்விக்கும் அவன் பதில் சொல்லவில்லை. காவல் நிலையத்தை அடைந்ததும் அவனுடைய கேள்விகள் சரசரவென வெளியே வந்தன.

"சொல்லும் இப்ப, துளசி பிள்ளை உண்டா யிருப்பதா ஏன் பொய் சொன்னீர?"

"அது பொய்யில்லை..."

"இன்னொரு பொய். உம்முடைய குட்டு உடைஞ்சு போச்சு வைத்தியரே. துளசி இப்ப கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில் இருக்கா. அவளைப் பரிசோதித்த டாக்டர் அவள் கர்ப்பமா இல்லைங்றார்..."

''டாக்டர் தெரியாமச் சொல்றார். அவர் பிள்ளை உண்டாயிருக்கா.''

''துளசியின் வயித்திலே கட்டி இருக்...''

''டாக்டர் தெரியாம சொல்றார்.''

''ஆப்ரேஷன் செய்து அவ வயித்துக் கட்டியை எடுத்துட்டாங்க. இப்ப என்ன சொல்றீர்!'' என்று அதட்டிக் கேட்டான் பிரகாஷ். ''உண்மையைச் சொல்லிடும், துளசி கர்ப்பம்னு ஏன் பொய் சொன்னீர்?''

''இல்... நான் பொய் சொல்லலை. தவறுதலா... தவறுதான் நடந்து போச்சு...'' என்று வைத்தியரின் குரல் தடுமாறியது.

''நாடி பிடித்துப் பார்த்து என்ன நோய்னு சொல்லி விடும் நீர் தவறு செய்றது சாத்தியமில்லே. நீர் தவறா சொல்லலை. சொல்லும், ஏன் பொய் சொன்னீர்?'' என்று அதட்டினான் பிரகாஷ்.

''நான்... நான்... அவர்...''

''நீர் உண்மையைச் சொல்லலைன்னா அதை வரவழைக்கும் வழி எனக்கு தெரியும். எங்க ஆட்கள் உம்மை அடித்து நொறுக்கிப் போடுவாங்க. யாரங்கே, முருகேசு இவரை நம்ம ஸ்பெஷல் அறைக்குக் கூட்டிட்டுப் போ...''

'கடவுளே!' இந்த வயதில் எலும்புகள் உடைந்து போனால் அதை ஊற வைப்பது சிரமமான காரியம்.

நான் படுக்கையில் இருந்து விட்டால் வீட்டில் எப்படி அடுப்பெரியும்!'

''வேண்டாம்'' என்று அலறினார் வைத்தியர். ''நான் எல்லாத்தையும் சொல்லிடறேன்.''

வைத்தியர் அய்யாசாமி பேசியவைகள் எல்லாம் டேப் ரிக்கார்டரில் பதிவாகிக் கொண்டிருந்தன.

# 10

''டாக்டர், என்ன சொல்றீங்க? துளசி...?'' என்று பதட்டத்துடன் கேட்டாள் அனிதா! பெண்ணே, எத்தனை பெரிய அபவாதத்தைச் சுமந்து துடித்துக் கொண்டிருந்தாய்! எத்தனை வதைபட்டாய். நீ மாசற்றவள் என்பது நிரூபணமான இந்த நேரத்தில் உனக்கு இப்படியாக வேண்டுமா!' என்று அவளுடைய மனம் புலம்பியது.

''ஒரு முக்கியமான மருந்து வேணும். ஆஸ்பத்ரி ஸ்டாக்கில் இல்லைன்னு இப்படிதான் தெரிஞ்சுது. திரும்ப மருந்து கடைக்குப் போய் வாங்கி வர வேண்டி யிருக்கும். ஸாரி...''

''மை காட்... நீங்க ஸாரி சொன்னது இதுக்குத் தானா! நான் ஏதோ என்னவோன்னு பயந்துட்டேன். துளசிக்கு ஒண்ணுமில்லையே?'' என்று பதட்டம்

தணிந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட அனிதா கேட்டாள்.

''நீங்க வேறே என்ன நெனச்சீங்க?''

''பரவாயில்லை. அது இருக்கட்டும். துளசி எப்படி இருக்கான்னு சொல்லுங்க.''

''இதுவரைக்கும் ஏதும் பிரச்சனை இல்லை'' என்றார் மருத்துவர். ''மயக்கம் தெளிய இன்னும் நேரம் இருக்கு.''

''சரி. மருந்து சீட்டை தாங்க. நான் போய் வாங்கி வர்றேன்'' என்று அனிதா சொல்லிக் கொண்டிருக்கையில் சின்னதம்பி மருந்துக்களுடன் வந்தான்.

''நான் மருந்து வாங்கி வர்றேன். நீங்க சின்ன தம்பியோடு ஊருக்குப் போங்க. நீங்க ஒரு பொண்ணு. இங்கே தனியா இருக்க வேண்டாம்'' என்றான் மணிவண்ணன்.

மருத்துவமனை வெறிச்சோடிக் கிடந்தது. துளசியைத் தவிர வேறு இரண்டு நோயாளிகள்தான் இருந்தார்கள். மேலும், இரண்டு தாதிகள், ஒரு டாக்டர் என்று சொற்ப ஊழியர்களே அங்கே இருந்தனர்.

சுற்றிலும் பார்த்து நிலைமையை ஊகித்துக் கொண்ட அனிதா சின்னதம்பியோடு கிராமத்துக்குப் போக சம்மதித்தாள்.

* * *

உடலாலும், மனதாலும் மிகவும் சோர்ந்து போயிருந்தாள் அனிதா. காணாமல் போயிருக்கும் தன்

அண்ணனைப் பற்றிய துப்பு ஏதும் கிடைக்காத தவிப்போடு துளசிக்காக அலைந்தது. அதனால் ஏற்பட்ட மன உளைச்சல் எல்லாம் சேர்ந்து அவளைச் சோர்வடைய வைத்திருந்தன.

சின்னதம்பி எந்த மனநிலையில் இருந்தானோ, அவன் மௌனமாக வண்டி ஓட்டிக் கொண்டிருந்தான். இடையிடையே நடை தளர்ந்து போகும் மாடுகளை 'க்ளைக்... க்ளைக்...' என்று அதட்டுவது போல் வினோதமான குரலெழுப்பி சாட்டையால் லேசாகத் தட்டியபடி அவன் மாட்டு வண்டியை செலுத்திய சத்தம் தவிர வேறு ஒலி இல்லை. அந்த நிசப்தம் அனிதாவுக்கு ஆறுதலளிப்பதாக இருந்தது.

வழியெங்கும் ஒரே இருட்டுதான். மாட்டு வண்டியின் முன் பகுதியில் கீழ் பக்கம் லாந்தர் என்று எரிந்து கொண்டிருந்தது. அதன் ஒளியில் அவன் வண்டியை ஓட்ட, வழி தெரிந்த மாடுகள் ஒரே சீரான வேகத்துடன் நடந்து கொண்டு இருந்தன. காட்டு பூச்சிகளின் ரீங்காரமும், வானத்தில் அங்கொன்றும், இங்கொன்றுமாக சிதறி பாராக்கு பார்த்துக் கொண்டிருந்த நட்சத்திரங்களும் இரவு வெகுநேரமாகி விட்ட பிரமையைக் கொடுத்தன.

அனிதா கைகடியாரத்தில் மணி பார்த்தாள். இரவு ஒன்பதே காலாகியிருந்தது.

அவர்கள் சின்ன கிராமம் ஒன்றின் வழியாக பயணித்துக் கொண்டிருந்தனர். பாதையை விட்டு விலகி சற்று தூரத்தில் பல கிராம மக்கள் குழுமியிருப்பதும்,

அவர்களுக்கு மத்தியில் ஒருவர் நின்று ஏதோ சொல்லிக் கொண்டிருப்பதும் தெரிந்தது. பல லாந்தர் விளக்குகள் அவர்களுக்காக ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தன.

"இங்கே என்ன நடக்குது சின்னதம்பி?" என்று கேட்டாள் அனிதா.

"ராமசாமி ஐயர் பஜனை நடத்திட்டிருக்கார் போலும்" என்றான் சின்னதம்பி.

"பஜனை சத்தம் ஒண்ணையும் கேக்கலையே!"

"அவரோட பஜனை அப்படித்தான் இருக்கும். பக்தி பாடல்கள் குறைவாகவும், பேச்சு அதிகமாகவும் இருக்கும்."

"வண்டியை நிறுத்துப்பா. நான் இங்கேயே இறங்கிக்கறேன்."

"என்ன செய்யப் போறே அனிதா?"

"பஜனை கேட்கப் போறேன்" என்றாள் அனிதா. "என்னை இங்கே இறக்கிவிட்டுட்டு நீ ஆஸ்பத்திரிக்கு போ."

"நீ ஊருக்கு எப்படிப் போவே? உனக்கு பாதை தெரியாது. பேசாம வீட்டுக்கு வந்து சாப்பிட்டுட்டுப் படு. நீ இன்னும் சாப்பிடக்கூட இல்லை" என்றான் அவன்.

"பசியில்லை சின்னதம்பி. மனம் ரொம்பக் கலங்கிப் போயிருக்கு. என்ன செய்றதுன்னு புரியாமக் குழம்பிப் போயிருக்கு. இப்ப எனக்குத் தேவையானது

சாப்பாடும் தூக்கமும் இல்லை. மன சாந்தி தரும் நாலு நல்ல சொற்கள்தான் தேவை. இவரோட பேச்சை கேட்டா ஒருவேளை நான் தேடுற மன அமைதி எனக்குக் கிடைக்கலாம். என்னைத் தடுக்காதே. திரும்பி வர வழி தெரியலைன்னா இந்தக் கோயில்லே எங்காவது தங்கிட்டுக் காலையிலேயே வந்துடு வேன்.''

அதற்கு மேல் சின்னதம்பி வாதாடவில்லை. வண்டியை நிறுத்தினான். இறங்கி பின்புறம் வந்து அனிதா இறங்குவதற்கு உதவி செய்தான். அவள் குழுமியிருந்த மக்களைச் சென்றடையும் வரை காத்திருந்தான். அதன் பின்னரே வண்டியில் ஏறி அதை ஓட்டிக் கொண்டு மேலே சென்றான்.

* * *

அனிதா கிராமத்து ஜனங்களோடு கலந்து நின்று ராமசாமி ஐயர் சொல்லிக் கொண்டிருந்தவைகளைக் கேட்டாள்.

''....... நாம செய்ற ஒவ்வொரு காரியமும் நம்மை மட்டுமல்லாம நம்மைச் சுற்றிலுமுள்ள மற்ற மனிதர் களையும் பாதிக்குது. அதனாலே, நாம எதைப் பேசி னாலும், செய்தாலும் கவனமா சிந்திச்சுதான் செய் யணும்...''

குழுமியிருந்தோர் அவர் சொல்வதை ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தனர். ''... இப்ப நாலு காசு சம்பாதிப்பதற்காக மரங்களை வெட்டி விக்றீங்க. மரங்கள் அழிஞ்சு போனா காடு அழிஞ்சு போகும்.

அப்புறம் மழையும் குறைஞ்சு போகும். மழை குறைஞ்சா யாருக்கு கஷ்டம்? எல்லோருக்கும்தான். அதனாலே, மரங்களை வெட்டாதீங்க...''

''அப்ப நாங்க இப்ப எப்படி சம்பாதிப்பது சுவாமி? எப்படி பிழைப்பது?'' என்று கேட்டான் ஒரு கிராமத்தான்.

''இன்றைய பிழைப்புக்காக நாளைய பிழைப்புக்கான வழியை நிரந்தரமா அடைச்சுடுறீங்களே. இந்த மரங்களாலேதான் மழை வருது. மழையால்தானே பயிர்கள் விளையுது! உங்களுக்கு சோறு போடற மரங்களை வெட்டிட்டா எப்படி வாழப் போறீங்க! மேலும், நிலத்திலே விழற நீர் வழிஞ்சு ஓடிடாம இந்த மரங்களின் வேர்கள்தான் நிறுத்தி வைச்சு மண்ணை வளப்படுத்துகிறது. மரங்களால் தான் காற்றில் பிராண வாயுவின் அளவு சரியாக இருக்குது. காற்றிலுள்ள அசுத்தங்களையும் இந்த மர இலைகள்தான் அரித்து தடுக்கின்றன. அதனாலே, மரங்களை வெட்டாதீங்க. காட்டு மரங்களுக்கு நெருப்பு வைத்து எரித்து அப்புறம் வெட்டியெடுப்பதாகவும் கேள்விப் பட்டேன். இவையெல்லாம் உங்களுக்குத்தான் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் தரப் போகுது. இப்ப உங்க மலையடிவாரத்து கிராமங்களில் நல்ல மழை பெய்யுதுன்னா அதுக்கு இந்த மரங்கள்தான் காரணம்...''

கேட்டுக் கொண்டிருந்தவர்கள் ஆளுக்கு ஆள் கேள்வி எழுப்பினார்கள். சந்தேகம் கேட்டார்கள்.

அவர்களுக்கெல்லாம் அமைதியாக விளக்கம் கொடுத்தார் ராமசாமி ஐயர்.

ஒருவன் சொன்னான், ''நாங்க மட்டும் மரம் வெட்றதை நிப்பாட்டி என்ன பிரயோசனம்! மத்தவங்க வெட்டத்தானே செய்றாங்க!'' என்று.

''மத்தவங்க மனசிலே புகுந்து அவங்களோட எண்ணங்களை, செயல்களை நாம கட்டுப்படுத்த முடியாதுப்பா. மத்தவங்களை நாம மாத்த முடியாது. ஆனா, நம்மை நாம மாத்திக்கலாம் இல்லையா! நாம் சிந்தித்து எது சரி, எப்படி நடக்கணும்னு கண்டறிஞ்சு நமக்குள்ளே நல்ல மாற்றங்களைக் கொண்டு வரலாமில்லையா? மத்தவங்களோட செயல்களைப் பற்றி கவலைப்படாம நான் சரியாக நடப்பேன், ஒழுங்காக இருப்பேன்னு ஒவ்வொருத்தனும் நெனச்சாலே ஊரும், உலகமும் உருப்படும்.''

''அதெப்படி! நாம மட்டும் ஏன் கஷ்டம் அனுபவிக்கணும்? எல்லோரும் சேர்ந்து தீர்மானிக்க வேண்டாமா!''

''ஒரு நல்ல காரியத்தைச் செய்யணும்னு எல்லோரும் சேர்ந்து தீர்மானம் எடுத்தா ரொம்பவும் நல்லதுதான். ஆனா, அது சாத்தியப்படாத போது நாம 'நான் மட்டும் ஏன் செய்யணும், எனக்கென்ன!' என்று சும்மா இருப்பது சரியில்லேப்பா. நாட்டிலே எத்தனையோ பேர் சாப்பாடு கிடைக்காம பட்டினியோடு இருக்காங்க. அவங்க சாப்பிடலைன்னு நாமும் சாப்பிடாம இருக்கோமா? நாம நம்ம வயித்தை

கவனிச்சுட்டுதானே இருக்கோம்! மத்தவங்ககிட்டே யிருந்து நல்ல காரியத்தைதான் கற்றுக்கலாமே யொழிய தவறான செய்கைகளை உதாரணமா எடுத் துக்கக் கூடாது. இதைத்தான் பகவன் ஸ்ரீகிருஷ்ணன் சொன்னார். 'பலனை எதிர்பாராது கடமையைச் செய்யுன்னு. நான் ஒருத்தன் மரம் வெட்டலைன்னா மழை பெய்துடப் போகுதா என்னன்னு நினைக்காம நான் ஒருத்தனாவது இந்த தப்பைச் செய்யாம இருப்பேன்னு நினைக்கணும். இது மட்டுமில்லே எல்லா விஷயங்களிலும் நம்ம கடமையைச் சரியா செய்யணும். வீட்டிலே பெண்டாட்டி பிள்ளைகளை பேணறதோடு ஒருத்தனின் கடமை முடிஞ்சுடற தில்லை. இந்த சமூகத்தின் மேலேயும், நாட்டின் மேலேயும் நமக்குக் கடமை இருக்குப்பா.

அரசு உண்டாக்கியிருக்கும் சட்டங்களை மதிச்சு நடப்பது நம்ம கடமை. மனிதாபிமானத்தோடு நடப்பது மானுட கடமை. இந்த கடமைகளை சரியாகச் செய்றோம்னு யாரும் நமக்கு புகழாரமோ, பொருளோ தந்து போற்றப் போவதில்லை. ஆனா, அதுக்கும் மேலான சம சமாதானமும், சந்தோஷமும் நமக்குக் கிடைக்கும். அதோட நீங்க நினைத்திராத நன்மை நம்ம சமூகத்தில் விளையும்..."

ஐயர் தெளிவாக அவர்களுக்கு விளக்கிக் கொண் டிருந்தார். அதனாலே, அவர் சொல்வது அவர்களுக்கு புரியுமோ புரியாதோ என்று சந்தேகம் தோன்ற நியாயம் இல்லை. ஆனால், அவர்கள் அதை ஏற்றுக்

கொள்வார்களா என்பதுதான் சந்தேகத்துக்குரிய விஷயம்.

மனிதர்களில் பலர் தாம் செய்வது தவறு என்பது புரியாமல் அந்தத் தவற்றைச் செய்கிறார்கள். தம் செயல்களின் எதிரொலியை அதாவது பின் விளைவு களைப் பற்றி யோசிக்காமல் செய்கிறார்கள். இன்னும் பலர் தாம் செய்வது தவறு என்பது தெரிந்தும் தன் ஒருவனின் ஆதாயத்தை மட்டுமே மனதில் கொண்டு மீண்டும் மீண்டும் தவறிழைக்கிறார்கள். என்றாலும், நாம் சொல்லும் நல்ல விஷயங்கள் ஆயிரம் செவி களில் விழுந்தால் அதில் நூறு பேராவது அது பற்றி சிந்திப்பார்கள். சிந்திப்பவர்களில் பத்து பேராவது அதை ஏற்றுக் கொள்வார்கள். அந்த பத்து பேரில் ஒருவராவது அதன்படி நடப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அந்த ஒருவரின் மனப்பாங்கு பத்து மனங்களில் புகுந்து, நூறு பேரில் எதிரொலித்து அது ஆயிரமாக பெருகும் வாய்ப்பு உண்டு என் பதை மறுக்க முடியாது. இதை மனதில் கொண்டே ராமசாமி ஐயர் சலிக்காமல் தனக்குத் தெரிந்த நல்ல விஷயங்களை மற்றவர்களிடம் பரப்பிக் கொண்டிருந் தார்.

* * *

அவர் பேசியவைகளை அனிதாவும் கேட்டுக் கொண்டிருந்தாள். 'எத்தனை உன்னதமான கருத்துக் களை சொல்கிறார்! சிந்திக்கத் தெரிந்தவர் இவர்' என்று நினைத்தாள்.

இவரிடம் பேச வேண்டும் என்று தோன்றவே கூட்டம் கலையும் வரை காத்திருந்தாள். கூட்டம் கரைந்து நான்கைந்து பேரே மிஞ்சியிருக்கையில் அவரை அணுகி, ''வணக்கம் சுவாமிகளே'' என்று கைகூப்பினாள்.

''வணக்கம் அம்மா'' என்று பதிலுக்கு சொன்ன ஐயர், ''பட்டணத்திலேர்ந்து வந்திருக்கியா?'' என்று கேட்டார்.

''ஆமா. உங்க பேச்சைக் கேட்டேன். நல்லா பேசினீங்க. இப்படி பஜனை செய்றவங்க உலக வாழ்க்கைக்கு உபயோகமான விஷயங்களைப் பத்தியும் பேசுவாங்கங்கறது எனக்குத் தெரியாது.''

''ஞானம் பக்தி மார்க்கத்துக்கு மட்டுமல்ல, உலக வாழ்க்கைக்கும் தேவைதான். உண்மையான பக்தி மார்க்கத்தில் நடப்பவன் உலக வாழ்க்கையிலும் நியாய அநியாயங்களுக்கு கட்டுப்பட்டுத்தான் நடக்கிறான். பக்தி மார்க்கத்துக்கும் உலக வாழ்க்கைக்கும் நெருக்கமான உறவு உண்டு. அதைத்தான் இவங்களுக்கு சொல்கிறேன்'' என்றார் ஐயர்.

''இவங்களும் புரிஞ்சுக்கற மாதிரி சொல்றீங்களே, அது விசேஷம்தான். எல்லோருக்கும் கைவந்த கலை இல்லை'' என்றாள் அனிதா அவரைப் பாராட்டும் விதமாக.

''நல்லது கெட்டது புரிஞ்சுக்கிடறதுக்கு கல்வியறிவு வேணும்னு இல்லேம்மா. நியாய உணர்வு,

அன்புணர்வு இவைகள் கற்றுக் கொள்ளும் விஷயம் இல்லேம்மா. இயற்கையிலே இவையெல்லாம் மனிதர்களிடம் இருக்குது. உலக ஆசாபாசங்கள் அவைகளை மேலெழுந்து வரவிடாமல் அமுக்கிப் பிடிச்சுட்டிருக்கு. அநாவசிய உலக மாயையை விலக்கி, அந்த உணர்வுகளை மயக்கத்திலிருந்து மீட்டு மேலே தூக்கி விட முயற்சி செய்யலாம் நாம.''

''உண்மைதான். உங்களைப் போன்ற பொதுநல நோக்கு உடைய புத்திசாலிகள் தம் ஞானத்தை மற்றவர்களோடு பகிர்ந்துக்கறது எத்தனை உத்தமமான காரியம்!'' என்றாள் அவள் அவருடைய தன்னலமற்ற சேவையை வியந்தபடி.

''நானும் மொதல்ல வெறும் பஜனைதான் செய்திட்டிருந்தேன். அப்புறம் பக்கத்து கிராமத்துக்கு வந்திருந்த ஒரு பட்டணத்து டாக்டர்கூட பழக்கம் உண்டாச்சு. சின்ன பையன்தான். ஆனால், விசாலமான மனம் அவனுக்கு. எல்லோரும் என் பஜனையை பக்தியோடு கேட்பதையும், என் வார்த்தைகளுக்கு மதிப்பளிப்பதையும் பார்த்தவன் ''நீங்க ஏன் கடவுள் போதனையோடு உலக வாழ்க்கைக்கு தேவையான நல்ல விஷயங்களையும் போதிக்கக் கூடாது' என்று சொன்னான்...''

''யாரு...? யாரு...? டாக்டர் ராகுலா!'' என்று படபடப்போடு கேட்டாள் அனிதா.

''ஆமா. ஏம்மா, உனக்கு அவனைத் தெரியுமா?''

"இல்...லே... நீங்க சொல்லுங்க. அவனை... சாரி... அவரைப் பற்றி தெரிஞ்சதையெல்லாம் சொல் லுங்க" என்று சொன்ன அனிதா அவர் சொல்லப் போவதைக் கேட்க ஆர்வத்துடன் காத்திருந்தாள்.

"..... அந்த பையன் எனக்கு நிறைய விஷயங்களை உணர்த்தினான். இராமாயணம், மகாபாரதம் போன்ற கிரந்தங்கள் நாலு நல்ல விஷயங்களை மனிதன் கற்றுணர்ந்துக் கொள்வதற்காகத்தான் எழுதப்பட் டிருக்கின்றன. அவைகளை எழுதியவர்களின் எண் ணத்தை நாம் நிறைவேற்றி வைக்க வேண்டாமா! வெறுமனே கதை கேட்பதோடு, சொல்வதோடு அவைகளை மறந்துடறோம்; பகவத் கீதையை மனப்பாடம் செய்து பெருமைப்படறோம். அதைவிட அவை சொல்லும் கருத்துக்களை உணர்ந்து அவை களை வாழ்க்கையில் பின்பற்றுவதல்லவோ அந்த கிரந்தங்களுக்கு நாம் அளிக்கும் மரியாதை.

இராமர் ஏக பத்தினி விரதன். நாட்டை நல்ல முறையில் ஆண்டு மக்களை சுபிட்சமாக வைத்திருந் தார். பெற்றோர்களை, பெரியோர்களை மதித்துப் போற்றினார். அவரை வழிபடுறவங்க அவர் நடத்திய வாழ்க்கை முறையை பின்பற்றும் பொழுது தானே அது உண்மையான வழிபாடாகிறது. இப்படியெல் லாம் ராகுல் எடுத்துச் சொன்ன பொழுது என் கண்கள் திறந்து கொண்டன. கருத்து விரிந்தது. ஆம், வெறு மனே தெய்வதன்மை பொருந்திய மகா புருஷர்களின் வரலாற்றை அறிந்து கொள்ளாமல் அவர்கள் காட்டிய

பாதையில் நடப்பதுதான் உண்மையான பக்தியா கிறது என்பதை உணர்ந்த நான் அதை மற்றவர் களுக்கும் உணர்த்தினேன். ம்... அந்த நல்ல பையனைப் பற்றி ஏதேதோ காதில் விழுந்தன. நம்பத்தான் முடியலை...''

''நம்ப முடியலையல்லவா!'' என்று பரபரப்புடன் கேட்டாள் அனிதா.

''ஆமாம்மா. நான் அறிந்த வரைக்கும் அந்த டாக்டர் பையன் அம்மாதிரி இல்லை. ஆனால்... என்னத்தை சொல்றது! எந்த புற்றில் எந்த பாம்பு இருக்குமோ!''

''அப்படிச் சொல்லாதீங்கய்யா. அவன் அப்படி யெல்லாம் இல்லை'' என்றாள் அனிதா அவசர அவசரமாக. ''புற்றிலே பாம்புதானா இருக்கு! கரை யான் புற்றும், எறும்புப் புற்றும் இருக்கத்தானே செய்றது'' என்றவள் தொடர்ந்து அவரை கேட்டாள், ''ராகுல் ஒரு முனிவரைப் பற்றி சொல்லிக் கொண் டிருந்தான். மூலிகை மருத்துவம் பற்றி நன்றாக அறிந்த முனிவர் அவர். அவரோடு போய் அவன் சேர்ந்திருக்கும் வாய்ப்பு இருக்கு. உங்களுக்கு அப்படி யாராவது முனிவரை தெரியுமா ஐயா?'' என்று.

ராமசாமி ஐயர் அவளை உற்றுப் பார்த்தார். ''இரு, என்ன சொன்னே, அவன் உன்கிட்டே முனிவரைப் பற்றி சொன்னானா? அப்படீன்னா நீ அவனை தெரிஞ்சு வெச்சிருக்கே!'' என்றார் சந்தேகத்துடன்.

அனிதா ஒப்புக் கொண்டாள். ''நீங்க சொல்றது உண்மைதான். ராகுல் என் அண்ணன். அவனை தேடித்தான் மல்லிமலைக்கு வந்தேன். இப்ப சொல்லுங்க, அப்படியொரு முனிவரை உங்களுக்குத் தெரியுமா? எங்கே இருக்கார் அவர்.''

''இப்ப அவர் எங்கே இருக்கார்னு தெரியாது. முன்னாலே அவர் மல்லி மலையில்தான் இருந்தார். அப்புறம் திடீர்னு மாயமா மறைஞ்சு போயிட்டார். இந்த ராகுல் காணாமல் போனது போல'' என்றார் ராமசாமி ஐயர்.

''ரெண்டு பேரும் சேர்ந்து காணாமப் போயிட்டாங்களா!''

''சாத்தியம் இல்லே'' என்றார் ஐயர். ''ராகுல் முனிவரை சந்தித்திருக்கவே முடியாது. இந்த முனிவர் மறைஞ்சு போய் பல வருஷங்கள் ஆயிட்டுது.''

அனிதா பக்கத்தில் இருந்த பாறை ஒன்றின் மேல் அமர்ந்தாள். ''இருக்கலாம்... இருக்கலாம்... அண்ணன் அவரைத் தேடிப் போயிருக்கலாம்...'' என்று அவள் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

ராமசாமி ஐயர் இன்னொரு பாறையில் அமர்ந்து கொண்டார். ''வருத்தப்படாதேம்மா. எல்லாம் சரியாயிடும். அவனை கண்டுபிடிக்க முயற்சி செய்திட்டே இரு. பலனை அவன் தருவான்'' என்றார் அவர் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து.

தொடர்ந்து அவர் சொன்னார், "பலமுறை உன் அண்ணனை சந்திச்சிருக்கேன். சந்திக்கும் பொழுதெல்லாம் இந்த கிராமத்து மக்களின் நலனைப் பற்றி பேசுவான். இன்றைய கலாச்சாரம் மனிதனை எப்படி முன்னேற விடாம தடுக்குதுன்னு சொல்லி அங்கலாய்ப்பான். லஞ்சம் வாங்கறவங்க எப்படி நாட்டின் பொருளாதார சீரழிவுக்கு காரணமா இருக்காங்க, அது எப்படி ஒவ்வொரு தனிமனித வளர்ச்சியை பாதிக்குதுன்னு புலம்புவான். நாட்டில் பரவியிருக்கும் மத, இன வேறுபாடுகளால் சண்டை கலவரம் எல்லாம் பெருகிப் போயிட்டுது. நீர் பட்டணத்து மக்களிடையே வந்து பஜனை நடத்தும். இடையிடையே ஒவ்வொரு தனிமனிதனின் தவறான நடவடிக்கைகள் எப்படி ஒரு சமுதாயத்தையே பாதிக்குதுன்னு எடுத்துச் சொல்லும். கடவுள்களின் கதையைக் கேட்பதோடு நாட்டு நடப்பில் கலந்திருக்கும் விஷயங்களையும் அவர்கள் உணரட்டும்னு சொல்வான். பட்டணத்து கதைகளிலேயும் நல்ல விஷயங்களை பலர் சொல்லிட்டுத்தானே இருக்காங்க. யார் கேக்கறா! நான் சொல்லி என்ன பெரிய மாற்றம் வரப் போறதுன்னேன். அதுக்கு அவன் மத்தவங்க சொல்றதுக்கும் ஒரு மதபோதகர் சொல்றதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்குன்னான்."

ம்... நீ சொல்றது சரிதாம்மா. இப்படிப்பட்ட உத்தமன் கொள்ளை, கொலை எல்லாம் நிச்சயம் செய்திருக்க மாட்டான்."

''நானும் அதைத்தான் சொல்றேன்'' என்றாள் அனிதா படபடப்புடன். ''உங்க உதவி எனக்கு தேவைப் படலாம், செய்வீங்களா?''

''என்ன உதவிம்மா?''

''தெரியாது'' என்றாள் அவள். உண்மையிலேயே அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. ராகுலை ஆதரித்துப் பேசுகிறவர்களும் அவளுக்கு உதவியாக இருப்பார்கள் என்று நினைக்கிறாள்; எதிராக பேசுகிற வர்களிடமிருந்தும் அவளுடைய தேடலுக்கு உதவும் விஷயங்களைப் பெற முடியும் என்று நம்புகிறாள். ஆனால் இன்ன மாதிரி உதவி என்று அவளால் குறிப்பாகச் சொல்ல முடியவில்லை.

''நீங்க எங்கே இருக்கீங்க?''

ராமசாமி ஐயர் லேசாகச் சிரித்தார். ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்றார். ''கண்ட மடம்தான் எனக்கு சொந்த மடம். இன்று இந்த ஊர்னா நாளை வேறே ஊர். கிடைத்ததை தின்னுட்டு கிடைத்த இடத்தில் தலையை சாய்த்துக் கொள்ளும் ஆண்டி நான்'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கையில் பின்னா லிருந்து சின்னதம்பியின் அழைப்பு கேட்டது. ''அனிதா...''

''அட, நீ இன்னும் போகலையா?'' என்று அவள் கேட்டாள்.

''ராத்திரி வேளையிலே உன்னை தனியா விட்டுட்டுப் போக மனம் கேக்கலை. பாதி வழியிலே

திரும்பி வந்துட்டேன். பஜனை முடிஞ்சாச்சு இல்லே, வா, வண்டியிலே ஏறு. உன்னை வீட்டிலே கொண்டு போய் விட்டு விடுகிறேன்'' என்றான் அவன்.

* * *

'உண்மையைச் சொல்லி விடுகிறேன்' என்று வைத்தியர் அய்யாசாமி சொன்னதைக் கேட்டதும் தன் முயற்சியில் வெற்றி பெற்று விட்டதாக நினைத்தான் பிரகாஷ். 'இந்த கேஸை நான் தீர்த்து விட்டால், ராகுல் குற்றமற்றவன் என்று நிரூபிக்கப்பட்டு விட்டால் அனிதா எத்தனை சந்தோஷப்படுவாள்! அவளுக்கு அவன் மேல் மதிப்பு உண்டாவது நிச்சயம்' என்று நினைக்கையில் அவனுடைய உதடுகள் லேசாக விரிந்து சந்தோஷத்தை வெளிப்படுத்தின. எல்லாவற்றுக்கும் மேலாக அவன் தன் சுய மதிப்பில் உயர்ந்து நிற்பதை உணர்ந்தான்.

மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைவிட, மற்றவர்கள் நம்மை எவ்வளவு மதிக்கிறார்கள் என்பதைவிட நாம் நம்மைப் பற்றி என்ன நினைக்கின்றோம், எவ்வளவு மதிக்கின்றோம் என்பது முக்கியம் என்ற உண்மையை அந்த நிமிடம் உணர்ந்தான் அவன்.

''சொல்லும் வைத்தியரே. எல்லாத்தையும் சொல்லி விடும்.''

''தலைவர்தான் துளசி பிள்ளையுண்டாயிருப்பதா சொல்லச் சொன்னார்...''

''யார், பஞ்சாமியா?''

''அவர்தான். பூசாரியின் பன்னிரண்டாம் நாள் காரியம் நடந்திட்டிருக்கையில் துளசி மயக்கமா விழுந்துட்டா. அப்ப, அவர்தான் என்னைக் கூப்பிட வந்தார். துளசி கர்ப்பமா இருப்பதா சொல்லிடுன் னார்.''

''ஏன்?''

''ராகுல் எங்க ரெண்டு பேருக்கும் பொது எதிரி. அவன் மேல் துளசியை கர்ப்பமாக்கின பழியைப் போட்டுட்டா கிராமத்து மக்களின் மனசிலேர்ந்து அவன் இறங்கிடுவான். அவர் சொன்னது சரின்னு பட்டது. வேறே ஒண்ணை பத்தியும் நான் நினைக் கலே.''

''அதான் அதன் பின் விளைவுகளைப் பத்தி கவலைப்படாம கூசாம பொய் சொல்லிட்டீர்!''

அய்யாசாமி தலை குனிந்தார்.

''சொல்லும்'' என்று அவரை உலுக்கினான் பிரகாஷ்.

''துளசியை பரிசோதிச்சப்ப அவ உண்டாகியிருக் கலேன்னு தெளிவா தெரிஞ்சு போச்சு. வேறே ஏதோ நோய் இருக்குன்னு புரிஞ்சுது. ஆனா... ஆனா... ராகுலை பழி வாங்குவதா நெனச்சு... ஊர் முழுசும் அங்கே கூடியிருந்துச்சு. எல்லோரும் நம்பிட்டாங்க'' என்றார் வைத்தியர்.

''ஆஹா! எவ்வளவு உயர்ந்த காரியத்தைச் செய் திருக்கிறீர்! ஒரு குற்றமுமில்லாத ஒரு சின்ன பெண்

ஊர் ஜனங்க முன்னால் அவமானப்படுத்தப்பட்டாள். ஏன்யா, அவளுக்கு என்ன நோய்னு கண்டுபிடிச்சு குணப்படுத்தணும்னு உம்ம மருத்துவ புத்தி சொல்லலையா? உம்முடைய பொய்யாலே சரியான வைத்தியம் கிடைக்காம அவ செத்துப் போனா என்ன செய்றதுன்னு உம்ம மனசாட்சி கேட்கலையா?''

வைத்தியரை இந்தக் கேள்விகள் அசைக்கவே செய்தன. எத்தனைத்தான் தன்னலம் பிடித்தவரா யினும் அவருடைய மனசாட்சி முழுவதுமாக செத்து விட்டிருக்கவில்லை. புத்திசாலித்தனமற்ற, சராசரிக்கும் கீழ்ப்பட்ட எண்ணங்களால் மதியிழந்து மயங்கிக் கிடந்த மனசாட்சி மயக்கம் தெளியத் தொடங்கியது. அதனோடு சேர்ந்து தான் உண்மையைச் சொல்லி விட்டது தெரிந்தால் தலைவர் என்ன சொல்வார் என்ற அச்சமும் தலை தூக்கியது.

பிரகாஷ் சொல்லிக் கொண்டிருந்தான். ''நோயா ளிங்க வைத்தியரை உயிரை காப்பாத்தும் கடவுளுக்கு சமமா நினைக்கிறாங்க. அவர்கிட்டே தம் பிரச் சினைகளை ஒப்படைச்சுட்டு இனி எல்லாத்தையும் அவர் பார்த்துப்பார்னு நம்பிக்கையோடு இருக்காங்க. இந்த புனிதமான வைத்திய தொழிலில் பணத்தாசை, ஈகோ எல்லாம் நுழைய எப்படி அனுமதிக்கலாம்!''

வைத்தியர் கேட்டுக் கொண்டிருந்தார். பிரகாஷின் காரமான பேச்சு அவரை சுட்டன. கடைசியாக அவன் கேட்ட கேள்வி அவரை தூக்கி வாரிப் போட வைத்தது.

''துளசியின் இடத்தில் உம்ம மகள் செல்வியை வைத்துப் பாருமய்யா. செல்வி விஷயத்தில் இப்படி நடந்திருந்தா என்னய்யா செய்வீர்? இப்ப அந்த சின்ன பொண்ணு வாழ்க்கைக்கும், மரணத்துக்கும் இடையே போராடிட்டு இருக்கா. அவளுக்கு ஏதாவது ஆயிட்டா அந்த பாவம் உம்மை சும்மா விடாது.''

* * *

துளசி பற்றிய அபவாதத்தைக் கிளப்பி விட்டதைத் தவிர வேறு எந்த வகையிலும் சட்டத்துக்குப் புறம்பான காரியத்தை வைத்தியர் செய்திருக்கவில்லை என்று அவருடைய பேச்சிலிருந்து தெரிந்தது. பிரகாஷ் எத்தனையோ வழிகளில் குடைந்து கேட்டும் அவனால் வேறு எதையும் அறிந்துகொள்ள முடியவில்லை. வைத்தியரின் பேச்சும், கொலை பற்றியோ, ராகுலின் மறைவு பற்றியோ எதுவும் தெரியாது என்று கூறின. ராகுல்தான் இந்த குற்றங்களை செய்துவிட்டு தலைமறைவாக இருப்பதாக அவர் நம்பினார்.

''அவன் குற்றமற்றவனாக இருக்கலாமில்லையா! துளசியை கர்ப்பமாக்கியவன் ராகுல்தான் என்ற வதந்தியை நீர் கிளப்பி விட்டது போல் இதுவும் அவனைப் பற்றி... அதாவது அவரைப் பற்றி பரப்பப் பட்ட வதந்தியாக இருக்கலாமில்லையா!'' என்று பிரகாஷ் சொன்னபொழுது அய்யாசாமி பதில் சொல்ல முடியாமல் விழித்தார். பிரகாஷ் சொல்வது போல் இருக்கலாமோ' என்று அவருடைய மனம் சிந்திக்கத் தொடங்கியது.

மனிதன் தான் படிப்பதை, கேட்பதை அவை சரியா, தவறா என்று கேள்வி கேட்காமல் அப்படியே நம்பி விடுகிறான். சுயமாக சிந்தித்துப் பார்த்தால் உண்மை புலப்படும். ஆனால், மனிதன் தான் தன் சிந்திக்கும் திறனை, மூளையை முழுவதுமாக உபயோகிக்காத சோம்பேறியாகி விட்டானே!

# 11



வைத்தியரை அவருடைய வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு பஞ்சாயத்து தலைவர் பஞ்சாமி யின் வீட்டை நோக்கிச் சென்றான் பிரகாஷ். அவ ளுடைய வீட்டை அடைந்ததும் ஜீப் சத்தம் கேட்டு பஞ்சாமி வீட்டை விட்டு வெளியே வந்தார்.

பிரகாஷைக் கண்டதும் அவருடைய முகத்தில் எரிச்சல் தோன்றியது. ''இப்ப என்ன வேணும்? எதுக்காக வந்திருக்கே?'' என்று கேட்டார். ''இங்கே இனிமே வராதே. போ, போ...'' என்று விரட்டினார்.

''மரியாதை கொடுத்துப் பேசும்'' என்றான் பிரகாஷ் கம்பீரமான குரலில். ''நான் அரசாங்க அதி காரி. கேஸ் சம்பந்தமாக எத்தனை முறையானாலும் உம்மிடம் வரலாம். பேசாம ஜீப்பிலே ஏறும். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகப் போறோம்'' என்றான் உறுதியான குரலில்.

அத்தனை தைரியமாக பிரகாஷ் பேசியது பஞ்சாமிக்கு வியப்பைக் கொடுத்தது. என்னுடைய அதட்டலுக்கு அடங்கிப் போகும் இந்த போலீஸ்காரன் இன்று இத்தனை அதிகாரமாகப் பேசுகிறானே என்று வியப்புடன் அவனைப் பார்த்தார். அவரும் தன் அதிகாரக் குரலில், ''என்ன பேசணுமோ அதை இங்கே பேசு. போலீஸ் ஸ்டேஷனுக்கெல்லாம் வரமாட்டேன்'' என்றார்.

''நீராக வரலைன்னா விலங்கு மாட்டி கூட்டிட்டு போக வேண்டியிருக்கும்'' என்றான் பிரகாஷ்.

''ஏய், நான் என்ன குற்றவாளியா விலங்கு மாட்ட?''

''ஏய் பூய் எல்லாம் வேண்டாம். நான் உம்மகிட்டே கை கட்டி வேலை செய்யும் வேலையாள் இல்லை. நான் போலீஸ் இன்ஸ்பெக்டர். மரியாதை கொடுத்துப் பேசும்.''

பிரகாஷிடம் ஏற்பட்டிருந்த மாற்றம் பஞ்சாமியை நம்ப முடியாமல் திகைக்க வைத்தது. 'சத்தியம் அநீதிக்கு தலை வணங்குவதில்லை; சத்தியத்தின் வழியில் நடப்பவனின் குரல் உறுதியாக எழும்பு கிறது' என்பதெல்லாம் அவர் தெரிந்திராத ஒன்று.

அதன் பிறகு பஞ்சாமி அதிகம் வாதாடாமல் ஜீப்பில் ஏறினார். அவரிடம் லேசான பயம் தோன்றியது தான் அதற்குக் காரணம்.

* * *

**கா**வல் துறையை அடைந்ததும் கேள்விகள் தொடங்கின. பஞ்சாமி பேசுவதை ரிகார்ட் செய்யத் தொடங்கினான் ஒரு போலீஸ்காரன்.

''துளசி கர்ப்பமாக இருப்பதாகப் பொய் சொல்லும்படி ஏன் அய்யாசாமியிடம் சொன்னீர்?''

''நான் ஒண்ணும் சொல்லலை. எனக்கு ஒண்ணும் தெரியாது. வைத்தியரை கேள்...''

''கேட்டாச்சு. அவர் எல்லாத்தையும் கக்கிட்டார். இனி ஒண்ணையும் நீர் மறைக்க முடியாது. நீரும் சொல்லிடும். ராகுலின் பெயரை ஏன் கெடுக்க முயற்சி செய்தீர்?''

''அ.... அந்த பாவிப்பயல் கிராமத்து மக்களின் மனதில் என் பெயரைக் கெடுக்கலையா!''

''ஓ... அதற்கு பழி வாங்கினீரா! அதான் கோயில் கொள்ளையையும், கொலையையும் அவன்தான் செய்தான்னு வதந்தியைக் கிளப்பிவிட்டீர், இல்லையா?''

பஞ்சாமி பதில் சொல்ல தடுமாறினார்; விழித்தார். பிரகாஷ் அவருடைய கண்களை கூர்ந்து பார்த்தான். அதில் கலவரம் தெரிவதைக் கண்டான்.

''சொல்லும், ஏன் அவன் மேல் பழியைச் சுமத்தினீர்?''

''இல்லை... ஆமாம்... நான் வந்து.. நான் ஒண்ணும் செய்யலை. அதான் ஊர் மக்களுக்குத் தெரிஞ்சு போச்சே.''

''என்ன தெரிஞ்சு போச்சு?''

''அந்த பட்டணத்து டாக்டர்தான் கொள்ளை யடிச்சுட்டு, பூசாரியை கொன்னு போட்டுட்டு ஓடிப் போயிட்டான்னு...''

''இதையெல்லாம் யாராவது கண்ணால் பார்த்தீங் களா?''

''இல்லை. ஆனா, அவன்தான் செய்திருப்பான். இல்லேன்னா அவன் எதுக்கு ஓடி ஒளியணும்?'' ஏதோ புத்திசாலித்தனமாக பேசிவிட்டதாக பஞ்சாமி இருக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தார். இப்பொழுது இதற்கு பதில் சொல்' என்று சவால் விடுவது போல் அவனைப் பார்த்தார்.

''கொள்ளையையும், கொலையையும் செய்தவன் ராகுலையும் மறைச்சு வைச்சிருக்கலாமில்லையா!''

''அ.... அப்ப கொள்ளை, கொலை எல்லாத்தையும் அவன் செய்யலை, செய்தது வேறு யாரோங்கறியா?''

''ஆமா. குற்றவாளி ராகுல் இல்லை, வேறு யாரோ. அந்த யாரோ ஒருவனைக் கண்டு பிடிக்கணும். அதுக்கு இந்த ஊர் பஞ்சாயத்து தலைவர்ங்கற முறையில் உம்மோடு ஒத்துழைப்பு வேணும்'' என்றான் பிரகாஷ்.

''அது என் வேலை இல்லை.''

''உம்ம ஊர் அம்மன் கோயில்லே கொலையும், கொள்ளையும் நடந்திருக்கு. அது உம்ம ஊருக்கு இழுக்கு இல்லையா! உம்ம ஊர் சமாதானத்தை

எவனோ குலைத்திருக்கான். அவனைப் பிடித்து தண்டனை தருவதில் உமக்கு கடமை இல்லைன்னு எப்படியய்யா சொல்கிறீர்!''

அழுத்தமான குரலில் பிரகாஷ் பேசியதும் எதிர்த்து வாதாடாமல் மௌனமாகிப் போனார் பஞ்சாமி. பின்னர், ஏதோ சிந்தனையில் லயித்திருந்த அவனைப் பார்த்து, ''எனக்கென்னவோ இந்த ராகுல் மேலேதான் சந்தேகமா இருக்கு'' என்றார்.

''இன்னும் யார் மேலாவது உமக்கு சந்தேகம் உண்டா? வைத்தியர் அய்யாசாமி இதை செய் திருக்கலாமா?'' முதலில் 'இல்லை' என்று சொல்ல நினைத்தார் பஞ்சாமி. பின்னர், வைத்தியம் தன்னை காட்டிக் கொடுத்தது நினைவு வந்ததும் மனம் மாறி, ''இருக்கலாம்... இருக்கலாம். எந்த புற்றில் எந்த பாம்பு இருக்குன்னு யாருக்கு தெரியும்!'' என்றார்.

''இன்னும் யார் மேலாவது உமக்கு சந்தேகம் உண்டா?''

பஞ்சாமி கண்களை மூடி சிந்திப்பது போல் பாவனை செய்தார் ஒரு கணம். இதில் யார் யாரை இழுத்து விடலாம் என்று யோசித்தார். கடைசியில் தான் விரும்பாத மனிதர்கள் பலரின் பெயர்களை படபடவெனச் சொன்னார். அதில் குண்டப்பனும், வாத்தியார் கண்ணுசாமியும் அடக்கம்.

''குண்டப்பன் செய்திருக்கலாம். அவன் வேலை வெட்டி ஏதும் செய்யாம எல்லோரையும் மிரட்டி

பிடுங்கிட்டு இருக்கான். அவன் கொள்ளையடிக்க சாத்தியம் இருக்கு. ஆனால் இந்த வாத்தியார்... அவர் மேல் உமக்கு ஏன் சந்தேகம்?'' என்று கேட்டான் பிரகாஷ்.

பஞ்சாமி இருக்கையில் நெளிந்தார். 'ஏதோ பெயர்களை உளறிவிட்டேன். இனி என்ன சொல்லி சமாளிப்பது என தெரியாமல் விழித்தார். ''அவனுக்கு பட்டணத்து டாக்டர் மேலே கோபம் இருந்துச்சு. அதான்...''

''கோபத்துக்கும் கொள்ளைக்கும் என்ன சம்பந்தம்?''

''அவன் மேல் பழியைப் போட்டு பழி வாங்கிக் கலாமல்லவா!''

''ராகுல் மேலே வாத்தியாருக்கு என்ன கோபம்?''

''அந்த பய ஊர் மக்களை படிக்கணும்னு சொன்னது வாத்தியாருக்கு பிடிக்கலை. எல்லோரும் படிச்சுட்டா பட்டணத்துக்காரங்களை போல் கெட்டுப் போயிடு வாங்கன்னு...''

''நல்லவங்க கெட்டவங்க எல்லா இடத்திலும், எல்லா நிலையிலும் இருக்காங்க. ஒருத்தன் கெட்டுப் போகுன்னா அதுக்கு படிப்பு காரணமில்லை. சொல் லப் போனா படிப்பு ஒருவனை கெட்டுப் போகாம தடுக்கிறது. படிப்பு சுய சிந்தனையை வளர்க்குது; வாழ்க்கையில் சரியான கண்ணோட்டத்தை, அணுகு முறையை கொடுக்குது. எல்லோரும் படிச்சா உமக்கும் சிரமம்தானே. எல்லோரும் படிச்சுட்டா உம்ம

அடாவடித்தனத்தை எதிர்ப்பாங்க; கேள்வி கேப்பாங்க. அந்த பயத்தில் நீர் ராகுலை அப்புறப்படுத்த நினைக்கலாமில்லையா? சொல்லும், அவனை எங்கே ஒளிச்சு வைச்சிருக்கிறீர்?'' பிரகாஷ் அதட்டுவ போல் கேட்டான்.

''அ....'' என்று மிரண்டார் பஞ்சாமி. பின்னர் உடனேயே தன்னை சமாளித்துக் கொண்டு, ''இது என்னடா வம்பு! நான் ஏன் அவனை மறைச்சு வைக்கப் போறேன். உம்மாணை உம் அப்பனாணை...'' என்று தொடங்கியவரை பிரகாஷ் முறைத்தான். ''என் அப்பா மேல் ஏன் ஆணையிடுகிறீர்? உம்மேலும், உம்ம பிள்ளை மேலும் ஆணையிட்டு சொல்லுமய்யா.''

''சரி, என் ஆணை, என் அப்பனாணை நான் அந்த ராகுல் பயலை ஒளிச்சு வைச்சிருக்கலை. போதுமா?'' என்றார் பஞ்சாமி.

''ஆமா, ஊருக்குள்ள பள்ளிக்கூடம் கொண்டு வர ஏன் நீர் முயற்சி செய்யலை?''

''அதுக்கும், இந்தக் கேஸுக்கும் என்ன சம்பந்தம்?''

''உம்மோடு சம்பந்தம் இருக்கு. உம்ம சனங்க படிச்சு முன்னேறுவதை நீர் விரும்பலை. அவங்க படிச்சா முன்னேறுவாங்க... ஏன்யா, ராமாயணத்தை விழுந்து விழுந்து படிக்கிற நீங்க ராமர் எப்படி நாட்டை ஆண்டார், நாம எப்படி ஆளணும்னு படிக்கலையா? அ... நீங்கள்லாம் படிச்சிருக்க மாட்டீங்க.

அதான் கல்வியறிவு வேணும்ங்கறது. ஹூம்... உம்மை சொல்லிக் குத்தமில்லை, படிச்சவங்களும் எங்கே ஒழுங்கா இருக்காங்க! பதவி மோகம், பணத்தாசை, புகழ், மயக்கம் இவைகள் ஏதும் இல்லாம மக்களின் நன்மை ஒன்றையே கருதுகிறவன்தான் ஆட்சியிலே வரணும். இதுக்கு கூடவே மனிதாபிமானமும், மனித நேயமும் தேவை. (மனிதாபிமானத்தையும், மனித நேயத்தையும் செயல்படுத்த கல்வி பெருமளவு உதவுகிறது என்பதில் சந்தேகமில்லை) ம்... அந்த ராம ராஜ்யம் என்று வரப் போகுதோ!'' என்று கடைசியாக சொன்ன சில வாக்கியங்களை தனக்குத்தானே சொல்வது போல் சொன்னவன் குரலை உயர்த்தி பஞ்சாமியை பார்த்து, ''நீர் உம்ம ஊரு முன்னேற என்னய்யா செய்திருக்கீர்? பொத்தல் குடிசையில் கந்தலை உடுத்திட்டு கஞ்சியை குடிச்சுட்டு இருக்கும் உம்ம ஊர் ஜனங்களுக்காக என்ன செய்தீர்? மாறாக, அவங்களோட உழைப்பை உறிஞ்சு நீர் வாழ்ந்திட்டிருக்கீர்!'' என்றான்.

திகைத்துதான் போனார் பஞ்சாமி. இத்தனை ஆவேசமாக அவரிடம் இதுவரை யாரும் பேசியதில்லை. ஏன், எதிர்த்து கேள்விகூட கேட்டதில்லை. 'எப்பொழுதும் குனிந்து சலாம் போடும் இந்த போலீஸ்காரன் அந்த அனிதா பெண் வந்த பிறகு மாறித்தான் போய்விட்டான். எத்தனை திமிர் இருந்தால் என்னிடம் இப்படி பேசுவான்!'

பேசி முடித்த பிரகாஷின் சிந்தனை தன் மீது திரும்பியது. 'இத்தனை பேசுகிற நான் இதுவரை

என்ன செய்துகொண்டிருந்தேன்! என் கடமையைக் கண்டிப்போடு செய்தேனா! செய்யும் தொழிலே தெய்வம் என உணர்ந்து நடந்தேனா! இப்பொழுது தான் என் தொழிலின் தீவிரம் எனக்கு புரிந்திருக் கிறது. ஒவ்வொருத்தரும் தத்தம் கடமைகளை ஒழுங்காக செய்து வந்தாலே நாடு உருப்படும் என்பதை இப்பொழுதுதான் உணர்ந்திருக்கின்றேன்.'

* * *

"நான் போகலாமா?" என்று பவ்யமாகக் கேட்டார் பஞ்சாமி. இன்ஸ்பெக்டர் பிரகாஷிடம் இப்பொழுது தோன்றியிருந்த கண்டிப்பு, உறுதி, கம்பரம் எல்லாமே பஞ்சாமியிடம் பயத்தைத் தோற்றுவித் திருந்தன.

"இன்னும் நான் முடிக்கலை" என்றான் பிரகாஷ். அடுத்து அவன் கேட்ட கேள்வி பஞ்சாமியிடம் தயக்கத்தைத் தோற்றுவித்தது. "உம்மைப் பார்க்க வந்திருந்தாங்களே, அந்த வடநாட்டு தம்பதிகள் யார்? எதுக்காக அவங்க உம்மகிட்டே வந்தாங்க?"

இந்த கேள்விகளுக்கு உடனே பதில் சொல்ல முடியாமல் பஞ்சாமி தடுமாறினாலும் தன்னை சமா ளித்துக் கொண்டார். "அ... அவங்க ஊரைப் பார்க்க வந்தவங்க."

"அது சரி, அவங்களுக்கும், உமக்கும் என்ன தொடர்புன்னு கேக்கறேன். அவங்களோடு சேர்ந்து ஏதாச்சும் தொழில் செய்றீரா? அதான் ஊர் மக்களோட உழைப்பை உறிஞ்சுட்டு இருக்கிறீரே..."

''ஏய், அப்பந்தொட்டே என்னை குற்றப் படுத்திட்டு இருக்கியே, என்ன நெனச்சுட்டு இருக்கே? உன்னை சும்மா வுடமாட்டேன்...'' என்று குரலை உயர்த்திப் பேசினார் பஞ்சாமி.

''மெல்ல... மெல்ல...'' என்று கையமர்த்தினான் பிரகாஷ். ''கத்தாதேயும். நீர் என்னை தண்டிப்பது இருக்கட்டும், சட்டம் உம்மை சும்மாவிடாது, அதாவது நீர் ஏதாவது தவறு செய்திருந்தா'' என்றான் அவன்.

பிரகாஷுக்கு பஞ்சாமியின் பதிலில் திருப்தியில்லை. 'இவர் எதையோ மறைக்கின்றார்' என்று தோன்றியது. அவருக்கும் அந்த வடநாட்டவர்களுக்கும் ஏதோ தொடர்பு இருக்கலாம் என உள் மனம் சொல்லிற்று. இவர் அவனிடமிருந்து மறைப்பது கொலை, கொள்ளை அல்லது ராகுலின் மறைவோடு தொடர்பு உள்ளதாகவும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். எதுவானாலும் அவர் மறைப்பது என்னன்னு கண்டுபிடித்தே ஆகவேண்டும் என நினைத்தான்.

* * *

இன்ஸ்பெக்டர் பிரகாஷ் கைகளைப் பின்னால் கோர்த்தபடி குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். அவனுடைய நடையின் வேகத்தைப் போலவே மனமும் வேகமாக சிந்தித்துக் கொண்டிருந்தது. 'துளசியை கெடுத்தவன் ராகுல்தான் என்று அவன் மேல் அபாண்டமாகப் பழியைச் சுமத்திய

வர்கள் கோயில் கொள்ளையையும், கொலையையும் அவன்தான் செய்தான் என பழி சுமத்திவிட்டு அதை உண்மையென காட்டுவதற்காக அவனை ஏன் மறைத்து வைத்திருக்க மாட்டார்கள்! அல்லது... அவனையும் கொன்று விட்டிருப்பார்களோ!

இந்த எண்ணம் வந்ததும் அனிதாவின் முகம் அவனுடைய மனகண்கள் முன்னால் வந்தது. 'அப்படி ஏதாவது அசம்பாவிதம் நடந்திருந்தால் இந்த பெண் எத்தனை துடித்துப் போவாள்!' என்று நினைத்து வருந்தினான் அவன்.

ராகுல் கொலை செய்யப்பட்டிருந்தால் அவனுடைய உடல் எங்கே? மலைக்காட்டினுள் எங்காவது புதைத்து வைத்திருப்பார்களே! அப்படி புதைத்து வைத்திருந்தால் போலீஸ் நாய்களின் மோப்பத்தில் கண்டு பிடித்திருக்கலாமே! போலீஸ் நாயோ கோயிலைச் சுற்றி சுற்றியே வந்தது. கோயிலின் பின்புறத்து மலை சரிவைப் பார்த்து குலைத்துக் கொண்டு நின்று விட்டது. அந்த பள்ளத்தாக்கில் இறங்கி பார்த்த போலீஸ் குழுவுக்கு எதுவுமே அகப்படவில்லையே!

மோப்பம் கண்டுபிடிப்பதற்காக ராகுல் உபயோகித்த பொருட்கள் ஏதும் கிடைக்கவில்லை. அவன் உபயோகித்த பாத்திரங்கள்தான் கிடைத்தன. அது போதவில்லையோ என்னவோ! இப்பொழுது நான் சென்று தேடிப் பார்க்கப் போகிறேன். இரண்டு போலீஸ்காரர்களை உதவிக்கு அழைத்துக் கொண்டு

போய் தேடப் போகிறேன்' என்று அவன் தீர்மானித்து முடிக்கையில் அனிதாவின் போன் வந்தது.

இவைகள் நடந்த சமயம் காலை பொழுதாக இருந்தது.

''தலைவரையும், வைத்தியரையும் கூப்பிட்டு விசாரிச்சீங்களே, என்னாச்சு?'' என்று ஆர்வத்துடன் கேட்டாள் அனிதா.

பிரகாஷ் விவரமாகச் சொன்னான் நடந்தவைகளை. அதைக் கேட்ட அனிதா, ''அப்ப, நாம இன்னும் ஸ்டார்ட்டிங் பாயிண்டிலேதான் இருக்கோம்னு சொல்லுங்க'' என்றாள் ஏமாற்றத்துடன்.

''அப்படிச் சொல்லிவிட முடியாது. சில சந்தேகங்களுக்கு விளக்கம் கிடைச்சிருக்கு. அது வழி காட்டும்னு நினைக்கிறேன்.''

''நீங்க சொல்றது புரியலை.''

''இப்ப விளக்கிச் சொல்ல நேரம் இல்லை. தேடலை ஒரு புது கோணத்தில், புது வழியில் செய்யப் போகிறேன்.''

''எங்கே போகப் போறீங்க? நானும் வர்றேன்.''

பிரகாஷ் யோசித்தான். இவளைக் கூட்டிக் கொண்டு போக முடியாது. உன் அண்ணனின் உடல் அகப்படுகிறதா என்று தேடிப் போகிறேன் என்று சொல்ல முடியாது. உடல் கிடைத்து விட்டால் அவள் அடையப் போகும் அவஸ்தையை அவனால் காண இயலாது.

''வேண்டாம் மேடம்'' என்றான் பிரகாஷ். ''என் கூட ரெண்டு கான்ஸ்டபிள்கள் இருப்பாங்க. நீங்களும் வந்தா அசௌகரியமா இருக்கும்.''

''சரி, நான் வரலை'' என்று அவள் ஒத்துக் கொண்டது நிம்மதியளித்தது.

* * *

துளசி மெதுவாக கண்களைத் திறந்தாள். முதலில் எல்லாம் மங்கலாகத் தெரிந்தன. பின்னர் தன் தமையன் மணிவண்ணன் தலைமாட்டில் அமர்ந்திருப்பதைக் கண்டாள். அவனைக் கண்டதும் அவளுடைய உடலின் ஒவ்வொரு செல்லும் அச்சத்தின் வயப்பட்டு விறைத்தன. ''அண்ணாச்சி, நான் ஒண்ணும் செய்யலை. என்னை அடிக்காதே... அடிக்காதே...'' என்று அலறிவிட்டு அவள் மயக்கமானாள்.

''துளசி... துளசி...'' என பதட்டத்துடன் அழைத்த மணிவண்ணன் அவள் பதில் தராது போகவே போய் மருத்துவரை அழைத்து வந்தான்.

''நாடித் துடிப்பு அதிகமாக இருக்கு. அவள் கலவரமடையும்படியா எதுவும் சொல்லாதீங்க'' என்றார் துளசியை பரிசோதித்த மருத்துவர். ''நீங்க வெளியே போய் இருங்க. ஊசி போடப் போறேன். அப்புறம் நான் சொல்ற வரைக்கும் அவகிட்டே வராதீங்க'' என்றார் மணிவண்ணனைப் பார்த்து.

மணிவண்ணன் அறையை விட்டு வெளியே வந்து வராந்தாவில் இருந்த பெஞ்சில் அமர்ந்து

கொண்டான். அவனுக்கு அழுகை வந்தது. 'என்னை கண்டு இவள் இப்படி பயப்படுகிறாள் என்றால் அவளுடைய உடலில் வலியை தந்தது போல் மனதிலும் எத்தனை வலியை உண்டாக்கியிருப் பேன்!' என்று அவனுடைய மனம் அரற்றியது. 'துளசி, என்னை மன்னித்து விடு. உன்னை நம்பாத பாவியாகி போய்விட்டேன்...'

* * *

துளசி மெல்ல மெல்ல தன் மயக்கதினின்று மேலெழுந்து வந்தாள். தன்னருகே நின்றிருந்த மருத்துவரையும், தாதியையும் பார்த்து மிரள மிரள விழித்தாள். 'நான் எங்க இருக்கின்றேன்? இங்கே எப்படி வந்தேன்? எனக்கு என்ன ஆகிவிட்டது?' என்று அவளுள் எழுந்த பல கேள்விகளுக்கும் விடை தேடுவது போல் அவர்களைப் பார்த்தாள்.

மருத்துவர் அவளைப் பார்த்து புன்னகைத்தார். "நீ சீக்கிரமே குணமாகிவிடுவே. உன் வயித்திலே இருந்த கட்டியை அப்புறப்படுத்திட்டோம். இனி உனக்கு ஒண்ணும் ஆகாது."

"கட்டியா?"

"ஆமா. உன் வயித்திலேர்ந்து உன்னை இத்தனை காலமா வதைச்சுட்டிருந்தது கட்டிதான். நீ குழந்தை உண்டாகியிருப்பதா நெனச்சு உன்னை ரொம்ப அடிச்சதுக்காக உன் அண்ணன் பச்சாதாபப்படு றான்மா. இனி ஒரு போதும் அவன் உன்னை அடிக்க மாட்டான். பயப்படாதே."

துளசி கண்களை மூடினாள். வயிறு வலித்ததும், வலி பொறுக்க முடியாமல் அவள் சுருண்டு கீழே விழுந்ததும் நினைவுக்கு வந்தன. அவள் மீண்டும் கண்களைத் திறந்ததும் மருத்துவர் அவளைப் பார்த்து, "உன் அண்ணன் ரொம்ப வருந்துகிறான். அவன் உன்னை ரொம்ப நேசிக்கிறான்மா! உன்னை எப்படியும் குணப்படுத்திடணும்னு எவ்வளவு துடிச் சான் தெரியுமா! இப்ப வெளியே உக்கார்ந்து அழு திட்டிருக்கான். அவனை உள்ளே வரச் சொல்லட் டுமா?" என்றார்.

துளசி தலையசைத்தாள். 'தான் கர்ப்பமாக இல்லை' என்ற உணர்வே அவளுக்கு நிம்மதியளிப்ப தாக இருந்தது. அண்ணன் அழுது கொண்டிருப்பது விசித்திரமாக இருந்தது. மற்றவர்களை அழ வைக்க மட்டுமே தெரிந்திருக்கும் அண்ணன் அழுகிறானா! ஆச்சரியம்!' என்று நினைத்தவள் ஆயாசத்துடன் மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள்.

உள்ளே வந்த மணிவண்ணன் தங்கையைப் பார்த்தபடி நின்றான். அவள் கண்களைத் திறக்காமல் போகவே தொந்தரவு கொடுக்க வேண்டாம் என அவன் திரும்பி அறை வாசலை நோக்கி நடக்க முயற்சிக்கையில் துளசி அவனை அழைத்தாள். "அண் ணாச்சி..."

மணிவண்ணன் ஆவலுடன் அவளருகே வந்தான். "சொல்லும்மா, இப்ப எப்படி இருக்கு? என்னை மன்னிச்சுடும்மா" என்றான்.

''நான் பிள்ளை உண்டாயிருக்கலே அண்ணாச்சி. என் வயித்திலே இருந்தது கட்டின்னு டாக்டரு சொல்றார்'' என்றாள் துளசி மகிழ்ச்சியுடன்.

''ஆமாம்மா. உன்னைப் புரிஞ்சுக்காம போயிட்டேன் பாரு. மடையன். என்னை மன்னிச்சுடு.''

''பரவாயில்லே அண்ணாச்சி. சின்னதம்பிக்கும் சொல்லிடு. அவன் என்னைக் கண்ணாலம் கட்டிக் காட்டியும் பரவாயில்லை. நான் அவனை ஏமாத்தலைன்னு தெரிஞ்சுக்கணும்.''

''அவன்தாம்மா வண்டியிலே போட்டு உன்னை இங்கே கொண்டு வந்தான். நேத்து முழுக்க அவன் இங்கேதான் இருந்தான். அவனையும், அனிதா அம்மாவையும் நான்தான் கட்டாயப்படுத்தி ராத்திரி வீட்டுக்கு அனுப்பி வைச்சேன்.''

''யாரு அனிதா அம்மா?''

''ஓ, உனக்கு அவங்களைத் தெரியாதில்லே. பட்டணத்துப் பொண்ணு. ஊர் சுத்திப் பார்க்க வந்தவங்க, சின்னதம்பியோட வீட்டிலேதான் தங்கியிருக்காங்க'' என்றான் மணிவண்ணன்.

அப்பொழுது உள்ளே நுழைந்த அனிதா, ''எப்படிம்மா இருக்கே?'' என்று துளசியை விசாரித்தாள். ''என்ன அப்படிப் பார்க்கிறே! என் பேர் அனிதா. கடவுள் கிருபையாலே நீ பிழைச்சுட்டே. இரண்டு மூணு நாள்லே வீட்டுக்குப் போயிடுவே. உடம்பு நல்லா தேறுற வரைக்கும் ஓய்வு எடுக்கணும்'' என்றாள்.

அப்பொழுது தாதி வந்து அவர்களை வெளியே போகும்படி சொன்னாள். ''நோயாளிக்கு இப்ப ஓய்வு தேவை. தூக்க மருந்து ஊசி போடப் போறேன். அவள் தூங்கி ஓய்வெடுக்கட்டும்'' என்று அவர்களை வெளியே அனுப்பி வைத்தாள் தாதி.

* * *

வெளியே வந்ததும் அனிதாவை நன்றியுடன் பார்த்தான் மணிவண்ணன். ''முன்பின் தெரியாத வங்க. எந்த ரத்த உறவும் இல்லை. என்றாலும் எத்தனை செய்றீங்க! உங்களாலேதான் என் தங்கச்சி பிழைச்சா. இல்லேன்னா அந்த வைத்தியர் கொன்னே போட்டிருப்பார்'' என்று சொன்னவன் ''ஆமா, எனக்கு ஒண்ணு புரியலே, துளசி உண்டாயிருப்பதா வைத்தியர் ஏன் பொய் சொன்னார்!'' என்றான் தொடர்ந்து.

''பட்டணத்து டாக்டர் ராகுல் மேலே தப்பபிப் ராயம் உண்டாக்கத்தான். அப்பதானே கோயில் கொள்ளையையும், உங்கப்பாவைக் கொன்ற பழியையும் ராகுல் மேல் போடலாம்.''

''அப்ப அப்பாவைக் கொன்றது யார், வைத் தியரா?''

''யார் கண்டது! அதை இனிமேதான் கண்டுபிடிக் கணும். ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம், ராகுல் இந்த வேலையைச் செய்யலை'' என்றாள் அனிதா.

* * *

இரண்டு போலீஸ்காரர்களின் உதவியுடன் தன் தேடலைத் தொடங்கினான் பிரகாஷ். கோயில் வளாகத்திலிருந்து தேடலைத் தொடங்கினர். தரையில் பார்வையை கவனமாகப் பதித்தபடி கைத் தடியால் தரையைக் குத்திப் பார்த்தனர். தரையில் எங்காவது மண் இளகியிருந்தால் சமீபத்தில் தோண்டப்பட்டு மூடிய குழியாக இருக்கலாம் என அறிந்து கொள்ளும் நோக்கம் தான் அது.

ஆனால், அப்படி எந்த அடையாளமும் அவர்களுக்குத் தென்படவில்லை. எல்லா இடங்களிலும் தரை இறுகிப் போயிருந்தது. காட்டுப் பகுதியிலும் சென்று தேடினர். தனித்தனியாக பிரிந்து சென்று தேடினர். தேடல் குறிப்பிட்ட ஒரு இடத்தில் என்று இல்லாததால் தேடுவது சிரமமான காரியம் என்பது பரிகாஷுக்கு புரியவே செய்தது.

கடைசியில் அவன் களைத்துப் போனவனாக, மரத்தடி ஒன்றில் கிடந்த பாறாங்கல் மேல் அமர்ந்தான். பாறாங்கல் தரையை அழுத்திக் கொண்டு மண்ணிற்குள் புதைவது போல் தோன்றியது. அவன் சந்தேகத்துடன் பாறாங்கல்லைச் சுற்றிலும் தடியால் குத்திப் பார்த்தான். கால்களால் மிதித்துப் பார்த்தான். எந்த வித்தியாசமும் புலப்படவில்லை. மீண்டும் அந்தப் பாறாங்கல் மேல் அமர்ந்தான். சற்று முன்னால் அவன் பெற்ற அனுபவத்தை மீண்டும் பெற்றான். கல் தரைக்குள் லேசாக இறங்கியது போல் உணர்ந்தான்.

அவன் எழுந்து அந்த கல்லை அசைத்துப் பார்த் தான். அசைக்க முடியாதபடி அது நீண்டும், பெரிய தாகவும் இருந்தது. அவன் தன் சகாக்களுக்கு குரல் கொடுத்து அவர்களை அழைத்தான். மூன்று பேரும் சேர்ந்து அந்த கல்லை அகற்ற முயன்றனர். கடைசி யில் மிக சிரமப்பட்டு அதை நகர்த்தினார்கள்.

அந்த கல்லுக்குக் கீழே சமீபத்தில் தோண்டி மூடப்பட்டது போல் மண் மிருதுவாக இருந்தது. பரபரப்புடன் அவர்கள் அதைத் தோண்டத் தொடங் கினர்.

# 12

ஆஸ்பத்திரி வராந்தாவில் நின்று அனிதாவும், மணிவண்ணனும் பேசிக் கொண்டிருக்கையில் துளசியை பரிசோதித்த மருத்துவர் வந்தார். ''துள சிக்கு இனி ஆபத்தில்லை. அவள் பிழைத்துக் கொள்வாள்'' என்றார். பிறகு அவர் மணிவண்ணனை பார்த்து, ''இதோ பாருப்பா, ஆப்ரேஷன் நல்லபடியா நடந்து முடிஞ்சுட்டாலும் அவளை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போன பிறகும் கொஞ்ச காலம் கவனமா கவனிச்சுக்கணும்'' என்றவர் அவன் எந்தெந்த விஷயங்களில் எப்படியெப்படி கவனம் செலுத்த வேண்டும் என விளக்கினார்.

'துளசி பிழைத்துக் கொள்வாள்' என்ற வாக்கியமே அவனுடைய செவிகளில் அமிர்தமாக பாய்ந்தது. 'இது போதும். இனி என் தங்கையை நான் நன்றாக கவனித்துக் கொள்வேன்' என்று தனக்குள் தீர்மான மாக சொல்லிக் கொண்டான்.

''எல்லாம் உங்களால்தான் அனிதாம்மா'' என்றான் அனிதாவைப் பார்த்து. ''ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரும்படி நீங்கதான் கட்டாயப்படுத்துனீங்க. மருந்து, மாத்திரைன்னு எத்தனை செலவு செய்தீங்க! எல்லாத் தையும் எப்படி திருப்பி கொடுக்கப் போறானோ!'' என்றாள் உணர்ச்சி வசப்பட்டு.

''நான் திருப்பிக் கேட்டேனா! உங்க நிதி நிலைமை எனக்குப் புரியாதது இல்லை. நான் கிளம்பணும். சின்னதம்பி என்கூடதானே வந்தான். இப்ப வர் றேன்னு சொல்லிட்டுப் போனவன் எங்கே காணாமல் போயிட்டான்!'' என்று அனிதா சொல்லிக் கொண் டிருக்கையில் சின்னதம்பி வந்தான்.

''எங்கேப்பா போயிருந்தே?''

''கோயிலுக்குப் போயிருந்தேன். துளசி சீக்கிரம் குணமாகணும்னு கும்பிட்டுட்டு வந்தேன்'' என்றான் அவன்.

''அவள் குணமாயிடுவா. இனி பயமில்லேன்னு டாக்டர் சொல்லிட்டார். கோயில் பிரசாதம்னு எதையும் அவளுக்கு தின்ன கொடுக்காதே. கொஞ்ச நாளுக்கு பத்தியம் பார்க்கணும்'' என்றாள் அனிதா.

சின்னதம்பியை துளசியிடம் இருக்கச் சொல்லி விட்டு அனிதாவை அழைத்துக் கொண்டு மாட்டு வண்டியில் தன் கிராமத்தை நோக்கி பயணமானான் மணிவண்ணன்.

* * *

**ஊ**ருக்குள் வண்டி நுழைந்ததும் மணிவண்ணன் ஒரு விசித்திரமான காரியத்தைச் செய்தான். வழியில் தென்படுகிறவர்களையெல்லாம் அழைத்து உரத்த குரலில், ''கேட்டீங்களா, துளசி பிள்ளை உண்டா யிருக்கலே.

அடிவயித்திலே இருந்தது கட்டி. டாக்டரு அதை வெட்டி எடுத்துட்டாரு. என் தங்கச்சி எந்தத் தப்பும் செய்யலை...'' என்று சொல்லிக் கொண்டே சென்றான்.

'அட ச்சீ' என்று துளசி தப்பு செய்தவள் என நினைத்து அவளை அவதூறு பேசியவர்கள் இப் பொழுது அவள் குற்றமற்றவள் என்பது தெரிந்ததும் மகிழ்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை. 'அதற்கு எங்களுக்கென்ன!' என்று அலட்சியப்படுத்துவது போல் அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு பேசாமல் சென்றனர்.

வழியெங்கும் மணிவண்ணன் கத்திப் பேசியபடி சென்றான். சில இடங்களில் வண்டியை நிறுத்திப் பேசினான். கூடி நின்றவர்கள் என்ன ஏது என்று கேட்காத போதும் துளசி எப்படி வயிற்று வலியால் துடித்தாள், எப்படி மயக்கமானாள், அவன் எப்படி

அவளை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றான், அவளை பரிசோதித்த மருத்துவர் என்ன சொன்னார், எப்படி அறுவை சிகிச்சை செய்து கட்டியை அப் புறப்படுத்தினார் என்று எல்லாவற்றையும் பிரமிப் புடன் விவரித்தான். அவன் சொன்னவைகளை சுவாரசியத்துடன் கேட்டவர்கள், 'ஓ அப்படியா!' என்று வியப்பு காட்டியதோடு நிறுத்திக் கொண் டார்கள். மணிவண்ணனிடம் இருந்த உற்சாகத் திலோ, மகிழ்ச்சியிலோ நூற்றில் ஒரு பங்கைக்கூட யாரும் பிரதிபலிக்கவில்லை. அவர்கள் இதில் எதிலும் சம்பந்தப்படாதவர்களாயிற்றே, பின் ஏன் அது அவர்களை பாதிக்கப் போகுது!

மணிவண்ணன் படபடப்பு அடங்கி அமைதி யானதும் அனிதா அவனிடம் பேசினாள். "உங்க கிட்டே கொஞ்சம் பேசணும். நான் சொல்றதை அமைதியா கேளுங்க. இப்ப இத்தனை பேர்கிட்டே துளசி ஒரு பாவமும் அறியாதவள்னு கத்தி கத்தி சொன்னீங்களே, என்னாச்சு? உங்களுக்கு மன சமாதானம் கிடைச்சிருக்கு துளசி குற்றமற்றவள்னு உலகத்துக்கு தெரிஞ்சுட்டதுன்னு. ஆனா, அது தெரிஞ்சதும் இந்த உலகம் 'அப்படியா' என்று கேட்டு மௌனம் சாதிப்பதைத் தவிர வேறு என்ன செய்கிறது. துளசி எந்த பாவமும் செய்யாதவள்ங்கற செய்தி யாரை யும் பாதிக்கலே. யாரும் அவளுக்காக சந்தோஷப் படலே. யாருக்கும் அவளைப் பற்றி எந்த அக்கறையும் இல்லே. ராமர் ஆண்டால் என்ன, ராவணன்

மாண்டால் என்ன! என் வயிறு நிரம்பினால் போதும்னுதான் பொதுவா எல்லா மனிதர்களும் நினைக்கிறாங்க. இப்படிப்பட்ட மனிதர்கள் நாலு விதமா பேசுவாங்கன்னு பயந்து துளசியை அந்த பாடு படுத்தினீங்க'' என்ற அனிதா நிறுத்தினாள்.

''நான் சொல்றது புரியுதா? மனிதர்களின் குணமே அப்படித்தான். மத்தவங்ககிட்டே இருக்கும் நல்லதை பாராட்டத் தெரியாது. அவங்களோட குறைகளை மட்டுமே சுட்டிக் காட்டி பேசுவாங்க. ஒருத்தன் நல்லா இருந்தா பொறாமைப்படுவாங்க. மோசமான நிலையில் இருந்தா கேலி பண்ணுவாங்க. இதனாலே, பொதுமக்களின் பேச்சுக்கு தேவைக்கதிகமான முக்கியத்துவம் கொடுத்து நம்ம வாழ்க்கையை பாழடிச்சுக்கக் கூடாது.''

அனிதா தொடர்ந்து பேசினாள். ''ஒரே விஷயத்தைப் பற்றி நாலு பேர் நாலு விதமாகப் பேசுவாங்க. இவங்களையெல்லாம் திருப்திப்படுத்த முடியாது. இதனாலே, மத்தவங்க நம்மைப் பற்றி நல்லா நினைக்கணும், பேசணும்னு எதையும் செய்யாம சரி எது, தவறு எதுன்னு பார்த்து செய்றது நல்லது. துளசி கர்ப்பமா இருப்பதாக வைத்தியர் சொன்னது அவள் சம்பந்தப்பட்டவங்களை, அவளை நேசிப்பவர்களை மட்டுமே பாதிச்சுது. அப்படி பாதிக்கப்பட்டவங்களை பத்தி மட்டுமே நீங்க கவலைப்படணும். எல்லோரிடமும் அதிகமாக பாதிக்கப்பட்டவள் துளசிதான். அவளோட மனநிலை எப்படி

இருந்திருக்கும், அவள் எத்தனை வேதனை அடைஞ் சிருப்பான்னு நெனச்சு பார்த்திருக்கணும் நீங்க. இங்கே துளசிதான் முக்கியம், தூற்றவும், கேலி பேசவும் மட்டுமே தெரிஞ்ச பொதுமக்கள் இல்லே. துளசிக்கு உங்க ஆதரவு, பரிவு எல்லாம் தேவைப் பட்டன. அதை கொடுக்க யாரும் முன் வரலை. அவள் தப்பே செய்திருந்தாலும் அதைத் திருத்த என்ன செய்யணும்னு யோசிப்பது அவளுக்கு என்ன தண்டனை கொடுப்பதுன்னு தீர்மானிப்பதை விட முக்கியமானது.

...... அவளைப் புரிஞ்சுட்டு நடந்திருந்தா... முதல்லேயே அரசாங்க ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போயிருந்தா இன்று அவளுக்கு இந்நிலை ஏற்பட் டிருக்காது. எத்தனையோ மாசமா வயித்து வலியிலே துடிச்சிட்டிருந்தா, பாவம்... இப்பவும் அவ பிழைச்சது தெய்வாதீனம்தான்.''

அனிதா சொன்னவைகள் மணிவண்ணனுக்குப் புரிந்தன. 'ஊரும், உலகமும் என்ன சொல்லும்' என்பதில் அதிக கவனம் காட்டும் சாமான்ய மனிதன் அவன்; அதற்குப் பழக்கப்பட்டுப் போனவன். அதனால், அவன் மாற நாளாகலாம். என்றாலும், மாற வேண்டும் என்ற ஆசை இருந்தால் யாருமே தன்னை நல்ல வழிகளில் மாற்றிக் கொள்ளலாம். அவன் சிந்திக்கத் தொடங்கி விட்டான், அதனால் நிச்சயம் மாறுவான்.

''நீங்க சொல்றது சரிதாம்மா. வயித்துப் பிள்ளையை விழ வைக்க மருந்து கொடுத்தோம். அதிலே எந்த பலனும் தெரியாம போனதுமே ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போயிருக்கணும்...'' என்றான் அவன்.

''நடந்தது நடந்து விட்டது. இனிமேலாகிலும் எதையும் புத்திசாலித்தனமா யோசிச்சு செய்யுங்க'' என்றாள் அனிதா.

* * *

ஏறக்குறைய இரண்டடி ஆழம் தோண்டியதும் அது அவர்களின் கண்ணில் பட்டது. ஓரிரு கணங்கள் அதை பார்த்துக் கொண்டு நின்ற பிரகாஷ் அதை வெளியே எடுத்தான்.

அது ஒரு துணி பை. அதன் மேல் ஒட்டியிருந்த மண்ணை தட்டிவிட்டுத் திறந்து பார்த்தான். உள்ளே தங்க நகைகள் மின்னின. ஒவ்வொன்றாக வெளியே எடுத்தான்.

ஒரு சின்ன, மெலிந்த மாலை, இரண்டு காது தோடுகள் இவைகள்தான் பையினுள் இருந்தன. இந்த அற்ப நகைகளுக்காக ஒருவன் கொலை செய்திருக்கக் கூடுமா என்று நினைத்தான் பிரகாஷ். உடனே, 'ஏன் செய்திருக்க முடியாது. சொற்ப தொகைக்காக உயிரை வாங்குகிறவர்கள் இருக்கவே செய்கிறார்கள்' என்ற எண்ணமும் மனதில் ஓடியது.

பஞ்சாயத்து தலைவர் பஞ்சாமி சொன்னபடி தேவியின் கழுத்திலிருந்து காணாமல் போயிருந்த

அத்தனை நகைகளும் இருந்தன. அவைகளை வெளியே எடுத்த பின்னர் இன்னும் ஏதாவது இருக்கிறதா என்று பார்ப்பதற்காக பையினுள் கையை விட்டுத் துளாவினான். கையில் ஏதோ தட்டுப் பட்டது. அதை வெளியே எடுத்தான்.

அது ஒரு மூக்குத்தி. கண்களை கூச வைக்கும் வைரக் கல் பதித்த மூக்குத்தி. அதை வியப்புடன் பார்த்தான் அவன். இதன் விலை இலட்சக்கணக்கில் இருக்கக்கூடும். களவு போனதாக சொல்லப்பட்ட அம்மனின் நகைகளின் பட்டியலில் இந்த மூக்குத்தி இல்லை. மூக்குத்தியைப் பற்றி பஞ்சாமியோ, ஊர் மக்களோ சொல்லவில்லை. அப்படியாயின் இந்த மூக்குத்தி யாருடையது? இங்கே எப்படி வந்தது?

மேற்சொன்ன கேள்விகள் உதித்த பிரகாஷின் மனதில் ஒருவகை நிம்மதியும் தோன்றியது. ராகுலின் சிதைந்த உடலையோ, எலும்புக் கூட்டையோ எதிர் பார்த்து தோண்டியவன் அது கிடைக்காமற் போன தற்காக சந்தோஷமே அடைந்தான்.

தோண்டிய பள்ளத்தை மூடி அதன் மேல் பாறாங் கல்லை நகர்த்தி வைத்தனர் அவர்கள். பிறகு, நகை களை எடுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றான்.

நகை கிடைத்த விஷயம் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக இருக்க வேண்டும் என தீர்மானித்தான்.

* * *

அந்த வைர மூக்குத்தி (அதன் ஜொலிப்பைப் பார்த்தால் அது வைரமாகத்தான் இருக்கும்) அவனுள் ஆயிரம் கேள்விகளை எழுப்பியது.

இந்த மூக்குத்தி தேவியினுடையதாயின் அதுபற்றி யாருக்கும் எப்படி தெரியாமல் போயிற்று! எல் லோரும் சேர்ந்து பொய் சொல்வது சாத்தியமல்ல அல்லவா!

அம்மனின் நகைகளை திருடியவன்தான் இந்த மூக்குத்தியையும் திருடியிருக்கின்றான். அம்மனின் மூக்கில் இது இருந்திருக்கவில்லையென்றால் எங்கிருந்து கிடைத்தது திருடனுக்கு! இந்த பகுதியில் இவ்வளவு விலையுயர்ந்த மூக்குத்தி அணியக் கூடிய பணக்காரர்கள் யாரும் இல்லையே! இப்படி ஒரு மூக்குத்தி திருட்டுப் போன புகாரும் போலீஸ் ஸ்டே ஷனில் செய்யப்படவில்லையே!

'திருடியவன் திருட்டு நடந்த பகுதியிலே நகை களை எப்படி மறைத்து வைத்துவிட்டு ஓடிப் போவான்! தன்னுடனல்லவோ எடுத்துச் செல்வான்! அப்படியாயின் திருடன் இந்த ஊரைச் சேர்ந்தவனாக இருக்கக் கூடும். விஷயம் அடங்கிய பிறகு நகை களை விற்று பணமாக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் புதைத்து வைத்திருக்கலாம்', இப்படி பலவாறு எண்ணிய பிரகாஷுக்கு திருடன் நிச்சயமாக ராகுல் இல்லை என்பது புலனாகியது. அவனாக இருந்தால் களவாடிய நகைகளை தன்னுடல்லவா எடுத்துச் செல்வான்!

அப்படியாயின் ராகுல் எங்கே? அவன் எங்கே, எப்படி காணாமல் போனான்?

ராகுல் இந்தக் கொலையையும், கொள்ளையும் செய்யவில்லையெனில் செய்தது யார்?

யாராவது வெளியூர்காரனா? வெளியூர்காரன் கொள்ளையடித்த பொருளை இங்கே ஏன் விட்டு விட்டுப் போவான்!

குண்டப்பனை மீண்டும் விசாரிக்க வேண்டும். அவன்தான் எல்லோரையும் அதட்டி, மிரட்டி பிடுங்கிக் கொண்டிருக்கின்றான். இப்பொழுது அவனை அதட்டி, மிரட்டி உண்மையை கக்கச் செய்ய வேண் டும் என நினைத்தபடி பிரசாத் எழுந்தான். தொப் பியை மாட்டிக் கொண்டு ஜீப்பை நோக்கி நடந் தான்.

* * *

குண்டப்பன் வழக்கமாக சோம்பிப் படுத்திருக்கும் வீட்டு முற்றத்து கயிற்றுக் கட்டில் வெறுமையாக இருந்தது. குடிசை வாசலில் பூட்டு தொங்கியது.

குண்டப்பனின் வீட்டுப் பக்கத்தில்தான் தங்கப் பனின் வீடு இருந்தது. குண்டப்பனைப் பற்றி விசா ரிக்கும் நோக்கத்துடன் தங்கப்பனிடம் சென்றான் பிரகாஷ். தங்கப்பன் சோகமே உருவாக அமர்ந்திருந் தான்.

''குண்டப்பன் எங்கே போயிருக்கான் தெரியுமா?'' என்று கேட்டான் பிரகாஷ்.

''அவன் ஓடிப் போயிட்டான். கொள்ளையடிச் சுட்டு ஓடிப் போயிட்டான்'' என்றான் தங்கப்பன்.

'அட, இது இவனுக்கு எப்படித் தெரிந்தது!' என்று வியந்த பிரகாஷ் ஆவலுடன், ''உனக்கு எப்படித் தெரியும்? யார் சொன்னது?'' என்று கேட்டான்.

''எனக்கு எப்படித் தெரியாமப் போகும்! என் பணத்தையல்லவா கொள்ளையடிச்சுட்டுப் போயி ருக்கான்'' என்றான் தங்கப்பன் எரிச்சலும், கோபமு மாக.

'புஸ்' என்றாகி விட்டது பிரகாஷுக்கு. ''இது என்ன புதுசா! உன்னோட பணத்தை களவாடிட்டுப் போயிட் டானா?''

''ஆமா. அந்த வடநாட்டுக்காரங்க இருநூ ரூபா கொடுத்திருக்காங்க. இங்கேதான் சுவாமி படத்துக்கு முன்னாலே வைச்சிருந்தேன். அடுப்படியை ஒதுக் கிட்டு வந்து பார்த்தா பணத்தைக் காணோம்! கூடவே இவனையும் காணோம்!'' என்றான் தங்கப்பன். அவனுடைய குரல் தளர்ந்திருந்தது. அதில் ஏகமாய் வருத்தம் தொனித்தது.

''இருநூறு ரூபாய்க்காக அவன் ஊரைவிட்டே ஓடிப் போயிருப்பான்னு நெனக்கிறீயா?'' என்ற பிரகாஷ் 'அவன் திருடியது உன் பணத்தையல்ல, கோயில் நகைகளை. மறைத்து வைத்திருந்த நகை களை நான் கண்டுபிடித்ததை அவன் எப்படியோ அறிந்து கொண்டு ஓடிப் போய்விட்டான்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

தங்கப்பன் அவனைப் பார்த்து, ''ஏம்மா போலீஸ், நீ அவனைத் தேடி கண்டுபிடித்து என் பணத்தை வாங்கி தாய்யா'' என்றான்.

''கட்டாயம்'' என்று உறுதியளித்தான் பிரகாஷ். ''அவனை் தேடிக் கண்டுபிடிப்பதுதான் என் முதல் வேலை. இப்ப சொல்லு, எப்போதிருந்து அவனைக் காணவில்லை?''

''ம்....'' என்று மோவாயைத் தடவியபடி யோசித்தான் தங்கப்பன். ''சாப்பாடுக்கு சொன்னப்பவே பணத்தை வாங்கிட்டேன். அத சுவாமி படத்துக்கு முன்னாலே வைச்சேனா... அடுப்படிக்குப் போனேனா.... அப்புறம் நீங்க வந்துட்டுப் போனீங்களா... நீங்க சாப்பிட்டுட்டுக் கிளம்பியதும் பணம் தந்தீங்களா... சுவாமி படத்துக்கு முன்னாலே வைச்ச படத்தை எடுக்கப் போனேனா.... பணத்தைக் காணலை. குண்டப்பனைத் தேடினேன். அவனையும் காணலை...''

''அவன்தான் எடுத்திருப்பான்னு எப்படிச் சொல்ல முடியும்? காத்திலே பறந்து விழுந்திருக்கும். வீட்டுக்குள்ளே நல்லா தேடிப் பாரு'' என்று அவனுக்குச் சொல்லிவிட்டு குண்டப்பனின் வீட்டில் தொங்கிய பூட்டைப் பார்த்தான் பிரகாஷ்.

காலையில் காவல்துறைக்குப் போகாது நேரே இங்கே வந்திருந்தால் குண்டப்பனைப் பிடித்திருக்கலாம் எனத் தோன்றியது. கேஸ் விஷயமாக சில

வேலைகள் இருந்தன. முன்தினம் கண்டுபிடித்த நகைகளைப் பட்டணத்துக் காவல்துறை லாக்கரில் வைத்துவிட்டு வந்திருந்தான். அது சம்பந்தமாக மேலதிகாரியுடன் மீட்டிங் வேறு இருந்தது. எல்லா மாகச் சேர்ந்து தாமதமாகி விட்டது.

இப்பொழுது குண்டப்பனைப் பார்த்தாக வேண் டும். அவனை கண்டுபிடித்தேயாக வேண்டும். அவன் ஓடிப் போயிருந்தாலும் அதிக தூரம் போயி ருக்க முடியாது.

பிரகாஷ் ஜீப்பில் ஏறிக்கொண்டு புறப்பட்டான்.

* * *

குண்டப்பன் எங்கெங்கெல்லாம் போகக்கூடிய வாய்ப்பு உண்டோ அங்கெல்லாம் போலீஸார் தேடிப் பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பினர்.

பிரகாஷ் ரயில்வே நிலையத்தில் போய் விசா ரித்தான். எண்ணி ஒரு சிலரே வண்டியில் ஏறுவ துண்டு என்பதால் ரயில்வே நிலைய அதிகாரி குண் டப்பன் ரயில் ஏறியிருந்தால் நிச்சயம் அறிந்திருப் பார். அவன் ரயில் ஏறிச் சென்றதாக அவர் சொன் னதும் அவனுக்காக அங்கேயே காத்திருப்பது என்று தீர்மானித்தான். எந்த ஊருக்குப் போயிருப்பது தெரி யாத நிலையில் எப்படித் தேடுவது.

'சாயங்காலம் ஒரு வண்டி வரும். அதில் திரும்பு கிறானா என்று பார்க்கலாம். அவன் திரும்பி வர வில்லையென்றால் தேடலை விரிவுபடுத்த வேண்டி யிருக்கும்.

குண்டப்பன் அவனுக்கு அதிக சிரமம் வைக்க வில்லை. சாயங்காலம் வந்த வண்டியிலிருந்து இறங்கினான். இறங்கியவன் நேரே பிரகாஷிடம் வந்தான்.

"ஏய் போலீஸு, பட்டணம் போறீயா? போ. போய் சாராயம் குடிச்சுட்டு வா" என்றான் சற்றே குளறிய படி. அவனுடைய வாயினின்று சாராய வாடை வீசியது.

"நீ குடிச்சிருக்கே..." என்றான் பிரகாஷ்.

"ஆமா. எங்க ஊரு கள்ளைவிட இந்த சாராயம் ரொம்ப மோசம். அதுக்கு போய் இம்மாம் பணம் புடுங்குறாங்க."

"உங்கிட்டே பணம் ஏது? எங்கேர்ந்து களவாண்டே?" என்று மிரட்டினான் பிரகாஷ்.

"யோவ், ஆளை மிரட்டி பிடுங்கத்தான் தெரியும். களவாடுற வேலையெல்லாம் எங்கிட்டே கிடை யாது" என்று பதிலுக்கு மிரட்டினான் அவன். 'களவு செய்வது தப்பு, ஆனால் மிரட்டி பணம் பறிப்பது சாமர்த்தியம்' என்று நினைப்பவன் அவன் என்பது அவனுடைய பேச்சிலிருந்து தெரிந்தது. அவனுடைய அந்த எண்ணம் பிரகாஷிடம் சிரிப்பை உண்டாக் கியது. இன்று அரசாங்க வேலை செய்கிறவர்களும் லஞ்சம் என்கிற கொள்ளையை தம் சாமர்த்தியம் என்று தானே நினைக்கிறார்கள்.

"தங்கப்பனோட பணத்தை நீ களவாடலை."

"களவாட வேண்டிய தேவையே இல்லை எனக்கு. கண்களை உருட்டி மிரட்டினாலே எல்லோரும் பணம் தந்துடறாங்க. வெளியூர்காரங்க ரெண்டு பேர் வந் திருந்தாங்களா, அவங்க தந்த பணம்" என்ற குண் டப்பன் எதையோ நினைத்துக் கொண்டு 'களுக்' என சிரித்தான். "உங்களுக்கு இங்கே என்னய்யா வேலை? எதுக்கு எங்க ஊருக்கு ஓடி ஓடி வர்றீங்க? போலீசுக்கு பயந்து ஓடி ஒளியறீங்களா? ஒண்ணும் தராம போனா வுடமாட்டேன்னு மிரட்டினேன். அவங்க ஆளை வுட்டா போதும்னு ஐநூறு ரூபா நோட்டை தந்துட்டுப் பூட்டாங்க. க்ளுக்..."

"இப்ப எதுக்கு சிரிக்கிறே?"

"ஐந்து பத்து கிடைக்கும்னு நெனச்சேன். அவங்க ஐநூறு ரூவா நோட்டைத் தந்தாங்க. அத நெனச்சா சிரிப்புத்தான் வருது. போலீஸ் பேரை எடுத்ததும் அவங்க மூஞ்சி போன போக்கைப் பார்க்கணுமே, நீ அப்ப அங்கே இருந்திருக்கணும்."

பிரகாஷ் உடனே முகம் மாறினான். 'போலீஸ்' என்றதும் கலவரமடைந்தார்களா! ஏன்? ஒருவேளை இந்த மல்லிமலை கொள்ளை, கொலைக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இருக்குமா!

குண்டப்பன் இன்னமும் உளறிக் கொண்டு இருந்தான். "..... இந்த சாராயம்... அதான் விஸ்கியோ புஸ்கியோ எதுவோ ஒண்ணு நீ குடிப்பியா? நம்ம ஊர் கள்ளிலே இருக்கிற 'கிக்' இதிலே இல்லை."

பிரகாஷ் தன் சிந்தனையை விலக்கி வைத்து விட்டு மீண்டும் குண்டப்பனிடம் வந்தான். "அப்ப, தங்கப்பனோட பணத்தை நீ எடுக்கலை?"

"அதான் சொன்னேனே, களவு செய்ற வேலை என்னுது இல்லை..."

குண்டப்பன் குளறியபடி உளறினான். குடி போதையில் இருப்பவன் பொய் சொல்ல முடியாமல் உண்மையை கக்கி விடுகின்றான். குடி போதையில் ஒருவனின் உண்மை சொரூபம் வெளிப்படுகின்றது. அதனால், குண்டப்பன் உண்மையைத்தான் பேசு கிறான் என நம்பினான் பிரகாஷ்.

"கோயில் நகைகளை ஏன் கொள்ளையடிச்சே?" என்று அடுத்த கேள்வியை கேட்டான் அவன். களவு செய்வது தன்னுடைய வேலையில்லை என்று குண்டப்பன் சொல்லியிருந்த போதிலும், 'அம்ம னுக்கு நகைகள் தேவையில்லை. அதனால் அவை களை எடுத்துக் கொள்வது களவு ஆகாது' என்று குதர்க்கமாக அவன் நினைக்கலாமல்லவா என்ற நப்பாசையில் கேட்டான்.

"யோவ், நீயும் குடிச்சிருக்கியா, ஏகமா உளர்றீயே! நான் எதையும் களவு செய்யலை. போக வுடு என்னை" என்று மேலே நடக்கத் தொடங்கியவனே கட்டாயப்படுத்தி ஜீப்பிலே ஏற்றி போலீஸ் ஸ்டேஷ னுக்கு அழைத்துச் சென்றான்.

* * *

வழியெங்கும் பேசிக்கொண்டேயிருந்தான் குண் டப்பன். ''பட்டணம்னா பட்டணம்தான். ஆஹா...! எத்தனை ருசியான சாப்பாடு...! எத்தனை விதமான சாராயம்...!' எத்தனை அழகான பெண்கள்..! அதை யெல்லாம் வுட்டுட்டு இந்த காட்டிலே வந்து ஏன் காய்கிறே?''

பிரகாஷ் பதிலேதும் சொல்லாமற் போனாலும் தொடர்ந்து பேசினான் குண்டப்பன். ''... தடுக்கி விழற இடமெல்லாம் கடைகள். சனங்க அப்படி என் னத்தை வுழுந்து வுழுந்து வாங்குறாங்கன்னு தெரி யலை எங்கே பார்த்தாலும் சனங்க சனங்க. எங்கேர்ந்து இத்தனை பேர் வர்றாங்க! இம்மாம் பேர் சுவாசிக்க காத்து இருக்குதா?''

'காற்றுக்கெல்லாம் பஞ்சமில்லை. சுத்த காற்று தான் இருப்பதில்லை. பொது ஜனங்கள் முதல் தொழிற்சாலை அதிபர்கள் வரை சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும், இல்லையேல் அந்த அசுத்தத்தில் நாமதான் வாழ்கிறோம், இந்த அசுத்த காற்றை நாமதான் சுவாசிக்கின்றோம் என்ற உணர்வின்றி இருக்கின்றார்கள்!' என்று நினைத்தான் பிரகாஷ்.

''யோவ்... என்னய்யா பதிலே பேசாம இருக்கே?''

''இதையெல்லாம் கவனிச்ச நீ பட்டணத்திலே மட்டுமில்லே, உலகத்தின் எந்த மூலையிலும் உழைக்கிறவங்கதான் கௌரவமா வாழறாங்கங்றதை

கவனிக்கலையா? நேர்மையா உழைச்சு சம்பாதிக் கிறவன்தான் தலை நிமிர்ந்து நடக்கிறான். அவன் எதற்கும், யாருக்கும் பயப்பட வேண்டிய தேவை இல்லை. நீ ஏன் இப்படி காவாலித்தனம் செய்து உன்னையே தாழ்த்திக்கிறே? உன்னைக் கண்டு மக்கள் பயப்படுறாங்கன்னா அது உனக்கு கேவலம்ங்கறது புரியலையா? எத்தனை பேர் உன்னைப் பத்தி எத்தனை விதமா பேசறாங்க, அது உனக்கு உறைக் கலையா?''

பிரகாஷ் சொன்னதைக் கேட்ட குண்டப்பன் எதிர்பாராத ஒரு காரியத்தை செய்தான். அவன் கேவி கேவி அழத் தொடங்கினான். ''எங்கப்பாரு செத்து போனப்புறம் நான் அனாதையாயிட்டேன். என்னை ஏன்னு கேப்பாரில்லை. ஒரு வாய் கஞ்சி ஊத்து வாரில்லை. 'அனாதை, புறம்போக்குன்னு ஒதுக்கித் தள்ளினாங்க. ஒரு வாய் சோத்துக்காக நாய் படாத பாடுபட்டேன். நானும் மனுஷன்தான்னு அவங் களுக்குக் காட்ட விரும்பினேன். எனக்குன்னு யாரு இல்லாட்டியும் எனக்கு நான் இருக்கேன்னு உணர்த்த விரும்பினேன். நான் கண்களை உருட்டிட்டு மிரட் டியபொழுது என்னை அலட்சியம் செய்தவங்கள்லாம் அடங்கிப் போயிட்டாங்க. என்னைப் பார்த்துப் பயப்படத் தொடங்கினாங்க...''

பேசிக்கொண்டிருந்த குண்டப்பன் தன் பேச்சை நிறுத்தினான். கூடவே அழுகையையும் நிறுத்திக் கொண்டு சிரித்தான். ''எனக்குத் தெரியும் ஒய்,

இப்பவும் எனக்குன்னு யாருமில்லே. நான் தனிதான். ஆனா, இப்ப என்னை யாரும் கேலி செய்யலை, பயப்படறாங்க. என் சக்தி அவங்களுக்கு புரிஞ்சு போச்சு.''

பிரகாஷ் அவனை பரிதாபத்துடன் பார்த்தான். மனித துணைக்காக, மனிதர்களின் அன்பிற்காக அவன் ஏங்குவதை அவனுடைய பேச்சும், கண்களும் தெரிவித்தன. தான் விரும்புவதை பெறுவதற்காக அவன் தேர்ந்தெடுத்திருக்கும் வழி தவறானது என்பதை அவனுக்கு உணர்த்த விரும்பினான் பிரகாஷ்.

''உன்னைப் பத்தியும், மத்தவங்களைப் பத்தியும் சரியாக புரிஞ்சுக்காம உன்னை நீயே ஏமாத்திட் டிருக்கே. உன்னோட அடாவடித்தனமும், மிரட்டலும் உன் சக்தியில்லை; அது உன்னோட பலவீனம்; நேர்வழியில் உழைத்து சம்பாதிக்கத் தெரியாத அறிவீனம். நல்லது, கெட்டது அறிந்து கொள்ளாத மடத்தனம். உன்னைப் பார்த்து மத்தவங்க பயப்படு றாங்கன்னா அது உனக்கு அவமானம் குண்டப்பா. உனக்கு மரியாதை தந்தாதான் அது உன்னோட கௌரவம்.

உன்னை நீ நிரூபிக்க விரும்பினா. அட, பரவா யில்லையே! இந்த பையன் என்னமா உழைக்கிறான்! எத்தனை நியாயமா நடந்துக்கிறான்னு மத்தவங்க மூக்கின் மேல் விரலை வைச்சு வியக்கும்படியா நீ நடந்துக்கணும். குண்டப்பன்ங்கறதைவிட நல்ல

வன்ங்கற அடையாளம்தான் உனக்கு பெருமை. ஆமா, உன்னுடைய நிஜப் பெயர் என்ன?''

ஜீப்பைச் செலுத்திக் கொண்டு சென்ற பிரகாஷ் பதில் கிடைக்காமல் போகவே திரும்பிப் பார்த்தான். பின் இருக்கையில் அமர்ந்திருந்த குண்டப்பன் திறந்திருந்த வாயிலிருந்து எச்சில் வழிய உறங்கிக் கொண்டிருந்தான்.

பிரகாஷ் லேசாக சிரித்துக் கொண்டான். 'தான் சொன்னதில் எத்தனை சதவிகிதம் அவனுடைய காதில், விழுந்ததோ, எத்தனை அவனுடைய கருத்தில் பதிந்ததோ தெரியவில்லை என்று நினைத்தான். 'இவன் வழி தவறிய பிள்ளை. சரியான பாதை காட்டினால் திருந்தி விடுவான். நம்முடைய வாழ்க்கையை சந்தர்ப்ப சூழ்நிலைகளை சார்ந்து அமைத்துக் கொள்ளக் கூடாது. எந்நிலையிலும் சரியான பாதையில்தான் நடக்க வேண்டும். நமக்கு நடப்பவைகளிலிருந்து பாடம் கற்று வாழ்க்கையை முன்னேற்றிக் கொள்ள வேண்டுமேயொழிய சந்தர்ப்ப சூழ்நிலைகளை காரணம் காட்டி ஏனோ தானோவென்று நடக்கக் கூடாது. எத்தனையோ வரலாற்று புருஷர்களும், ஞானிகளும் எத்தனை சங்கடங்களை வாழ்க்கையில் சந்தித்திருக்கின்றார்கள்! அவர்கள் துவண்டு போய்விடவில்லை; தம் மனிதாபிமான நிலையிலிருந்து வீழ்ந்து விடவில்லை. அவர்கள் தம்முடைய சுய கௌரவத்தை இழந்து விடாமல் உறுதியாக நின்று வாழ்க்கையில் முன்னுக்கு வந்தார்கள் என்பதை

யெல்லாம் இவனுக்கு சொல்லி வாழ்க்கையையும், வாழும் முறையையும் புரிய வைத்தால் புரிந்து கொள்வான்.

மேற்சொன்னபடி நினைத்த பிரகாஷின் மனதில் இன்னொரு விஷயமும் பளிச்சிட்டது. அதாவது இப்படி மற்றவர்கள் மேல் அக்கறை காட்டி புத்தி சொல்வது அவனுடைய வழக்கம் இல்லை என்பது தான் அது. இந்த ராகுலுடனும் அவனுடைய தங்கை அனிதாவுடனும் பழக்கம் ஏற்பட்டதிலிருந்து தான் எப்படி மாறிப் போனோம் என்று வியந்தான். இதைத் தான் 'நல்லோர் சொல் கேட்பதும் நன்று, நல்லோரோடு இணங்கியிருப்பதும் நன்றே' என்ற பழமொழி சொல்கிறது.

இப்பொழுது இந்த குண்டப்பனை என்ன செய்வது என்று நினைத்தான். குடிபோதையில் இவன் கக்கிய விஷயங்களைத் தெளிந்த நிலையில் இருக்கும் பொழுது மீண்டும் அவனுடன் பேசி உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும் என தீர்மானித்தவன் அவனை போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய் சேர்த்தான்.

களைப்பாக இருந்தது. வீட்டிற்குப் போய் ஓய் வெடுக்கலாம் என நினைத்துக் கொண்டிருக்கையில் அனிதாவின் போன் வந்தது. "உங்க உதவி தேவை" என்றாள் அவள் வினயமாக. அவளுடைய குரலைக் கேட்டதுமே அவனுடைய களைப்பு பறந்து போய் விட்டது. இதுவரை அவனை ஈர்த்த பெண்களிடம் இல்லாத ஏதோ ஒன்று அவனை முழுவதுமாக

அவளிடம் கட்டிப் போடுவதை உணர்ந்தான் பிரகாஷ்.

"சொல்லுங்க, நான் என்ன செய்யணும்?" என்றான் உற்சாகமாக.

"துளசியை டிஸ்சார்ஜ் செய்றாங்க. அவளை வீட்டுக்கு கூட்டிட்டுப் போகணும். இப்பதான் ஆப் ரேஷன் ஆயிருக்கு. மாட்டு வண்டியில் லொடக்கு லொடக்குன்னு..."

"ஜீப்பிலே அவளை கூட்டிட்டுப் போகணும், அவ்வளவுதானே!" அனிதாவின் முகம் மலர்வதை தன் மன கண்களால் பார்த்து பிரகாஷும் மலர்ந்தான்.

"ஆமா, மன்னிச்சுடுங்க. அரசாங்க வண்டியை இப்படி தனி உபயோகத்துக்கு..." என்றான் அனிதா தயங்கியபடி.

"பரவாயில்லை. நாம என்ன, உல்லாச பயணமா போறோம்! ஒரு நோயாளியை ஏத்திட்டுப் போறோம். பொதுமக்களின் சேவைக்காகத்தானே அரசாங்கம் இருக்கு. ஒரு நல்ல காரியத்துக்காக ஜீப்பை உப யோகப்படுத்த எந்த குற்றவுணர்வும் கொள்ள வேண்டாம்.

* * *

ஜீப் மல்லிமலை கிராமத்துக்குள் நுழைந்த பொழுது மாலை மறைந்து இரவு எட்டி பார்த்துக் கொண்டிருந்தது. காடுகளில் (வயல்களிலும், தோட் டங்களிலும்) வேலை செய்பவர்கள் தத்தம் வீடு

திரும்பி விட்டிருந்தனர். தெருவில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளை அவர்களுடைய தாய்மார்கள் அதட்டி அழைத்துக் கொண்டிருந்தனர். "ஏலேய், சோறு துண்ண வாங்கல..." ஆறரை, ஏழு மணிக்கெல்லாம் சாப்பிட்டுவிட்டு உறங்கத் தயா ராகும் கிராமம் அது.

பகல் முழுவதும் காய்ந்து கொண்டிருந்த வெயிலை விரட்டி விட்டு கிராமத்தை ஆக்கிரமித்துக் கொண்ட வாடை காற்று இதமாக இருந்தது. எங்கிருந்தோ வந்த மீன் குழம்பின் வாசனை பிரகாஷின் பசியைத் தூண்டியது. பசி வந்ததும் தங்கப்பனின் நினைவு வந்தது. 'குண்டப்பனை கண்டுபிடித்தாயா, என் பணத்தை வாங்கி வந்திருக்கியா' என்று அவன் கேட்டால் என்ன சொல்வது!'

தங்கப்பனை தவிர்ப்பதற்காக அவனுடைய வீடு நெருங்கியதும் வண்டியை வேகமாக செலுத்தினான் பிரகாஷ். வீட்டு வாசலிலே நின்றிருந்த தங்கப்பனோ ஜீப்பை கண்டதும் ஓடி வந்தான். "ஜீப்பை நிறுத் துய்யா. எங்கே அவசரமா போறே?"

அவன் கேட்பதற்குள் பிரகாஷ், "இதோ பாருப்பா, குண்டப்பனைப் பார்த்தேன். அவன் உன் பணத்தை எடுக்கலை" என்றான்.

"தெரியும்" என்றான் தங்கப்பன் வாயெல்லாம் பல்லாக. "நீ அப்பாலே போனதும் இந்தப் பக்கம் காத்திலே பறந்து வுழுந்து கிடந்தது."

''சரியா தேடிப் பார்க்காம என் உயிரை வாங் கிட்டே. சரியான ஆளுப்பா நீ.''

* * *

துளசியின் வீடு வந்ததும் துளசியின் தாயும், அனிதாவும் துளசியை கைத்தாங்கலாக வீட்டினுள் அழைத்து சென்று படுக்க வைத்தனர். ''நல்லா ஓய்வெடுக்கணும்மா. ஒரு வருஷம் வரைக்கும் எந்த வெயிட்டையும்... அதாவது கனமான பொருளையும் தூக்கக் கூடாது. களைச்சுப் போகும் வரை வேலை செய்யக் கூடாது'' என்று கண்டிப்புடன் கூறியவள் மணிவண்ணனிடமும், அவனுடைய தாயிடமும், ''உங்களுக்கும் சேர்த்துதான் சொல்றேன், அவளிடம் வேலை வாங்காதீங்க. டாக்டர் சொன்னபடி பத்திய சாப்பாடு கொடுங்க. ஒரு வாரத்திலே கூட்டிட்டுப் போய் காட்ட சொல்லியிருக்காரே, அத மறந்துடா தீங்க'' என்றாள்.

மணிவண்ணன் கையெடுத்துக் கும்பிட்டான். ''ரொம்ப உதவியா இருந்தீங்க. யாரு எவருன்னு தெரியாத எங்களுக்கு எத்தனை ஒத்தாசையா இருந்தீங்க'' என்றான் உணர்ச்சி வசப்பட்டவனாய்.

''மனிதன் தன் சக மனிதனுக்கு செய்ய வேண்டிய சாதாரண உதவி இது. இன்று இந்த மானுட தர்மத்தை, மனித கடமையை மக்கள் மறந்து விட்டதால் என் செய்கை பெரிசா தோணுது. உங்களுக்கு அ.... அப்படி ஒரேடியா சொல்லிட முடியாது. மனிதத்

துவத்தை மறக்காத மனிதர்கள் இன்றும் நிறைய பேர் இருக்கிறார்கள்'' என்ற அனிதா வீட்டை விட்டு வெளியே வந்தாள். அவளுக்குப் பின்னாலே தொடர்ந்து வந்த சின்னதம்பி, ''நான் கொஞ்ச நேரம் கழிச்சு வரலாம்னு இருக்கேன். நீ தனியா போயிடு வியா?'' என்று கேட்டான்.

இருட்டில் தெருவிளக்குகள் லேசான ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தன. அந்த கிராமத்தில் இன்னும் மின்சாரம் வந்திருக்கவில்லை என்பதால் தெருவோர தூண்களில் மண்ணெண்ணெய் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

''தனியா போவதற்கென்ன! நீ மெல்ல வா'' என்று சொல்லிவிட்டு ஜீப் அருகே நின்றிருந்த பிரகாஷை நோக்கி நடந்தாள். 'இதென்ன காதல்! காதல் என்றால் அன்பின் இன்னொரு பெயர் என்றுதான் இதுவரை நினைத்திருந்தேன். காதல் என்பது அன்பு என்றால் தான் நேசிக்கும் துளசியை சின்ன தம்பியால் எப்படி புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று! ஒருவேளை காதல் என்றால் வெறும் உடல் கவர்ச்சி, ஈர்ப்பு தானோ!' என்ற ரீதியில் நினைத்துக் குழம்பினாள் அவள்.

''என்ன யோசிக்கிறீங்க?'' என்று தன்னை நெருங்கிய அனிதாவைக் கேட்டான் பிரகாஷ்.

''காதல்னா என்னன்னு யோசிச்சிட்டிருந்தேன் என்றாள் அனிதா. ''நீங்க என்ன நினைக்கிறீங்க? காதல்னா என்ன?'' என்று அவனிடம் கேட்டவள்

எந்த பதிலையும் எதிர்பார்த்து காத்திராமல் தன் வழியே நடந்தாள்.

அவளுடைய கேள்வி அவனைப் பரவசப்படுத்தியது. இவள் என்னிடம் ஏன் இப்படியொரு கேள்வியை கேட்டாள்! காதலைப் பற்றி இப்பொழுது எது அவளை நினைக்கத் தூண்டியது. ஒருவேளை... ஒருவேளை அவளுக்கு என் மேல் காதல் உண்டாகியிருக்குமோ!' என்று நினைத்துப் புழாங்கிதமடைந்தான்.

'காதல் என்றால் என்னவென்று சொல்கிறேன் அனிதா. ஒருவரை பார்க்கும் பொழுதெல்லாம் மனம் பரவசப்பட்டுப் போகும், துள்ளி குதிக்கும்... அவருடைய நினைவே மனதில் ஏகமாய் மகிழ்ச்சியை உண்டாக்கும்... அவரை மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என மனம் துடிக்கும் உங்களைப் பற்றி எனக்குத் தோன்றுவது போல். அதுதான் காதல்! இதை அவன் சொல்லவில்லை. அவன் சொல்வதைக் கேட்க அனிதாதான் அங்கே இல்லையே.

அவள் போவதையே பார்த்துக் கொண்டு நின்றான் பிரகாஷ். அவள் கண்களிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றான். அவளுடன் சிறிது நேரம் பேச வேண்டும் என அவளுக்காகக் காத்திருந்தவன் சற்றே ஏமாற்றம் அடைந்திருந்தான். ஒரு நீண்ட பெருமூச்சுடன் ஜீப்பில் ஏறி அமர்ந்து அதைச் செலுத்தத் தொடங்கினான். அப்பொழுது சற்று

தூரத்தில் முக்காடு அணிந்து முகத்தை மூடியபடி இருவர் மலை காடுகளை நோக்கிச் செல்வது தெரிந்தது.

இருள் பரவிய பின்னர் அநேகமாக யாரும் காட்டுப் பக்கம் போவதில்லை. காட்டு மிருகங்களின் நட மாட்டம் இருப்பதே காரணம். அப்படியிருக்க இந்த சமயத்தில் யார் அங்கே போகக்கூடும், அதுவும் முக்காடிட்டு முகத்தை மூடிக்கொண்டு என்ற கேள்வி அவனுள் எழுந்தது. அவன் ஓசையெழுப்பாமல் அவர்களைப் பின் தொடர்ந்து நடந்தான்.

எங்கும் நிசப்தமாக இருந்தது. இருளில் குளித்துக் கொண்டிருந்த மரங்களும், குன்றுகளும் இயற்கை வரைந்த கறுப்பு சித்திரங்களாகத் தோன்றின. அந்த நிசப்தத்தில் பிரகாஷின் காலடி ஓசையை அவர்கள் கேட்டிருக்கக் கூடும். சட்டென நின்றார்கள். அவர்கள் திரும்பிப் பார்ப்பதற்குள் பிரகாஷ் பக்கத்து மரம் ஒன்றின் பின்னால் மறைந்து கொண்டான்.

முன்னால் சென்று கொண்டிருந்த இருவரும் திரும்பி கையிலிருந்த டார்ச் லைட்டை அடித்து சுற்றிலும் பார்த்தார்கள்.

''யாருமில்லை. காட்டுப் பூனையாக இருக்கும்'' என்றான் அவர்களில் ஒருவன். பின்னர், இருவரும் மேலே நடந்தனர்.

பிரகாஷ் இன்னும் கவனமாக ஓசையெழுப்பாமல் சற்று இடைவெளிவிட்டு அவர்களை பின் தொடர்ந்

தான். அவர்கள் அடர்ந்த காட்டு பகுதிக்கு வந்து சேர்ந்தனர். ஒரு மரத்தடியில் நின்றனர். மரத்தடியில் கிடந்த நீண்ட பாறையை நகர்த்தினர். தம்முடன் கொண்டு வந்திருந்த மண்வெட்டியின் உதவியினால் பாறையின் அடியிலிருந்த மண்ணைத் தோண்ட தொடங்கினர்.

அந்த இடத்தை அடையாளம் கண்டு கொண்டான் பிரகாஷ். முந்தைய தினம் அவன் நகைகளைக் கண்டெடுத்த இடம்தான் அது.

சற்று தொலைவில் மறைந்து நின்று அவர்களின் செய்கைகளை கவனித்துக் கொண்டிருந்தான் பிரகாஷ். 'நிச்சயமாக இவர்கள்தான் கோயில் கொள்ளையையும், கொலையையும் செய்திருக்க வேண்டும். தாம் மறைத்து, வைத்த நகைகளை எடுப்பதற்காக வந்திருக்கிறார்கள்' என்று ஊகித்துக் கொண்டவன் அவர்களை கையும், களவுமாக பிடிப்பதற்காகக் காத்திருந்தான்.

தோண்ட தோண்ட மண் வந்து கொண்டிருந்தது. ஆனால், அவர்கள் தேடியது கிடைக்கவில்லை. டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தனர். கைகளால் தடவிப் பார்த்தனர். எதுவும் கிடைக்காமல் போகவே, ''ஐயோ, யாரோ கொள்ளையடிச்சுட்டுப் போயிட்டானே பாவி'' என்று ஒருவன் கத்தினான்.

''இந்த இடம்தானான்னு சரியா பாரும்'' என்றான் மற்றவன். சுற்றிலும் டார்ச் லைட்டை அடித்துத் தேடிய முதலாமவன் தலையில் கை வைத்துக்

கொண்டு கீழே அமர்ந்தான். ''இந்த இடம்தாண்டா... எல்லாம் போச்... எல்லாம் போச்சு...'' என்று அரற் றினான்.

அவர்களை நெருங்கினான் பிரகாஷ். ''என்ன தேடறீங்க? கோயில் நகைகளையா? அவை பத் திரமா போலீஸ் ஸ்டேஷன்ல இருக்கு'' என்றவன் அவர்களுடைய தலை முக்காடை நீக்கி முகத்தைப் பார்த்தான். இருளில் சரியாகத் தெரியாமல் போகவே டார்ச் லைட்டை அவர்கள் முகத்தின் மேல் அடித்துப் பார்த்தான். பார்த்தவன் அதிர்ந்தான்.

அவர்கள் பஞ்சாயத்து தலைவர் பஞ்சாமியும், அவருடைய மகனும்தான்.

# 13



பஞ்சாமியும், அவருடைய மகனும் வெல வெலத்துப் போயினர். மிரட்சியுடன் பிரகாஷை பார்த்துக் கொண்டு நின்றனர்.

பிரகாஷும் அவர்கள்தான் குற்றவாளிகளாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்காததால் நம்ப முடி யாமல் அவர்களை பார்த்துக் கொண்டு நின்றான். இம்மாதிரியான அதிர்ச்சி தரும் விஷயங்கள் போலீ ஸாரின் வாழ்க்கையில் சகஜம் என்பதால் அவனால் தன்னை எளிதில் சுதாரித்துக் கொள்ள முடிந்தது.

''கொள்ளை, கொலை எல்லாத்தையும் செய்துட்டு தப்பிச்சிடலாம்னு பார்த்தீங்களா? எந்தக் குற்ற வாளியும் சட்டத்தின் பிடியினின்று தப்பியதில்லை. இது தெரிந்தும் ஏன் தப்பு செய்றீங்கன்னுதான் புரியலை. சரி, உண்மையை கக்கிடுங்க. உங்களால் இனி தப்ப முடியாது. கையும், களவுமா பிடிபட்டிருக் கீங்க. தப்பை ஒத்துக்கிட்டா தண்டனை குறைவா கிடைக்கும்படி செய்றேன்'' என்று வழக்கமான தன் யுக்தியைக் கையாண்டான் பிரகாஷ்.

அவர்கள் உடனே வாயைத் திறக்கவில்லை. மிகவும் பயந்து போயிருப்பது தெரிந்தது. பேசத் தயங்கினார்களா அல்லது பேச முடியாத அளவுக்கு மிரண்டிருந்தார்களா என்பது புரியவில்லை.

''நல்லபடியா கேட்கும்போது சொல்லாட்டா அடித்து, இம்சித்து உண்மையை கக்க வைப்போம். எப்படியும் உங்ககிட்டேயிருந்து எல்லாத்தையும் கறக்காம விடப் போவதில்லை. அதனாலே சொல்லிடுங்க'' என்று பயமுறுத்தினான் பிரகாஷ். ''கோயில் நகைகளை நீங்கதானே களவு செய்தீங்க?''

தகப்பனும், மகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். உண்மையை ஒப்புக் கொள்ள தயக்கம். பொய் சொல்லி தப்பிக்க வழி தெரியாத மயக்கம். இரண்டும் சேர்ந்து அவர்களை ஸ்தம்பிக்க வைத்தது.

''சொல்லுங்க, நீங்கதானே களவு செய்தது?''

''அ.... ஆமா...''

பிரகாஷ் அவர்களுக்கு விலங்கு மாட்டி காவல் துறைக்கு அழைத்துச் சென்றான். அங்கே சென்ற பின் அவனுடைய கேள்விகள் தொடர்ந்தன.

''பூசாரியை ஏன் கொன்னீங்க?''

''நகைகளை திருடியதை அவர் பார்த்துட்டார். கத்தி ஊரைக் கூட்டப் போறேன், போலீஸ்கிட்டே புடிச்சு கொடுக்கப் போறேன்னெல்லாம் மிரட்டினார். அதான்...''

''பூசாரியை கொன்னதை ராகுல் பார்த்திட்டார்னு அவரையும் முடிச்சுட்டீங்க, அப்படித்தானே?''

''இல்...லை... அவனை நாங்க கொல்லை. அவன் பார்த்தது உண்மைதான். அவனை கொல்லத்தான் துரத்திட்டு ஓடினோம். கோயிலுக்குப் பின்னாலே இருக்கிற பள்ளத்தாக்கில் அவனே விழுந்துட்டான்...''

''தொலைஞ்சான்னு சந்தோஷப்பட்டிருப்பீங்க. இவ்வளவு அதலபாதாளத்தில் விழுந்தவன் தப்பிக்க முடியுமா! ரெட்டை கொலை செய்திருக்கீங்க'' என்று சொன்ன பிரகாஷ் நினைத்தான், 'அனிதாவிடம் இதை எப்படிச் சொல்லப் போகிறேன்! அண்ணனை மறைத்து வைத்திருக்கிறார்கள், கண்டுபிடித்து விடலாம் என நம்பிக்கையுடன் காத்திருக்கும் அந்த பெண் இதை எப்படி தாங்கிக் கொள்வாள்!' என்று.

* * *

தான் பிடிபடுவோம் என பஞ்சாமி எதிர்பார்க்க வில்லை. பிடிபட்ட அதிர்ச்சியில் எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்.

"...... அம்மனின் மூக்குத்தி வைரம்னு எனக்குத் தெரியாது. அப்படியொரு மூக்குத்தி இருப்பது யாருக்குமே தெரியாது. எதேச்சையாகத்தான் எனக்கும் தெரிய வந்தது. இப்ப மழை பெஞ்சப்ப அம்மன் சிலைக்குக் கீழேயிருந்து தண்ணீர் கொப் பளித்துக் கொண்டு வந்திச்சு. அது எப்படின்னு பார்க்க சிலையை அகற்றினோம். கீழே ஒரு பள்ளம் இருந்தது. அதிலே ஒரு சின்ன பையிலே இந்த மூக்குத்தியும் இருந்தது. அதைச் சுத்தப்படுத்தினப்ப அது சுடர்விட்டு ஜொலித்ததை பார்த்த ராகுல்தான் இது விலை மதிக்க முடியாத வைரம்னு சொன்னான். இதை வித்தா நிறைய பணம் கிடைக்கும். அத வைச்சு ஊருக்குள்ளே பள்ளிக்கூடம் கொண்டு வரலாம். இலவச மருத்துவமனை கட்டலாம்னு புலம்பினான். இத வித்தா எனக்கு எவ்வளவு பணம் கிடைக்கும்னு நான் யோசிச்சேன். யாரும் அந்தப் பக்கம் வராத அந்தி சமயமாகப் பார்த்து நானும், என் மகனும் போய் மூக்குத்தியோடு அம்மனின் நகை களையும் எடுத்துட்டோம்.

கோயில்லே விளக்கேத்திட்டு போன பூசாரி கோயிலை பூட்ட மறந்துட்டதா நெனச்சு திரும்பி வந்தார். இந்த ராகுல் பயலும் அப்பப் பார்த்து..."

"ஓ... இந்த மூக்குத்தி அம்மன் சிலைக்குக் கீழே ஒளிச்சு வைச்சது யாரு? நீரா?"

"ஐயய்யோ... இல்லேப்பா. எப்போதோ... யாரோ... வெள்ளைக்காரன் காலத்திலே ஒளிச்சு வைச்சிருக்கலாம். காலம் காலமா... என் தோப்பனாரு காலத்திலேகூட யாருக்கும் அந்த மூக்குத்தி பற்றி தெரியாது."

"எங்கே போய் விக்றதா உத்தேசம்?"

"ஊரைச் சுத்திப் பார்க்க வந்திருந்தானே, அந்த வடநாட்டான்தான் விலைக்கு வாங்க இருந்தான். கூட இருந்த அம்மா நம்ம தமிழச்சிதான். அவனுக்கு தமிழ் தெரியாதுங்கறதாலே அவளும் வந்தாள். இன்று பணத்தோடு வருவாங்க. அதான் புதைச்சு வைச்ச இடத்திலேர்ந்து எடுக்கப் போனோம்."

அவர்களைப் பார்க்க பிரகாஷுக்குக் கோபம் கோபமாக வந்தது. 'வேலியே பயிரை மேய்வது என்பது இதுதான். ஊர் மக்கள் எத்தனை நம்பிக்கையோடு இவரை பஞ்சாயத்து தலைவராக தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்! தம் வாழ்க்கையை, எதிர்காலத்தை இவரிடம் ஒப்படைத்துவிட்டு நிற்சிந்தையாக இருக்கிறார்கள். நாட்டுக்கு நல்லது செய்து மக்களின் வாழ்வை வளப்படுத்தவென ஏற்படுத்தப்பட்ட தலைவர்கள் மக்களின் நம்பிக்கையை எப்படி துர்உபயோகப்படுத்திக் கொண்டு இருக்கின்றார்கள்! இப்படிப்பட்ட தன்னலவாதிகளால்தான் அரசியலே

களங்கப்பட்டுப் போய்விட்டது' என்று நினைத்தவனுக்கு பஞ்சாமி மேல் ஆத்திரம் வந்தது.

"யோவ், மக்கள் உம்மை தலைவர்னு கூப்பிடறாங்கன்னா அது உம்ம மேலே உள்ள மதிப்பினால். அந்த மதிப்பை இழந்துட்டீரே! உண்மையில் நீர் பொதுமக்களின் சேவைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஊழியன்யா. அரசாங்க ஊழியன். உம்முடைய உண்மையான சேவையாலேதான் நீர் உயர முடியும்; அதிகாரத்தாலும், ஆணவத்தாலும் இல்லை..." என்று சொல்லிக் கொண்டு சென்ற பிரகாஷ் நிறுத்தினான். 'இவர்களுக்கு எதைச் சொல்லி என்ன பிரயோசனம்! எல்லாம் செவிடன் காதில் சங்கு ஊதுகிற கதைதான்' என்று சலிப்புடன் நினைத்தான்.

"தண்டனை தருவீங்களா? ஜெயில்லே போடுவீங்களா?" என்று தயக்கத்துடன் கேட்டார் பஞ்சாமி.

"தூக்கிலே போடுவோம் உம்மையும், உம் மகனையும். அதான் ரெண்டு கொலை செய்திருக்கீங்களே!"

"தூக்கு தண்டனையா!" என்று அலறினான் பஞ்சாமியின் மகன். "எல்லாத்தையும் சொல்லிட்டா தண்டனையை குறைப்பீங்கன்னு சொன்னீங்களே..."

"குறைச்சுதான் சொல்றேன். ரெண்டு கொலைக்காக ரெண்டு தடவை தூக்கிலே போடாம ஒரே ஒரு தடவைதான் தூக்கில் போடுவோம்" என்று உறுமினான் பிரகாஷ்.

* * *

அனிதாவிடம் அவளுடைய அண்ணனுக்கு நேர்ந்த கதியைப் பற்றி எப்படிச் சொல்வது என்று தயக்கத்துடனே ஆறுமுகத்தின் வீட்டையடைந்தான் பிரகாஷ். இரவு நேரத்தில் போக வேண்டாம் என மறுநாள் காலைதான் சென்றான்.

அனிதாவும், சின்னதம்பியும் வெளியே செல்ல தயாரான நிலையில் இருந்தனர். ''எங்கே கிளம்பிட்டீங்க!'' என்று கேட்டான் பிரகாஷ்.

''வேறெங்கே, என் அண்ணனைத் தேடித்தான்'' என்றாள் அனிதா தணிந்த குரலில்.

''கொஞ்சம் பேசணும். உட்காருங்க'' என்றான் பிரகாஷ்.

''என்ன விஷயம் பிரகாஷ்? ரொம்ப கம்பீரமான குரல்லே சொல்றீங்க?'' என்று அனிதா கேட்கையில் வீட்டினுள்ளிருந்து ஆறுமுகமும், அவருடைய மனைவியும் வெளியே வந்தனர். ''அட, இன்ஸ்பெக்டர் தம்பியா, வாங்க'' என்று வரவேற்றார் ஆறுமுகம்.

''கோயில்லே கொள்ளையடிச்சவனும், கொலை செய்தவனும் பிடிபட்டுட்டான்'' என்றான் பிரகாஷ்.

''அ... ராகுலை பிடிச்சுட்டீங்களா?'' என்று கேட்டார் ஆறுமுகம்.

''குற்றவாளி ராகுல் இல்லை. யார்னு சொன்னா உங்களுக்கெல்லாம் அதிர்ச்சியாக இருக்கும். உங்க பஞ்சாயத்து தலைவர் பஞ்சாமியும், அவரோட

மகனும்தான் குற்றவாளிகள். இப்ப போலீஸ் லாக்-அப்பில் இருக்காங்க.''

''ஆ...'' என்று நம்ப முடியாமல் திறந்த வாயுடன் அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தனர். ''ராகுலை எங்கே ஒளிச்சு வைச்சிருக்காங்கன்னு சொன்னாங் களா? எங்கே அவன்?'' என்று அனிதா கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல பிரகாஷுக்கு சங்கடமாக இருந்தது. ''உன் அண்ணன் இப்பொழுது உயிருடன் இல்லை; பள்ளத்தாக்கில் விழுந்து செத்துப் போய்விட்டான் என்று சொன்னால் அவள் எத்தனை துடித்துப் போவாள்! என்றாலும் சொல்லித் தானாக வேண்டும்.

''தகப்பனும், மகனும் கோயில் நகைகளை திருடி யதை பூசாரி பார்த்துட்டார்னு அவரைக் கொன்னுட் டாங்க. அவரை கொல்வதை ராகுல் பார்த்துட்டார்னு அவரையும் கொன்றுவிடும் நோக்கத்துடன் துரத் திட்டுப் போனாங்க. ராகுல் பள்ளத்தாக்கில் விழுந் துட்டார்...''

''ஓ நோ...'' என்று அலறினாள் அனிதா. ''என் அண்ணனுக்கு ஒன்றும் ஆகலை. அவன் உயிரோடு இருக்கிறான்...''

''அண்ணனா?'' என்று பல குரல்கள் கேள்விக் குறியோடு எழுந்தன.

''ஆமா, ராகுல் அனிதாவின் அண்ணன்தான். அவரை தேடித்தான் இவங்க இங்கே வந்தாங்க. உங்க

எல்லோர்கிட்டேயுமிருந்து மறைச்சு வைக்கும்படி யான கட்டாய சூழ்நிலை. மன்னிச்சுடுங்க'' என்றான் பிரகாஷ்.

''என் அண்ணன்... அவன் அந்த பள்ளத்தாக் கினுள் விழுந்து கிடக்கிறான். அவனைக் காப்பாத் தணும்...'' என்று புலம்பிக் கொண்டிருந்த அனிதா திடீரென குடிசையினுள் ஓடினாள். அவள் ஷண நேரம் புத்தியிழந்து விபரீதமாக ஏதாவது செய்துவிடக் கூடாதே என்ற கலக்கத்தில் பிரகாஷ் அவளைத் தொடர்ந்து ஓடினான்.

அனிதா தன் கையிலிருந்து மொபைலை வெளியே எடுத்தாள். ''என்ன செய்றீங்க?'' என்ற பிரகாஷின் கேள்விக்கு, ''என் தோழிக்கு போன் செய்றேன். மலை ஏறும் பயிற்சி பெற்றவங்களை அழைச்சு வந்து என் அண்ணனை தேடப் போறேன். அவன் காயப்பட்டிருக் கலாம். மேலே ஏறி வர முடியாம விழுந்து கிடக் கலாம்...'' என்றாள் அவள்.

அவளை பரிதாபத்துடன் பார்த்தான் பிரகாஷ். 'பெண்ணே, காயப்பட்டிருந்தாலும் காட்டு மிரு கங்கள் அவனை விட்டு வைத்திருக்குமா! இத்தனை காலம் கவனிப்பாரின்றி கிடந்தால் அவன் உயிரோடு தான் இருக்க முடியுமா?' என்ற தன் எண்ணத்தை அவன் வெளிப்படுத்தவில்லை.

முதலில் ராகுலை போலீஸ் நாயின் மோப்பத்தின் மூலம் பள்ளத்தாக்கில் இறங்கித் தேடினார்கள்.

இப்பொழுது குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் நோக்கமல்லாது வேறு கோணத்தில் தேடினால் ஏதாவது தடயம் கிடைக்கலாம் என்று அதற்கு ஏற்பாடு செய்திருந்தான் பிரகாஷ். ''கவலைப்படா தீங்க. போலீஸ் குழு இப்ப வந்திடும். அவங்க இறங்கி உங்க அண்ணனைத் தேடப் போறாங்க'' என்றான்.

* * *

பயிற்சி பெற்ற போலீஸ் குழுவினர் பள்ளத்தாக்கில் இறங்கி தேடத் தொடங்கினர். கவலையுடனும், படபடப்புடனும் காத்திருந்தாள் அனிதா. அவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது பிரகாஷுக்கு; பய மாகவும் இருந்தது. தன் அண்ணன் உயிருடன் வரப் போகிறான் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்பவள் ஏமாற்றத்தைச் சந்திக்க நேர்ந்தால் என்ன செய்யப் போகிறாள்! உடைந்து போவாள். அவளுக்கு இந்த உலகத்தில் இருக்கும் ஒரே ஆதரவு அவளுடைய அண்ணன்தான். அவனை அவள் இழக்க நேர்ந்தால், அந்த இழப்பை அவளால் தாங்கிக் கொள்ள முடி யாது.

பிரகாஷ் தலையைத் திருப்பி அனிதாவைப் பார்த் தான். கிராமத்து பெண்ணொருத்தி அவளைத் தாங்கிப் பிடித்தபடி நின்றிருந்தாள். நம்பிக்கையும், அவநம்பிக்கையும் ஒன்றோடொன்று போட்டி யிட்டுக் கொண்டிருக்க ஒரு நிச்சயமற்ற நிலையில் அனிதா இருந்தாள். 'கவலைப்படாதீங்க மிஸ். நான்

இருக்கேன்' என்று அவளுக்கு ஆறுதலளிக்க அவ னுடைய மனம் விரும்பியது.

அவன் தன்னையறியாமலே அவளை நோக்கி நடந்தான். அவளுக்கு எப்படி ஆறுதலளிப்பது என்பது புரியாமல் அவளருகே போய் மௌனமாக நின்றான். மனம் மட்டும் இப்படி பிரார்த்தித்துக் கொண்டது. 'கடவுளே, இந்த பெண்ணின் நம்பிக்கை வீண் போகக் கூடாது.' அவனோடு சேர்ந்து அந்த கிராமம் மொத்தமும் அவளுக்காக கடவுளை வேண்டிக் கொண்டது. ''எவ்வளவு நல்ல பையன்! நம்ம கிராமம் முன்னேறணும்னு எத்தனை முயற்சி செய்தார்! அவர் பிழைக்கட்டும் சுவாமி...'' என்று புலம்பினார்கள்.

நேற்று வரை 'கள்ளப் பய, கொலைகாரப் பய' என்று தூற்றப்பட்ட ராகுலுக்கு மீண்டும் 'நல்ல பையன்' என்ற அடைமொழியை அளித்து கௌர வித்தனர். மனிதனின் கருத்துக்கள் மாற ஷண நேரம் போதும்.

* * *

**கா**லைப் பொழுது கழிந்தது. மாலை பொழுதும் மங்கியது. ராகுலைத் தேடி பள்ளத்தாக்கில் இறங் கியவர்கள் இன்னும் திரும்பவில்லை. கீழே இறங் கியவர்களுடன் வாக்கி டாக்கி மூலம் பிரகாஷ் தொடர்பு கொண்டு செய்தி சேகரித்துக் கொண்டு தானிருந்தான். ஒரு மரத்தில் கிழிந்த சட்டை துணி ஒன்று தொங்கிக் கொண்டிருப்பதாக செய்தி

கிடைத்தது. வேறே எலும்புகள்கூட கிடைக்க வில்லை. ராகுலுக்கு என்னவாயிற்று! மிருகங்கள் அவனுடைய உடலைத் தின்று விட்டனவா!

''என்ன சொல்கிறார்கள்?'' என்று அனிதா ஆர் வத்துடன் விசாரித்தாள்.

''எதுவும் சரியாகத் தெரியலை மிஸ். அவங்க மேலே வரும்வரை காத்திருப்போம்'' என்றான் பிர காஷ்.

'ராகுல் உயிருடன் வந்துவிட்டால் அனிதா மிக மிக சந்தோஷப்படுவாள். அவள் சந்தோஷமடைந் தால் எனக்கும் சந்தோஷமே.'

* * *

ராகுலைத் தேடி பள்ளத்தாக்கில் இறங்கியவர்கள் மேலேறி வரத் தொடங்கினர். அவர்களுடன் ராகுல் வருகிறானா என்று பார்த்த அனிதா ஏமாற்றத்தால் மனம் துவண்டாள். மேலே வந்தவர்களில் ஒரு வனைப் பிடித்து உலுக்கினாள். ''எங்கே என் அண் ணன்? எங்கே அவன்? ஏன் அவனைக் கூட்டிட்டு வரலை?''

அந்த மனிதன் அனிதாவைப் பரிதாபத்துடன் பார்த்தான். பின்னர் பிரகாஷைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினான்.

அனிதா மேலேறி வந்து கொண்டிருந்தவர்களை இடித்துத் தள்ளிக் கொண்டு முன்னால் ஓடினாள்.

கடைசி மனிதன் வரும் வரை ஓடினாள். அவனுக்கு பின்னாலும் என்று சுற்றிலும் பார்வையால் துழாவி னாள். ராகுலை காணாமல் போகவே, ''அண்ணா'' என்று அலறினாள்.

தன் அண்ணன் வரவில்லை என்ற உண்மை அவளுடைய இதயத்தை கூர்மையான ஆயுதத்தால் கிழித்த வலியை உண்டாக்கியது. ''அண்ணா...'' என்று குரல் வளையை கிழித்துக் கொண்டு மீண்டும் மீண்டும் குரல் எழுந்தது.

திடீரென அவளுடைய குரல் மடிந்தது. 'எனக்கு என் அண்ணன் வேண்டும்' என்று மனம் கேவ அதை சமாதானப்படுத்த விரும்புபவள் போல் பார்வையை எதிரே தெரிந்த மலை குன்றுகள் மேல் படரவிட்டாள். 'என் அண்ணன் இங்கே இருக்கக்கூடுமா! நான் போய் அழைத்து வருவேன்.'

அனிதாவின் பார்வை எதிரே தெரிந்த மலை குன்றுகள் மேல் நிலைத்தது. சுற்றுப்புற உலகம் அவ ளுடைய உணர்வுகளினின்று மறைந்து போயிற்று. என்ன செய்கின்றோம் என்ற உணர்வின்றி தூரத்து மலையை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

''அம்மா, வுழுந்துடப் போறீங்க...'' என்று கத்தியபடி சில கிராமத்தார் அவளை நோக்கி ஓடினர். திகைத்து நின்றிருந்த பிரகாஷும் அவளை நோக்கி ஓடினான். ''மிஸ் அனிதா, நில்லுங்க...''

அவள் நிற்கவில்லை. நடந்து கொண்டேயிருந் தாள். இந்த உலகமே அவளுடைய உணர்வுகளுக்கு

எட்டாமல் தூரமாய் விலகி போயிருந்தது. எந்த சத்தமும் அவளுடைய செவிகளில் விழவில்லை. வெறுமையான மனமும், வெறுமையான பார்வையும் மட்டுமே அவளிடம் எஞ்சியிருந்தன.

அவளுக்குப் பின்னால் ஓடி வந்தவர்கள் அவளைப் பிடித்து நிறுத்தினர். "அனிதாம்மா, என்ன செய்றீங்க?" அதே சமயத்தில் அந்த அழைப்பு குரல் கேட்டது.

"அனி..."

அந்தக் குரலை கேட்டதும் அவளுடைய உணர்வுகள் விழித்துக் கொண்டன. மீண்டும் அந்தக் குரல் எழுந்தது, "அனி..."

"அண்ணா..." என்றழைத்தபடி அவள் திரும்பினாள். அந்த மலைக் குன்றின் இன்னொரு பக்கம் வழியாக மேலேறி வந்த இருவர் நின்றிருந்தனர். தாடி மீசையுடன் இருந்த அவர்களில் ஒருவனை அவள் அடையாளம் கண்டு கொண்டாள். "அண்ணா..." என்றழைத்தபடி அவனை நோக்கி ஓடினாள்.

வந்திருந்த தாடி மீசை ஆட்களில் ஒருவன் ராகுல்தான். அவனுடைய தோள்பட்டையிலும், ஒரு காலிலும் கட்டு போடப்பட்டிருந்தது. லேசாக நொண்டியபடி நடந்தான் அவன். அவனுடன் வந்திருந்த மற்றவர் வயதானவராக தோன்றினார். முடி நரைத்து, தோல் சுருங்கி மூப்பைக் காட்டின. அவருடைய கண்கள் மட்டும் மிகுந்த தீட்சண்யத்துடன் இருந்தன.

தமையனைக் கட்டி பிடித்துக் கொண்டு கேவிக் கேவி அழுதாள் அனிதா. ''எங்கே உன்னை இழந்துவிட்டேனோன்னு பயமா இருந்ததண்ணா.''

ராகுல் அவளைத் தட்டிக் கொடுத்தான். ''ஹோல்ட் ஆன் அனி. அதான் நான் வந்துட்டேனில்லே.''

''யாருப்பா அது உன்கூட. பார்த்த முகம்போல் இருக்கே!'' என்றார் ஒரு பெரியவர்.

''பார்த்திருப்பீங்க. இவர்தான் இராமானுஜம் சுவாமிகள். இவர்தான் என்னைக் காப்பாத்தினார். சில வருஷங்களுக்கு முன்னால் உங்களுக்கெல்லாம் சேவை செய்திட்டிருந்தாரே, அதே சுவாமிகள்தான்'' என்றான் ராகுல்.

''இவ்வளவு உயரத்திலேர்ந்து விழுந்தப்புறமும் எப்படி உயிரோடு இருக்கான்ங்றதே ஆச்சரியமா இருக்கு'' என்று கிராமத்தார் வியந்தனர்.

''ஆச்சரியமான விஷயம்தான். எல்லாத்தையும் அப்புறம் விவரமா சொல்றேன். மொதல்ல இந்த பையன் ராகுல் ஓய்வெடுக்கட்டும். ரொம்ப களைச்சுப் போயிருக்கான். உடல் காயம் இன்னும் முழுசுமா ஆறலை'' என்றார் சுவாமிகள்.

* * *

ஆறுமுகத்தின் வீட்டுத் திண்ணையில் ராகுல் படுத்து ஓய்வெடுக்க படுக்கை விரித்துக் கொடுத்தனர். அவன் எப்படி பிழைத்தான், இத்தனை காலம் எங்கே இருந்தான் என்பன போன்ற பல கேள்விகளை

அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் கிராம மக்கள் அவனை சூழ்ந்து அமர்ந்து கொண்டனர்.

''சொல்லுப்பா, எப்படி பிழைச்சே?''

''நான் சொல்கிறேன்'' என்றார் சுவாமிகள். ''இந்த ஊரை விட்டு போனப்புறம் பள்ளத்தாக்கில் ஒரு குகையில் வாசம் செய்யலானேன். மருத்துவம் என் ரத்தத்தில் ஊறிய ஒன்று என்பதால் நான் இருந்த பகுதியில் பல அரிய மருத்துவ குணமுள்ள செடிகள் இருப்பதையறிஞ்சு அவைகளை பேணிப் பெருக்கி னேன். அவைகளை காய வைத்து பொடிச்சு ஜாடி களில் அடைச்சு வைச்சிருக்கேன். எதிர்காலத்தில் யாராவது பொதுமக்களின் நலனில் அக்கறை உள் ளவன் யாருடையராவது கையில் அகப்படும்ங்கற நம்பிக்கையுடன்...

''கீழே விழுந்த ராகுல் தரையைத் தொடும் முன்னால் மரம் ஒன்றால் தடுக்கப்பட்டு சில மணி நேரங்கள் அதிலே தொங்கிட்டிருந்திருக்கிறான். பிறகு, மரக்கிளை முறிஞ்சு அவன் கீழே வந்தப்ப நான் பச்சிலைகளை பயிரிடப்பட்டிருந்த சம தளத்தில் விழுந்திருக்கான். பச்சிலை செடிகள் மெத்தை போல் அவனைத் தாங்கிக் கொண்டன. அதனால்தான் உயிர் பிழைச்சான். பச்சிலை பறிக்க வந்த நான் இவனைக் கண்டு என் குடிசைக்கு... அதாவது குகைக்கு தூக் கிட்டுப் போனேன்...'' சொல்லிக் கொண்டு இருந்த இராமானுஜம் சுவாமிகள் நிறுத்தினார்.

இப்பொழுது ராகுல் சொல்லத் தொடங்கினான். "அப்ப நான் உணர்வின்றி இருந்தேன். நாலைந்து நாட்களா உணர்வில்லாம கிடந்த நான் உணர்வு திரும்பியதும் கை கால் எல்லாம் கட்டுடன் படுத்திருப் பதை அறிந்தேன். சுவாமிகள் தான் பச்சிலை மருந்துகளை வைத்து கட்டுப் போட்டு என்னைக் காப்பாத்தினார்."

"அடடடா! உணர்வு வந்ததும் எங்ககிட்டே வந்து எல்லாத்தையும் சொல்வதுக்கென்ன தம்பி! நாங்க வீணா உன் மேலே சந்தேகப்பட்டிட்டிருந்தோம்" என்றார் ஒருவர்.

"ராகுல் உடனே வந்து எல்லாத்தையும் போலீஸ் கிட்டே சொல்லத்தான் விரும்பினான்" என்ற சுவாமிகள் தொடர்ந்து பேசினார். "ஆனா, விஷயம் முழுவதையும் அறிஞ்ச பிறகு குற்றவாளிங்க இவனை போலீஸ் வரைக்கும் போக விடமாட்டாங் கன்னு பயமா இருந்துச்சு. கால் முறிஞ்ச நிலையில் இவனால் ஓடவும் முடியாது. நாந்தான் கால் குண மானதும் போகலாம்பான்னேன். கால் எலும்பு முறிஞ் சிருந்ததாலே அசையாம படுத்திருக்க வேண்டியதும் அவசியம். அப்பப்ப ஊருக்குள்ளே வந்து நிலவரம் அறிஞ்சுட்டு போவேன். ராகுல்தான் குற்றவாளின்னு நெனச்சு ஊர் முழுசும் கொதிச்ச போயிருப்பது தெரிஞ்சது. இப்ப அவனை கண்டா நீங்களே அவனை கொன்னு போடுவீங்கன்னுதான் தாமதிச்

சோம். இன்று காலையிலே நான் வந்தப்ப உண்மையான குற்றவாளி பிடிபட்டு விட்ட விஷயம் தெரிய வந்தது. இதுதான் சரியான தருணம்னு அவனைக் கூட்டிட்டு வந்தேன்.''

''நடப்பதெல்லாம் நல்லதுக்குத்தான் பெரியவங்க சொல்வாங்க'' என்றான் ராகுல். உடனே அவசர அவசரமாக, ''தப்பா நினைக்காதீங்க, நான் பள்ளத் தாக்கிலே விழுந்ததை சொல்றேன். நான் தேடிக் கொண்டிருந்த சுவாமிகள் இவர்தான். இந்த ஒரு மாச காலத்திலே இவர்கிட்டேர்ந்து மூலிகைகளின் குணங்களைப் பற்றி நிறைய தெரிஞ்சுக்கிட் டேன். மூலிகை மருத்துவம் சம்பந்தமான நிறைய கிரந்தங்களையும் எனக்கு தந்தார். இவர்கிட்டே எத்தனை அரிய பொக்கிஷம் இருக்கு! அதன் பலனை பெறும் பாக்கியம்தான் உங்களுக்கு இல்லை'' என்றான்.

கிராமத்தார் இராமானுஜம் சுவாமியைப் பார்த்து கேட்டார்கள். ''நீர் ஏன் சுவாமி கிராமத்தை விட்டுப் போனீர்? நாங்க உம்மை ஆதரிக்கத்தானே செய் தோம்'' என்று.

வைத்தியர் அய்யாசாமி இவரால் தன் தொழிலுக்கு பங்கம் வந்துவிடும் என பயந்து பல வகைகளில் தொல்லை கொடுத்து அவருடைய மன சமா தானத்தைக் கெடுத்ததை சுவாமி சொல்லவில்லை.

வைத்தியர் எப்படிப்பட்டவராக இருப்பினும் மருத் துவ குணம் அவருக்கு நிறைய இருப்பதும், அதனால் கிராமத்து மக்கள் பயனடைவதும் சுவாமிகளுக்கு தெரிந்ததே. அதற்கு பங்கம் விளைவிக்க விரும்ப வில்லை அவர். ''நான் ஏன் உங்க கிராமத்தைவிட்டு போனேன் என்பது இப்ப தேவையில்லத விஷயம். ம்... இனி நான் கிளம்ப வேண்டியதுதான்'' என்று எழுந்தார் இராமானுஜம் சுவாமிகள்.

''எங்களை வுட்டுட்டு திரும்பவும் போயிடா தேயும். ஊருக்குள்ளே குடிசை போட்டு தர்றோம். இங்கேயே இருந்திடும்'' என்றான் மணிவண்ணன்.

''இல்லையப்பா. நான் போய்த்தானாகணும். உங்க வைத்தியர் அபார அறிவு பெற்றவர். அவர் ஒருத்தரே உங்களுக்கு போதும். என் தேவையில்லை'' என்றார் சுவாமிகள்.

''ஆ... பெரிய அறிவு. என் தங்கச்சியின் வயித் திலே கட்டி இருந்ததை அவரால் கண்டுபிடிக்க முடியலை. அவ கர்ப்...''

''ஷ்...'' என்று ஒரு பெரியவர் அவனை அதட்டி மேலே பேசவிடாமல் தடுத்தார். பின்னர் தாழ்ந்த குரலில், மணிவண்ணனுக்கு மட்டும் கேட்கும் குரலில், ''இப்ப அதெல்லாம் வேண்டாம். இப்ப என்றில்லை, எப்பவுமே வேண்டாம். பட்டணத்து

டாக்டருக்கு தெரிஞ்சா எத்தனை வருத்தப்படுவார்!'' என்றார்.

இராமானுஜம் சுவாமிகள் லேசாகச் சிரித்தார். ''அதுக்கு வைத்தியரின் அறிவு பற்றாக்குறை காரண மில்லை. காரணமே வேறு. இனி அப்படியெல்லாம் நடக்காது. இல்லையா வைத்தியரே?''

''வந்து... அது...'' என்று தடுமாறிய வைத்தியரை கையமர்த்தி தடுத்தார் சுவாமிகள். ''சில விஷயங்கள் காலத்தோடு புதைஞ்சு போவதுதான் எல்லோருக்கும் நல்லது. அதுபோல் சில விஷயங்களை என்றென்றும் மனதில் வைத்துக் கொள்வது நல்லது. அதாவது, பணத்தாசை, புகழாசை என்றுமே, யாருக்குமே நிம்மதி தராது. அதை உணர்ந்துட்டா போதும். 'செய்யும் தொழிலே தெய்வம்னு ஒருவன் செய்கிற தொழிலை - அது தரையை பெருக்கி துடைப்ப தாயினும், வைத்திய தொழிலாயினும் - நேர்மையுடன் செய்தா பணமும், புகழும் தேடாமலே வந்து சேரும். கூடவே மனநிம்மதியும் கிடைக்கும்'' என்ற சுவாமிகள் விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

* * *

சுவாமிகள் சொன்னவை அனைத்தும் உண்மை தான் என்று நினைத்தார் வைத்தியர் அய்யாசாமி. 'என்னிடம் இருக்கும் மருத்துவ அறிவை நியாயமான வழிகளில் உபயோகித்தாலே போதுமான வரு

மானம் கிடைக்கும். சுற்று வட்டாரத்திலுள்ள கிராம மக்கள் எல்லோரும் என்னிடம் வருகிறார்கள். பேராசைப் படாமல் சொற்ப காசை பெற்றுக் கொண் டால் அவரைத் தேடி வருபவர்களின் எண்ணிக்கை பெருகும்; வருமானமும் பெருகும். இந்த எளிய தத்துவம் புரியாமல் நடந்து என் பெயரை கெடுத்துக் கொண்டேன். எந்த சுவாமிகளாலும், ராகுலாலும் என்னுடைய மருத்துவ ஞானத்தை என்னிடமிருந்து பிடுங்க முடியாது என்பது எப்படி எனக்குப் புரியாமல் போயிற்று!'

''நீயாவது எங்களை வுட்டுப் போயிடாதேப்பா...'' என்று ஒருவர் ராகுலிடம் சொல்லிக் கொண்டிருந் தார்.

''இல்லை பெரியவரே உங்களுக்கு இங்கே நம்ம வைத்தியர் இருப்பது போல் பட்டணத்துக்கும் ஆயுர் வேத மருத்துவம் தேவையா இருக்கு. நான் போய்த் தானாகணும்'' என்றான் ராகுல்.

''என்னப்பா, எங்களுக்கெல்லாம் ஆசை காட் டிட்டு இப்ப வுட்டுட்டுப் போறீயேப்பா. எங்க விளைச் சலை மொத்த சந்தையிலே வித்தா நிறைய பணம் கிடைக்கும், ஏற்பாடு செய்து தர்றேன்னு சொன்னி யேப்பா, அது என்னாச்சு?'' என்று அங்கலாய்த்தார் ஒருவர்.

''அதை நான் மறக்கலை'' என்றான் ராகுல். ''ஒரு தடவை வழிகாட்டுவேன். அப்புறம் நீங்கதான் அதை

மேலே தொடர்ந்து நடத்தணும். பிரம்பு கூடை, கூஜாக்கள் செய்ய சொன்னேனே, செய்தீங்களா?''

''பிள்ளைங்க செய்து வைச்சிருக்காங்க. வித்து தர ஆள் இல்லை.''

''எல்லாத்தையும் உங்களுக்காக இன்னொருத்தர் செய்யணுமா! சந்தையிலே கொண்டு போய் விக்க வேண்டியதுதானே! சந்தை கூடும் இடம் உங்களுக்குத் தெரியும். அப்புறம் என்ன, அங்கே போய் விற்பனை செய்யுங்க. பாதை காட்டிவிட்டேன். இனிமே அதிலே நீங்கதானே நடந்து போகணும்.''

''நீ சொல்றது சரிதாம்பா...'' என்று இழுத்தார் ஒருவர்.

''ஆன்னா ஆவன்னா படிக்காத எங்களுக்கு இதெல்லாம் எப்படிப்பா தெரியும்!''

''அதான் படிக்கணும்ங்கறது. ஊருக்குள்ள ஒரு பள்ளிக்கூடத்தை கொண்டு வரலை நீங்க. அதையும் இன்னொருத்தர் செய்யணும்னு எதிர்பார்க்கிறீங்க. மின்சாரம் வேணும், பள்ளிக்கூடம் வேணும். இதையெல்லாம் அரசு அதிகாரிகள் கிட்டே நீங்கதான் சொல்லணும். அழுத பிள்ளைதான் பால் குடிக்கும். உங்களுக்குள்ளே ஒருத்தரை, மக்கள் நலனில் அக்கறையுள்ள ஒருத்தரை பஞ்சாயத்து தலைவராக்குங்க. உங்க தேவைகளை அவர் மூலமா நிறைவேத்துங்க'' ராகுல் சொன்னான்.

''என்னப்பா, நான் என்னவோ கேட்டா பள்ளிக் கூடம், மின்சாரம்னு சொல்லிட்டிருக்கியே. இப்ப நாங்க...''

''நீங்க என்ன செய்யணும், எப்படி உங்க வாழ்க் கையை முன்னேற்றிக் கொள்ளணும்ங்கறதை எல் லாம் கல்விதான் உங்களுக்கு கற்றுத் தருகிறது. உங்க தேவைகள் என்ன, உரிமைகள் என்ன, அவைகளை எப்படி பெறுவதுன்னே உங்களுக்குத் தெரிஞ்சிருக் கலை. அதை கல்வி உங்களுக்கு சொல்லித் தருது. கல்வி உங்களுக்கு சரியான வழியை காட்டுது. அந்த பாதையில் சென்றால் நீங்க விரும்புறதைப் பெற முடியும். உங்களை முன்னேற்ற, உங்க வறுமையை ஒழிக்க நீங்கதான் உழைக்கணும்.

இப்ப மழை நல்லா பெய்யுது. என்றாலும் கோடையில் தண்ணீர் இல்லாம கஷ்டப்படறீங்க. மழை கால தண்ணீரை சேமித்து வைச்சா வருஷம் முழுவதுக்கும் போதுமான தண்ணீர் கிடைக்கும். பாறை இடுக்குகளில் தேங்கிக் கிடக்கும் தண்ணீரை சரியான முறையில் வாய்க்கால் மூலமா பயிர்களுக்கு பாய்ச்சி வருடம் முழுவதும் விளைச்சல் செய்யலாம். அதைச் செய்யுங்க. கிணறு வெட்டி மழைத் தண் ணீரை சேமித்து வைங்க.

மருத்துவ மூலகை செடிகளை வளர்க்கச் சொன் னேனே, செய்தீங்களா? எந்த மண்ணிலே எந்த மூலிகை வளரும்னு வைத்தியருக்குத் தெரியும்.

வைத்தியரே, இதனாலே உங்க தொழிலுக்கு எந்த பாதகமும் உண்டாகப் போவதில்லை. மாறாக, மூலிகைகளை தேடியலையும் உம்ம சிரமமும் குறையும்.

பட்டணங்களிலே இந்த மூலிகைகளுக்கு ஏகப்பட்ட டிமாண்ட். எங்கே போய் விற்பதுன்னு உங்களுக்கு நான் வழி காட்டுவேன். என் கால்கள் கொஞ்சம் வலு பெறட்டும், அப்ப திரும்பி வருவேன்.''

ராகுல் சொல்லி முடித்ததும் பல குரல்கள் ஒரு சேர எழுந்தன. ''திரும்பி வருவேன்னா... இப்பவே பட்டணத்துக்கு போகப் போறீயா?''

''ஆமா. நாளைக்கே போகலாம்னு இருக்கேன்.''

இன்ஸ்பெக்டர் பிரகாஷ் அனிதா பக்கம் திரும்பி அவளைப் பார்த்தான். அனிதா போகப் போகிறாள்! நிரந்தரமாக அவனை விட்டு பிரிந்து போகப் போகிறாள். அவனால் தாங்கிக் கொள்ள முடியுமா!

இல்லை.... இதைத் தடுத்தேயாக வேண்டும். 'நேற்று காதல் என்றால் என்ன என்று கேட்டாயே அனிதா, அதற்கு இப்பொழுது நான் சரியான பதிலைத் தருகிறன். காதல் என்றால் வெறும் உடல் கவர்ச்சியால் மட்டுமல்லாது ஒருவருடைய குண நலன்களால் ஈர்க்கப்பட்டு மயங்கிப் போவது. காதல் என்றால் ஒருவருடைய எண்ணங்களால், வாழ்க்கை கண்ணோட்டத்தால் கவரப்பட்டு அவரோடு தன் வாழ்க்கையை இணைத்துக் கொள்ள விரும்புவது,

காதல் என்றால் துணை கொடுத்து, துணை பெற்று இணைந்து வாழத் துடிப்பது. காதல் என்றால்...

* * *

ராகுலிடம் பல கேள்விகள் கேட்ட பெரியவர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பின்னர் சொன்னார், ''தம்பி, எங்களுக்காக இத்தனை யோசிக்கிற நீ ஏன் அரசியலில் சேரக்கூடாது? நாட்டுக்கு உன்னால் நிறைய செய்ய முடியும்'' என்று.

''ஆமா... ஆமா...'' என்று பல குரல்கள் அவரை ஆமோதித்தன. உனக்கு சம்பந்தமில்லாத எங்களுக்காக இத்தனை சொல்றே, நீ அரசியல்லே சேர்.''

''தப்பு. நாம எல்லோரும் ஒருவரோடொருவர் சம்பந்தப்பட்டிருக்கின்றேம். மனிதம் என்கிற நூலில் கோர்க்கப்பட்ட மணிகள் நாம் எல்லோரும். நூல் அறுந்து போனால் கீழே விழுவது ஒரு சில மணிகள் மட்டுமல்ல; எல்லா மணிகளும் கீழே விழுந்து சிதறிப் போகும். மானிட உறவு என்கிற அழகான மாலை கலைந்து போகும்.

இந்த உலகத்தை நாம் எல்லோரும் சேர்ந்துதான் அலங்கரிக்கின்றோம். நம்மில் ஒருவர் செய்கிற நல்ல காரியம் செய்பவருக்கும், செய்யப்படுபவருக்கும் மட்டுமல்லாது சுற்றிலுமுள்ள எல்லா மனிதர்களுக்கும் நன்மையை விளைவிக்குது. மல்லிகை மலரின் மணம் சுற்று வட்டாரங்களில் பரவி சூழ்நிலையை பரவசப்படுத்துற மாதிரி, சாக்கடையின்

துர்நாற்றமும், விஷக் கிருமிகளும் சுற்றுப்புற காற்றை அசுத்தப்படுத்தி நோய் நொடிகளை பரப்புகிற மாதிரி மனித செயல்களும் உலகத்தை பாதிக்குது'' நீளமாகப் பேசிவிட்டு நிறுத்தினான் ராகுல்.

''நீ சொல்றது புரியுது. ஆனா அது எப்படி யப்பா?''

''சொல்றேன்'' என்ற ராகுல் விளக்கினான். ''ஒருவன் லஞ்சம் வாங்குறான்னா அவனுக்கு லஞ்சம் கொடுத்த வியாபாரி தான் கொடுத்த லஞ்ச பத்தை தான் விற்கும் பொருட்கள் மூலம் வசூலித்துக் கொள்கிறான். பொருட்களின் விலை கூடுகிறது. அதை சரிகட்டி குடும்பம் நடத்த குடும்பத் தலைவி சிரமப்படுகிறாள். இன்னும் சம்பாதித்துக் கொண்டு வா என்று அவள் கணவனை விரட்டுகிறாள். சம்பாத்தியத்தை பெருக்க அவன் குறுக்கு வழியில் இறங்குகிறான். இப்படித்தான் கள்ள சந்தை, கலப் படம்னு சமூக விரோத காரியங்கள் பெருகுகின்றன. இவைகளுக்கு ஈடு கொடுக்க முடியாத சாமான்ய மனிதன் வறுமையில் விழி பிதுங்கிப் போகின்றான். ஒருவன் வாங்குகிற லஞ்சம் இப்படி எத்தனை பேரை பாதிக்குது. எத்தனை பேரை தவறான காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது.''

''அடேயப்பா...''

''இன்னொன்று, என்னை அரசியல்லே சேரச் சொன்னீங்களே, அரசியல்லே நுழையாமலே நாட்

டுக்கும், மனித குலத்துக்கும் நிறைய செய்யலாம். நாம் நம்முடைய கடமைகளை ஒழுங்காகச் செய் வதும், நாட்டின் சட்டங்களை மதிச்சு நடத்தலும், வாழு, வாழ விடு என்ற மனித தர்மத்தைப் பின்பற்று வதும் நாட்டுக்கும், மனித குலத்துக்கும் செய்யும் மிகப் பெரிய சேவை. இவைகள் போதும் நாட்டை முன்னேற்ற. இவைகளைச் சரியாக செய்பவன்தான் உண்மையான நாட்டுப் பற்று உள்ளவன்'' என்றான் ராகுல்.

அவன் பேசுவதை அமைதியாக கேட்டுக் கொண் டிருந்தவர்கள் அவன் பேசி முடித்ததும் சளசளவெனப் பேசத் தொடங்கினர். ''சரி, நீங்க அரசியல்லே நுழைய வேணாம். ஆனா, எங்க ஊர் பஞ்சாயத்து தலைவரா இருங்க'' என்றான் ஒரு இளைஞன்.

''இல்லேப்பா. உங்களில் ஒருவனை, உங்க மனநிலை, பழக்க வழக்கங்கள், தேவைகள், கிராமிய சூழல் எல்லாவற்றையும் சரியாக தெரிஞ்சு வைச் சிருப்பவன்தான் பஞ்சாயத்து தலைவனா இருக்க ஏற்றவன்'' என்றான் ராகுல்.

தனக்குத்தானே பேசிக் கொள்வது போல் ஒரு வயதானவர் உரக்க முணுமுணுத்தார். ''.... யாரு என்ன செய்தா என்ன! இந்த பாழாய்ப் போன உலகம் மாறவாப் போகுது! கொலை, கொள்ளை, கலவரம்னு எத்தனை நடக்குது! பட்டண கரையிலே குண்டு

போட்டு கொல்றாங்களாம் மனுஷர்களை. பேப்பர்லே போடறானாம். படிக்கப் போன, வேலைக்குப் போன பிள்ளைகள் செத்துப் போன சேதி வரும்போது பெத்த வயிறு துடிக்குது. நாளும் இந்நிலை பெருகிகிட்டே போவுது. யார் மாத்தப் போறா!''

ராகுல் மீண்டும் பேசத் தொடங்கினான். ''நாம எல்லோரும் நினைச்சா இந்த உலகத்தை மாத்திட லாம். ஐயா. நாமதானே இதைக் கெடுத்து வைச் சிருக்கோம். நாம கெடுத்த நம்ம உலகத்தை நாமே சரியாக்கிடலாம். ஒரே நாள்லே உலகம் கெட்டுப் போகலை. மெல்ல மெல்லதான் அது மாறி இன்றைய நிலையை அடைஞ்சிருக்கு. அதை நாமும் மெல்ல மெல்ல மாத்தி சரியாக்கிடலாம். நாம் செய்ற ஒவ்வொரு காரியத்தையும் மனிதாபிமானத்தோடும், மனித நேயத்தோடும் செய்தாலே நல்ல மாற்றங்கள் விளையும். உலகம் முன்னேறும் ரகசியம் இதுதான். மனித எண்ணங்களிலிருந்து இந்த ரகசியம் காணா மல் போயிருக்கு. அதை கண்டுபிடிக்காம நம்மாலே ஒண்ணும் செய்ய முடியாதுன்னு எல்லோரும் தம்மை தாமே ஏமாத்திட்டிருக்காங்க...'' அதிக நேரம் பேசிக் கொண்டிருந்த ராகுல் களைத்துப் போனவனாய் கண்களை மூடிக் கொண்டான்.

* * *

பிரகாஷ் மேற்சொன்ன எந்த உரையாடல்களிலும் கலந்து கொள்ளாமல் அனிதாவையே பார்த்தபடி

அமர்ந்திருந்தான். அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்த அனிதா சட்டென அவன் பக்கம் திரும்பினாள்.

''என்ன அப்படி பார்க்கிறீங்க?'' என்று கேட்டாள்.

''சொல்லி விடு பிரகாஷ். இதுதான் சரியான தருணம்.' ''உங்களோடு கொஞ்சம் பேசணும்'' என்றான் அவன்.

''சொல்லுங்க.''

பிரகாஷ் சுற்றிலும் பார்த்தான். ஆளுக்கு ஆள் பேசிக் கொண்டிருந்தார்கள். ராகுல் சொன்னவை களைப் பற்றி சர்ச்சை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் சாந்தமாக இருந்திருந்தால் கூட எல்லோர் மத்தியிலும் சொல்லக்கூடிய விஷயமல்லவே பிரகாஷ் சொல்லப் போவது.

''இந்த இரைச்சலில் வேண்டாம். கொஞ்சம் காலார நடந்து பேசு...''

''சரி, வாருங்கள்'' என்று எழுந்தாள் அனிதா. அவனுடன் நடந்தபடி அனிதாதான் முதலில் பேசி னாள். ''உங்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட் டிருக்கேன். உங்க முயற்சியாலேதான் என் அண்ணன் நிரபராதின்னு நிரூபிக்கப்பட்டிருக்கான். வாழ்நாள் முழுவதும் உங்களை மறக்க மாட்டேன்.''

''அதான் எங்க எல்லோரையும் விட்டுட்டுப் போகப் போறீங்களாக்கும்!''

''அது தவிர்க்க முடியாதது இன்ஸ்பெக்டர். இங்கே என்னோட வேலை முடிஞ்சாச்சு. இனி இங்கே இருந்து என்ன செய்யப் போறேன்!''

''ஏன், இந்த ஊர் உங்களுக்கு பிடிக்கலையா?''

''பிடிக்காம என்ன, ரொம்பப் பிடிச்சிருக்குன்னு இங்கேயே தங்கிவிட முடியுமா என்ன! நான் பட்டணத்து வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுப் போனவள்.

'சொல்லி விடு பிரகாஷ். இப்பொழுது இல்லையென்றால் எப்பொழுதுமே இல்லை.'

பிரகாஷ் கண்களை மூடி நீண்ட சுவாசம் எடுத்து மெதுவாக வெளியே விட்டான். தைரியத்தை வரவழைத்துக் கொண்டான். ''எனக்கு உங்களை மிகவும் பிடிச்சிருக்கு...'' என்றவன் நின்றான். ''என்னைக் கல்யாணம் செய்துக்குவீங்களா மிஸ் அனிதா?'' கடைசியில் கேட்டே விட்டான்.

அனிதாவும் தன் நடையை நிறுத்தினாள். அசைவற்று நின்றாள். அவள் இதை எதிர்பார்க்கவில்லை. அதனால் அவனுடைய கேள்வி அவளுக்கு விசித்திரமாக இருந்தது.

பிரகாஷ் அவளுடைய முகத்தைப் பார்த்தான். தெரு விளக்கின் மங்கலான வெளிச்சத்தில் அவளுடைய முக பாவனையை அவனால் காண முடிய

வில்லை. அவளுடைய பதிலுக்காக பொறுமை யிழந்து காத்திருந்தான்.

கடைசியில் அனிதா பேசினாள். நிறுத்தி, நிதான மாகப் பேசினாள். குரலில் மிருதுதன்மையை வர வழைத்துக் கொண்டு பேசினாள். ''நான் அந்த கோணத்தில் உங்களைப் பார்க்கவில்லை பிரகாஷ். என்னை தப்பா நினைச்சுக்காதீங்க. நீங்க ஒரு நல்ல மனிதர். நியாயமாக நடப்பவர். ஆனா... எப்படி இந்த கிராமம் அழகா இருக்கிற போதிலும், எனக்குப் பிடிச்சிருக்கிற போதிலும் இங்கே என்னால் எப்படி வாழ்க்கையை நடத்த முடியாதோ அதுபோல... அது போல நீங்க எவ்வளவு நல்லவராக இருப்பினும், எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கிற போதிலும் உங் களை என் வாழ்க்கை துணையா ஏத்துக்க முடியாது... ஐ ஆம் சாரி...''

அவள் எத்தனை இதமாக, மிருதுவாகப் பேசிய பொழுதிலும் அந்த மறுப்பு அவனுடைய முகத்தில் அறைந்தாற் போல் இருந்தது. அந்த அடி அவனுடைய இதயத்திலும் விழுந்து வலியை தந்தது. ஒரு நிமிடம் மௌனம் காத்த பிரகாஷின் மனம் அவனை ஆறுதல் படுத்தும் வேலையைச் செய்யத் தொடங்கியது. 'பரவாயில்லை பிரகாஷ். இதுதான் வாழ்க்கை. வாழ்க்கையில் நாம் விரும்புகிற எல்லா விஷயங்களும் கிடைப்பதில்லை. கிடைத்திருப்பதில்


திருப்தி கொண்டு சந்தோஷமாக இருப்பதுதான் வாழ்க்கை.


வாழ்க்கையில் எத்தனையோ ஏமாற்றங்களை, தோல்விகளை, துன்பங்களை நாம் சந்திக்கவே செய் கிறோம். அவை தரும் வலியையும் அனுபவிக்கவே செய்கிறோம். இவைகளை விட்டு விலகி ஓட முடி யாது. தைரியமாக இவைகளைச் சந்திப்பதுதான் சிறந்த வழி. இவைகள் எழுப்பும் சவால்களை ஏற்றுக் கொண்டு அவைகளை தீர்த்து வைப்பதுதான் சரி யான வழி.

பிரகாஷும் தன் ஏமாற்றத்தையும், வலியையும் விழுங்கிக் கொண்டு வாழவே போகிறான். வாழ்க் கையில் அவன் இன்னும் பல பெண்களைச் சந்திக் கலாம். மறுபடியும் காதல் வயப்படலாம். திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தலாம். என்றாலும், அனிதாவை அவனால் மறக்க முடியாது. காதல் என்பது என்ன என்று உணர்த்தியவள் இவள்தான். தொழிலில் கடமையைக் கற்றுக் கொடுத்தவள் இவள்தான். மேலும், இது அவனுடைய உண்மை யான காதல். இதற்கு முன்னால் அனுபவித்தவை எல்லாம் வெறும் கவர்ச்சியினால் ஏற்பட்ட ஈர்ப்பு தான்.

''திரும்பிப் போவோமா?'' அனிதா கேட்டாள்.

''நீங்க போங்க. நான் வீட்டுக்குக் கிளம்பறேன். விதி இருந்தா வாழ்க்கையில் மீண்டும் சந்திப்போம்'' என்ற பிரகாஷ் தன்னுடைய ஜீப் நின்றிருந்த இடத்தை நோக்கி நடந்தான். திரும்பி அனிதாவைப் பார்க்கத் துடித்த மனதை அடக்கினான். 'அவளை மறக்க வேண்டுமாயின் அதை இந்த நிமிடத்திலிருந்தே தொடங்க வேண்டும்.'


மின்நூலாக்கம்
சுபாஷ் சண்முகா


காணாமல்
போன
ரகசியம்
பத்மா மாத்ரே